VĀGBHAṬA'S

# AṢṬĀÑGA HṚDAYAM

(TEXT, TAMIL TRANSLATION NOTES, APPENDIX AND INDICES)



CENTRAL COUNCIL FOR RESEARCH IN AYURVEDA AND SIDDHA

VĀGBHAṬA'S

# AṢṬĀÑGA HṚDAYAM

(With Commentaries and Tamil Translation)

## UTTARA STHĀNAM

## [PART - 1]

VOL-V


Translators :

Dr. V. S. VENKATASUBRAMANYA SASTRI

Dr. T. P. SUNDARESAN

Pulavar Thiru. RAMALINGAM PILLAI

Editors :

Dr. T. V. VARADARAJAN

Dr. P. P. N. BHATTATHIRI



Central Council for Research in Ayurveda and Siddha

(J. N. B. C. H. Anuṣandhan Bhavan)

61-65, Institutional Area,

Opp. 'D' Block,

Janak Puri, New Delhi - 110 058

First Edition : 2002

All Rights Reserved

Copies : 1000

Library of Indian Medicine

**Price : Rs.**

Printed at :

**Elango Achukoodam,**
166, Royapettah High Road,
Mylapore, Chennai - 600 004.
Phone : 499 1821

வாக்படரின்

# அஷ்டாங்க ஹ்ருதயம்

(தமிழ் மொழிப் பெயர்ப்பும், உரையும்)

## உத்தர ஸ்தானம்

## [முதல் பாகம்]

மொழிப் பெயர்ப்பாளர்கள் :

Dr. V. S. வேங்கடசுப்ரமண்ய சாஸ்திரி

Dr. T. P. சுந்தரேசன்

புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை

பதிப்பாசிரியர்கள் :

Dr. T. V. வரதராஜன்

Dr. P. P. N. பட்டத்திரி

கேந்திரீய ஆயுர்வேத - சித்த அனுஸந்தான் பவன்

(ஜ. நே. பா. சி. - ஹோ. அனுஸந்தான் பவன்)

61-65, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா,

(D. பிளாக் எதிரில்)

ஜனக்புரி, புது தில்லி - 110 058.

முதல் வெளியீடு : 2002

உரிமை : பதிவு பெற்றது.

பிரதிகள் : 1000

விலை. ரூ.

அச்சிட்டோர் :

இளங்கோ அச்சுக்கூடம்
166, இராயப்பேட்டை ஹைரோடு,
மைலாப்பூர், சென்னை - 600 004.
தொ. பே. எண் : 499 1821

# பொருளடக்கம்

## உத்தர ஸ்தானம் - முதல் பாகம்

முகவுரை ஆங்கிலம் & தமிழ்
பதிப்புரை ஆங்கிலம் & தமிழ்

### அத்தியாயம் - 1

| எண் : | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேறு பிராசங்கள், தாய்ப்பால் இல்லாவிடில் | 5,8 |
| 2. | தாய்ப்பால் அழிவிற்குக் காரணம் | 9 |
| 3. | தாய்ப்பால் மூலம் நோயுண்டாகக் காரணம் | 10 |
| 4. | பெயர் சூட்டுதல் | 12 |
| 5. | பசியைத் தூண்டும், மலத்தைக் கட்டும் | 18 |
| 6. | விரேசனம் தவிர்த்தல் | 18 |
| 7. | பிராம்மீ கிருதம் | 19 |
| 8. | அஷ்டாங்க கிருதம், ஸாரஸ்வத கிருதம் | 20 |

### அத்தியாயம் -2

| | | |
|---|---|---|
| 9. | சுத்தமான தாய்ப்பால் | 23 |
| 10. | வாயுவால், பித்தத்தால் கேடு அடைந்த தாய்ப்பால் | 24 |
| 11. | கபத்தால் கேடு அடைந்த தாய்ப்பால் | 25 |
| 12. | பாலரின் நோயை அறிதல் | 25 |
| 13. | நோயுற்ற உறுப்புக்களை அறியும் உபாயம் | 26 |
| 14. | க்ஷீராலஸம் | 32 |
| 15. | பல் முளைக்கும் பருவத்து நோயும் சிகித்ஸையும் | 33 |
| 16. | (லாக்ஷா தைலம்) கொம்பரக்குத் தைலம் | 43 |

### அத்தியாயம் - 3

| | | |
|---|---|---|
| 17. | முன்குறி, இவற்றின் பொதுக் குறிகள் | 51 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 18. | ஸ்கந்த கிரஹ பீடையின் குறிகள் | 52 |
| 19. | விசாக கிரஹம் பீடித்ததன் குறிகள் | 52 |
| 20. | நைகமேஷ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 53 |
| 21. | ச்வ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 54 |
| 22. | பித்ரு கிரஹம் பீடித்தலின் குறிகள் | 54 |
| 23. | சகுனி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 55 |
| 24. | பூதனை கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 55 |
| 25. | சீத பூதனா, குருட்டு பூதனா | 56 |
| 26. | முகமண்டதிகா கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 57 |
| 27. | ரேவதி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 57 |
| 28. | சுஷ்க ரேவதியால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 58 |
| 29. | அசாத்ய நிலை | 58 |
| 30. | சுஷ்க ரேவதி பீடையில் அசாத்ய நிலை | 59 |
| 31. | சிகித்ஸை | 61 |
| 32. | அனந்தாதி கிருதம், ராஸ்னாதி கிருதம் | 64 |
| 33. | ஸாரிவாதி கிருதம் | 65 |


## அத்தியாயம் - 4


| | | |
|---|---|---|
| 34. | கிரஹங்கள் பீடிப்பதற்கு சமயங்கள் | 69 |
| 35. | கிரஹங்கள் திதிகள், பொது காலம் | 70 |
| 36. | தேவி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 71 |
| 37. | அசுர கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 71 |
| 38. | கந்தர்வ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 72 |
| 39. | ஸர்ப்ப கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 72 |
| 40. | யக்ஷ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 73 |
| 41. | பிரும்ம ராக்ஷஸரால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 73 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 42. | ராக்ஷஸ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 74 |
| 43. | பிசாச கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 75 |
| 44. | பிரேத கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 76 |
| 45. | கூஷ்மாண்ட கிரஹத்தால் பீடிக்கப்பட்டவை | 76 |
| 46. | நிஷாத கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 76 |
| 47. | மௌகிரண கிரஹத்தால் பீடிக்கப்பட்டவை | 77 |
| 48. | வேதாள கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 77 |
| 49. | பித்ரு கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 77 |
| 50. | குரு முதலிய கிரஹங்கள் | 78 |
| 51. | சிகித்ஸைக்கு ஏற்கக் கூடாதவர் | 78 |


## அத்தியாயம் -5


| | | |
|---|---|---|
| 52. | ஸித்தார்த்தக் கிருதம், பூதராவம் | 82,84 |
| 53. | மகாபூதராவம் | 86 |
| 54. | எல்லா கிரஹங்களுக்கும் பிடித்தவை | 87 |
| 55. | பலி கொடுத்தல், பலிப் பொருள்கள் | 88 |
| 56. | விலக்கவேண்டியவையும், ஏற்றவையும் | 93 |


## அத்தியாயம் - 6


| | | |
|---|---|---|
| 57. | பைத்திய நோய் ஆறுவகை | 96 |
| 58. | வாதத்தால் உண்டாகும் பைத்திய நோய் | 98 |
| 59. | பித்தத்தால் உண்டாகும் பைத்திய நோய் குறிகள் | 99 |
| 60. | கபத்தால் உண்டாகும் பைத்திய நோய்க் குறிகள் | 100 |
| 61. | ஸன்னிபாத பைத்தியம் | 100 |
| 62. | மன நோயால் உண்டாகும் பைத்திய நோய் | 101 |
| 63. | விஷத்தால் உண்டாகும் பைத்திய நோய் | 101 |
| 64. | வாயுவால் உண்டாகும் பைத்திய நோய் | 102 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 65. | கபம்-பித்தம் ஆகியவற்றால் பைத்தியம் | 102 |
| 66. | ஹிங்க்வாதி கிருதம் | 103 |
| 67. | பிராம்மீ கிருதம் | 104 |
| 68. | கல்யாணக கிருதம் | 105 |
| 69. | மகாகல்யாணக கிருதம் | 106 |
| 70. | மகாபைசாசக கிருதம் | 107 |
| 71. | பலி கொடுத்தல் | 113 |
| 72. | பைத்திய நோய் நீங்கியதன் குறி | 114 |

## அத்தியாயம் - 7

| | | |
|---|---|---|
| 73. | வலிப்பின் பிரிவுகள் | 116 |
| 74. | வலிப்பு நோயின் முற்குறி | 117 |
| 75. | வாயுவால் உண்டாகும் வலிப்பு நோய் | 117 |
| 76. | பித்தத்தால் உண்டாகும் வலிப்பு நோய் | 118 |
| 77. | கபத்தால் உண்டாகும் வலிப்பு நோய் | 119 |
| 78. | ஸன்னிபாத வலிப்பு நோய் அஸாத்யம் | 119 |
| 79. | வலிப்பு நோய் சிகித்ஸை | 119 |
| 80. | பஞ்சகவ்ய சிகித்ஸை | 120 |
| 81. | மகாபஞ்சகவ்ய கிருதம் | 121 |
| 82. | பிராம்மீ கிருதம், பாதுகாக்கும் முறை | 122,125 |

## அத்தியாயம் - 8

| | | |
|---|---|---|
| 83. | சிரமத்துடன் இமை திறத்தல் | 128 |
| 84. | (நிமேஷம்) தானே இமைத்தல் | 128 |
| 85. | வாயுவால் குலைக்கப்பட்ட இமை, கும்பிகா | 129 |
| 86. | (பித்தோத் க்லிஷ்டம்) பித்தத்தால் கிளர்ந்த இமை | 129 |
| 87. | இமை மயிர் உதிர்தல், போதகீ | 130 |

எண் பக்கம்

88. கபத்தால் கிளர்ந்தது, லகணம், உத்ஸங்கம் 130, 131
89. (உத்க்லிஷ்டபிடகா), இமை மாம்ஸக் குருத்து 131
90. அஞ்ஜன நாமிகா 131
91. (பிஸவர்த்ம) தாமரைத்தண்டிமை 132
92. உத்க்லிஷ்டவர்த்ம 132
93. (சியாவவர்த்ம) கரு இமை 132
94. (சிலிஷ்டவர்த்ம) இமை ஒட்டிக் கொள்ளுதல் 133
95. (ஸிகதாவர்த்ம)மணல் இமை 133
96. (கர்த்தமம்) சேற்றிமை 133
97. (பஹளம்) தடித்த இமை, குகூணகம் 133,134
98. (பக்ஷ்மரோதம்) இமை முள் 134
99. அலஜி, அற்புதம் 135
100. சிகித்ஸைக்கு ஏற்றவையும், மற்றவையும் 136

## அத்தியாயம் - 9

101. கும்பீகாவர்த்ம நோய்க்கு சிகித்ஸை 139
102. நன்கு கீறியதன் குறி 140
103. அதிகமாகக் கீறப்பட்டதன் குறிகள் 141
104. அதிகமாக கீறப்பட்டால் செய்ய வேண்டியவை 142
105. போதகி சிகித்ஸை 144
106. கபத்தால் கிளர்ந்த இமை நோய், லகண சிகித்ஸை 145
107. குகூணகம், பாலர்களுக்கு வாந்தி 146,147
108. (பக்ஷ்மரோதம்) இமை முள் 148
109. அலஜி அற்புதம் ஆகிய நோய்களுக்கு சிகித்ஸை 151

## அத்தியாயம் - 10

110. ஜலக்கசிவு 152
111. கபக் கசிவு, கண் வீக்கம் 153

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 112. | (ரத்தஸ்ராவம்) ரத்தக் கசிவு, பர்வணீ | 154 |
| 113. | சீழ்க்கசிவு, பூயாலஸ விரணம், அலஜி | 155 |
| 114. | கிருமி க்ரந்தி, சாத்யம் - அசாத்யம் | 156 |
| | **வெண் படல நோய்கள்** | |
| 115. | சுக்ளிகா, சுக்லார்ம, பலாஸக்ரதிதம் | 157 |
| 116. | பிஷ்டகம், ஸிரோத்பாதம், ஸிராஹர்ஷம் | 158 |
| 117. | ஸிராஜாலம், சோணிதார்ம, அர்ஜுனம் | 159 |
| 118. | பிரஸ்தார்யர்ம, ஸ்நாவார்ம, அதிமாம்ஸார்ம | 160 |
| 119. | ஸிரைக் கட்டிகள், சாத்யம், அர்ம சிகித்ஸை | 160,161 |
| 120. | சிகித்ஸைக்குத் தகாதவை | 162 |
| | **கரும்படல நோய்கள்** | |
| 121. | க்ஷத சுக்ரம், சுத்த சுக்ரம், அஜகா | 162,163 |
| 122. | ஸிரா சுக்ரம், பழுத்துக் காலங்கடந்தது | 164 |
| | **அத்தியாயம் - 11** | |
| 123. | கண் வீக்கத்திற்குச் சிகித்ஸை | 166 |
| 124. | பர்வணீ சிகித்ஸை, பூயாலஸ சிகித்ஸை | 167,168 |
| 125. | (க்ருமி க்ரந்தி) கிருமி முடிச்சு நோய் | 169 |
| 126. | சுக்தி நோய் சிகித்ஸை | 169 |
| 127. | அர்ம நோயில் அஸ்திர ப்ரயோக முறை | 172 |
| 128. | கரைக்கும் அஞ்ஜனம் | 174 |
| 129. | ஸிராஜால சிகித்ஸை, சுக்ர நோய், திரி | 176,178 |
| 130. | தந்தவர்த்தி, சுத்த சுக்ரம் | 178,179 |
| 131. | மஹாநீல குளிகை, கண்களைத் தேய்த்தல் | 180,181 |
| 132. | அஜகாவைப் பிளத்தல் | 185 |

எண் பக்கம்

## அத்தியாயம் - 12

133. திமிர நோய், காச நோய், லிங்கநாசம் 188, 189
134. வாததிமிரம்-வாதகாசம்-வாதலிங்கநாசம், கம்பீரா 190
135. பித்ததிமிரம்-பித்தகாசம்-பித்தலிங்கநாசம் 191
136. (ஹ்ரஸ்வா) குறுகியது 191
137. பித்த விதக்தா 192
138. கபதிமிரம், கபநாசம், கபலிங்கநாசம் 192
139. ரத்ததிமிரம், ரத்தகாசம், ரத்தலிங்கநாசம் 193
140. (நகுலாந்தம்) கீரிக்குருடு 194
141. (தோஷாந்த:)இரவுக் குருடு எனப்படும் அந்திமாலை 194
142. உஷ்ண விதக்தா, அம்ல விதக்தா, தூமரம் 195
143. வெளிக்காரணத்தினாலான லிங்கநாசம் 196
144. அசாத்யம்-சாத்யம் 196

## அத்தியாயம் - 13

145. ஜீவந்த்யாதி (கீரிப்பாலை) கிருதம் 198
146. திராக்ஷாதி கிருதம் 199
147. படோலாதி கிருதம் 200
148. திரிபலா கிருதம் 201
149. மகா த்ரைபலா கிருதம் 201
150. திரிபலா உபயோகம் 202
151. சூர்ணாஞ்ஜனம் 203
152. பாஸ்கர சூர்ணம் 206
153. விமலாஞ்ஜனம் 206
154. சலாகை, அப்பிரதிஸாராஞ்ஜனம் 207,209

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 155. | ஷண்மாக்ஷிகம் | 210 |
| 156. | வாத திமிர நோய்க்கு சிகித்ஸை | 212 |
| 157. | (பிறகு செய்ய வேண்டியது) பிரத்யஞ்ஜனம் | 213 |
| 158. | பித்த திமிர சிகித்ஸை | 216 |
| 159. | கபத்தால் உண்டான திமிரத்திற்கு சிகித்ஸை | 219 |
| 160. | விமலாவர்த்தி, கோகிலாவர்த்தி | 219 |
| 161. | ரத்தத் திமிர சிகித்ஸை | 220 |
| 162. | ஸன்னிபாத திமிர நோயில் அஞ்ஜனம் | 222 |
| 163. | (நகுலாந்த) கீரிக்குருடு நோய்க்கு சிகித்ஸை | 223 |
| 164. | (ராத்ரியந்த) அந்தமாலை நோயில் சிகித்ஸை | 223 |
| 165. | தூமரம், அம்ல விதக்தம், பித்த விதக்தம், உஷ்ண விதக்தம் ஆகியவற்றிற்கு சிகித்ஸை | 226 |
| 166. | கண்களைப் பாதுகாக்கும் முறை | 229 |
| 167. | விலக்க வேண்டியவை | 229 |


## அத்தியாயம் - 14


| | | |
|---|---|---|
| 168. | முதிர்ச்சியடையாத நிலை | 230 |
| 169. | இருவிதமாகவும், கபலிங்க நாசம், ஆவர்த்தகீ | 231 |
| 170. | சர்க்கரா, ராஜீமதி, சின்னாம்சுகா, சந்த்ரகீ | 231,232 |
| 171. | சத்ரகீ, குத்தக் கூடாதவை, குத்தும் முறை | 232,233 |
| 172. | விலக்க வேண்டியவை | 236 |
| | பிண்டாஞ்ஜனம் | 240 |


## அத்தியாயம் - 15


| | | |
|---|---|---|
| 173. | வாயுவால் கண்ணீர்ப் பெருக்கு, அதிமந்தம் | 242 |
| 174. | ஹதாதிமந்தம், அன்யதோவாதம் | 243 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 175. | வாதபர்யயம், கண்ணீர்ப் பெருக்கு நோய் | 244 |
| 176. | பித்தத்தால் உண்டாகும் அதிமந்தம் | 244 |
| 177. | கபத்தால் உண்டாகும் கண்ணீர்ப் பெருக்கு நோய் | 245 |
| 178. | கபத்தாலுண்டான அதிமந்தம் | 245 |
| 179. | ரத்தத்தால் உண்டாகும் கண்ணீர்ப் பெருக்கு நோய் | 245 |
| 180. | ரத்தத்தால் உண்டான அதிமந்த நோய் | 246 |
| 181. | (சுஷ்காக்ஷிபாகம்) கண் வறட்சி அழலை | 246 |
| 182. | (ஸசோபபாகம்) கண் வீக்கம், கண் பழுத்தல் | 247 |
| 183. | அல்ப சோப பாகம் (குறைவான வீக்கத்துடன் பழுத்தல்) | 247 |
| 184. | (அக்ஷிபாகாத்யயம்)கண் பழுத்து முற்றியது | 248 |
| 185. | (அம்லோஷிதா) புளிப்பூறல் கண் | 248 |


## அத்தியாயம் - 16

| | | |
|---|---|---|
| 186. | (அபிஷ்யந்தம்) கண்ணீர்ப் பெருக்கு நோய் | 250 |
| 187. | புறவளையம் இடுதல் | 251 |
| 188. | வாயு அபிஷ்யந்தத்தில் புறவளையம் | 251 |
| 189. | பித்த-ரத்த அபிஷ்யந்தங்களில் புறவளையம் | 251 |
| 190. | கப அபிஷ்யந்தத்தில் புறவளையம் | 252 |
| 191. | வாயுவால் உண்டான அபிஷ்யந்தத்திற்கு | 254 |
| 192. | ரத்த - பித்த அபிஷ்யந்தத்திற்குச் சிகித்ஸை | 255 |
| 193. | கபத்தால் உண்டான அபிஷ்யந்தத்திற்கு | 256 |
| 194. | அதிமந்தம் முதலியவற்றிற்குச் சிகித்ஸை | 257 |
| 195. | திரி (குளிகை) வகைகள், பாசுபத யோகம் | 258,259 |
| 196. | சுஷ்காக்ஷிபாக சிகித்ஸை, குளிகை | 260,265 |
| 197. | பில்லம், திரி | 266,269 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 198. | பூயாலசத்தில் தனி சிகித்ஸை | 270 |
| 199. | கண்ணுக்கு இதமானவை | 271 |
| 200. | நீக்க வேண்டியவை, பாதத்தைப் பாதுகாத்தல் | 272 |


## அத்தியாயம் - 17


| | | |
|---|---|---|
| 201. | வாயுவால் ஏற்படும் காது நோய் | 274 |
| 202. | பித்தத்தால் உண்டான காது நோய் | 275 |
| 203. | கபத்தால் உண்டான காது நோய் | 275 |
| 204. | ரத்தத்தால் உண்டான காது நோய் | 276 |
| 205. | ஸன்னிபாதத்தால் உண்டான காது நோய் | 276 |
| 206. | (கர்ணநாதம்) காது இரைதல் | 276 |
| 207. | (பாதிர்யம்) செவிடு, பிரதீநாஹம்,அரிப்பு, வீக்கம் | 277 |
| 208. | செவி நாற்றம், கிருமி கர்ணம், கர்ண வித்ருதிக் கட்டி | 278 |
| 209. | கர்ணாற்புதம், கூசிகர்ணம், கர்ண பிப்பலீ | 279 |
| 210. | கர்ணவிதாரிகா, பாலீசோஷம், தந்த்ரிகா | 280 |
| 211. | பரிபோடம் | 280 |
| 212. | உத்பாதம், உன்மந்தம், துக்கவர்த்தனம் | 281 |
| 213. | லேஹ்யா, சிகித்ஸைக்கு ஏற்றவை-மற்றவை | 282 |


## அத்தியாயம் - 18


| | | |
|---|---|---|
| 214. | வாயுவால் உண்டான காது வலிக்குச் சிகித்ஸை | 283 |
| 215. | சுடர் தைலம் | 284 |
| 216. | பித்தத்தால் உண்டான காதுவலிக்குச் சிகித்ஸை | 286 |
| 217. | கபத்தால் உண்டான காதுவலிக்குச் சிகித்ஸை | 287 |
| 218. | ரத்தத்தால் உண்டான காதுவலிக்குச் சிகித்ஸை | 289 |
| 219. | காது இரைச்சல், செவிடு | 290 |
| 220. | க்ஷார தைலம் | 292 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 221. | பிரதிநாஹச் சிகித்ஸை | 293 |
| 222. | காது அரிப்பு, காது வீக்கம் ஆகியவற்றுக்கு | 294 |
| 223. | பூதி கர்ணம், கிருமி கர்ணம் ஆகியவற்றிற்கு | 294 |
| 224. | கர்ணவித்ருதி, க்ஷதவித்ருதி | 294, 295 |
| 225. | காதில் உண்டாகும் மூலக்குருத்து-அற்புதங்கள் | 295 |
| 226. | கர்ண விதாரிகா | 295 |
| 227. | (பாலீசோஷம்) காது மடல் சுருக்கு நோய் | 296 |
| 228. | கர்ண தந்த்ரிகா, பரிபோடம், உத்பாதம் | 297 |
| 229. | உன்மந்தச் சிகித்ஸை | 298 |
| 230. | துக்கவர்த்தனச் சிகித்ஸை, பரிலேஹிகா | 299 |
| 231. | காது அறுபட்டிருப்பின் கட்டும் முறை | 300 |
| 232. | நாசி அறுபட்டிருப்பின் இணைக்கும் முறை | 302 |


## அத்தியாயம் -19


| | | |
|---|---|---|
| 233. | (பிரதிச்யாப) சளிப்பு நோய் | 304 |
| 234. | வாயுவால் உண்டான (பிரதிச்சாய) சளிப்பு நோய் | 305 |
| 235. | பித்தத்தால், கபத்தால் உண்டாகும் சளிப்பு நோய் | 306 |
| 236. | ஸன்னி பாதத்தால் உண்டாகும் சளிப்பு நோய் | 306 |
| 237. | ரத்தத்தால் உண்டாகும் சளிப்பு நோய் | 307 |
| 238. | மிகக் கேடுற்ற சளிப்பு நோய் | 307 |
| 239. | சளிப்பு நோய் பக்குவமடைந்த நிலையில் குறிகள் | 308 |
| 240. | (ப்ருஸகக்ஷவம்) மிகத் தும்மல் | 308 |
| 241. | நாசிகாசோஷம், நாசாநாஹம் | 309 |
| 242. | கிராணபாக, நாசிக் கசிவு, அபீனசம் | 310 |
| 243. | தீப்தி, நாசி நாற்றம் | 311 |
| 244. | (பூயரக்தம்)-சீழும் ரத்தமும் வெளியேறுதல் | 312 |

எண் பக்கம்

245. (புடகம்) சருமத்துண்டு, பொதுக் குறி 312

## அத்தியாயம் - 20

246. புகையிடுதல் 315

247. விலக்க வேண்டியவை 316

248. வாயுவால் உண்டான சளிப்பு நோய்ச் சிகித்ஸை 316

249. பித்த-ரத்த சளிப்பு நோய்ச் சிகித்ஸை 317

250. கபத்தால் உண்டான சளிப்பு நோய்ச் சிகித்ஸை 318

251. ஸன்னிபாத சளிப்பு நோய்ச் சிகித்ஸை 318

252. அதிக தும்மல் - புடம் ஆகியவற்றிற்குச் சிகித்ஸை 319

253. நாசி வறட்சி, நாசி வீக்கம், அழற்சி தீப்தி 320

254. நாசிக் கசிவு, நாசா துர்கந்தம் 321

255. பூயரத்த சிகித்ஸை 322

*****

# PREFACE

"Aṣṭāñga Hṛdayam", published now, is in six volumes containing Sanskrit verses, their Tamil translation, and the commentaries of many scholars. This work was commenced based on the recommendations by the committee formed in 1969 comprising Padmasri Dr. V. Narayanaswamy Iyer, and Dr. V. Raghavan as members. At that time, the translation work was undertaken by Dr. Venkata Subramanya Sastri, Dr. T.P. Sundaresan and Pulavar Thiru. Ramalingam Pillai. The Council wishes to thank them for their valuable contribution.

This work provides detailed information about eight types of treatment such as Kaya Cikitsa, Bala Cikitsa, Graha Cikitsa, Urdhvanga Cikitsa, Salya Cikitsa, Visha Cikitsa, Jara Cikitsa and Vajikarana Cikitsa. The book will be very much useful for Students, Teachers, Research Scholars and Physicians.

In order to get it published, the translated work was entrusted to Dr. A.L.R. Centre for Ayurveda and therein under the supervision of Dr. T.V. Varadarajan,

Assistant Research Officer Chennai and under the guidance of Dr. P.P.N. Bhattathiri, Assistant Director, the Printing work was completed successfully. Their services are thankfully acknowledged.

The Council is thankful to Dr. T.G. Veeraraghavan, Project Officer, Dr. A. Lakshmipathi Research Centre for Ayurveda, Chennai for his kind co-operation.

The services rendered by M. S. Maniyavan of M/s. Elango Achukoodam, a popular press, specializing in Sanskrit, Hindi, English and Tamil for about three decades for printing with meticulous care, and neat and timely execution of Aṣṭāñga Hṛdaya are thankfully acknowledged.

New Delhi
13.05.2002

**G. VELUCHAMY**
(Director)

# A BRIEF NOTE ABOUT THE BOOK

This work 'Vāgbhaṭa's Aṣṭāṅga Hṛdayam' has eight limbs. This Sanskrit work has been translated in almost all the Indian languages.

In 1935, the learned Sri Duraiswamy Iyengar had published this work in Tamil, but without Sanskrit slokas.

At present, this work is published with Sanskrit verses endowed with a Tamil translation. It is to be noted that none has published like this so far.

There is no doubt that this work will be very useful for the Medicos and Students of Ayurvedic College. Further, in order to enlighten those who do not know Sanskrit, this work is published in Tamil, in an understandable and beautiful old Tamil style.

The manuscript of this work was written many years ago. The style of the Tamil sentences is old. It was not possible to effect much change in the olden style. However, as far as possible, changes have been effected. For eg. the word 'Vidai' has been used in many places. This word, in some places means 'thirst' and in other places as 'burnings'. There are many words, with similar uses.

Moreover, Vagbhata says that whichever Sanskrit sloka contains the word 'Param', that serves as the indication to denote that that particular treatment is superior.

This work is pioneering publication. Commentaries of many Acharyas are included in it. The names of the commentaries are given below.

1. Indu Vyakhyana
2. Hemadri Vyakhyana
3. Kairali Vyakhyana
4. Arunadatta Vyakhyana
5. Dalhana Vyakhyana
6. Cakrapani Vyakhyana
7. Vangasena Vyakhyana
8. Sarangadhara Tippani
9. Caraka Tippani
10. Susruta Tippani

With the above, some more commentaries are also included in this publication.

When I had been to Delhi to discuss the publication work, I had an occassion to discuss about this work with Dr. G. Veluchamy, the Director, CCRAS, Dr. K. D. Sharma, the Deputy Director (Tech), and Dr. V. Ravishankar, Asst. Director (Siddha). This

manuscript was entrusted to me along with the order to publish this under my supervision. Hence, I brought this manuscript to Chennai and re-wrote the pages that were in dilapidated condition with the help of Dr. P.P.N. Bhattathiri, Assistant Director.

This work was commenced at Chennai in 1969 (when CCRIMH was started) on the recommendation of the committee members, Padmasri Dr. V. Narayanaswamy Iyer, HPIM, eminent scholar and Dr. V. Raghavan, M.A. Ph.D., the former Prof. of Sanskrit, Madras University.

After a few years, this work was again continued in Literary Research unit of CCRAS that was started in the premises of Saraswati Mahal Library, Tanjore. That was the time when, the Tamil translation of this work was done by the learned Dr. V. S. Venkata subramanya Sastri, Senior Research Officer (the Chief Vaidyar in the Venkataramana Ayurveda College and also the Asthana Vidwan of Sri Kanchi Kamakoti Peetam), assisted by Pulavar Ramalingam Pillai. Later on, with the help of Dr. T. P. Sundaresan, Research Officer this work was completed and sent to Delhi.

The special feature of this work is the current addtion of the pictures of the instruments for surgery, pictures of instruments and bandages for bone fractures etc. used in the ancient days.

**There are totally Six volumes.**

| | |
|---|---|
| Sutrasthana | One volume |
| Sarira & Nidhanasthana | One volume |
| Cikitsa & Kalpasthana | Two volumes |
| Uttarasthana | Two volumes |

Each volume contains the contents and the index.

Cikitsasthāna and Kalpasthana have been combined and brought out in two volumes. Similarly, Sarirasthana and Nidhanasthana have also been combined and brought out in one volume.

There are 40 Adhyayas in the Uttarasthana. Hence, in order to facilitate readers this has been segregated into two volumes.

The students, Doctors and Research scholars of all the Ayurvedic Colleges in Tamilnadu would be thankful to Dr. G. Veluchamy, Director, CCRAS and Dr. K. D. Sharma, Deputy Director, (Technical) CCRAS for having published this laudable work.

Chennai.
13.05.2002

**Dr. T. V. VARADARAJAN,**
Assistant Research Officer, (AY)
Dr. A.L.R. Centre for Ayurveda,
V.H.S. Campus, Chennai - 600 113.

# பதிப்புரை

ஆசார்ய வாக்படருடைய அஷ்டாங்க ஹ்ருதயம் என்ற இந்நூல், எட்டு அங்கங்களைக் கொண்டது. ஸம்ஸ்கிருத மொழியில் உள்ள இந்நூல், இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிப் பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலை 1935-ம் ஆண்டு, பண்டிதர் ஸ்ரீ துரைசாமி அய்யங்கார் அவர்கள், ஸம்ஸ்கிருத மொழி ஸ்லோகங்கள் இல்லாமல் தமிழ் மொழியில் மட்டும் வெளியிட்டார்.

ஆனால், தற்போது இந்நூல் ஸம்ஸ்கிருத மொழியிலும், அதன் தமிழ் உரையுடனும் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது. இதுமாதிரி இதுவரை யாரும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல், தமிழ் நாட்டில் உள்ள ஆயுர்வேத கல்லூரி மாணவர்களுக்கும், வைத்தியர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், ஸம்ஸ்கிருதம் தெரியாதவர்களும்கூட, ஆயுர்வேதத்தை பற்றி நன்றாக தெரிந்துக் கொள்வதற்காகவே, பழைய தமிழ் நடையிலேயே, மிக அழகாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த நூலின் கையெழுத்துப் பிரதி, பல வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்டது. அதில் தமிழில் உள்ள வாக்கியங்கள் பழங்கால தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. அதை அதிகமாக மாற்ற இயலவில்லை. முடிந்தவரை மாற்றப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு 'விடாய்' என்ற சொல் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. விடாய் என்றால் சில இடங்களில் 'தாகம்' என்றும், சில இடங்களில் 'எரிச்சல்' என்றும் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுபோல் பல சொற்கள் உள்ளன.

ஆகவே, அவர்களுக்கும், அப்போது மொழிபெயர்ப்பு பணி ஆற்றிய டாக்டர் வேங்கடசுப்ரமண்ய சாஸ்த்ரி, டாக்டர் T. P. சுந்தரேசன், புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முயற்சியில் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ள டாக்டர் வரதராஜன் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய, டாக்டர் லக்ஷ்மிபதி ஆயுர்வேத ஆராய்ச்சி மையத்தின் துணை இயக்குநர், டாக்டர் P.P.N. பட்டத்திரி அவர்கள், டாக்டர் வரதராஜனுக்கு முழு ஒத்துழைப்பு நல்கியதற்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக. அந்த மையத்தின் Project Officer, டாக்டர் T. G. வீரராகவன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

மூவாயிரத்திற்கும் மேலான பக்கங்களில், ஆறு பாகங்களாக அச்சிடப்பட்ட இந்நூல், மிகவும் தெளிவாகவும், பிழைகளின்றியும், அழகாகவும், குறுகிய காலத்தில் மிகவும் சிரத்தையுடன், முழு ஈடுபாட்டுடன், அச்சிட்டுத் தந்த, இளங்கோ அச்சுக்கூட உரிமையாளர் திரு. எம்.எஸ். மணியவன் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக!



புது தில்லி, G. வேலுச்சாமி

*13.05.2002* (இயக்குநர்)

# முகவுரை

வாக்படரின் அஷ்டாங்க ஹ்ருதயம் என்ற இந்நூல், ஸம்ஸ்கிருத மொழி ஸ்லோகங்களும், அவற்றின் தமிழாக்கமும், பல பண்டிதர்களுடைய வ்யாக்யானங் களும் சேர்த்து, ஆறு பாகங்களாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நூல், ஆயுர்வேத சிகித்ஸை செய்பவர்களுக் கும், ஆயுர்வேதம் பயிலுகின்றவர்களுக்கும், ஒளி விளக்காய்த் திகழுகின்ற ஒரு அறிவு பொக்கிஷமாகவும், ஒரு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

இந்நூலில், எட்டு அங்கங்களுக்கும், எட்டு விதமான சிகித்ஸைகள் பற்றியும், மற்றும் பல விவரங்கள்-குறிப்புகள் பற்றியும் மிகத் தெளிவாக கூறப்பட்டிருக் கின்றன. அவை காய சிகித்ஸை, பால சிகித்ஸை, கிரஹ சிகித்ஸை, ஊர்த்வாங்க சிகித்ஸை, சல்ய சிகித்ஸை, விஷ சிகித்ஸை, ஜரா சிகித்ஸை, வாஜீகரண சிகித்ஸை ஆகிய எட்டு சிகித்ஸைகள் ஆகும்.

இந்நூலை, ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது மிக அவசியமாகும்.

1969-ம் ஆண்டு அமைக்கப்பட்ட கமிட்டி அங்கத்தி னர்களான, பத்மஸ்ரீ டாக்டர் வி. நாராயண சுவாமி அய்யர், டாக்டர் V. ராகவன் ஆகியோரின் பரிந்துரை யின் பேரில், இந்த வேலை ஆரம்பிக்கப்பட்டது.

மேலும், ஸம்ஸ்கிருத ஸ்லோகத்தில் எந்த ஸ்லோகம் 'பரம்' என்று முடிகிறதோ அந்த ஸ்லோகத்தில் கூறப்பட்ட சிகித்ஸை முறை மிகவும் உயர்ந்தது என்று ஆசார்ய வாக்படர் கூறுகிறார்.

மேலும், இந்நூல் ஒரு விசேஷமான வெளியீடாகும். இதில் பல ஆசார்யர்களுடைய உரைகளும் சேர்க்கப் பட்டுள்ளன. அவர்களுடைய பெயர்கள் வருமாறு:

1. இந்து வ்யாக்யானம்
2. ஹேமாத்ரி வ்யாக்யானம்
3. கைரளி வ்யாக்யானம்
4. அருணதத்தர் வ்யாக்யானம்
5. டல்ஹணர் வ்யாக்யானம்
6. சக்ரபாணி வ்யாக்யானம்
7. வங்கசேனர் வ்யாக்யானம்
8. சார்ங்கதரர் குறிப்புகள்
9. சரகர் குறிப்புகள்
10. சுச்ருதர் குறிப்புகள்

இவைகளோடு இன்னும் பலருடைய வ்யாக்யானங் களுடன் இந்நூல் வெளியிடப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நான், பதிப்புப் பணி விஷயமாக டெல்லிக்கு சென்றிருந்த போது, டைரக்டர், டாக்டர் G. வேலுசாமி அவர்களையும், டெப்டி டைரக்டர், டாக்டர் K.D. சர்மா அவர்களையும், அஸிஸ்டெண்ட் டைரக்டர், டாக்டர் V. ரவிசங்கர், அவர்களையும் சந்தித்து இந்நூலைப் பற்றி பேசினேன். அவர்களுடைய ஆலோசனைப்படி இந்த எழுத்துப் பிரதியானது, என்னிடம் ஒப்படைக்கப்பட்டு, என்னுடைய மேற்பார்வையில் இதை பிரசுரிக்கும்படி

உத்தரவும் அளிக்கப்பட்டது. ஆகவே, அந்த எழுத்து பிரதிகளை நான், சென்னைக்குக் கொண்டுவந்து, அதில் கிழிந்து போன பிரதிகளை தமிழில் திரும்ப எழுதி ஸம்ஸ்கிருத மொழியில் உள்ளதை நானும், Dr. P.P.N.பட்டத்திரி, அஸிஸ்டெண்ட் டைரக்டர் அவர்களும் சேர்ந்து புதுப்பித்து இதை ஆறு பாகங் களாக வெளியிடத் தீர்மானித்தோம்.

இந்நூல் பல வருடங்களுக்கு முன்பு, அதாவது (1969-ம் ஆண்டு) CCRIMH தொடங்கப்பட்ட போது, அப்போதுள்ள கமிட்டி அங்கத்தினரான பத்மஸ்ரீ டாக்டர் வி. நாராயண சுவாமி அய்யர் HPIM அவர்கள், டாக்டர் V. ராகவன், MA. Ph.D. (முன்னாள் ஸம்ஸ்கிருத மொழி பேராசிரியர், சென்னை பல்கலைக்கழகம்) அவர்கள், ஆகியோரின் சிபாரிசின் பேரில் இந்த வேலை ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால், சில ஆண்டுகளுக்குப் பிறகு, தஞ்சை சரஸ்வதி மஹால் வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட நமது ஆய்வுக்கூட மையத்தில் இந்த வேலை தொடரப்பட்டு, அப்போது அங்கு பணியில் இருந்த பண்டிதர் டாக்டர் V. வேங்கடசுப்ரமண்ய சாஸ்திரி, Senior Research Officer, (வேங்கடரமணா ஆயுர்வேத கல்லூரியின் முன்னாள் பிரதான வைத்தியர், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வான்) அவர்கள், மற்றும் புலவர் திரு. இராமலிங்கம் பிள்ளை ஆகியவர்களால் மொழிப் பெயர்க்கப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு, டாக்டர் T.P. சுந்தரேசன், Research Officer அவர்கள் மூலம், இந்த வேலை தொடர்ந்து செய்து முடிக்கப் பட்டு, டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும், இந்நூலில் முற்காலத்தில் அறுவை சிகித்ஸைக்கு உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்களின் வரைபடங்கள், எலும்பு முறிவுக்கு போடப்பட்டுள்ள கட்டுகள் மற்றும் இயந்திரங்களின் உருவப்படங்கள்,

(சஸ்திரங்களின் உருவப்படங்கள்) பலவிதமான பந்தன் முறைகள் ஆகியவை தற்போது சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், இந்நூல் ஆறு பாகங்களாக வெளியிடப் பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஸூத்ர ஸ்தானம் | 1 பாகம் |
| சாரீரம் - நிதான ஸ்தானம் | 1 பாகம் |
| சிகித்ஸா - கல்ப ஸ்தானம் | 2 பாகம் |
| உத்தர ஸ்தானம் | 2 பாகம் |

ஆக மொத்தம் ஆறு பாகங்கள்.

ஒவ்வொரு பாகத்திலும் பொருளடக்கமும், நூலின் கடைசியில் அட்டவணையும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சிகித்ஸா ஸ்தானமும், கல்ப ஸ்தானமும் ஒன்று சேர்க்கப்பட்டு, இரண்டு பாகங்களாகவும், சாரீர ஸ்தானமும், நிதான ஸ்தானமும் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு பாகமாகவும் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் உத்தர ஸ்தானத்தில் மட்டும் 40 அத்தியாயங் கள் உள்ளன. ஆகவே, இது வாசகர்களின் வசதிக்காக இரண்டு பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரிய நூலை, அச்சிட்டு C.C.R.A.S. மூலமாக வெளியிட்டிருப்பதற்கு, டைரக்டர் டாக்டர் G. வேலுசாமி அவர்களுக்கும், டெப்டி டைரக்டர் (ஆயுர்வேதா) டாக்டர் K.D. சர்மா அவர்களுக்கும், தமிழ் நாட்டில் உள்ள எல்லா ஆயுர்வேத கல்லூரி மாணவர்களும், டாக்டர்களும், ஆராய்ச்சியாளர்களும் நன்றி கூறி பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

**Dr. T. V. வரதராஜன்,**
**Assistant Research Officer, (AY)**
**Dr. A.L.R. Centre for Ayurveda V.H.S. Campus ,**
**Chennai - 600 113.**

श्रीः

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ प्रथमोऽध्यायः - அத்தியாயம் - 1 ]

ஆயுர்வேதத்தின் எட்டு அங்கங்களுள் முதன்மை வாய்ந்தது காய சிகித்ஸையானது. முந்திய ஸ்தானங்களில் விளக்கப்பட்ட பால சிகித்ஸை முதலிய ஏனைய அங்கங்கள் இங்கு விளக்கப்படுகின்றன. முன் (ஸூத்ர ஸ்தான இறுதியில்) கூறியவாறு குழந்தைகளுக்குச் சிகித்ஸை, கிரஹ பீடைகளுக்குச் சிகித்ஸை என்ற வரிசையில் இங்கு சிகித்ஸை விளக்கப்படுகிறது.

**உத்தரஸ்தானம் :**

இந்த காய சிகித்ஸை என்னும் நூலானது (சரீர தோஷங்களால் உண்டாகும் (ஜ்வரம் முதலிய) நோய்களின் சிகித்ஸை என்னும் அங்கத்தை) முக்கியமாகக் கொண்டு சரகஸம்ஹிதையைப் போல் அமைந்ததாகும். எனவே அத்தகைய நோய்களையும் பரிகாரத்தையும் விளக்கமாக இதுவரை கூறி முடித்திருக்கிறார். இனி ஆயுர்வேதத்தின் மீதிப் பகுதிகளாகிய பால சிகித்ஸை முதலிய ஏழு அங்கங்களையும் ஒருங்கே இந்த ஸ்தானத்தில் விளக்கு வதன் மூலம் நூல் முழுமை பெறுகிறது. எனவே இந்தப் பகுதி உத்தரம் (பிற்பகுதி) எனப் பெயரிடப்பட்டிருக் கிறது.

சஸ்த்ர சிகித்ஸையைப் பிரதானமாகக் கொண்ட சுச்ருத சம்ஹிதையிலும் இந்த வகையிலேயே உத்தர தந்திரம் அமைந்திருப்பது கவனிக்கத் தக்கது.

மேலும் உத்தரம் என்பதற்கு, மேலானது, முக்கியமானது என்றும் பொருள் உண்டு. உடலின் பிரதான உறுப்பாகிய சிரஸ் சம்பந்தப்பட்ட வியாதிகளையும், சுச்ருத சம்ஹிதையில் கூறியவாறு பிரதான அங்கமாகிய சல்ய தந்திரத்தையும், அவ்வாறே மற்ற முக்கியமான அங்கங்களையும் விவரிப்பதாலும், எல்லாவற்றிற்கும் பொதுவான பெயராக உத்தரஸ்தானம் என வழங்கியிருக்கக் கூடும். ராமாயணத்தில் மற்ற காண்டங்களுக்கு விஷயத்திற்கேற்ப பெயரிட்டிருந்தும் சுந்தர காண்டம், உத்தரகாண்டம் ஆகியவை பொதுப் பெயருடன் அமைந்திருப்பது இதற்கு உதாரணமாகும்.

अथाऽतो बालोपचरणीयमध्यायं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ॥

உத்தரஸ்தானத்தின் முதல் அத்தியாயமாகிய குழந்தைகளை உபசரிக்கும் முறை என்னும் அத்தியாயம் விளக்கப் படுகிறது. இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

குறிப்பு: பாலர் பிறக்கும்வரை உள்ள உபசார முறைகள் சரீரஸ்தானம் முதல் அத்தியாயத்தில் விளக்கப் பட்டன. இங்கு அடுத்த அத்தியாயத்தில் பாலரின் நோய்களுக்கான சிகித்ஸை முறை விளக்கப்பட இருக்கிறது. இந்த அத்தியாயத்தில் ஆரம்பப் பகுதியில் கூறப்படும் சில முறைகள் பெரும்பாலும் நோய்த் தடுப்பு முறைகளைச் சார்ந்தவையாகும்.

जातमात्रं विशोध्योल्बाद्बालं सैन्धवसर्पिषा ।
प्रसूतिक्लेशितं चानु बलातैलेन सेचयेत् ॥ १ ॥

अश्मनोर्वादनं चास्य कर्णमूले समाचरेत् ।
अथास्य दक्षिणे कर्णे मन्त्रमुच्चारयेदिमम् ॥ २ ॥

பிறந்த அளவில் குழந்தையை பனிக்குட உரைக் கசிவுகளில் இருந்து எடுத்து, இந்துப்பு கலந்த [1]நெய்யைப் பூசித் தேய்த்து சுத்தம் செய்ய வேண்டும். பிரசவத்தால் துன்பம் அடைந்த அந்தக் குழந்தையின் உடலில் [2]பலா தைலத்தை ஊற்ற வேண்டும். (வைத்தியர்) குழந்தையின் காதின் அருகில் இரு [3]கற்களைத் தட்டி ஒலி எழுப்ப வேண்டும். பிறகு, குழந்தையின் வலது காதில் பின்வரும் அங்காதங்காத் எனத் தொடங்கும் மந்திரத்தைச் சொல்ல வேண்டும்.

குறிப்பு: 1. இந்துப்பு கலந்த நெய்யை வாயில் இட்டு சிக்கிய கபத்தை வெளியேற்ற வேண்டுமென ஸுச்ருதத்தில் காணப்படுகிறது.

2. பலா (தான்வந்தர) தைலம் - சரீரஸ்தானத்தில் விளக்கப்பட்டுள்ளது. பலமுள்ளதான பிரசவ வாயுவால் பீடிக்கப்பட்ட குழந்தைக்கு திடீரென வெளிக்காற்றுபட்டதால் உண்டான வறட்சியைப் போக்க பலா தைலம் உபயோகிக்க வேண்டும்.

3. இது புலனுகர்ச்சிக்கான பயிற்சி முறையாகும் எனக் கூறுவர்.

"अंगादंगात्सम्भवसि हृदयादभिजायसे ।"
"आत्मा वै पुत्रनामासि स जीव शरदां शतम् ॥ ३ ॥"

"शतायुः शतवर्षोऽसि दीर्घमायुरवाप्नुहि।"
"नक्षत्राणि दिशो रात्रिरहश्च त्वाऽभिरक्षतु ॥ ४ ॥"

स्वस्थीभूतस्य नाभिं च सूत्रेण चतुरंगुलात्।
बद्ध्वोर्ध्वं वर्धयित्वा च ग्रीवायामवसंजयेत् ॥ ५ ॥

नाभिं च कुष्ठतैलेन सेचयेत्स्नापयेदनु।
क्षीरिवृक्षकषायेण सर्वगन्धोदकेन वा ॥ ६ ॥

कोष्णेन तप्तरजततपनीयनिमज्जनैः।

ஆரோக்கிய நிலையை அடைந்த குழந்தையின் தொப்புள் கொடியில் நாபிக்கு [1]மேலே நான்கு அங்குல தூரத்தில் [2]நூலால் கட்டி மிகுந்துள்ள மேல் புறத்தை (அகற்றி) கத்தரிக்க வேண்டும். தொப்புளில் கட்டப்பட்ட நூலை குழந்தையின் கழுத்தில் கட்டிவிட வேண்டும். நாபிப் பிரதேசத்தை [3]கோஷ்ட தைலத்தால் நனைக்க வேண்டும். அடுத்து வெள்ளி, தங்கம் ஆகியவற்றின் கம்பிகளை பழுக்கக் காய்ச்சி மூழ்க வைப்பதால் சிறிது சூடான பால்மரப்பட்டை கஷாயத்தாலாவது எல்லாவித வாசனைப் பொருள்களும் கலந்த நீராலாவது ஸ்நானம் செய்விக்க வேண்டும்.

*குறிப்பு:* 1. எட்டு அங்குல தூரத்தில் கட்ட வேண்டும் எனச் சரகர் கூறுகிறார். மேல் நோக்கி சுருக்கு இருக்கு-மாறு வெட்ட வேண்டும்.

2. பட்டுக் கயிற்றால் கட்ட வேண்டும் என சங்கிரகத்தில் கூறப்பட்டுள்ளது.

3. கோஷ்ட தைலம் - கோஷ்டம் கலந்த தைலம் அல்லது கோஷ்டம் சேர்த்துப் பக்குவம் செய்யப் பட்ட தைலம் எனக் கைரளியில் கூறப்பட்டுள்ளது.

ततो दक्षिणतर्जन्या तालून्नम्यावगुण्ठयेत् ॥ ७ ॥

शिरसि स्नेहपिचुना प्राशयं चास्य प्रयोजयेत् ।
हरेणुमात्रं मेधायुर्बलार्थमभिमन्त्रितम् ॥ ८ ॥

ऐन्द्रीब्राह्मीवचाशंखपुष्पीकल्कं घृतं मधु ।

பிறகு (வைத்தியர்) வலது கை ஆள்காட்டி விரலால் அண்ணத்தை (உள் நாக்குப் பகுதிகள்) மேல் *நோக்கித் தள்ள வேண்டும். நெய்ப்பு கலந்த பஞ்சுத் துண்டால் தலையை மூட வேண்டும். குழந்தைக்கு மேதாவிலாசம், ஆயுள் பலம் ஆகியவை உண்டாவதற்காக பேய்கும்மட்டி, பிராம்மி, வசம்பு, சங்கபுஷ்பி இவற்றின் கல்க்கத்துடன் நெய்யும், தேனும் கலந்து உரியவாறு மந்திரங்களை ஜபித்து அரேணுக அளவு (பிராசம்) உட்கொள்ள கொடுக்க வேண்டும்.

குறிப்பு: *இவ்வாறே மாறுபட்ட உறுப்புக்களைச் சீர் செய்ய வேண்டும் எனக் கைரளியில் கூறப் பட்டுள்ளது.

चामीकरवचाब्राह्मीताप्यपथ्या रजीकृताः ॥ ९ ॥

लिह्यान्मधुघृतोपेता हेमधात्रीरजोऽथवा ।

**வேறு பிராசங்கள் :**

பொன், வசம்பு, பிராம்மி, கோஷ்டம், கடுக்காய் இவற்றின் நுண்ணிய சூர்ணத்துடனாவது, பொன், நெல்லி இவற்றின் நுண்ணிய சூர்ணத்துடனாவது நெய்யும், தேனும் கலந்து உட்கொள்ளக் கொடுக்க வேண்டும்.

गर्भाम्भः सैन्धववता सर्पिषा वामयेत्ततः ॥ १० ॥

பிறகு இந்துப்புக் கலந்த நெய்யை பருகச் செய்து கர்ப்ப நீரை வாந்தி செய்விக்க வேண்டும்.

**குறிப்பு:** 1. இவ்வாறு செய்வதால் கர்ப்பத்திலிருக்கும் பொழுது குழந்தையின் உட்சென்ற கர்ப்ப நீர் வெளியாவதுடன் மார்பு, தொண்டை ஆகிய பிரதேசங்கள் சுத்தியடைந்து உடல் கனமின்மையும், உணவில் விருப்பமும் உண்டாகின்றன என சங்கிரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. கர்ப்ப நீரையும், தொண்டையிலுள்ள கபத்தையும் வெளியேற்றாவிடில் குழந்தை முஷ்டியை இறுக்கிக் கொள்ளும். இருதய நோய், உதறல், ச்வாஸம், ஜ்வரம் முதலிய நோய்களுக்கு இலக்காகும் என சங்கிரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

प्राजापत्येन विधिना जातकर्माणि कारयेत्।

(ஜாதகர்மாவை) குழந்தை பிறந்த பின் செய்ய வேண்டியவற்றை வேதத்தில் கூறியவாறு செய்விக்க வேண்டும்.

सिराणां हृदयस्थानां विवृतत्वात् प्रसूतितः ॥ ११ ॥

तृतीयेऽह्नि चतुर्थे वा स्त्रीणां स्तन्यं प्रवर्तते।

பிரசவித்த தினத்திலிருந்து மூன்றாவது அல்லது நான்காவது *தினத்தில், ஸ்த்ரீயின் இருதயத்திலுள்ள (தாய்ப்பாலை சுரப்பிக்கும்) ஸிரைகள் விரிவடைவதால் தாய்ப்பால் உண்டாகிறது.

**குறிப்பு:** *5-வது நாளில்கூட தாய்ப்பால் சுரக்கத் தொடங்கும் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

வாயுவால் வழித்தடை ஏற்படுவதால் தாய்ப்பால் சுரப்பதில்லை. அப்பியங்கள், வியர்வைச் சிகித்ஸை, நால் வகையான நெய்ப்புப் பொருளை பருகுதல் ஆகியவற்றால் வாயு வெல்லப்படுவதால் தாய்ப்பால் சுரக்கும்.

प्रथमे दिवसे तस्मात्त्रिकालं मधुसर्पिषी ॥ १२ ॥

अनन्तामिश्रिते मन्त्रपाविते प्राशयेच्छिशुम् ।

ஆகையால் பிறந்த தினத்தன்று குழந்தைக்கு சிறிதளவு *அறுகு கலந்து தேன், நெய் ஆகியவற்றை மந்திரத்தால் பரிசுத்தமாக்கி 3 வேளை கொடுக்க வேண்டும்.

குறிப்பு: *காஞ்சொறி என அருணதத்தர் கூறுகிறார்.

द्वितीये लक्ष्मणासिद्धं तृतीये च घृतं ततः ॥ १३ ॥

प्राङ्निषिद्धस्तनस्यास्य तत्पाणितलसम्मितम् ।
स्तन्यानुपानं द्वौ कालौ नवनीतं प्रयोजयेत् ॥ १४ ॥

இரண்டாவது, [1]மூன்றாவது நாட்களில் [2]திருதாளி சேர்த்துப் பக்குவம் செய்த நெய்யை குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். மூன்றாம் நாள்வரை தாய்ப்பால் பருகக்கூடாது, என கூறப்பட்டதால் [3]நான்காம் நாளில் குழந்தைக்கு முதலில் அக்குழந்தையின் உள்ளங்கை அளவு [4]வெண்ணெயை எடுத்து தாய்ப்பால் அனுபானத்துடன் இருவேளை கொடுக்க வேண்டும்.

குறிப்பு : 1. மூன்று வேளை கொடுக்க வேண்டும்.

2. அதிமதுரம் எனக் கைரளியில் கூறப்பட்டுள்ளது.

3. முதல் 3 நாட்கள் தாயின் பாலையும் பருகச் செய்யக் கூடாது. ஏனெனில் கர்ப்ப நீருடன் கலந்த

கபமானது தாய்ப்பாலுடன் சேர்ந்து ரச தாதுவை கெடுக்கும். ஸ்ரோதஸ் தடை உண்டாக்கும். அதனால் கர்ப்ப நீர் சுண்டும் வரை (3 நாட்கள்) தாய்ப்பால் கூடாது.

4. தாய்ப்பால் போதுமான அளவு இருந்தாலும் முதலில் வெண்ணெயுடன் சேர்த்தே கொடுக்க வேண்டும் (கைரளி). உள்ளங்கையளவு தேனும் நெய்யும் என சுச்ருதர் கூறுகிறார். நெய் என்றே சங்கிரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

मातुरेव पिबेत्स्तन्यं तत्परंदेहवृद्धये ।

உடல் வளர்ச்சிக்கு ஏற்றது என்ற காரணத்தால் குழந்தை தாயின் பாலையே பருக வேண்டும்.

स्तन्यधात्र्यावुभे कार्ये तदसम्पदि वत्सले ॥ १५ ॥

अव्यंगे ब्रह्मचारिण्यौ वर्णप्रकृतितः समे ।
नीरुजे मध्यवयसौ जीवद्वत्से न लोलुपे ॥ १६ ॥

हिताहारविहारेण यत्नादुपचरेच्च ते ।

### தாய்ப்பால் இல்லாவிடில் செய்ய வேண்டியது :

தாய்க்கு பால் இல்லாமையாலோ, அளவுக்கு குறைவாலோ உரியவாறு அமையாவிடில் குழந்தைகளிடத்தில் பிரியமுள்ளவர்களும், உறுப்புக் குறையில்லாதவர்களும், ஆண் சேர்க்கையில்லாதவர்களும், (தாய்க்கு) சமமான சாதி (வாதபிரகிருதி முதலிய) பிரகிருதி ஆகியவை உள்ளவர்களும், நோய் இல்லாதவர்களும், நடுத்தர வயது உள்ளவர்களும், உயிருடனுள்ள குழந்தைகள் உள்ளவர்களும்

(உணவு, பானம் ஆகியவற்றில்) கட்டுக்கடங்காத ஈடுபாடு இல்லாதவர்களுமான இரண்டு *தாதிகளை நியமிக்க வேண்டும். இவ்விரு தாதிகளையும் ஏற்ற உணவு, செயல் ஆகியவற்றால் மிக்க கவனத்துடன் உபசரிக்க வேண்டும்.

*குறிப்பு:* *உயிர் வாழும் குழந்தைகள் உள்ளவர்களையே தாதியாக நியமிக்க வேண்டுமென்று கூறப்பட்டது. எனவே அவர்களது குழந்தைகளுக்கு அவர்களுடைய பாலின் ஒரு பகுதி தேவையானதால் மீதியுள்ள ஒரு பகுதியே இந்தக் குழந்தைக்குக் கிடைக்கும். எனவே அந்தக் குறையை ஈடுசெய்ய இரண்டு தாதியர் எனக் கூறப்பட்டது.*

शुक्रोधलंघनायासाः स्तन्यनाशस्य हेतवः ॥ १७ ॥

### தாய்ப்பால் அழிவிற்குக் காரணம் :

வருத்தம், கோபம், பட்டினி, உழைப்பு ஆகியவை தாய்ப்பால் அழிவிற்குக் காரணமாகும்.

*குறிப்பு:* *வறட்சியான உணவும், பானமும் புருடச் சேர்க்கையில் விருப்பமும் தாய்ப்பால் சுரப்பதைத் தடுக்கும்.*

स्तन्यस्य सीधुवर्ज्यानि मद्यान्यानूपजा रसाः ।
क्षीरं क्षीरिण्य औषध्यः शोकादेश्च विपर्ययः ॥ १८ ॥

கருப்பஞ்சாற்றால் தயாரித்த மது நீங்கலான மற்ற மதுவகை, சதுப்பு நிலப்பிராணியின் மாம்ஸ ரஸம், பால், (கீரிப்பாலை முதலிய) பாலுள்ள ஔஷதிகள், வருத்தம் முதலியவற்றிற்கு எதிரிடையானவை ஆகியவை தாய்ப் பாலை அதிகரிக்கச் செய்யும்.

குறிப்பு: வருத்தம் முதலியவை முன் சுலோகத்தில் கூறப்பட்டுள்ளன. திரவமானதும், இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு ஆகிய சுவையுள்ள பொருள் கலந்ததுமான உணவும், மனத்தெளிவும், ஓய்வும் தாய்ப்பாலை அதிகரிக்கச் செய்யும்.

विरुद्धाहारभुक्तायाः क्षुधिताया विचेतसः।
प्रदुष्टधातोर्गर्भिण्याः स्तन्यं रोगकरं शिशोः ॥ १९ ॥

**தாய்ப்பால் குழந்தைக்கு நோயுண்டாக்கக் காரணமாகும் சூழ்நிலைகள் :**

பொருந்தா உணவை உட்கொண்டவள், பசியுற்றவள், மயக்கமுற்றவள், ரஸம் முதலான தாதுக்கள் கேடடைந்தவள், கர்ப்பம் தரித்தவள் ஆகிய தாயின் பால் குழந்தைக்கு நோயை உண்டாக்குகிறது.

குறிப்பு : முன்னர் கூறப்பட்டவாறு குழந்தைக்கு மந்திர ஜபத்துடன் பிரயோகிக்கப்பட்ட ஔஷதம் ஜீரணிக்காத நிலையிலும் பால் பருகச் செய்யக் கூடாது.

स्तन्याभावे पयश्छागं गव्यं वा तद्गुणं पिबेत्।
ह्रस्वेन पंचमूलेन स्थिरया वा सितायुतम् ॥ २० ॥

தாய்ப்பால் இல்லாவிடில் வெள்ளாட்டின் பாலையாவது வெள்ளாட்டின் பாலின் தன்மையுள்ளதாக ஆக்கப்பட்ட பசுவின் பாலையாவது பருகச் செய்ய வேண்டும். சிறுபஞ்சமூலம் அல்லது ஓரிலையும் மூவிலையும் சேர்த்து பக்குவம் செய்த பசுவின் பாலையாவது சர்க்கரையுடன் பருகச் செய்ய வேண்டும்.

षष्ठीं निशां विशेषेण कृतरक्षाबलिक्रियाः ।
जागृयुर्बान्धवास्तस्य दधतः परमां मुदम् ॥ २१ ॥

குழந்தையின் உறவினர்கள், ரக்ஷை கட்டுதல், பலி இடுதல் ஆகியவற்றைச் செய்து மிகுந்த மகிச்சியுடன் *விசேஷமாக ஆறாம் நாள் இரவு விழித்திருக்க வேண்டும்.

குறிப்பு: *விசேஷமாக ஆறாம்நாள் விழித்திருக்கவும் என்பதால் பொதுவாக எல்லா நாட்களிலும் இரவில் விழித்திருக்க வேண்டும் என்பது குறிப்பிடப்படுகிறது.

இதனால் 6-ம் நாளில் குழந்தையைப் பீடிக்கும் சகுனி கிரஹபீடை தவிர்க்கப்படுகிறது.

दशमे दिवसे पूर्णे विधिभिः स्वकुलोचितैः ।
कारयेत्सूतिकोत्थानं-

பிரசவித்தவள் பத்து நாட்கள் பூர்த்தியானவுடன் *தன் குல வழக்கத்திற்கு ஏற்ற விதிமுறைகளுடன் ஸ்னானோத்ஸவம் செய்ய வேண்டும்.

குறிப்பு: *தன் குலவழக்கப்படி என்பதால் 12-வது நாளிலும் ஸ்னானம் செய்யலாம் என்பது கூறப் படுகிறது. மணப்பொருள்கள், வெண்கடுகு, லோத்தி ஆகியவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய நீரை உபயோகிக்கும்படி சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

-नाम बालस्य चार्चितम् ॥ २२ ॥

बिभ्रतोऽङ्गैर्मनोह्वालरोचनागुरुचन्दनम् ।
नक्षत्रदेवतायुक्तं बान्धवं वा समाक्षरम् ॥ २३ ॥

## பெயர் சூட்டுதல் :

மனோசிலை, அரிதாரம், கோரோசனை, அகில், சந்தனம் இவற்றால் பூசப்பட்ட குழந்தைக்கு ஜன்ம நட்சத்திரத்தின் அதிதேவதையின் பெயர் சம்பந்தம் உள்ளது. அல்லது உறவினரின் சம்பந்தமுள்ளதும், இரட்டைப்படை எண்ணுள்ள எழுத்துக்கள் உள்ளதுமான மதிக்கப்பட்ட பெயரைச் சூட்ட வேண்டும்.

குறிப்பு: 10-வது, 12-வது, 100-வது நாட்களிலாவது ஓர் ஆண்டின் முடிவிலாவது பெயர் சூட்டலாம் என சங்கிரஹத்தில் குறிப்பிட்டுள்ளது. பெண்ணுக்கு ஒற்றைப்படை எண்ணுள்ள பெயரை சூட்ட வேண்டும்.

இங்குள்ள எழுத்து என்னும் சொல் உயிரெழுத்தைக் குறிக்கும்.

ततः प्रकृतिभेदोक्तरूपैरायुः परीक्षणम् ।
प्रागुदक्शिरसः कुर्यात् बालस्य ज्ञानवान् भिषक् ॥ २४ ॥

பிறகு அறிஞரான வைத்தியர் கிழக்கு அல்லது வடக்குப் புறம் தலை உள்ளவாறு குழந்தையை இருக்கச் செய்து வாதபிரகிருதி முதலிய பிரிவிற்கு கூறப்பட்ட அடையாளங் களால் ஆயுளை பரிசீலிக்க வேண்டும்.

குறிப்பு: பிரகிருதிகளின் குறிகள் மூலம் ஆயுளைக் கணக்கிடும்முறை சாரீரஸ்தானம் அத்தியாயம் 5-ல் கூறப்பட்டுள்ளது.

शुचिधौतोपधानानि निर्वलीनि मृदूनि च ।
शय्यास्तरणवासांसि रक्षोघ्नैर्धूपितानि च ॥ २५ ॥

சுத்தமானவையும், துவைக்கப்பட்டவையும், உலர்ந்தவையும், சுருக்கமில்லாதவையும், மிருதுவானவையும், துர்தேவதைகளை விரட்டும் தன்மையுள்ள புகை ஊட்டப் பட்டவையுமான படுக்கை, விரிப்பு, வஸ்திரம் ஆகியவற்றை அமைக்க வேண்டும்.

*குறிப்பு:* துர்தேவதைகளை விரட்டக்கூடிய புகைப்பொருள்கள் வசம்பு, நெய், கோஷ்டம், திருவட்டப்பிசின், கடுகு ஆகியவை எப்பொழுதும் புகையிட ஏற்றவையென சங்கிரகத்தில் கூறப்பட்டுள்ளது.

काकोविशस्तः शस्तश्च धूपने त्रिवृतान्वितः ।

தானாக [1]இறந்த [2]காக்கையுடன் [3]திருவிருதம் சேர்த்து புகையிடுவது சிறந்ததாகும்.

*குறிப்பு:* 1. கொல்லப்பட்ட காக்கையுடன் என அருணதத்தர் கூறுகிறார்.

2. कङ्कः என்னும் பாடத்தில் கழுகு என்று பொருள்.

3. திருவிருதம்-நெய், எண்ணெய், மாம்ஸ எண்ணெய்.

जीवत्खड्गादिशृङ्गोत्थान् सदा बालः शुभान् मणीन् ॥ २६ ॥

धारयेदौषधीः श्रेष्ठा ब्राह्म्यैन्द्रीजीवकादिकाः ।
हस्ताभ्यां ग्रीवया मूर्ध्ना-

உயிருள்ள [1]காண்டாமிருகம் முதலிய பிராணிகளின் [2]கொம்புகளிலிருந்து உண்டானவையும், மங்களம் உண்டாக்குபவையுமான ரத்னங்களை குழந்தையை எப்பொழுதும் அணிந்திருக்கச் செய்ய வேண்டும். பிராம்மி, காட்டு வெள்ளரி (அல்லது சங்கபுஷ்பீ), [3]ஜீவகம் முதலிய

சிறந்த ஔஷதிகளை, கைகள், கழுத்து, தலை ஆகியவற்றில் அணியச் செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. காண்டாமிருகம் முதலிய என்பதால் பாம்பு முதலியன கூறப்படுகின்றன.

உயிருள்ள காண்டாமிருகம் முதலியவற்றின் கொம்புகளில் கோக்கப்பட்ட ரத்னங்களை என சங்கிரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. கொம்பு என்பது ரத்னங்கள் தோன்றும் இடங்களின் மாதிரிக்குக் கொடுக்கப்பட்டதாகும். எனவே மற்ற இடங்களில் உண்டாகும் நாகரத்னம் முதலியவற்றையும் எடுத்துக் கொள்ளலாம்.

3. ஜீவகம் முதலிய என்பதால் நெய்ச் சட்டிப் பூண்டு முதலியன கூறப்படுகின்றன.

1. ரத்னங்களையும், பிராணிகளின் வலது கொம்பின் நுனியையும் அணிந்திருக்கச் செய்ய வேண்டுமென சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

-विशेषात्सततं वचाम् ॥ २७ ॥

आयुर्मेधास्मृतिस्वास्थ्यकरीं रक्षोभिरक्षिणीम् ।

ஆயுள், மேதா சக்தி, நினைவு, ஆரோக்கியம் ஆகியவற்றை உண்டாக்குவதும் கிரஹ பீடையிலிருந்து காப்பதுமான வசம்பை விசேஷமாக எப்பொழுதும் அணியச் செய்ய வேண்டும்.

पञ्चमे मासिपुण्येऽह्नि धरण्यामुपवेशयेत् ॥

षष्ठेऽन्नप्राशनं मासि क्रमात्तत्रप्रयोजयेत् ।

षट्सप्तमाष्टमासेषु नीरुजस्य शुभेऽहनि ॥ २८ ॥

कर्णौ हिमागमे विध्येद्धात्र्यंकस्थस्य सान्त्वयन् ।

ஆறாவது, ஏழாவது அல்லது எட்டாவது மாதத்தில் சீத காலத்தில் சுபமான நாளில் பகல் வேளையில் ஆரோக்கிய முள்ள குழந்தையை தாதியின் மடியில் உட்காரவைத்து இனிய வார்த்தைகளால் ஆசுவாசப்படுத்தி காதுகளைக் குத்த வேண்டும்.

प्राग्दक्षिणं कुमारस्य भिषग्वामं तु योषितः ॥ २९ ॥

दक्षिणेन दधत्सूर्चीं पालिमन्येन पाणिना ।
मध्यतः कर्णपीठस्य किंचित्गण्डाश्रयं प्रति ॥ ३० ॥

जरायुमात्रप्रच्छन्ने रविरश्म्यवभासिते ।
धृतस्य निश्चलं सम्यगलक्तकरसांकिते ॥ ३१ ॥

विध्येदैवकृते छिद्रे सकृदेवर्जु लाघवात् ।
नोर्ध्वं न पार्श्वतो नाधः-

வைத்தியர் வலது கையினால் ஊசியையும், இடது கையினால் காது மடலையும் பிடித்துக் கொண்டு அடிக்காதின் நடுப்புறத்தில் உள்ளதும், சவ்வு போன்ற நுண்ணிய சருமத்தால் மட்டுமே மூடப்பட்டதும், சூரிய கிரணத்தில் ஒளியூட்டப்பட்டதும் தெய்வத்தால் உண்டாக்கப் பட்டதுமான த்வாரத்தில் செம்பஞ்சுக்குழம்பால் அடையாளமிட்டு திறமையுடன் ஒரே தடவையில் கன்னப்பகுதியை நோக்கி நேராக ஆண்குழந்தைக்கு வலது காதையும், பெண்ணுக்கு இடது காதையும் முதலில் குத்த வேண்டும். (தெய்வத்தால் வைக்கப்பட்டுள்ள த்வாரத்திற்கு) மேலாகவோ, பக்கங்களிலோ, கீழாகவோ குத்தக் கூடாது.

-शिरास्तत्र हि संश्रिताः ॥ ३२ ॥

कालिकामर्मरीरक्ताः-

அவ்விடங்களில் முறையே காலிகா, மர்மரீ, ரக்தா என்ற பெயருடைய ஸிரைகள் உள்ளன.

-तद्व्यधाद्रागरुग्ज्वराः ।
सशोफदाहसंरम्भमन्यास्तम्भापतानकाः ॥ ३३ ॥

அவ்விடங்களில் குத்தப்பட்டால் வீக்கம், எரிச்சல், கிளர்ச்சியுறல், மென்னிப்பிடிப்பு, *அபதானகம், செந்நிறம், வலி, ஜுரம் ஆகியவை உண்டாகும்.

குறிப்பு: *அபதானகம் நிதானஸ்தானம் அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

तेषां यथामयं कुर्याद्विभज्याशु चिकित्सितम्

இந்த நோய்களுக்கு உரிய சிகித்ஸையை விரைவாக பிரித்தறிந்து செய்ய வேண்டும்.

स्थाने व्यधान्न रुधिरं न रुग्रागादिसम्भवः ॥ ३४ ॥

உரிய தைவீக த்வாரத்தில் குத்தப்பட்டால் ரத்தம் வெளியேறுவது வலி செந்நிறம் முதலியன உண்டாகா.

स्नेहाक्तं सूच्यनुस्यूतं सूत्रं चानु निधापयेत् ।
आमतैलेन सिंचेच्च बहलां तद्वदारया ॥ ३५ ॥

विध्येत्पाली हितभुजः संचार्याथ स्थवीयसी ।
वर्तिस्त्र्यहात्ततो रूढं वर्धयेत शनैः शनैः ॥ ३६ ॥

பிறகு நெய்ப்புப்பொருள் தடவப்பட்டதும், ஊசியில் கோர்க்கப்பட்டதுமான நூலை அந்த துவாரத்தில் இட

வேண்டும். காய்ச்சாத நல்லெண்ணெயை இட்டு நனைக்க வேண்டும். தடித்த காதை ஆரா என்னும் சஸ்திரத்தால் குத்த வேண்டும். இதமான உணவு கொள்ளச் செய்து மூன்று நாட்களுக்குப் பிறகு (காது துவாரத்தில்) தடித்தமான வர்த்தியைச் செலுத்த வேண்டும். ஆறியபின் (த்வாரத்தை) சிறிது சிறிதாக பெரிதுபடுத்தவேண்டும்.

अथैनं जातदशनं क्रमेणापनयेत्स्तनात् ।
पूर्वोक्तं योजयेत्क्षीरमन्नं च लघु बृंहणम् ॥ ३७ ॥

பல் முளைத்தபின் குழந்தையை தாய்ப்பால் பருகுவதி லின்றும் படிப்படியாக அகற்ற வேண்டும். முன்னதாக கூறப்பெற்ற [1]பாலையும் எளிதில் ஜீரணிக்கக் கூடியதும், உடலைப் பருக்கச் செய்வதுமான அன்னத்தையும் உட் கொள்ளச் செய்ய வேண்டும்.

குறிப்பு:1. முன்கூறப் பெற்ற பால் என்பதால் 10-ம் சுலோகத்தில் கூறப்பட்டவாறு ஆட்டுப்பால் அல்லது பசும்பாலைப் பருகச் செய்ய வேண்டும் என்பது கூறப்படுகிறது.

प्रियालमज्जमधुकमधुलाजासितोपलैः ।
अपस्तनस्य संयोज्यः प्रीणनो मोदकः शिशोः ॥ ३८ ॥

தாய்ப்பாலை நிறுத்தியபின் குழந்தைக்கு சாரப்பருப்பு, அதிமதுரம், தேன், பொரி, சர்க்கரை ஆகியவற்றைச் சேர்த்து தயாரிக்கப்பட்ட மோதகத்தை திருப்தியுண்டாக்குவதற்காக கொடுக்க வேண்டும்.

दीपनो बालबिल्वैलाशर्करालाजसक्तुभिः ।

**பசியைத் தூண்டும் மோதகம் :**

பில்வப்பிஞ்சு, ஏலக்காய், சர்க்கரை, பொரிமா ஆகிய வற்றைச் சேர்த்துத் தயாரித்த மோதகம் பசியைத் தூண்டும்.

संग्राही धातुकीपुष्पशर्करालाजतर्पणैः ॥ ३९ ॥

**மலத்தைக் கட்டும் மோதகம் :**

காட்டாத்திப்பூ, சர்க்கரை, பொரிமா ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட மோதகம் மலத்தைக் கட்டும்.

रोगांश्चास्य जयेत्सौम्यैर्भेषजैरविपादकैः ।
अन्यत्रात्ययिकाद्व्याधेर्विरेकं सुतरां त्यजेत् ॥ ४० ॥

குழந்தைக்கு உண்டாகும் நோய்களை தீக்ஷ்ண குண மில்லாதவையும், மனதைக் கலக்கச் செய்யாதவையுமான மருந்துகளால் போக்க வேண்டும்.

**விரேசனம் தவிர்த்தல் :**

தீங்கு விளைவிக்கும் நோய் ஏற்பட்டாலன்றி குழந்தைக்கு விரேசன சிகித்ஸை செய்விப்பதை விசேஷமாக தவிர்க்க வேண்டும்.

குறிப்பு: ★10 வயதுக்கு முன்பும், எழுபது வயதிற்குப் பின்பும் சோதன சிகித்ஸை செய்யலாகாது என பொதுவாகக் கூறப்பட்டதை ஸூத்ரஸ்தானம் 20-ஆம் அத்தியாயத்தில் காண்க.

त्रासयेन्नाविधेयं तं त्रस्तं गृह्णन्ति हि ग्रहाः ।

அடங்காத குழந்தைகளை பயமுறுத்தக் கூடாது. ஏனெனில் பயந்த குழந்தைகளை கிரகங்கள் பீடிக்கும்.

वस्त्रवातात् परस्पर्शात् पालयेल्लंघनाच्च तम् ॥ ४१ ॥

[1]துணிக் காற்று, பிறரால் [2]பரிசிக்கப்படுதல், [3]உபவாசம், ஆகியவற்றிலிருந்து குழந்தையைப் பாதுகாக்க வேண்டும்.

**குறிப்பு:** 1. (वक्त्रवातात्) முகம் முதலியவற்றில் வஸ்திரம் விழுவதைத் தவிர்க்க வேண்டும் என்று பாடம் காணப்படுகிறது.

2. தாய், தாதி ஆகியவரைத் தவிர மற்றோர் பரிசித்தலை பொதுவாகத் தவிர்க்க வேண்டும்.

3. உபவாசம் காலங்கடந்து உணவு கொள்வதைத் தவிர்க்க வேண்டும். குழந்தையைப் பிறர் தாண்டிச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் பொருள் கொள்ளலாம்.

ब्राह्मीसिद्धार्थकवचासारिवाकुष्ठसैन्धवैः ।
सकणैः साधितं पीतं वाङ्मेधास्मृतिकृद् घृतम् ॥ ४२ ॥

आयुष्यं पाप्मरक्षोघ्नं भूतोन्मादनिबर्हणम् ।

### பிராம்மீ கிருதம் :

பிராம்மீ, வெண்கடுகு, வசம்பு, நன்னாரி, கோஷ்டம், [1]இந்துப்பு, திப்பிலி ஆகியவற்றின் [2]கல்கத்தை சேர்த்து நெய் பக்குவம் செய்து பருகச் செய்ய பேச்சுத்திறன், மேதாவிலாஸம், நினைவு ஆகியவற்றை உண்டாக்கும். ஆயுளை அதிகரிக்கச் செய்யும். பாபத்தையும் கிரஹ பீடையையும், பூதங்களால் உண்டாகும் பைத்திய நோயையும் போக்கும்.

**குறிப்பு:** 1. இந்துப்பை பாத்ரபாகமாக சேர்க்க வேண்டும்.

2. பிராம்மீ முதலியவற்றின் கஷாயத்தையும் சேர்க்க வேண்டுமென கைரளியில் கூறப்படுகிறது.

वचेन्दुलेखामण्डूकीशंखपुष्पीशतावरी ॥ ४३ ॥

ब्रह्मसोमामृताब्राह्मीः कल्कीकृत्य पलांशिकाः ।
अष्टांगं विपचेत्सर्पिः प्रस्थं क्षीरंचतुर्गुणम् ॥ ४४ ॥

तत्पीतं धन्यमायुष्यं वाङ्मेधास्मृतिबुद्धिकृत् ।

**அஷ்டாங்க கிருதம் :**

வசம்பு, கார்போகு அரிசி, மண்டூகபர்ணீ, சங்கபுஷ்பீ, தண்ணீர்விட்டான் கிழங்கு, கடுக்காய், சீந்தில், பிராம்மீ ஆகிய எட்டு பொருள்களையும் வகைக்கு 1 பலமெடுத்து கல்கமாக்கி நான்கு பிரஸ்தம் பாலும் ஒரு பிரஸ்தம் நெய்யும் சேர்த்து பக்குவம் செய்து பருகச் செய்ய ஐஸ்வரியம், ஆயுள், வாக்கு, மேதாசக்தி, நினைவாற்றல், அறிவுத்திறன் ஆகிய வற்றை விசேஷமாக உண்டாக்கும்.

குறிப்பு: ★கல்கச் சரக்குகள் 8 பலமிருப்பதால் இரட்டித்தல் பரிபாஷையை அனுசரித்து நெய்யளவு 32 பலம் எனக் கொள்ள வேண்டும்.

अजाक्षीराभयाव्योषपाठोग्राशिग्रुसैन्धवैः ॥ ४५ ॥

सिद्धं सारस्वतं सर्पिर्वाङ्मेधास्मृतिवह्निकृत् ।

**ஸாரஸ்வத கிருதம் :**

[1]ஆட்டுப்பால், கடுக்காய், த்ரிகடு, வட்டத்திருப்பி, வசம்பு, [2]செம்முருங்கை, இந்துப்பு ஆகியவற்றுடன் நெய் கலந்து பக்குவம் செய்து உபயோகிக்க பேச்சுத்திறன், மேதாசக்தி, நினைவு, ஜாடராக்னிக்கு பலம் ஆகியவற்றை உண்டாக்கும். இது ஸாரஸ்வத கிருதம் எனப்படும்.

குறிப்பு: 1. ஆட்டுப்பால் நெய்க்குச் சம அளவு சேர்க்க வேண்டும் என கைரளியிலும், 4 பங்கு சேர்க்க வேண்டுமென சந்த்ரநந்தனரும் கூறுகின்றனர்.

2. இந்துப்பை பாத்ரபாகமாகச் சேர்க்க வேண்டும்.

वचामृताशठीपथ्याशंखिनीवेल्लनागरैः ॥ ४६ ॥

अपामार्गेण च घृतं साधितं पूर्ववद्गुणैः ।

*வசம்பு, சீந்தில், *பூலாங்கிழங்கு, கடுக்காய், சங்கங்குப்பி வெள்ளரி, வாய்விளங்கம், சுக்கு, நாயுருவி ஆகியவற்றைச் சேர்த்து நெய் பக்குவம்செய்து உபயோகிப்பதாலும் முற்கூறப்பெற்ற குணம் உண்டாகும்.*

குறிப்பு: ⋆(वरी) தண்ணீர்விட்டான் கிழங்கு எனவும் பாடம் உண்டு.

हेमश्वेतवचा कुष्ठमर्कपुष्पी सकांचना ॥ ४७ ॥

हेम मत्स्याक्षकः शंखः कैडर्यः कनकं वचा ।
चत्वारएते पादोक्ताः प्राश्या मधुघृतप्लुताः ॥ ४८ ॥

वर्षं लीढा वपुर्मेधाबलवर्णकराः शुभाः ।

பொன், வெள்வசம்பு, கோஷ்டம், ஆகியவையும் *கிரிப்பாலை, பொன் ஆகியவையும் பொன்பிராம்மி ஆகியவையும், சங்கங்குப்பி, மலைவேம்பு, பொன், வசம்பு ஆகியவையும் என சுலோகத்தின் நான்கு அடிகளில் கூறப்பட்டவற்றை தேன், நெய் ஆகியவற்றில் கலக்கி ஒரு வருடம் உபயோகிக்க உடல் வளம், மேதாசக்தி, பலம், நிறம் ஆகியவை உண்டாகும். மங்களமானது.

குறிப்பு: ★வெள்ளறுகு என சிலரும், வேளை இனம் எனச் சிலரும், சூரியகாந்தி எனச்சிலரும் உரை கூறுவர். சங்கபுஷ்பீ எனக் கைரளியில் காணப் படுகிறது.

वचायष्ट्याह्वसिन्धूत्थपथ्यानागरदीप्यकैः ॥ ४९ ॥

शुद्ध्यते वाग्घविर्लीढैः सकुष्ठकणजीरकैः ॥ १/२ ॥

வசம்பு, அதிமதுரம், இந்துப்பு, கடுக்காய், சுக்கு, ஓமம், கோஷ்டம், திப்பிலி. ஜீரகம் இவற்றுடன் நெய் சேர்த்து உட்கொள்ள பேச்சு தெளிவாகும்.

इति श्री वैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने बालोपचरणीयो नाम प्रथमोऽध्यायः ॥१॥

உத்தரஸ்தானம் - முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ द्वितीयोऽध्यायः - அத்தியாயம் - 2 ]

अथाऽतो बालामयप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ॥

அடுத்து பாலர்களுக்கு உண்டாகும் நோய்க்கு சிகித்ஸை என்னும் அத்தியாயம் விளக்கப்படுகிறது.

இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

त्रिविधः कथितो बालः क्षीरान्नोभयवर्तनः ।
स्वास्थ्यं ताभ्यामदुष्टाभ्यां दुष्टाभ्यां रोगसम्भवः ॥ १ ॥

தனித்து பால், பாலும் அன்னமும், தனித்து அன்னம் என்றவாறு உணவு கொள்வதன் காரணமாக பாலர் மூவகைப் படுவர். கேடு அடையாத பால், அன்னம் இவற்றால் ஆரோக்கியமும், கேடு அடைந்த இவற்றால் நோயும் உண்டாகின்றன.

यदद्भिरेकतां याति न च दोषैरधिष्ठितम् ।
तद्विशुद्धं पयः-

### சுத்தமான தாய்ப்பால் :

நீரிலிட்டால் அதனுடன் கலந்து ஒன்றாவதும் வாயு முதலிய தோஷங்களால் பீடிக்கப்படாததுமான தாய்ப்பால் சுத்தமானது ஆகும்.

-वाताद्दुष्टं तु प्लवतेऽम्भसि ॥ २ ॥

कषायं फेनिलं रूक्षं वर्चोमूत्रविबन्धकृत् ।

### வாயுவால் கேடடைந்த தாய்ப்பால்:

வாயுவால் தாய்ப்பால் கேடடைந்திருப்பின் அதை நீரிலிட்டால் மேலே மிதக்கும். துவர்ப்புச் சுவை உள்ள தாகவும், நுரைத்தல், வறட்சி ஆகிய குணமுள்ளதாகவும் இருக்கும். மலம் மூத்ரம் இவற்றிற்கு தடை உண்டாக்கும்.

குறிப்பு: கருஞ்சிவப்பு நிறம், கசப்புச்சுவை, பிசுபிசுப் பின்மை, பொருமல் உண்டாக்குதல், குறிப்பிட்டு அறியமுடியாத மணம், பருகினால் திருப்தி உண்டாக்காமை, இளைப்பு உண்டாக்குதல் சிதறியவாறு மிதத்தல் ஆகியவையும் சங்கிர ஹத்தில் கூறப்பட்டுள்ளன.

पित्तादुष्णाम्लकटुकं पीतराज्यप्सु दाहकृत् ॥ ३ ॥

### பித்தத்தால் கேடு அடைந்த தாய்ப்பால்:

பித்தத்தால் தாய்ப்பால் கேடடைந்திருப்பின், பரிசத் திலும், வீர்யத்திலும் உஷ்ணமாக இருக்கும், புளிப்பு, காரம் ஆகிய சுவைகள் கொண்டதாக இருக்கும். நீரிலிட்டால் மஞ்சள் நிறக்கோடுகள் உண்டாகும். பருகினால் உடல் முழுவதும் எரிச்சல் உண்டாக்கும்.

குறிப்பு : நீலம், மஞ்சள், கருமை ஆகிய நிறங்களும் பாலில் காணப்படும். பருகும் குழந்தைக்கு காமாலை முதலிய நோய்கள் தோன்றும் என்று சரகத்தில் கூறப்படுகிறது.

कफात्सलवणं सान्द्रं जले मज्जति पिच्छिलम् ।

## கபத்தால் கேடு அடைந்த தாய்ப்பால்:

கபத்தால் தாய்ப்பால் கேடடைந்திருப்பின் சிறிது உவர்ப்புடன் கூடியிருக்கும். நீரிலிட்டால் முழுகும். பால் திடமாகவும், வழவழப்பாகவும் காணப்படும்.

**குறிப்பு:** மிகவும் வெண்ணிறம், இனிப்பு ஆகியவற்றையும் நெய், எண்ணெய், மாம்ஸ எண்ணெய், எலும்புச் சத்து ஆகியவற்றின் மணத்தையும் கொண்டிருக்கும். கனமாயிருக்கும். தொட்டு இழுக்க இழை காணப் படும். அதிக தூக்கத்தைக் கொடுக்கும் எனவும் சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

संसृष्टलिंगं संसर्गात्त्रिलिंगं सान्निपातिकम् ॥ ४ ॥

(தாய்ப்பால்) இருதோஷங்களால் கேடடைந்திருப்பின் (இங்கு கூறப்பட்டவாறு) அவ்விரு தோஷங்களின் குறிகளும், மூன்று தோஷங்களால் கேடடைந்திருப்பின் அவற்றின் குறிகளும் காணப்படும்.

यथास्वलिंगांस्तद्व्याधीन् जनयत्युपयोजितम् ।

இத்தகைய (வாயு முதலியவற்றால் கோபமடைந்த) தாய்ப்பாலைப் பருகினால் அவற்றிற்குரிய குறிகளுடன் நோயைத் தோற்றுவிக்கும்.

शिशोस्तीक्ष्णामतीक्ष्णां च रोदनाल्लक्षयेद्रुजम् ॥ ५ ॥

## பாலரின் நோயை அறிதல்:

குழந்தைக்கு உண்டாகும் தீவிரமான அல்லது மந்தமான வேதனையை அதன் அழுகையிலிருந்து அறிய வேண்டும்.

सोयं स्पृशेद्भृशं देशं यत्र च स्पर्शनाक्षमः ।
तत्र विद्याद्रुजं-

குழந்தையானது எப்பகுதியில் பிறரால் பரிசிக்கப் படுவதை பொறுக்காமல் தானாக அந்தப்பகுதியை அடிக்கடி தொடுகிறதோ அவ்விடத்தை நோயுற்றதாக அறிய வேண்டும்.

-मूर्ध्नि रुजं चाक्षिनिमीलनात् ॥ ६ ॥

हृदि जिह्वौष्ठदशनश्वासमुष्टिनिपीडितैः ।
कोष्ठे विबन्धवमथुस्तनदंशान्त्रकूजनैः ॥ ७ ॥

आध्मानपृष्ठनमनजठरोन्नमनैरपि ।
वस्तौ गुह्ये च विण्मूत्रसंगत्रासदिगीक्षणैः ॥ ८ ॥

## நோயுற்ற உறுப்புக்களை அறியும் உபாயம்:

தலையில் நோய் உண்டானதை கண்களை மூடிக் கொள்வதாலும், இருதயத்தில் உண்டான வேதனையை நாக்கு, உதடு ஆகியவற்றைக் கடித்தல், சுவாஸம், விரல் களை மடக்கி முஷ்டியிட்டு நெறுக்கல் இவற்றாலும், கோஷ்டத்தில் உண்டான வேதனையை மலமூத்ரத்தடை, வாந்தி (பால் பருகும் பொழுது) முலையைக் கடித்தல், குடலில் இரைச்சல், பொருமல், பின்புறம் வளைதல், வயிறு மேல் நோக்கி இருத்தல் ஆகியவற்றாலும், சிறுநீர்ப்பையிலும் மறைப்புப் பகுதியிலும் நோய் உண்டானதை, மலம், சிறுநீர் இவற்றின் தடை, மிரட்சி, திசைகளைப் பார்த்தல் ஆகியவற்றாலும் அறியவேண்டும்.

குறிப்பு: மேலும் ஹிருதயத்தில் உண்டாகும் நோயை மேல் நோக்கிய பார்வையாலும், சிறுநீர்ப்பையில் உண்டாகும் நோயை விடாய், கைகால் முடக்கு,

கைகால்களில் எரிச்சல், மயிரைப்பிடித்து இழுத்துக் கொள்ளல் ஆகியவற்றாலும் என சங்க்ர ஹத்தில் கூறப்பட்டுள்ளது.

अथ धात्र्याः क्रियां कुर्याद्यथादोषं यथामयम्।

(இவ்வாறு நோய், நோய் உண்டான இடம் இவற்றை அறிந்து) தோஷங்கள், வியாதி இவற்றிற்கேற்ப பாலூட்டு பவருக்கு சிகித்ஸை செய்யவேண்டும்.

குறிப்பு: இது முலைப்பாலைப் பருகும் குழந்தை விஷயத்தில் கூறப்பட்ட சிகித்ஸையாகும்.

तत्र वातात्मके स्तन्ये दशमूलं त्र्यहं पिबेत्॥ ९॥

अथवाऽग्निवचापाठाकटुकाकुष्ठदीप्यकम्।
सभार्गीदारुसरलवृश्चिकालीकणोषणम्॥ १०॥

வாததோஷத்தால் பால் கேடடைந்திருப்பின் *தசமூலம் சேர்த்து தயாரிக்கப்பெற்ற கஷாயத்தையாவது, கொடிவேலி, வசம்பு, வட்டத்திருப்பி, கடுகரோஹிணீ, கோஷ்டம், ஓமம், சிறுதேக்கு, தேவதாரு, ஸரளதேவதாரு, தேட்கொடுக்கு, திப்பிலி, மிளகு இவற்றின் கஷாயத்தையாவது மூன்று தினங்கள் பருகச் செய்ய வேண்டும்.

குறிப்பு: *தசமூலம் ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 6-ல் விளக்கப்பட்டுள்ளது, சங்க்ரஹத்தில் சுக்கும் சேர்க்குமாறு கூறப்பட்டுள்ளது.

ततः पिबेदन्यतमं वातव्याधिहरं घृतम्।
अनु चाच्छसुरामेवं स्निग्धां मृदु विरेचयेत्॥ ११॥

बस्तिकर्म ततः कुर्यात्स्वेदादींश्चानिलापहान्।

பிறகு [1]வாதநோய்க்குக் கூறப்பெற்ற நெய் வகைகளுள் ஒன்றை பருகச்செய்யவேண்டும். பிறகு தெளிந்த ஸுரை என்னும் மதுவை பருகச்செய்யவேண்டும். இவ்வாறு நெய்ப்பு உண்டாக்கியபின் [2]மிருதுகுணமுள்ள பொருள் களால் விரேசனம் செய்விக்கவேண்டும். பிறகு பஸ்தி சிகித்ஸை வாயுவைப் போக்கும் வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை [3]முதலியவற்றையும் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: 1. வாதநோய் சிகித்ஸை-சிகித்ஸாஸ்தானம் 21-ஆவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

2. சரக்கொன்றை முதலியவை குறிப்பிடப்படு கின்றன.

3. அப்பியங்கம் முதலியனவும் குறிப்பிடுகின்றன. வாயுவைப் போக்கும் பொருள்கள் சேர்த்து பக்குவம் செய்த கிருதமும் ஏற்றதென சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

रास्नाजमोदासरलदेवदारुरजोन्वितम् ॥ १२ ॥

बालो लिह्याद् घृतं तैर्वा विपक्वंससितोपलम् ।

சிற்றரத்தை, ஓமம், சரளதேவதாரு, தேவதாரு இவற்றின் சூரணத்தை நெய் கலந்து குழந்தைக்கு பருகக்கொடுக்கலாம். அல்லது இவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யுடன் சர்க்கரை கலந்தும் பருகச் செய்யலாம்.

पित्तदुष्टेऽमृताभीरुपटोलीनिम्बचन्दनम् ॥ १३ ॥

धात्री कुमारश्च पिबेत् क्वाथयित्वा ससारिवम् ।
अथवा त्रिफलामुस्तभूनिम्बकटुरोहिणीः ॥ १४ ॥

सारिवादि पटोलादि पद्मकादिं तथा गणम् ।
घृतान्येभिश्च सिद्धानि पित्तघ्नं च विरेचनम् ।। १५ ।

शीतांश्चाभ्यंगलेपादीन् युंज्यात् -

பித்தத்தால் தாய்ப்பால் கேடடைந்திருப்பின் சீந்தில், தண்ணீர்விட்டான் கிழங்கு, பேய்ப்புடல், வேம்பு, சந்தனம், நன்னாரி இவற்றின் கஷாயத்தை பாலூட்டுபவளும், குழந்தையும் பருகவேண்டும் அல்லது திரிபலை, கோரைக் கிழங்கு, நிலவேம்பு, கடுகரோகிணீ ஆகியவற்றையாவது, [1]ஸாரிவாதி கணம், [2]படோலாதிகணம், [3]பத்மகாதிகணம் இவற்றையாவது கஷாயமிட்டுப் பருக வேண்டும். இவற்றால் கிருதம் பக்குவம் செய்தும் பருகவேண்டும். பித்தத்தைப் போக்கும் விரேசனம் குளிர்ச்சியான அப்பியங்கம், பூச்சு முதலியவையும் ஏற்றவையாகும்.

**குறிப்பு:** 1. ஸாரிவாதிகணம் முதலியன ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

2.&3. படோலாதிகணம், பத்மகாதிகணம் இவற்றின் கஷாயத்துடன் தேன் கலந்து உப யோகிக்க வேண்டுமெனவும்,

4. ஜீவகம், ருஷபகம், காகோலி, க்ஷீரகாகோலீ, அதிமதுரம், சிறுகுமிழ், கர்க்கடச்ருங்கி இவற்றின் கஷாயம் பருகலாம் எனவும்,

5. நியக்ரோதாதி கணம் உபயோகிக்கலாமெனவும் சங்கிரஹத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

-श्लेष्मात्मके पुनः ।
यष्ट्याह्वसैन्धवयुतं कुमारं पाययेद् घृतम् ।। १६ ।।

सिन्धूत्थपिप्पलीमद्वा पिष्टैः क्षौद्रयुतैरथ।
राठपुष्पैः स्तनौ लिम्पेच्छिशोश्च दशनच्छदौ ॥ १७ ॥

सुखमेवं वमेद्बालः-

கபத்தால் தாய்ப்பால் கேடடைந்திருப்பின் குழந்தையை அதிமதுரம், இந்துப்பு ஆகியவை கலந்த நெய்யையாவது, இந்துப்பு, திப்பிலி ஆகியவை கலந்த நெய்யையாவது பருகச் செய்யவேண்டும். மலங்காரையின் பூவை அரைத்து தேன் கலந்து தாயின் மார்பகம் குழந்தையின் உதடு ஆகிய இடங்களில் தடவவேண்டும். இம்முறைகளினால் குழந்தை சுகமாக வாந்தி செய்யும்.

-तीक्ष्णैर्धात्रीं तु वामयेत्।

பாலூட்டுபவளுக்கு தீக்ஷ்ணமான பொருள்களால் வாந்தி உண்டாக்கவேண்டும்.

अथाचरितसंसर्गी मुस्तादि क्वथितं पिबेत् ॥ १८ ॥

வாந்தியானதற்குப் பிறகு கஞ்சி முதலிய உணவு வரிசையில் உணவு உட்கொண்ட தாய் முஸ்தாதிகணச் சரக்குகளின் கஷாயத்தைப் பருக வேண்டும்.

குறிப்பு: ★முஸ்தாதிகணம்-ஸூத்ரஸ்தானம் 15-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஆரக்வதாதி கணச்சரக்குகளின் கஷாயமும் உபயோகிக்குமாறு சங்கிரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

तद्वत्तगरपृथ्वीकासुरदारुकलिंगकान्।
अथवाऽतिविषामुस्तषड्ग्रन्थापंचकोलकम् ॥ १९ ॥

[1]அவ்வாறே தகரை, [2]பெருஞ்சீரகம், தேவதாரு, வெட்பாலையரிசி, இவற்றையாவது அதிவிடயம், கோரைக் கிழங்கு, வசம்பு, பஞ்சகோலம் இவற்றையாவது உட் கொள்ளவேண்டும்.

குறிப்பு: 1. அவ்வாறே என்பதால் கஷாயமிட்டுப் பருக வேண்டுமென்பது கூறப்படுகிறது.

2. பெருங்காயமரம் என சசிலேகையிலும், அரேணுகம் என கைரளியிலும் உரை காணப்படு கிறது.

இவற்றுடன் தேட்கொடுக்கும் சங்க்ரஹத்தில் குறிப்பிடப் படுகிறது.

வறட்சி, உஷ்ணம் ஆகிய குணமுள்ளவையான நசியம், புகைபிடித்தல், கொப்பளித்தல், பூச்சு, நீர் சொரிதல் ஆகியவற்றையும் பிரயோகிக்கவேண்டும் என சங்க்ரஹத் தில் கூறப்பட்டுள்ளது.

स्तन्ये त्रिदोषमलिने दुर्गन्ध्यामं जलोपमम्।
विबद्धमच्छं विच्छिन्नं फेनिलं चोपवेश्यते ॥ २० ॥

शकृन्नानाव्यथावर्णं, मूत्रं पीतं सितं घनम्।
ज्वरारोचकतृट्छर्दिशुष्कोद्गारविजृम्भिकाः ॥ २१ ॥

अगंभंगोंऽङ्गविक्षेपः कूजनं वेपथुर्भ्रमः।
घ्राणाक्षिमुखपाकाद्या जायन्तेऽन्येऽपि तं गदम् ॥ २२ ॥

क्षीरालसकमित्याहुरत्ययं चातिदारुणम्।

**க்ஷீராலஸம் :**

தாய்ப்பால் மூன்று தோஷங்களாலும் கெட்டிருப்பின் கெட்ட நாற்றத்துடனும், பக்குவமாகாமலும், நீர் போன்றும், இறுகியதாகவும், தெளிவாகவும், தடைபட்டும், நுரை யுடனும், பலவித நிறத்துடனும், மலம் வெளியேறும். பலவித வலியுண்டாகும். சிறுநீர், மஞ்சள், வெள்ளை ஆகிய நிறங்களுடனும் தடித்தும் இருக்கும். ஜுரம், ருசியின்மை, எரிச்சல், வாந்தி, வறண்ட ஏப்பம், கொட்டாவி, உறுப்புக்களில் ஒடிப்பது போன்ற வலி, உறுப்புக்களை நீட்டுதல், அலற்றல், நடுக்கம், பிரமை ஆகியவையும் நாசியிலும், கண்களிலும், வாயிலும் புண் ஏற்படுதல் முதலிய மற்றும் பல உபத்ரவங்களும் உண்டாகும். இந்நோயை க்ஷீராலஸகம் என்பர். இது மரணத்தை விளைவிக்கும் கொடிய நோயாகும்.

तत्राशु धात्रीं बालं च वमनेनोपपादयेत् ॥ २३ ॥

இந்த நிலையில் பாலூட்டுபவள், குழந்தை இரு வருக்கும் விரைவாக வாந்தி செய்விக்கவேண்டும்.

विहितायां च संसर्ग्यां वचादिं योजयेद्गणम् ।
निशादिं वाऽथवा माद्रीपाठातिक्ताघनामयान् ॥ २४ ॥

கஞ்சி முதலிய வரிசைப்படி உணவு உட்கொண்ட நிலையில் [1]வசாதிகணச் சரக்குகளையாவது, நிசாதிகணச் சரக்குகளையாவது, அதிவிடயம், வட்டத்திருப்பி, கடுகரோகிணீ, கோரைகிழங்கு, கோஷ்டம் [2]இவற்றை யாவது உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. நிசாதிகணம், வசாதிகணம்-ஸூத்ர ஸ்தானம் அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளன.

2. கஷாயம் செய்து உபயோகிக்கவேண்டும்.

पाठाशुण्ठ्यमृतातिक्ततिक्तादेवाह्वसारिवाः।
समुस्तमूर्वेन्द्रयवाः स्तन्यदोषहराः परम् ॥ २५ ॥

வட்டத்திருப்பி, சுக்கு, சீந்தில், நிலவேம்பு, கடுக ரோகிணீ, தேவதாரு, நன்னாரி, கோரைக்கிழங்கு, பெருங் குரும்பை, வெட்பாலையரிசி ஆகியவை தாய்ப்பால் தோஷத்தை விசேஷமாக போக்கும்.

अनुबन्धे यथाव्याधि प्रतिकुर्वीत कालवित्।

இவ்வாறு செய்வித்தும் நோய் தொடர்ந்தால் காலத்தை அறிந்து நோய்க்கேற்ப சிகித்ஸை செய்யவேண்டும்.

दन्तोद्भेदश्च रोगाणां सर्वेषामपि कारणम् ॥ २६ ॥

विशेषाज्ज्वरविड्भेदकासच्छर्दिशिरोरुजाम्।
अभिष्यन्दस्य पोथक्या विसर्पस्य च जायते ॥ २७ ॥

***பல் முளைக்கும் பருவத்து நோயும் சிகித்ஸையும்:***

பல்முளைத்தல் (பொதுவாக) எல்லா நோய்களுக்கும் காரணமாகும். விசேஷமாக ஜ்வரம், பேதி, இருமல், வாந்தி, தலைவலி ஆகியவற்றிற்கும் அபிஷ்யந்தம், போதகீ என்னும் கண் நோய்களுக்கும், விஸர்ப்பத்திற்கும் காரணமாகும்.

குறிப்பு: விடாய் குகூணகம் என்னும் நேத்ரரோகம், ச்வாஸம், பிரமை ஆகியவையும் சங்கிரகத்தில் குறிப்பிடப்படுகின்றன.

पृष्ठभङ्गे बिडालानां बर्हिणां च शिखोद्गमे।

दन्तोद्भवे च बालानां न हि किंचिन्न दूयते ॥ २८ ॥

பூனைகளுக்கு முதுகு எலும்பு மடங்கும் பொழுதும், மயில்களுக்கு கொண்டை உண்டாகும் பொழுதும், குழந்தைகளுக்கு பல் முளைக்கும் பொழுதும், வேதனை அடையாத உறுப்புக்கள் கிடையாது.

குறிப்பு: நீண்ட ஆயுள் உள்ளவராயின் எட்டாவது மாதத்திற்குப் பின்பும் மற்றோர்க்கு நான்காவது மாதத்திற்குப் பின்பும் பல் தோன்றுகிறது.

பாலர்க்கு, தேகதாதுக்கள், நன்கு வளர்ச்சிபெறாத தருணத்தில் தோன்றியமையால் இவ்வாறு முதலில் தோன்றும் பற்கள் விழுந்துவிடும். அடுத்து முளைக்கும் பற்கள் உறுதியாக நிற்கும்.

பல் தோற்றத்திற்கு காரணமான தாதுக்கள் எலும்பும், எலும்புச் சத்துமாகும். வளர்ச்சி தடைபெற்றமை காரணமாகவே விருத்தாப்பியத்தில் விழும் பற்கள் மீண்டும் முளைப்பதில்லை என சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது.

பற்கள் உருப்பெறும் மாதத்தின் எண்ணிக்கைக்கேற்ப அதே எண்ணிக்கையுள்ள நாட்களில் பற்கள் வெளித் தோன்றும்.

பல் தோன்றும் மாத எண்ணிக்கை அளவுள்ள ஆண்டுகளில் விழுந்து மீண்டும் முளைக்கும் என காச்யப சம்ஹிதையில் ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 20-ல் கூறப்பட்டுள்ளது.

यथादोषं यथारोगं यथोद्रेकं यथाशयम्।

विभज्य देशकालादींस्तत्र योज्यं भिषग्जितम्॥ २९॥

தோஷங்கள், நோய், மற்றும் இவற்றின் அதிகரித்த நிலை, [1]பயத்தின் காரணம், [2]இடம், [3]காலம் முதலியவற்றைப்

பிரித்தறிந்து பாலப்பருவத்தில் உண்டாகும் நோய்க்கு மருந்து கொடுக்கவேண்டும்.

குறிப்பு:1. பலம் என்றும், வயது என்றும் பாடங்கள் காணப்படுகின்றன.

2. வறண்டது, நீர்ப்பாங்கானது, சாதாரணம் ஆகிய இடங்கள் குறிப்பிடப்படுகின்றன.

3. சீத காலம், உஷ்ண காலம், மழைக் காலம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

காலம் முதலிய என்பதால் கெடுக்கப்பட்ட பொருள், பழக்கத்தால் ஒத்துக்கொண்டது, பிரகிருதி, ஜாடராக்னி முதலியவை குறிப்பிடப்படுகின்றன.

त एव दोषा दूष्याश्च ज्वराद्या व्याधयश्च यत् ।
अतस्तदेव भैषज्यं मात्रा त्वस्य कनीयसी ॥ ३० ॥

सौकुमार्याल्पकायत्वात् सर्वान्नानुपसेवनात् ।

(வயது வந்தவருக்கு உள்ளது போலவே பாலர்க்கும்) (வாயு முதலிய) தோஷங்கள், (ரஸம், ரத்தம் முதலிய) தூஷ்யங்கள், ஜ்வரம் முதலிய நோய்கள் ஆகியவை ஏற்படு கின்றது. எனவே மருந்துகளும் அவ்வாறே நளினத் தன்மை, சிறு உடல் எல்லா அன்ன வகைகளையும் உட்கொள்ளாமை என்ற காரணங்களால் உபயோக அளவு மட்டும் மிகக் குறைவாகும்.

स्निग्धा एव सदा बाला घृतक्षीरनिषेवणात् ॥ ३१ ॥

सद्यस्तान् वमनं तस्मात् पाययेन्मतिमात् मृदु ।

நெய், பால் இவற்றையே உட்கொள்வதால் பாலர் எப்பொழுதும் நெய்ப்பு உள்ளவர்களாகவே இருக்கின்றனர். ஆகையால் அறிஞரான வைத்தியர் பாலரை மிருது குண முள்ள வாந்தி செய்விக்கும் பொருள்களை உடனடியாகப் பருகச் செய்யவேண்டும்.

குறிப்பு: இளம்வயதில் கபமே அதிகரிக்குமாதலாலும் வாந்தி செய்வித்தல் ஏற்றது என்பது கவனிக்கத் தக்கது.

स्तन्यस्य तृप्तं वमयेत् क्षीरक्षीरान्नसेविनम् ॥ ३२ ॥

தனித்த தாய்ப்பால் அல்லது தாய்ப்பாலும், அன்னமும் உட்கொள்ளும் குழந்தையை, தாய்ப்பால் பருகி திருப்தி அடைந்த நிலையில் வாந்தி செய்விக்கவேண்டும்.

पीतवन्तं तनुं पेयामन्नादं घृतसंयुताम् ।

அன்னம் உட்கொள்ளும் குழந்தைக்கு நெய் கலந்ததும், தெளிவானதுமாகிய கஞ்சி பருகிய நிலையில் வாந்தி செய்விக்கவேண்டும்.

वस्तिसाध्ये विरेकेण मर्शेन प्रतिमर्शनम् ॥ ३३ ॥

விரேசனம் செய்விக்கவேண்டிய நிலையில் [1]பஸ்திப் பிரயோகமும், [2]மர்சம் பிரயோகிக்க வேண்டிய நிலையில் [3]பிரதிமர்சமும் பிரயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. 10 வயதுக்கு குறைந்த பாலருக்கு விரேசனம் மறுக்கப்பட்டதால் பஸ்தியே செய்விக்கும்படி கூறப்படுகிறது.

2. அதிகரித்த அளவில் நெய்ப்புப் பொருளை நசியம் செய்வது மர்சமெனப்படும்.

3. பிரதிமர்சம் என்பது இருதுளி அளவில் நெய்ப்புப் பொருளை நசியம் செய்வதாகும்.

युंज्याद्विरेचनादीस्तु धात्र्या एव यथोदितान्।

கல்பஸ்தானத்தில் கூறப்பட்ட விரேசனம் *முதலியவற்றை தாய்க்கே செய்விக்கவேண்டும்.

குறிப்பு: விரேசனம் முதலிய என்பதால் பாலருக்கு தவிர்க்கும்படி கூறப்பட்ட மற்ற சோதனங்களும் கூறப்படுகின்றன.

मूर्वाव्योपवराकोलजम्बूत्वक्दारुसर्षपाः ॥ ३४ ॥

सपाठा मधुना लीढाः स्तन्यदोषहराः परम्।

பெருங்குரும்பை, த்ரிகடு, [1]த்ரிபலை, [2]இலந்தை, நாவல்பட்டை, தேவதாரு, கடுகு, வட்டத்திருப்பி இவற்றின் சூர்ணத்தை தேனுடன் கலந்து உட்கொள்ள தாய்ப்பால் தோஷத்தை விசேஷமாக நீக்கும்.

குறிப்பு: 1. வசம்பு, 2. அழிஞ்சில் (वचाङ्कोल) என்னும் பாடம் உண்டு.

दन्तपाली समधुना चूर्णेन प्रतिसारयेत् ॥ ३५ ॥

पिप्पल्या धातकीपुष्पधात्रीफलकृतेन वा।

திப்பிலிச் சூரணத்துடனாவது, காட்டாத்திப்பூ, நெல்லிக்காய் இவற்றின் சூரணத்துடனாவது தேன் கலந்து (பல்) ஈறுகளில் பூசவேண்டும்.

குறிப்பு: தனித்த வாயு அல்லது பித்தத்துடன் கூடிய வாயு ஈறுகளைச்சார்ந்து எலும்பையும், எலும்புச்

சத்தையும் வற்றச்செய்தபின் பற்கள் தோன்ற சங்க்ர ஹத்தில் கூறப்பட்டுள்ளது.

लावतित्तिरिवल्लूररजः पुष्परसद्रुतम् ॥ ३६ ॥

द्रुतं करोति बालानां दन्तकेसरवन्मुखम् ।

உள்ளாங்குருவி, தித்திரிப்பக்ஷி இவற்றின் உலர்ந்த மாமிஸத் தூளுடன் தேன் கலந்து (பல்) ஈற்றில் தேய்க்க விரைவில் பாலரின் முகக் கமலம் பற்களாகிய பூந்தாதுக் களைக் கொண்டதாக இருக்கும்.

वचाद्विबृहतीपाठाकटुकातिविषाघनैः ॥ ३७ ॥

मधुरैश्च घृतं सिद्धं सिद्धं दशनजन्मनि ।

வசம்பு, கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, வட்டத்திருப்பி, கடுகரோஹிணீ, அதிவிடயம், கோரைக்கிழங்கு, *இனிப்புப் பொருள்கள் ஆகியவற்றைச் சேர்த்து, பக்குவம் செய்யப் பட்ட நெய்யானது, பல் உண்டாகும் பொழுது ஏற்படும் நோய்களில் கைகண்ட ஔஷதமாகும்.

குறிப்பு: *இனிப்புப் பொருள்கள் ஸூத்ர ஸ்தானம் 10-வது அத்தியாயத்தில் கூறப்பட்டன.

रजनीदारुसरलः श्रेयसीबृहतीद्वयम् ॥ ३८ ॥

पृश्निपर्णी शताह्वा च लीढं माक्षिकसर्पिषा ।
ग्रहणीदीपनं श्रेष्ठं मारुतस्यानुलोमनम् ॥ ३९ ॥

अतीसारज्वरश्वासकामलापाण्डुकासनुत् ।
बालस्य सर्वरोगेषु पूजितं बलवर्णदम् ॥ ४० ॥

மஞ்சள், தேவதாரு, ஸரளதேவதாரு, யானைத்திப்பிலி, கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, ஓரிலை, *சதகுப்பை இவற்றின் சூர்ணத்தை தேன், நெய் இவற்றுடன் கலந்து கொடுக்க ஜாடராக்னியை விசேஷமாகத் தூண்டும். வாயுவைக் கீழ்நோக்கச் செய்யும். அதிசாரம், ஜ்வரம், ச்வாஸம், காமாலை, பாண்டு, இருமல் இவற்றைப் போக்கும். பாலருக்கு உண்டாகும் எல்லா நோய்களிலும் உபயோகிக்கச் சிறந்தது. பலத்தையும், நிறத்தையும் உண்டாக்கும்.

**குறிப்பு:** இம்மருந்தை பாலாஷ்டகம் என்பர்.

शताह्वा என்பதற்கு தண்ணீர்விட்டான் கிழங்கு என சந்திரர் உரை கூறுகிறார்.

समंगाधातकीरोध्रकुटन्नटबलाद्वयैः।
महासहाक्षुद्रसहामुद्गबिल्वशलाटुभिः ॥ ४१ ॥

सकार्पासीफलैस्तोये साधितैः साधितं घृतम्।
क्षीरमस्तुयुतं हन्ति शीघ्रं दन्तोद्भवोद्भवान्॥ ४२ ॥

विविधानामयानेतद्वृद्धकाश्यपनिर्मितम्।

மஞ்சட்டி, காட்டாத்திப்பூ, லோத்தி, பெருவாகை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, காட்டுளுந்து, காட்டுப்பயறு, பயறு, பில்வப்பிஞ்சு, பருத்திக்கொட்டை இவற்றை கஷாயமிட்டு *பாலும், தயிர்த்தெளிவும் கலந்து நெய் பக்குவம் செய்து உபயோகிக்க பல்முளைக்கும் காலத்தில் உண்டாகும் பல்வேறு நோய்களும் விரைவில் நீங்கும். இது விருத்த காச்யபர் கூறிய முறையாகும்.

**குறிப்பு :** ★க்ஷாரம் என்று சங்க்ரஹத்தில் காணப்படுகிறது.

दन्तोद्भवेषु रोगेषु न बालमतियन्त्रयेत् ॥ ४३ ॥

स्वयमप्युपशाम्यन्ति जातदन्तस्य यद्गदाः ।

பல்முளைக்கும்பொழுது உண்டாகும் நோய்களில் பாலரை பத்தியமுறை முதலியவற்றால் அதிகமாகக் கட்டுப் படுத்தக்கூடாது. ஏனெனில் பல் முளைத்தவுடன் அவை தானாக நீங்குகின்றது

अत्यहःस्वप्नशीताम्बुश्लैष्मिकस्तन्यसेविनः ॥ ४४ ॥

शिशोः कफेन रुद्धेषु स्रोतःसु रसवाहिषु ।
अरोचकः प्रतिश्यायो ज्वरः कासश्च जायते ॥ ४५ ॥

कुमारः शुष्यति ततः स्निग्धशुक्लमुखेक्षणः ।

பகலில் அதிகமாகத் தூங்குதல், குளிர்ந்தநீர் உபயோகம், கபதோஷம் கலந்த பாலைப்பருகுதல் ஆகியவை காரணமாக குழந்தைக்கு, ரஸதாதுவை எடுத்துச் செல்லும் ஸிரைகள் கபத்தால் தடுக்கப்படுவதால் ருசியின்மை, பீனிசம், ஜ்வரம், இருமல் ஆகியவை உண்டாகின்றன. பிறகு முகமும், கண்களும், வெண்ணிறமாகவும் நெய்ப்புள்ளதாகவும் இருக்கும். குழந்தை இளைத்துக் காணப்படுவான்.

सैन्धवव्योषशार्ङ्गेष्टापाठागिरिकदम्बकान् ॥ ४६ ॥

शुष्यतो मधुसर्पिर्भ्यामरुच्यादिषु योजयेत् ।

இளைத்துவரும் குழந்தைக்கு உண்டாகும் ருசியின்மை முதலியவற்றில் இந்துப்பு, த்ரிகடு, *மஞ்சட்டி, வட்டத் திருப்பி, மலைக்கடம்பு இவற்றைச் சூரணித்து தேனும், நெய்யும் கலந்து கொடுக்கவேண்டும்.

**குறிப்பு:** ⋆ शार्ङ्गेष्टा என்ற பாடத்தில் பெரும்புங்கு என்றும் குன்றி என்றும் பொருள் கொள்வதுண்டு.

अशोकरोहिणीयुक्तं पंचकोलं च चूर्णितम् ॥ ४७ ॥

பஞ்சகோலம், கடுகரோஹிணீ இவற்றின் சூர்ணத்தை உட்கொள்ளவேண்டும்.

**குறிப்பு:** 1. தேனும், நெய்யும் கலந்து உபயோகிக்க வேண்டும் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

2. अशोकरोहिणी என்பதற்கு அசோகப்பட்டை, கடுகரோஹிணீ என அருணதத்தர் உரை கூறுகிறார்.

बदरीधातकीधात्रीचूर्णं वा सर्पिषा द्रुतम् ।

அல்லது இலந்தை, காட்டத்திப்பூ, நெல்லி இவற்றின் சூர்ணத்தை நெய்யில் குழப்பி உட்கொள்ளச் செய்ய வேண்டும்.

स्थिरावचाद्विबृहतीकाकोलीपिप्पलीनतैः ॥ ४८ ॥

निचुलोत्पलवर्षाभूभार्गीमुस्तैश्च कार्षिकैः ।
सिद्धं प्रस्थार्धमाज्यस्य स्रोतसां शोधनं परम् ॥ ४९ ॥

மூவிலை, வசம்பு, கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, காகோலீ, திப்பிலி, தகரை, நீர்நொச்சி, நீலோத்பலம், சாறடை, சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, இவை வகைக்கு ¼ பலம் எடுத்து கல்க்கமாக்கி நெய் ½ பிரஸ்தம் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க ஸ்ரோதஸ்ஸுகள் மிகவும் சுத்தமாகும்.

**குறிப்பு:** கல்கப் பொருள்களின் மொத்த அளவு நெய்யின் கால்பங்குக்கும் அதிகமாகக் காணப்படுவதால்

இரட்டித்தல் பரிபாஷையை அனுசரித்து நெய்யின் அளவை இரட்டித்துக் கொள்வதும் பொருத்த மானதே.

सिंह्यश्वगन्धासुरसाकणागर्भं च तद्गुणम्।

கண்டங்கத்திரி, அமுக்கிராக்கிழங்கு, துளஸி, திப்பிலி இவற்றின் கல்கம் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யும் அத்தகைய குணமுள்ளது.

यष्ट्याह्वपिप्पलीरोध्रपद्मकोत्पलचन्दनैः ॥ ५० ॥

तालीससारिवाभ्यां च साधितं शोषजिद्घृतम्।

அதிமதுரம், திப்பிலி, லோத்தி, பதுமுகம், நீலோத்பலம், சந்தனம், தாளிசபத்திரி, நன்னாரி ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய் இளைப்பைப் போக்கும்.

शृंगीमधूलिकाभार्गीपिप्पलीदेवदारुभिः ॥ ५१ ॥

अश्वगन्धाद्विकाकोलीरास्नर्षभकजीवकैः।
शूर्पपर्णीविडंगैश्च कल्कितैः साधितं घृतम् ॥ ५२ ॥

शशोत्तमांगनिर्यूहे शुष्यतः पुष्टिकृत्परम्।

முயலின் தலையைக் கஷாயமிட்டு, அதனுடன் கர்க்கட சிருங்கி, அதிமதுரம்*, சிறுதேக்கு, திப்பிலி, தேவதாரு, அமுக்கராக்கிழங்கு, காகோலி, க்ஷீரகாகோலீ, சிற்றரத்தை, ருஷபகம், ஜீவகம், காட்டுளுந்து, காட்டுப்பயறு, வாய் விளங்கம் இவற்றின் கல்கம் சேர்த்து நெய் பக்குவம் செய்து பருக செய்தால் இளைப்பு நீங்கி குழந்தைக்கு விசேஷமாக புஷ்டி உண்டாகும்.

குறிப்பு: ★(மதூலிகா) என்பதற்கு நீரிலுண்டாகும் அதிமதுரம், கரும்பு, கோதுமை வகை இவ்வாறு பல பொருள் கூறுவதுண்டு.

वयस्था स्थातगरकायस्थाचोरकैः शृतम् ॥ ५३ ॥

बस्तमूत्रसुराभ्यां च तैलमभ्यंजने हितम् ।

வசம்பு, நெல்லி, தகரை, கடுக்காய், கச்சோரம் இவற்றின் கல்கத்துடன் ஆட்டு மூத்திரமும், ஸுரை என்னும் மதுவும் சேர்த்து தைலம் காய்ச்சி அப்பியங்கம் செய்தல் (இளைத்து வரும் குழந்தைக்கு) ஏற்றதாகும்.

लाक्षारससमं तैलप्रस्थं मस्तुचतुर्गुणम् ॥ ५४ ॥

अश्वगन्धानिशादारुकौन्तीकुष्टाब्दचन्दनैः ।
समूर्वारोहिणीरास्नाशताह्वामधुकैः समैः ॥ ५५ ॥

सिद्धं लाक्षादिकं नाम तैलमभ्यंजनादिदम् ।
बल्यं ज्वरक्षयोन्मादश्वासापस्मारवातनुत् ॥ ५६ ॥

यक्षराक्षसभूतघ्नं गर्भिणीनां च शस्यते ।

**(லாக்ஷா தைலம்) கொம்பரக்குத் தைலம்:**

ஒரு பிரஸ்தம் எண்ணெயும் (அதற்கு) சமஅளவு அரக்கு நீரும், 4 பங்கு தயிர்த்தெளிவும், சேர்த்து அமுக்கிராக்கிழங்கு, மஞ்சள் தேவதாரு, அரேணுகம், கோஷ்டம், கோரைக் கிழங்கு, சந்தனம், பெருங்குரும்பை, கடுகரோஹிணீ, சிற்றரத்தை, சதகுப்பை, அதிமதுரம் இவை சமஅளவு எடுத்து ★கல்கமாக்கிக் கலந்து பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இது லாக்ஷாதிதைலம் எனப்படும். இதனால் அப்பியங்கம் செய்து கொள்ள பலமுண்டாகும். ஜ்வரம்,

க்ஷயம், பைத்தியம், ச்வாஸம், காக்கைவலிப்பு, வாயு ஆகியவை நீங்கும். யக்ஷர், ராக்ஷஸர், பூதம் ஆகியவற்றை விரட்டும் இது கர்ப்பிணிகளுக்கும் சிறந்தது.

குறிப்பு: ★பொதுவிதிப்படி கல்கப் பொருளின் அளவு எண்ணெயில் நாலில் அல்லது ஆறில் ஒரு பங்கு எனக் கொள்ள வேண்டும்.

मधुनाऽतिविषाशृंगीपिप्पलीर्लेहयेच्छिशुम् ॥ ५७ ॥

एकां वातिविषां कासज्वरच्छर्दिरुपद्रुतम् ।

இருமல், ஜ்வரம், வாந்தி இவற்றால் துன்புறும் குழந்தைக்கு அதிவிடயம், *கர்க்கடகசிங்கி, திப்பிலி இவற்றின் சூரணத்தையாவது தனித்த அதிவிடயசூர்ணத்தையாவது தேனுடன் கொடுக்கவேண்டும்.

குறிப்பு: ★(शुण्ठी) சுக்கு என்றும் பாடம் காணப்படுகிறது.

पीतं पीतं वमति यः स्तन्यं तं मधुसर्पिषा ॥ ५८ ॥

द्विवार्ताकीफलरसं पंचकोलं च लेहयेत् ।
पिप्पलीपंचलवणं कृमिजित्पारिभद्रकम् ॥ ५९ ॥

तद्वल्लिह्यात्तथा व्योषं मर्षी वा रोमचर्मणाम् ।
लाभतः शल्यकश्वाविद्गोधर्क्षशिखिजन्मनाम् ॥ ६० ॥

தாய்ப்பால் பருகுந்தோறும் வாந்தி செய்யும் குழந்தைக்கு கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி இவற்றின் பழச்சாறு பஞ்சகோலம் இவற்றை நெய், தேன் சேர்த்து உட்கொள்ளக் கொடுக்கவேண்டும். திப்பிலி, ஐவகை உப்புக்கள், வாய் விளங்கம், மலைவேம்பு [1]இவற்றையாவது, [1]த்ரிகடுகை யாவது கிடைப்பதற்கேற்றவாறு இருவகை முள்ளம்பன்றி,

உடும்பு, கரடி, மயில் இவற்றின் உரோமத்தையும், தோலையும் எரித்து எடுத்த [1]மஷியையாவது உட்கொள்ளச் செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. இவற்றையும் நெய்யும், தேனும் கலந்து உட் கொள்ளச் செய்யவேண்டும்.

खदिरार्जुनतालीसकुष्ठचन्दनजे रसे।
सक्षीरं साधितं सर्पिर्वमथुं विनियच्छति ॥ ६१ ॥

கருங்காலி, மருது, தாளீசபத்ரம், கோஷ்டம், சந்தனம் இவற்றின் கஷாயத்துடன் பாலும் கலந்து பக்குவம் செய்யப்பட்ட நெய் வாந்தியைப் போக்கும்.

सदन्तो जायते यस्तु दन्ताः प्राग्यस्य चोत्तराः।
कुर्वीत तस्मिन्नुत्पाते शान्तिं कं च द्विजातये ॥ ६२ ॥

दद्यात्सदक्षिणं बालं नैगमेषं च पूजयेत्।

குழந்தை பற்களுடன் பிறந்தாலும் (குழந்தைக்கு) முதலில் மேல் வரிசைப் பற்கள் உண்டானாலும் அது அவக் குறியாகும். ரக்ஷையின் பொருட்டு சாந்தி கர்மா செய்யவேண்டும். அந்தக் குழந்தையுடன் தக்ஷிணையும் சேர்த்து பிராம்மணனிடம் கொடுக்க வேணடும். நைக மேஷம் என்னும் கிரஹத்திற்குப் பூஜை செய்ய வேண்டும்.

तालुमांसे कफः क्रुद्धः कुरुते तालुकण्टकम् ॥ ६२ ॥

तेन तालुप्रदेशस्य निम्नता मूर्ध्नि जायते।
तालुपातः स्तनद्वेषः कृच्छ्रात्पानं शकृद्द्रवम् ॥ ६४ ॥

तृडास्यकण्ड्वक्षिरुजा ग्रीवादुर्धरता वमिः।

அண்ணப் பகுதியில் உள்ள மாம்ஸத்தில் கபம் கோப மடைந்து தாலு கண்டகம் என்னும் நோயை உண்டாக்கு கிறது. இதனால் தாலு பிரதேசத்தைச் சார்ந்த உச்சிக் குழியில் பள்ளம் ஏற்படுகிறது. (தாலு) அண்ணம் கீழே தொங்குதல், தாய்ப்பால் வேண்டாமை, கஷ்டப்பட்டு பால் பருகுதல், மலம் திரவமாக இருத்தல், எரிச்சல், வாயில் அரிப்பு, கண்ணில் வலி, கழுத்து தாங்க இயலாமை, வாந்தி ஆகியவையும் காணப்படும்.

तत्रोत्क्षिप्य यवक्षारक्षौद्राभ्यां प्रतिसारयेत् ॥ ६५ ॥

तालु तद्वत्कणाशुण्ठीगोशकृद्रससैन्धवैः ॥

இந்நோயில் (விரலால்) தாலுப் பிரதேசத்தை மேற்புறம் தூக்கிய பின் அவ்விடத்தில் யவக்ஷாரம், தேன் ஆகிய வற்றைப் பூச வேண்டும். அவ்வாறே திப்பிலி, சுக்கு, பசுஞ் சாணச்சாறு, இந்துப்பு இவற்றைப் பூசலாம்.

शृङ्बेरनिशाभृंगं कल्कितं वटपल्लवैः ॥ ६६ ॥

बध्वा गोशकृता लिप्तं कुकूले स्वेदयेत्ततः ।
रसेन लिम्पेत्ताल्वास्यं नेत्रे च परिषेचयेत् ॥ ६७ ॥

இஞ்சி, [1]மஞ்சள், [2]கரிசாலை இவற்றைக் கல்க்கமாக்கி அதை ஆலந்துளிரால் சுற்றிப் பசுஞ்சாணத்தால் பூசி உமித் தீயில் வேக வைக்க வேண்டும். பிறகு இதிலிருந்து சாறு பிழிந்து அதை அண்ணம், வாய் ஆகியவற்றில் தடவவும், கண்களில் பிழியவும் உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. கைரளியில் वचा என்று வசம்பு காணப்படுகிறது.

2. சங்க்ரஹத்தில் कुष्ठ கோஷ்டம் எனக் கூறப்படு கிறது.

हरीतकीवचाकुष्ठकल्कं माक्षिकसंयुतम् ।
पीत्वा कुमारः स्तन्येन मुच्यते तालुकण्टकात् ।। ६८ ।।

கடுக்காய், வசம்பு, கோஷ்டம் இவற்றின் கல்கத்துடன் தேன் கலந்து தாய்ப்பாலுடன் பருக குழந்தை தாலு கண்டக நோயில் இருந்து விடுபடுவான்.

मलोपलेपात्स्वेदाद्वा गुदे रक्तकफोद्भवः ।
ताम्रो व्रणोऽन्तः कण्डूमान् जायते भूर्युपद्रवः ।। ६९ ।।

केचित्तं मातृकादोषं वदन्त्यन्येऽहिपूतनम् ।
पृष्ठारुर्गुदकुट्टं च केचिच तमनामिकम् ।। ७० ।।

மலப் பூச்சு அல்லது வியர்வை காரணமாக குதத்தின் உட்புறத்தில் அரிப்புடனும் மற்றும் பல உபத்ரவங்களுடனும் சிவப்பு நிறமான விரணமானது ரத்தம், கபம் இவற்றால் உண்டாகும். சிலர் இந்நோயை மாத்ருகா தோஷம் என்றும், சிலர் அஹிபூதனா தோஷம் என்றும், சிலர் ப்ருஷ்டாரு (புட்டத்தில் சிரங்கு) என்றும், சிலர் குதகுட்டம் (குதத்தில் பொளிதல்) என்றும், சிலர் அனாமிகம் (பெயர் இல்லாதது) என்றும் கூறுவர்.

तत्र धात्र्याः पयः शोध्यं पित्तश्लेष्महरौषधैः ।

இந்த நோயில் பித்த கபங்களைப் போக்கும் மருந்துகளின் பிரயோகத்தால் தாயின் பாலைச் சுத்தம் செய்ய வேண்டும்.

शृतशीतं च शीताम्बुयुक्तमन्तरपानकम् ।। ७१ ।।

வெள்ளைச் சந்தனத்தை குளிர்ந்த நீர் சேர்த்து குழந்தைக்கு பருகுவதற்கு இடையிடையே கொடுக்க வேண்டும்.

குறிப்பு: *अन्तर्-अमान कम् என்ற மூலச் சொல்லுக்கு குதத்தின் உட்புறத்தை அலம்பும் நீர் என்று பொருள் கூறுவர்.

सक्षौद्रतार्क्ष्यशैलेन व्रणं तेन च लेपयेत्।

தேன், அஞ்சனக் கல் இவற்றுடன் குளிர்ந்த *நீர் கலந்து குத குட்டத்தில் பூசலாம்.

குறிப்பு: *வெள்ளைச் சந்தனத்துடன் என இந்து கூறுகிறார்.

त्रिफलाबदरीप्लक्षत्वक्क्वाथपरिषेचितम् ॥ ७२ ॥

कासीसरोचनातुत्थमनोह्वालरसांजनैः।
लेपयेदम्लपिष्टैर्वा चूर्णितैर्वाऽवचूर्णयेत् ॥ ७३ ॥

திரிபலை, இலந்தை, இத்தி இவற்றின் தோலைக் கஷாய மிட்டு ஊற்றிய பின்னர் அன்னபேதி, கோரோசனை, துத்தம், மனோசிலை, தாளகம், ரசாஞ்சனம் இவற்றைப் புளிப்பு திரவங்களால் அரைத்துப் பூச வேண்டும் அல்லது இவற்றின் சூரணத்தைத் தூவ வேண்டும்.

सुश्लक्ष्णैरथवा यष्टीशङ्खसौवीरकांजनैः।
सारिवाशंखनाभिभ्यामसनस्य त्वचाऽथवा ॥ ७४ ॥

அதிமதுரம், சங்கு, ஸௌவீராஞ்சனம் இவற்றையாவது நன்னாரி, சங்கின் மத்தியப் பகுதி இவற்றையாவது, வேங்கையின் பட்டையாவது, நன்கு தூளாக்கித் தூவலாம்.

रागकण्डूत्कटे कुर्याद्रक्तस्रावं जलौकसा।
सर्वं च पित्तव्रणजिच्छस्यते गुदकुट्टके ॥ ७५ ॥

சிவப்பு நிறமும், அரிப்பும் அதிகமாகக் காணப்பட்டால் அட்டையினால் ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். குதகுட்டத்தில் பித்த விரணத்திற்குக் கூறப்பட்ட எல்லா சிகித்ஸைகளையும் செய்ய வேண்டும்.

पाठावेल्लद्विरजनीमुस्तभार्गीपुनर्नवैः ।
सबिल्वत्र्यूषणैः सर्पिर्वृश्चिकालीयुतैः शृतम् ॥ ७६ ॥

लिहानो मात्रया रोगैर्मुच्यते मृत्तिकोद्भवैः ।

வட்டத்திருப்பி, வாய்விளங்கம், மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, சிறு தேக்கு, மூக்கிரட்டை, பில்வம், திரிகடு, தேட்கொடுக்கு இவற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து அளவுடன் உட்கொள்ள, மண் தின்றதனால் உண்டாகும் நோயிலிருந்து (பாலர்) விடுபடுவர்.

व्याधेर्यद्यस्य भैषज्यं स्तनस्तेन प्रलेपितः ।
स्थितो मुहूर्तं धौतोऽनु पीतस्तं तं जयेद्गदम् ॥ ७७ ॥

அந்தந்த நோய்க்குக் கூறிய மருந்துகளை அரைத்து தனத்தில் பூசி முகூர்த்த நேரம் (1½மணி) வைத்திருந்து பிறகு பூச்சை கழுவ வேண்டும். பிறகு குழந்தை தாய்ப்பாலைப் பருக அந்தந்த நோய் நீங்கும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां

षष्ठ उत्तरस्थाने बालामयप्रतिषेधो नाम द्वितीयोऽध्यायः ॥ २ ॥

உத்தரஸ்தானம் - இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ तृतीयोऽध्यायः - அத்தியாயம் - 3 ]

अथातो बालग्रहप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து பாலருக்கு கிரஹங்களால் உண்டாகும் நோய்க்கு சிகித்ஸை என்னும் அத்தியாயம் விவரிக்கிறோம்.

இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

पुरा गुहस्य रक्षार्थं निर्मिताः शूलपाणिना ।
मनुष्यविग्रहाः पंच सप्तस्त्रीविग्रहा ग्रहाः ॥ १ ॥

स्कन्दो विशाखो मेषाख्यः श्वग्रहः पितृसंज्ञितः ।
शकुनिः पूतना शीतपूतनाऽदृष्टिपूतना ॥ २ ॥

मुखमण्डितिका तद्वद्रेवती शुष्करेवती ।

முன்பு (குகனின்) முருகனின் *பாதுகாப்பின் பொருட்டு சூலத்தை ஆயுதமாகக் கொண்ட பரமேசுவரனால் மனித (ஆண்) உருவில் ஸ்கந்தன், விசாகன் (நைகமேஷம்), மேஷம், ச்வகிரஹம், பித்ருகிரஹம் என்ற ஐந்து கிரஹங்களும், பெண்ணுருவில் சகுனி, பூதனை, சீதபூதனை, அத்ருஷ்டி பூதனை (குருட்டு பூதனை), முகமண்டிதிகா, ரேவதி, சுஷ்கரேவதி என்ற பெயர் உள்ள ஏழு கிரஹங்களும் நிர்மாணிக்கப்பட்டனர்.

குறிப்பு: ஸுச்ருதத்தில் ஒன்பது கிரஹங்களே குறிப்பிடப் படுகின்றன.

★பிற்காலத்தில் இந்த கிரஹங்கள் பூமியில் புண்ய பாவத்திற்கேற்ப பாலரை பீடிப்பவையாக அமைந்தன.

तेषां ग्रहीष्यतां रूपं प्रततं रोदनं ज्वरः ॥ ३ ॥

## முன் குறி :

இந்த கிரஹங்களால் பாலன் பீடிக்கப்படுவதற்கு முன் இடைவிடாது அழுகையும், ஜ்வரமும் காணப்படும்.

सामान्यं रूपमुत्त्रासजृम्भाभ्रूक्षेपदीनताः ।
फेनस्रावोर्ध्वदृष्ट्योष्ठदन्तदंशप्रजागराः ॥ ४ ॥

रोदनं कूजनं स्तन्यविद्वेषः स्वरवैकृतम् ।
नखैरकस्मात्परितः स्वधात्र्यंगविलेखनम् ॥ ५ ॥

## இவற்றின் பொதுக் குறிகள் :

திகைப்பு, கொட்டாவி, புருவத்தை நெரித்தல், பரிதாபத் தோற்றம், (வாயிலிருந்து) நுரை வெளியாதல், மேல் நோக்கிப் பார்த்தல், உதட்டையும், பற்களையும் கடித்தல், தூக்கமின்மை, அழுதல், தெளிவின்றி அலற்றல், தாய்ப் பாலை வெறுத்தல், குரல் மாற்றம், காரணமின்றி நகங்களால் தன் உடம்பையும், தாதியின் உறுப்புக்களையும், கீறுதல் ஆகியவை பொதுக் குறிகள் ஆகும்.

तत्रैकनयनस्रावी शिरो विक्षिपते मुहुः ।
हतैकपक्षः स्तब्धांङ्गः सस्वेदो नतकन्धरः ॥ ६ ॥

दन्तखादी स्तनद्वेषी त्रस्यन् रोदिति विस्वरः ।
वक्रवक्त्रोवमेल्लालां भृशमूर्ध्वं निरीक्षते ॥ ७ ॥

वसासृग्गन्धिरुद्विग्नो बद्धमुष्टिशकृच्छिशुः ।
चलितैकाक्षिगण्डभ्रूः संरक्तोभयलोचनः ॥ ८ ॥

स्कन्दार्तस्तेन वैकल्यं मरणं वा भवेद् ध्रुवम् ।

### ஸ்கந்த கிரஹ பீடையின் குறிகள் :

ஒரு கண்ணில் நீர்வடிதல், தலையை அடிக்கடி உதறுதல், உடலின் ஒரு பாதி செயல் இழத்தல், உறுப்புக்கள் தம்பித்தல், வியர்த்தல். கழுத்து வளைதல், பற்களைக் கடித்தல், தாய்ப்பாலில் வெறுப்பு, பயந்த நிலையில் குரல் மாறி அழுதல், வாய் கோணல், வாய் நீரைக் கக்குதல், மிகவும் மேல் நோக்கிப் பார்த்தல் ஆகியவையும் மாம்ஸ எண்ணெய் ரத்தம் இவற்றின் நாற்றமும், திகைப்பு, கையை முஷ்டியாக மடக்குதல், மலக்கட்டு, ஒரு கண்ணும் ஒரு கன்னமும், ஒரு புருவமும் அசைதல், இரு கண்களும் சிவந்திருத்தல் ஆகியவை ஸ்கந்த கிரஹ பீடையின் குறிகளாகும். இதனால் உறுப்புக் குலைவு அல்லது மரணம் நிச்சயமாக உண்டாகும்.

संज्ञानाशो मुहुः केशलुंचनं कन्धरानतिः ॥ ९ ॥

विनम्य जृम्भमाणस्य शकृन्मूत्रप्रवर्तनम् ।
फेनोद्वमनमूर्ध्वाक्षी हस्तभ्रूपादनर्तनम् ॥ १० ॥

स्तनस्वजिह्वासन्दंशसंरम्भज्वरजागराः ।
पूयशोणितगन्धश्च स्कन्दापस्मारलक्षणम् ॥ ११ ॥

### விசாக* கிரஹம் பீடித்ததன் குறிகள் :

அடிக்கடி நினைவு நீங்குதல், கேசத்தை பிய்த்துக் கொள்ளுதல், கழுத்து வளைதல், உடலை வளைத்து கொட்டாவி விடும்பொழுது மலமும், சிறுநீரும்

வெளியேறுதல், நுரை கக்குதல், மேல் நோக்கிப் பார்த்தல், கைகள், புருவங்கள், கால்கள் இவற்றை அசைத்தல், தாயின் ஸ்தனத்தையும், தன் நாக்கையும் கடித்தல், கோபம், ஜுரம், தூக்கமின்மை, சீழ், ரத்தம் இவற்றின் நாற்றம் ஆகியவை ஸ்கந்தாபஸ்மாரக் குறிகளாகும்.

*குறிப்பு:* ★ஸ்கந்தாபஸ்மாரன் என விசாக கிரஹத்திற்கு வேறு பெயர் உள்ளது.

आध्मानं पाणिपादस्य स्पन्दनं फेननिर्वमः ।
तृण्मुष्टिवन्धातीसारस्वरदैन्यविवर्णताः ॥ १२ ॥

कूजनं स्तननं छर्दिः कासहिध्माप्रजागराः ।
ओष्ठदंशांगसंकोचस्तम्भबस्ताभगन्धताः ॥ १३ ॥

ऊर्ध्वं निरीक्ष्य हसनं, मध्ये विनमनं, ज्वरः ।
मूर्च्छैकनेत्रशोफश्च नैगमेषग्रहाकृतिः ॥ १४ ॥

### நைகமேஷ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

பொருமல், கைகளையும், கால்களையும் அசைத்தல், நுரை கக்குதல், விடாய், விரல்களை முஷ்டியாக மடக்குதல், பேதி, குரல் தளர்தல், நிற மாற்றம், கூவுதல், (இடிபோன்று) உரக்கக் கத்துதல், வாந்தியாதல், இருமல், விக்கல், தூக்கமின்மை, உதடுகளைக் கடித்தல், உறுப்புக்களைச் சுருக்கிக் கொள்ளுதல், தம்பிதம், ஆட்டின் மணம், மேலே பார்த்துச் சிரித்தல், உடலின் நடுப்பகுதியில் வளைவு, ஜுரம், மயக்கம், ஒரு கண் வீங்கியிருத்தல் ஆகியவை நைகமேஷ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதின் குறிகளாகும்.

कम्पो हृषितरोमत्वं स्वेदश्चक्षुर्निमीलनम् ।
बहिरायामनं जिह्वादंशोऽन्तः कण्ठकूजनम् ॥ १५ ॥

धावनं विट्सगन्धत्वं क्रोशनं श्वानवच्छुनि ।

**ச்வ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :**

நடுக்கம், மயிர்க்கூச்சம், வியர்த்தல், கண் மூடியிருத்தல், உடல் பின்னோக்கி வளைதல், நாக்கைக் கடித்தல், தொண்டையினுள் விசேஷமாக சப்தம் காணுதல், ஓடுதல், உடலில் மல நாற்றம், நாய் போல் குரைத்தல் ஆகியவை ச்வ கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

**குறிப்பு:** ★श्वा என்னும் சொல் நாயைக் குறிக்கும்.

रोमहर्षो मुहुस्त्रासः सहसा रोदनं ज्वरः ॥ १६ ॥

कासातिसारवमथुजृम्भातृट्शवगन्धताः ।
अङ्गेष्वाक्षेपविक्षेपः शोपस्तम्भविवर्णताः ॥ १७ ॥

मुष्टिबन्धः स्रुतिश्चाक्ष्णोर्बालस्य स्युः पितृग्रहे ।

**பித்ரு கிரஹம் பீடித்தலின் குறிகள் :**

மயிர்க்கூச்சம், அடிக்கடி பயம் உண்டாதல், திடீரென்று அழுதல், ஜ்வரம், இருமல், பேதி, வாந்தி, கொட்டாவி, விடாய், சவ நாற்றம், உறுப்புக்களின் குலுக்கலும் உதறலும், இளைப்பும், தம்பிதமும், நிற மாற்றமும் காணுதல், விரல்களை முஷ்டியாக மடித்தல், கண்களிலிருந்து நீர் சொரிதல் ஆகியவை பித்ரு க்ரஹத்தால் பீடிக்கப்பட்ட குழந்தையினிடத்தில் காணப்படும் குறிகளாகும்.

स्रस्ताङ्गत्वमतीसारो जिह्वातालुगले व्रणाः ॥ १८ ॥

स्फोटाः सदाहरुक्पाकाः सन्धिषु स्युः पुनः पुनः ।

निश्यह्नि प्रविलीयन्ते पाको वक्त्रे गुदेऽपि वा ॥ १९ ॥

भयं शकुनिगन्धत्वं ज्वरश्च शकुनिग्रहे ।

**சகுனி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :**

உறுப்புத் தளர்ச்சி, பேதி, நாக்கிலும், அண்ணத்திலும், தொண்டையிலும் புண் உண்டாதல், அடிக்கடி பூட்டுப் பகுதிகளில் எரிச்சல், வலி இவற்றுடன் பழுத்த கொப்புளம் இரவில் தோன்றி பகலில் குறைதல், வாய் அல்லது குதத்தில் புண் உண்டாதல், பயம், பறவையின் மணம், ஜ்வரம் ஆகியவை சகுனி கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

पूतनायां वमिः कम्पस्तन्द्रा रात्रौ प्रजागरः ॥ २० ॥

हिध्माऽऽध्मानं शकृद्भेदः पिपासा मूत्रनिग्रहः ।
स्रस्तहृष्टांगरोमत्वं काकवत्पूतिगन्धता ॥ २१ ॥

**பூதனை கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:**

வாந்தி, நடுக்கம், சோம்பல், இரவு தூக்கமின்மை, விக்கல், பொருமல், பேதி, விடாய், சிறுநீர்த்தடை, உறுப்புத் தளர்ச்சி, மயிர்க் கூச்சம், காக்கை போல் துர்கந்தம் ஆகியவை பூதனை கிரஹத்தால் பீடிக்கப்பட்ட குழந்தை யினிடத்தில் காணப்படும் குறிகளாகும்.

குறிப்பு: *பகலிலும் நன்கு தூங்க மாட்டான் என சுச்ருத சம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

शीतपूतनया कम्पो रोदनं तिर्यगीक्षणम् ।
तृष्णाऽन्त्रकूजोऽतीसारो वसावद्विस्रगन्धता ॥ २२ ॥

पार्श्वस्यैकस्य शीतत्वमुष्णत्वमपरस्य च ।

**சீதபூதனையால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :**

நடுக்கம், அழுதல், குறுக்காகப் பார்த்தல், விடாய், குடல் இரைச்சல், பேதி, மாம்ஸ எண்ணெய் போன்ற கெட்ட நாற்றம், உடலின் ஒரு புறம் குளிர்ச்சியாகவும், மறுபுறம் உஷ்ணமாகவும் இருத்தல் ஆகியவை சீதபூதனையால் பீடிக்கப்பட்டதன் குறிகளாகும்.

अन्धपूतनया छर्दिर्ज्वरः कासोऽल्पनिद्रता ।। २३ ।।

वर्चसो भेदवैवर्ण्यदौर्गन्ध्यान्यंङ्गशोपणम् ।
दृष्टिसादोऽतिरुक्कण्डूपोथकीजन्मशूनताः ।। २४ ।।

हिध्मोद्वेगस्तनद्वेषवैवर्ण्यस्वरतीक्ष्णताः ।
वेपथुर्मत्स्यगन्धत्वमथवा साम्लगन्धिता ।। २५ ।।

**குருட்டு பூதனா :**

வாந்தி, ஜுரம், இருமல், குறைந்த தூக்கம், மலம் திரவமாகவும், நிறம் மாறியும், கெட்ட நாற்றத்துடனும் இருத்தல், உறுப்புக்கள் இளைத்தல், கண்ணில் தளர்ச்சியும் அதிகவலியும் அரிப்பும் போதகீ என்னும் இமை நோயும் வீக்கமும் தோன்றல், விக்கல், திகைப்பு, தாய்ப்பால் வேண்டாமை, உடல் நிறமாற்றம், குரல் கடுமையாயிருத்தல், நடுக்கம், மீன் அல்லது காடி போன்று நாற்றம் எடுத்தல் ஆகியவை குருட்டு பூதனையால் பீடிக்கப்பட்ட நிலையில் உண்டாகும் குறிகளாகும்.

मुखमण्डितया पाणिपादस्यरमणीयता ।
सिराभिरसिताभाभिराचितोदरता ज्वरः ।। २६ ।।

अरोचकोऽङ्गग्लपनं गोमूत्रसमगन्धता ।

### முகமண்டதிகா கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :

கை, கால்கள், முகம் ஆகியவை அழகாக இருத்தல், வயிறு, கருநிற ஸிரைகளால் சூழப்பட்டிருத்தல், ஜுரம், ருசியின்மை, உறுப்புக்கள் சூம்புதல், (உடலில்) பசுநீர் மணம் ஏற்படுதல் ஆகியவை முகமண்டதிகையால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

குறிப்பு: ⋆அதிகம் சாப்பிடுவான் எனவும் ஸுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

रेवत्यां श्यावनीलत्वं कर्णनासाक्षिमर्दनम् ॥ २७ ॥

कासहिध्माक्षिविक्षेपवक्रवक्त्रत्वरक्तता: ।
बस्तगन्धो ज्वर: शोष: पुरीषं हरितं द्रवम् ॥ २८ ॥

### ரேவதி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :

(உடலில்) இளங்கறுப்பு அல்லது நீலநிறம், காதுகளையும், நாசியையும் கண்களையும் அமுக்கிக் கொள்ளுதல், இருமல், விக்கல், கண்கள் விரித்தல், வாய் கோணல், செந்நிறமாக இருத்தல், ஆட்டின் மணம் வீசுதல், ஜுரம், இளைப்பு, மலம் பச்சை நிறமாகவும், திரவமாகவும் இருத்தல் ஆகியவை ரேவதி கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

குறிப்பு: ⋆மலம் திரவமாகவும், பசுமையாகவும் இருத்தல் சுஷ்க ரேவதியின் குறிகள் என இந்து கருதுகிறார்.

जायते शुष्करेवत्यां क्रमात्सर्वांगसंक्षय: ।
केशशातोऽन्नविद्वेष: स्वरदैन्यं विवर्णता ॥ २९ ॥

रोदनं गृध्रगन्धित्वं दीर्घकालानुवर्तनम् ।

### சுஷ்க ரேவதியால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :

படிப்படியாக [1]எல்லா உறுப்புக்களும் சூம்புதல், கேசம் உதிர்தல், உணவு வேண்டாமை, குரல் தாழ்ந்து இருத்தல், நிறமாற்றம், அழுதல், கழுகு மணம் வீசுதல், நோய் வெகு காலம் நீடித்தல் ஆகியவை சுஷ்க ரேவதியால் பீடிக்கப் பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

குறிப்பு: 1. மற்றும் மலம் பல நிறத்துடனிருத்தல் வயிற்றில் முடிச்சுகள் காணுதல் ஆகியவையும் சங்கிரகத்தில் கூறப்பட்டுள்ளன.

2. கேசம் உதிர்தல் தொடங்கி அண்ணம் கருநிறமாக இருத்தல் ஈறாகக் குறிப்பிட்டவை யாவும் அசாத்யக் குறிகளாகும் என அருணதத்தர் கூறுகிறார்.

उदरे ग्रन्थयो वृत्ता यस्य नानाविधं शकृत् ।। ३० ।।

जिह्वाया निम्नता मध्ये श्यावं तालु च तं त्यजेत् ।

### அசாத்ய நிலை :

வயிற்றில் வட்டமான ஸிரை முடிச்சுகள் காணுதல், *மலம் பலவிதமாக இருத்தல், நாக்கின் மத்தியில் பள்ளம் தோன்றுதல், அண்ணம் கருமையாக இருத்தல் ஆகியவை காணப்படின் சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது.

குறிப்பு: *இறுகி அல்லது திரவமாக இருத்தல், கறுப்பு அல்லது வெண்மை நிறமாக இருத்தல் முதலியவை கூறப்படுகின்றன.

भुंजानोऽन्नं बहुविधं यो बालः परिहीयते ।। ३१ ।।

तृष्णागृहीतः क्षामाक्षो हन्ति तं शुष्करेवती ।

**சுஷ்கரேவதி பீடையில் அசாத்யநிலை :**

பலவிதமான உணவு உட்கொண்ட போதிலும் இளைத்தல், விடாய், புலன்கள் செயல் இழத்தல் ஆகிய நிலையில் உள்ள பாலரை சுஷ்க ரேவதி கிரஹம் கொல்லும்.

हिंसारत्यर्चनाकाङ्क्षा ग्रहग्रहणकारणम् ॥ ३२ ॥

பீடித்தலிலும், சுகம் அனுபவித்தலிலும், பூசிக்கப்படுதலிலும் கொண்டுள்ள விருப்பமே கிரஹங்கள் பீடிக்கக் காரணமாகும்.

तत्र हिंसात्मके बालो महान् वा स्रुतनासिकः ।
क्षतजिह्वः क्वणेद्गाढमसुखी साश्रुलोचनः ॥ ३३ ॥

दुर्वर्णो हीनवचनः पूतिगन्धिश्च जायते ।
क्षामो मूत्रपुरीषं स्वं मृद्नाति न जुगुप्सते ॥ ३४ ॥

हस्तौ चोद्यम्य संरब्धो हन्त्यात्मानं तथा परम् ।
तद्वच्च शस्त्रकाष्ठाद्यैरग्निं वा दीप्तमाविशेत् ॥ ३५ ॥

अप्सु मज्जेत्पतेत्कूपे कुर्यादन्यच्च तद्विधम् ।
तृड्दाहमोहान् पूयस्य छर्दनं च प्रवर्तयेत् ॥ ३६ ॥

रक्तं च सर्वमार्गेभ्यो रिष्टोत्पत्तिं च तं त्यजेत् ।

துன்புறுத்தும் தன்மை உள்ள க்ரஹங்களால் பாலர் அல்லது பெரியோர் பீடிக்கப்பட்டிருப்பின், நாசி நீர் சொரிதல், நாவில் காயம், மிகவும் அனத்தல், சுகமின்மை, கண்களில் இருந்து நீர் சொரிதல், ஒளியிழத்தல், குறைந்த பேச்சு, சீழ் மணம் வீசுதல் ஆகிய குறிகள் காணப்படும். உடல் இளைத்துக் காணப்படும். தம்முடைய மலத்தையும்

சிறுநீரையும் பிசைவார். வெறுப்பு உண்டாகாது. கோபம் கொண்டு கைகளை உயரத்தூக்கி, தன்னையே அடித்துக் கொள்வார். அவ்வாறே பிறரையும் அடிப்பார். அவ்வாறே ஆயுதம், *கட்டை முதலியவற்றால் அடிப்பார். ஜ்வாலை உடன் கூடிய நெருப்பில் நுழைவார். நீரில் மூழ்குவார். கிணற்றில் குதிப்பார். இத்தகைய மற்றுமுள்ள செயல் களைப் புரிவார். விடாய், உடலில் எரிச்சல், மயக்கம், சீழ், வாந்தி ஆகியவை உண்டாகும். எல்லாத் துவாரங்களின் மூலமாகவும் ரத்தம் வெளியேறும். மரணக் குறிகளையும் உண்டாக்கும். இத்தகைய நோயாளியை சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது.

குறிப்பு: *கட்டை முதலிய என்பதால் ஓடு, கல் முதலி யவை கூறப்படுகின்றன.

रहःस्त्रीरतिसंलापगन्धस्रग्भूषणप्रियः ॥ ३७ ॥

हृष्टः शान्तश्च दुःसाध्यो रतिकामेन पीडितः ।

(ரதிகாமனால்) சுகம் அனுபவிக்க விரும்பும் கிரஹத்தால் (பாலர் அல்லது பெரியோர்) பீடிக்கப்பட்டிருப்பின் தனிமையில் பெண்களுடன் சுகம் அனுபவித்தல் பேசுதல் ஆகியவற்றையும், மணப்பொருள், மாலை, அலங்காரப் பொருள்கள் ஆகியவற்றையும் விரும்புவார். மகிழ்ச்சி யுடனும், அமைதியுடனும் காணப்படுவார். இது சிகித் ஸைக்குக் கடினமாகும்.

दीनः परिमृशन् वक्त्रं शुष्कोष्ठगलतालुकः ॥ ३८ ॥

शंकितं वीक्षते रौति ध्यायत्यायाति भीतताम् ।
अन्नमन्नाभिलाषेऽपि दत्तं नात्ति बुभुक्षते ॥ ३९ ॥

गृहीतं बलिकामेन तं विद्यात्सुखसाधनम् ।

பூசிக்கப்படுதலை விரும்பும் கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பின், பரிதாபகரமான தோற்றம், வாயை (கையால்) பரிசித்துக் கொண்டிருத்தல், உதடு, தொண்டை, அண்ணம் ஆகியவை வறண்டிருத்தல், சந்தேகத்துடன் பார்த்தல், கூவுதல், தியானித்தல், பயப்படுதல், உணவு கொள்ள விருப்பம் இருந்தபோதிலும், கொடுக்கப்பட்ட உணவை அதிகமாக உண்ணாமை ஆகிய குறிகள் காணப்படும். இதற்குச் சிகித்ஸை செய்வது சுலபம் ஆகும்.

हन्तुकामं जयेद्धोमैः सिद्धमन्त्रप्रवर्तितैः ॥ ४० ॥

**சிகித்ஸை :**

துன்புறுத்த விரும்பும் கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதை பலமுறை பயன்கண்ட மந்திரங்களால் ஹோமம் செய்து வெல்ல வேண்டும்.

குறிப்பு: ★ துன்புறுத்த விரும்பும் க்ரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பின் சிகித்ஸை செய்யக் கூடாது எனக் கூறப்பட்டதெனினும் கடைசி மூச்சு உள்ள வரையில் சிகித்ஸை செய்ய வேண்டுமென சங்கிரகத்தில் கூறியதை அனுசரித்து இவ்வாறு கூறப்படுகிறது. மேலும் மந்திரத்தின் வீர்யம் தனித்தன்மை வாய்ந்தது.

इतरौ तु यथाकामं रतिबल्यादिदानतः ।

மற்ற இரண்டு கிரஹங்களால் பீடிக்கப்பட்டிருப்பின் அவற்றின் விருப்பப்படி முறையே போக அமைப்பு, பலி முதலிய கொடுத்தல் இவற்றின் மூலம் சிகித்ஸை செய்ய வேண்டும்.

अथ साध्यग्रहं बालं विविक्ते शरणे स्थितम् ॥ ४१ ॥

त्रिरह्नः सिक्तसंसृष्टे सदा सन्निहितानले ।
विकीर्णभूतिकुसुमपत्रबीजान्नसर्षपे ॥ ४२ ॥

रक्षोघ्नतैलज्वलितप्रदीपहतपाप्मनि ।
व्यवायमद्यपिशितनिवृत्तपरिचारके ॥ ४३ ॥

पुराणसर्पिषाऽभ्यक्तं परिपिक्तं सुखाम्बुना ।
साधितेन बलानिम्बवैजयन्तीनृपद्रुमैः ॥ ४४ ॥

पारिभद्रककट्वंगजम्बूवरुणकट्तृणैः ।
कपोतवंकाऽपामार्गपाटलामधुशिग्रुभिः ॥ ४५ ॥

काकजंघामहाश्वेताकपित्थक्षीरपादपैः ।
सकदम्बकरञ्जैश्च धूपं स्नातस्य चाचरेत् ॥ ४६ ॥

द्वीपिव्याघ्राहिसिंहर्क्षचर्मभिर्घृतमिश्रितैः ।

பகலில் மூன்று முறை பெருக்கி (மூன்று முறை) நனைக்கப்பட்டதும், எப்பொழுதும் அக்னி தயார் நிலையிலும் உள்ளதும், விபூதி, மலர் (முன்னை முதலிய) இலைகள், (அவரை முதலிய) விதைகள், அன்னம், கடுகு ஆகியவை இரைக்கப்பட்டதும், அரக்கர்களைப் போக்கும் தன்மை உள்ள தைலங்களின் மூலம் ஒளியூட்டப்பெற்ற விளக்குகளால் பாவம் நீங்கியதும், புணர்ச்சி, மது, மாமிசம் ஆகியவற்றை விலக்கிய பரிசாரகர் உள்ளதுமான தனித்த வீட்டில் ஸாத்ய கிரஹத்தால் பீடிக்கப்பட்ட பாலரை இருக்கச் செய்து பழைய நெய்யால் அப்யங்கம் செய்வித்து, சிற்றா முட்டி, வேம்பு, முன்னை, சரக்கொன்றை, மலை [1]வேம்பு, பெருவாகை, நாவல், மாவிலங்கை, வாசனைப் புல், பிராம்மி, நாயுருவி, பாதிரி, செம்முருங்கை, குன்றி, [2]வெள்வசம்பு, விளா, பால் மரங்கள், கதம்பம், புங்கு

இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய வெந்நீரால் ஸ்னானம் செய்வித்து சிறுத்தை, புலி, பாம்பு, சிங்கம், கரடி இவற்றின் தோலுடன் நெய் சேர்த்துப் புகை போட வேண்டும்.

குறிப்பு: 1. पारिभद्रक என்பதற்கு கல்யாண முருக்கு என்றும்,

2. महाश्वेता என்பதற்கு வாலுளுவை என்றும் உரை கூறுவர்.

पूतीदशांगीसिद्धार्थवचाभल्लातदीप्यकैः ॥ ४७ ॥

सकुष्ठैः सघृतैर्धूपः सर्वग्रहविमोक्षणः ।

மணிப்புங்கு, [1]தசாங்கம், வெண்கடுகு, வசம்பு, சேங்கொட்டை, ஜீரகம், கோஷ்டம் இவற்றுடன் நெய் கலந்து புகையிட எல்லாக் கிரக பீடைகளும் நீங்கும்.

குறிப்பு: 1. வசம்பு, காயம், வாய்விளங்கம், இந்துப்பு, வட்டத்திருப்பி, யானைத்திப்பிலி, அதிவிடயம், திரிகடுகு ஆகியவை காச்யபமுனிவர் கூறிய தசாங்கப் பொருள்களாகும். மணிப்புங்கின் வேர், பட்டை, இலை, வைரம், மலர், பழம், மொட்டு, சாறு, முள், பால் ஆகியவை குறிப்பிடப்படுவதாகவும் கூறுவர்.

सर्षपा निम्बपत्राणि मूलमश्वखुरा वचा ॥ ४८ ॥

भूर्जपत्रं घृतं धूपः सर्वग्रहनिवारणः ।

கடுகு, வேப்பிலை, மலையமுக்கியின் வேர், வசம்பு, பூர்ஜ இலை இவற்றுடன் நெய் சேர்த்துப் புகையிட எல்லாக் கிரஹ பீடைகளும் நீங்கும்.

अनन्ताम्रास्थितगरं मरिचं मधुरो गणः ॥ ४९ ॥

शृगालविन्ना मुस्ता च कल्कितैस्तैर्घृतं पचेत् ।
दशमूलरसक्षीरयुक्तं तद् ग्रहजित्परम् ॥ ५० ॥

**அனந்தாதி கிருதம் :**

காஞ்சொறி, மாம்பருப்பு, தகர விதை, மிளகு, *மதுர கணம், ஓரிலை, கோரைக்கிழங்கு இவற்றின் கல்கத்துடன் தசமூல கஷாயமும், பாலும் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகிக்கலாம். இது கிரஹ பீடையைப் போக்கச் சிறந்தது.

குறிப்பு: ⋆ மதுரகணம் ஸூத்ரஸ்தானம் 10-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

रास्नाद्यंशुमतीवृद्धपंचमूलबलाघनात् ।
क्वाथे सर्पिः पचेत्पिष्टैः सारिवाव्योषचित्रकैः ॥ ५१ ॥

पाठाविडंगमधुकपयस्याहिंगुदारुभिः ।
सग्रन्थिकैः सेन्द्रयवैः शिशोस्तत्सततं हितम् ॥ ५२ ॥

सर्वरोगग्रहहरं दीपनं बलवर्णदम् ।

**ராஸ்னாதி கிருதம் :**

சிற்றரத்தை, ஓரிலை, மூவிலை, மகாபஞ்சமூலம், சிற்றாமுட்டி, கோரைக் கிழங்கு இவற்றின் கஷாயத்தில் நன்னாரி, த்ரிகடுகு, கொடிவேலி, வட்டத்திருப்பி, வாய்விளங்கம், அதிமதுரம், க்ஷீரகாகோலீ, காயம், தேவதாரு, கண்டந்திப்பிலி, வெட்பாலை அரிசி இவற்றின் கல்கம் சேர்த்து நெய் பக்குவம் செய்து எப்பொழுதும் குழந்தைக்கு உபயோகிக்க எல்லா நோய்களையும் கிரஹ பீடைகளையும் போக்கும். பசியைத் தூண்டும், பலம், நிறம் ஆகியவற்றை உண்டாக்கும்.

सारिबासुरभीब्राह्मीशंखिनीकुष्ठसर्षपैः ॥ ५३ ॥

वचाश्वगन्धासुरसायुक्तैः सर्पिर्विपाचयेत् ।
तन्नाशयेद्ग्रहान् सर्वान् पानेनाभ्यंजनेन च ॥ ५४ ॥

**ஸாரிவாதி கிருதம் :**

நன்னாரி, சந்தனம், வல்லாரை, கிரிவள்ளி, கோஷ்டம், கடுகு, வசம்பு, அமுக்கிராக்கிழங்கு, துளசி இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த நெய்யைப் பருகுவதாலும் அப்யங்கம் செய்வதாலும் எல்லா கிரஹ பீடைகளும் நீங்கும்.

गोशृंगचर्मबालाहिनिर्मोकं वृषदंशविट् ।
निम्बपत्राज्यकुटकामदनं बृहतीद्वयम् ॥ ५५ ॥

कार्पासास्थियवच्छागरोमदेवाह्वसर्षपम् ।
मयूरपत्रश्रीवासं तुषकेशं सरामठम् ॥ ५६ ॥

मृद्भाण्डे बस्तमूत्रेण भावितं श्लक्ष्णचूर्णितम् ।
धूपनार्थं हितं सर्वभूतेषु विषमेज्वरे ॥ ५७ ॥

பசுவினுடைய கொம்பு, சருமம், உரோமம் ஆகிய வற்றையும், பாம்புச் சட்டை, பூனையின் மலம், வேப்பிலை, நெய், கடுகரோஹிணீ, மருக்காரை, கண்டங்கத்திரி, முள்ளுக் கத்திரி, பருத்திக் கொட்டை, யவை, ஆட்டின் உரோமம், தேவதாரு, கடுகு, மயில் தோகை, திருவட்டப்பிசின், உமி, கேசம், பெருங்காயம் இவற்றையும் மண் பாத்திரத்தில் இட்டு ஆட்டு மூத்திரத்தில் ஊற வைக்கவேண்டும். பிறகு நன்கு பொடித்து எல்லாவித க்ரஹ பீடையிலும், முறை ஜுரத்திலும் புகையிடலாம்.

घृतानि भूतविद्यायां वक्ष्यन्ते यानि तानि च ।
युंज्यात्तथा बलिं होमं स्नपनं मन्त्रतन्त्रवित् ॥ ५८ ॥

பூதவித்யையில் (அடுத்த அத்தியாயத்தில்) கூறப்படவிருக்கிற நெய் வகைகளையும் உபயோகிக்கவேண்டும்.

மந்த்ரம், தந்த்ரம் இவற்றை அறிந்த வைத்தியர் பலி கொடுத்தல், ஹோமம் செய்தல், ஸ்னானம் செய்வித்தல் ஆகியவற்றைச் செய்விக்கவேண்டும்.

குறிப்பு: பாலருக்கு ஸ்னானம் செய்விக்கும் விபரம் தரும் தனித்த அத்தியாயம் சங்க்ரஹத்தில் காணப்படுகிறது.

पूतीकरंज (जात्) त्वक्पत्रं क्षीरिभ्यो बर्बरादपि ।
तुम्बीविशालारलुकाशमीबिल्वकपित्थकाः ॥ ५९ ॥

उत्क्वाथ्य तोयं तद्रात्रौ बालानां स्नपनं शिवम् ।

ஆவிலின் பட்டையும், பால்மரங்கள், சிறுதேக்கு அல்லது வெண் சந்தனம், சுரை, பேய்த்தும்மட்டி, பெருவாகை, வன்னி, பில்வம், விளா இவற்றின் இலையையும் நீரில் இட்டுக் கொதிக்கவைத்து இரவில் பாலரை ஸ்னானம் செய்விக்க மங்களமுண்டாகும்.

குறிப்பு : ஆவில் தொடங்கி விளா ஈறாக யாவற்றிலிருந்தும் பட்டையையும், இலையையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென இந்து கூறுகிறார்.

अनुबन्धान् यथाकृच्छ्रं ग्रहापायेऽप्युपद्रवान् ॥ ६० ॥

बालामयनिषेधोक्तभेषजैः समुपाचरेत् ॥ ६०१/२

கிரஹங்களின் பீடை நீங்கியபோதிலும் தொடர்ந்து உபத்ரவங்கள் காணப்படின் பாலர்களுக்கு உண்டாகும் நோய்க்குக் கூறிய மருந்துகளால் சிகித்ஸை செய்ய வேண்டும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टाङ्गहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने बालग्रहप्रतिषेधो नाम तृतीयोऽध्यायः ॥ ३ ॥

உத்தரஸ்தானம் - மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

★★★★★

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ चतुर्थोऽध्यायः - அத்தியாயம் - 4 ]

अथातो भूतविज्ञानीयमध्यायं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து பூதங்களை அறியும்முறை கூறப்படுகிறது. இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

लक्षयेज्ज्ञानविज्ञानवाक्चेष्टाबलपौरुषम् ।
पुरुषेऽपौरुषं यत्र तत्र भूतग्रहं वदेत् ॥ १ ॥

மனிதரிடத்தில் பொதுஅறிவு, நுண்ணறிவு, பேச்சு, செயல், பலம், ஆண்மை ஆகியவை மனிதத்தன்மையை மீறியவையாக காணப்படின் பூதத்தால் அவர் பீடிக்கப் பட்டிருப்பதாக அறியவேண்டும்.

भूतस्य रूपप्रकृतिभाषागत्यादिचेष्टितैः ।
यस्यानुकारं कुरुते तेनाविष्टं तमादिशेत् ॥ २ ॥

(பூதத்தால் பீடிக்கப்பட்டவர்) உருவம், இயல்பு, பேச்சு, நடை முதலிய செயல்கள் ஆகியவற்றால் எந்த கிரஹத்தை ஒத்திருக்கின்றாரோ அந்த பூதக்ரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதாக அறியவேண்டும்.

सोऽष्टादशविधो देवदानवादिविभेदतः ।

தேவர், அரக்கர் முதலிய பிரிவு காரணமாக பூத கிரஹங்கள் பதினெட்டு விதமாகும்.

हेतुस्तदनुपक्तौ तु सद्यःपूर्वकृतोऽथवा ॥ ३ ॥

प्रज्ञापराधः, सुतरां तेन कामादिजन्मना ।
लुप्तधर्मव्रताचारः पूज्यानप्यतिवर्तते ॥ ४ ॥

तं तथा भिन्नमर्यादं पापमात्मोपघातिनम् ।
देवादयोऽप्यनुघ्नन्ति ग्रहाश्छिद्रप्रहारिणः ॥ ५ ॥

இந்தப்பிறவி அல்லது முற்பிறவியில் செய்த தீவினையே இவைகள் பீடிக்க முக்கிய காரணமாகிறது. பெரும்பாலும் ஆசை *முதலியவற்றால் உண்டான அறிவின்மை காரணமாக (மனிதர்) தருமம், விரதம், ஆசாரம் ஆகியவை நீங்கியவராக மதிக்கத் தகுந்தவர்களை அதிக்கிரமிப்பவராகவும், வரம்பை மீறியவராகவும், பாபமுள்ளவராகவும், இவ்வாறு தனக்கே தீங்கு விளைவித்துக் கொள்பவராகவும் உள்ள மனிதரை, சமயம் வாய்க்கும்பொழுது தாக்கும் இயல்புள்ள தேவர் முதலிய கிரஹங்கள் பீடிக்கின்றன.

குறிப்பு: *ஆசை முதலிய என்பதால் கோபம், உலோபம், மானம் முதலியவை கூறப்படுகின்றன.

छिद्रं पापक्रियारम्भः पाकोऽनिष्टस्य कर्मणः ।
एकस्य शून्येऽवस्थानं श्मशानादिषु वा निशि ॥ ६ ॥

दिग्वासस्त्वं गुरोर्निन्दा रतेरविधिसेवनम्।
अशुचेर्देवतार्चादि परसूतकसंकरः ॥ ७॥

होममन्त्रबलीज्यानां विगुणं परिकर्म च।
समासाद्दिनचर्यादिप्रोक्ताचारव्यतिक्रमः॥ ८॥

**கிரஹங்கள் பீடிப்பதற்கு வாய்ப்பு ஊட்டும் சமயங்கள்:**

பாவச் செயல்களை தொடங்குதல், முன்செய்த தீச்செயல்கள் பலன் கொடுக்க ஆரம்பித்தல், ஒருவரு மில்லாத இடத்திலாவது மயானம் முதலிய இடங்களில் இரவிலாவது தனித்து இருத்தல், ஆடையின்றி இருத்தல், பெரியோரை நிந்தனை செய்தல், முறைமீறி கலவை புரிதல், தூய்மையின்றி தேவதைகளைப் பூசித்தல், முதலியனவும் பிறர் வீட்டுப் பிரஸவத்தீட்டு கலத்தலும், ஹோமம், மந்த்ரம், பலிகொடுத்தல், யாகம் ஆகியவற்றை முறை மீறிச் செய்தலும் சுருங்கக்கூறின் தினசர்யை முதலியவற்றில் கூறிய ஆசாரங்களை மீறுதலும், கிரஹங்கள் பீடிக்க வாய்ப்பு ஊட்டும் சூழ்நிலையாகும்.

गृह्णन्ति शुक्लप्रतिपत्त्रयोदश्योः सुरा नरम्।
शुक्लत्रयोदशीकृष्णद्वादश्योर्दानवा ग्रहाः॥ ९॥

गन्धर्वास्तु चतुर्दश्यां द्वादश्यां चोरगाः पुनः।
पंचम्यां शुक्लसप्तम्येकादश्योस्तु धनेश्वराः॥ १०॥

शुक्लाष्टपंचमीपूर्णमासीषु ब्रह्मराक्षसाः।
कृष्णे रक्षः पिशाचाद्या नवद्वादशपर्वसु ॥ ११॥

दशामावास्ययोरष्टनवम्योः पितरोऽपरे।
गुरुवृद्धादयः-

### கிரஹங்கள் பீடிப்பதற்கான திதிகள் :

சுக்லபட்சத்து பிரதமை திரயோதசீ இவற்றில் தேவர்களும், சுக்லபட்சத்து திரயோதசீ, கிருஷ்ணபட்சத்து துவாதசீ இவற்றில் அசுரர்களும் (தானவர்களும்) சதுர்த்தசீ, த்வாதசீ இவற்றில் கந்தர்வர்களும், பஞ்சமியில் ஸர்ப்பகிரகங்களும் சுக்லபட்சத்து ஸப்தமி, சுக்லபட்சத்து ஏகாதசீ ஆகியவற்றில் யக்ஷர்களும், சுக்லபட்சத்து அஷ்டமீ, பஞ்சமீ, பௌர்ணமீ ஆகியவற்றில் பிரம்மராக்ஷஸர்களும், கிருஷ்ணபட்சத்து நவமீ, துவாதசீ மற்றும் அமாவாஸ்யை ஆகியவற்றில் ரக்ஷர், பிசாசர் முதலியோரும், தசமீ, அமாவாஸ்யை ஆகியவற்றில் பித்ருக்களும், அஷ்டமீ, நவமீ ஆகியவற்றில் குருமார், விருத்தர் முதலியவர்களும் மனிதனைப் பீடிக்கின்றனர்.

-प्रायः कालं सन्ध्यासु लक्षयेत् ॥ १२ ॥

### பொது காலம் :

முற்கூறிய திதிகளில் கிரஹங்கள் பொதுவாக ஸந்தியா காலத்தில் மனிதனைப் பீடிக்கின்றன.

फुल्लपद्मोपममुखं सौम्यदृष्टिमकोपनम्।
अल्पवाक्स्वेदविण्मूत्रं भोजनानभिलाषिणम् ॥ १३ ॥

देवद्विजातिपरमं शुचिं संस्कृतवादिनम्।
मीलयन्तं चिरान्नेत्रे सुरभिं वरदायिनम् ॥ १४ ॥

शुक्लमाल्याम्बरसरिच्छैलोच्चभवनप्रियम्।
अनिद्रमप्रधृष्यं च विद्यादेववशीकृतम् ॥ १५ ॥

## தேவி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

மலர்ந்த தாமரையைப்போன்ற முகம், கண்களில் தெளிவு, கோபமின்மை, பேச்சும், வியர்வையும், மலமும், சிறுநீரும் குறைந்து காணப்படுதல், உணவுவேண்டாமை, தேவர், பிராம்மணர் ஆகியோரிடத்தில் ஈடுபாடு, சுத்த மாயிருத்தல், *திருத்தமாகப் பேசுதல், நீண்ட நேரத் திற்குப்பின் கண்ணை இமைத்தல், மணம் வீசுதல், வர மளித்தல், வெண்ணிறமுள்ளவையான மாலை, வஸ்திரம், ஏரி, மலை, உப்பரிகை ஆகியவற்றை விரும்புதல். தூக்கமின்மை, எதிர்க்கமுடியாமை ஆகியவை தேவரால் பீடிக்கப்பட்டவரிடம் காணப்படும் குறிகளாகும்.

குறிப்பு: *ஸம்ஸ்க்ருதம் பேசுதல் என்றும் பொருள் கொள்வதுண்டு.

जिह्मदृष्टिं दुरात्मानं गुरुदेवद्विजद्विषम् ।
निर्भयं मानिनं शूरं क्रोधनं व्यवसायिनम् ॥ १६ ॥

रुद्रः स्कन्दो विशाखोऽहमिन्द्रोऽहमिति वादिनम् ।
सुरामांसरुचिं विद्यात् दैत्यग्रहगृहीतकम् ॥ १७ ॥

## அசுர கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

கோணலான பார்வை, கெட்ட இயல்பு, பெரியோரையும், தேவரையும், மறையோரையும் வெறுத்தல், பயமின்மை, மானம், சூரத்தன்மை, கோபம், செயல்திறன் ஆகியவற்றைக் கொண்டிருத்தல், தன்னை ருத்ரன், கந்தன், விசாகன், இந்திரன் என்றவாறு கூறிக்கொள்ளுதல், மதுவகை, மாம்ஸம் ஆகியவற்றில் விருப்பம் ஆகியவை அசுர கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகளாகும்.

स्वाचारं सुरभिं हृष्टं गीतनर्तनकारिणम् ।
स्नानोद्यानरुचिं रक्तवस्त्रमाल्यानुलेपनम् ॥ १८ ॥

शृंगारलीलाभिरतं गन्धर्वाध्युषितं वदेत् ।

### கந்தர்வ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

மங்களச் செயல்களைப்புரிதல், மணத்துடன் இருத்தல், களிப்பு, பாடுதல், நடனமாடுதல், ஸ்னானம் செய்யவும், உத்யானத்தில் உலாவவும் விரும்புதல், சிவப்பு நிறமுள்ள வையான வஸ்திரம், மாலை, பூச்சு ஆகியவற்றை கொண்டிருத்தல், சிருங்கார லீலைகளில் ஈடுபாடு ஆகியவை கந்தர்வ கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதன் குறிகளாகும்.

रक्ताक्षं क्रोधनं स्तब्धदृष्टिं वक्रगतिं चलम् ॥ १९ ॥

श्वसन्तमनिशं जिह्वालोलिनं सृक्किणीलिहम् ।
प्रियदुग्धगुडस्नानमधोवदनशायिनम् ॥ २० ॥

उरगाधिष्ठितं विद्यात्त्रस्यन्तं चातपत्रतः ।

### ஸர்ப்ப கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

கண்கள் சிவந்திருத்தல், கோபித்தல், கண்கள் ஒருநிலை யிலிருத்தல், கோணலான நடை, நிலைகொள்ளாமை, அடிக்கடி பெருமூச்சுவிடுதல், நாக்கை அசைத்தல், கடை வாயை நக்கிக்கொள்ளுதல் ஆகியவையும் பால், வெல்லம், ஸ்னானம் செய்தல் ஆகியவற்றில் விருப்பம், குப்புறப் படுத்தல், குடையைக்கண்டு மிரளுதல் ஆகியவையும் ஸர்ப்ப கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதன் குறிகளாகும்.

विप्लुतंत्रस्तरक्ताक्षं शुभगन्धं सुतेजसम् ॥ २१ ॥

प्रियनृत्यकथागीतस्नानमाल्यानुलेपनम् ।

मत्स्यमांसरुचिं हृष्टं तुष्टं बलिनमव्ययम् ॥ २२ ॥

चलिताग्रकरं कस्मै किं ददामीति वादिनम् ।
रहस्यभाषिणं वैद्यद्विजातिपरिभाविनम् ॥ २३ ॥

अल्परोषं द्रुतगतिं विद्याद्यक्षगृहीतकम् ।

### யக்ஷ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

கண்கள் அசைகின்றவையாகவும், மருண்டவையாகவும், சிவந்தனவாகவும், இருத்தல், நறுமணம் வீசுதல், நல்ல ஒளியுடன் காணுதல், நடனம், கதை, பாட்டு, ஸ்னானம், மாலை, பூச்சு ஆகியவற்றில் ஈடுபாடு, மீன், மாமிசம், ஆகியவற்றில் விருப்பம், மனக்களிப்பு, பலசாலியாக இருத்தல், வேதனையின்மை முன் கைகளை அசைத்தல், யாருக்கு என்ன கொடுக்கவேண்டும் என்று கேட்டல், இரகசியமாகப் பேசுதல், வைத்தியர், மறையோர் ஆகியோரை அவமதித்தல், குறைவாகக் கோபித்தல், விரைவாகச் செல்லுதல் ஆகியவை யக்ஷரால் பீடிக்கப் பட்டிருப்பதன் குறிகளாகும்.

हास्यनृत्यप्रियं रौद्रचेष्टं छिद्रप्रहारिणम् ॥ २४ ॥

आक्रोशिनं शीघ्रगतिं देवद्विजभिषग्द्विषम् ।
आत्मानं काष्ठशस्त्राद्यैर्घ्नतं भोः शब्दवादिनम् ॥ २५ ॥

शास्त्रवेदपठं विद्याद् गृहीतं ब्रह्मराक्षसैः ।

### பிரும்ம ராக்ஷஸரால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

சிரிப்பதற்கும், நடனமாடுவதற்கும் விரும்புதல், கொடூர மான செயல்புரிதல், சமயம் வாய்த்தபொழுது பீடித்தல், உரக்கக் கத்துதல், விரைவாகச் செல்லுதல், தேவர்,

மறையோர், வைத்தியர் ஆகியோரை வெறுத்தல், கட்டை, சஸ்திரம் முதலியவற்றால் தன்னை அடித்துக் கொள்ளுதல், ஓய் என்ற சப்தமிடுதல், சாஸ்திரம் வேதம் இவற்றைப் படித்தல் ஆகியவை ப்ரும்மராக்ஷஸரால் பீடிக்கப்பட்டிருப்பதன் குறிகளாகும்.

सक्रोधदृष्टिं भ्रुकुटिमुद्वहन्तं ससंभ्रमम् ॥ २६ ॥

प्रहरन्तं प्रधावन्तं शब्दन्तं भैरवाननम् ।
अन्नादृतेऽपि बलिनं नष्टनिद्रं निशाचरम् ॥ २७ ॥

निर्लज्जमशुचिं शूरं क्रूरं परुषभाषिणम् ।
रोषणं रक्तमाल्यस्त्रीरक्तमद्यामिषप्रियम् ॥ २८ ॥

दृष्ट्वा च रक्तं मांसं वालिहानं दशनच्छदौ ।
हसन्तमन्नकाले च राक्षसाधिष्ठितं वदेत् ॥ २९ ॥

**ராக்ஷஸ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:**

கோபத்துடன் பார்த்தல், புருவத்தை நெரித்தல், பரபரப்புடன் அடித்தல், ஓடுதல், சப்தித்தல், முகம் பயங்கரமாயிருத்தல், உணவின்றியும் பலம் பெற்றிருத்தல், தூக்கமின்மை, இரவில் சஞ்சரித்தல், வெட்கமின்மை, சுத்தமின்மை, கொடூரத்தன்மை, சூரத்தன்மை, கடுமையாகப் பேசுதல், கோபித்தல், சிவப்பு நிறமுள்ளவையான மாலை, பெண்டிர், ரத்தம், மது, மாமிசம் ஆகியவற்றை விரும்புதல், ரத்தம், அல்லது மாமிசத்தைக் கண்டு உதடுகளை நக்கிக் கொள்ளுதல், உணவு கொள்ளும் பொழுது சிரித்தல் ஆகியவை ராக்ஷஸரால் பீடிக்கப்பட்டிருப்பதன் குறிகளாகும்.

अस्वस्थचित्तं नैकत्र तिष्ठन्तं परिधाविनम्।
उच्छिष्टनृत्यगान्धर्वहासमद्यामिषप्रियम्॥ ३०॥

निर्भर्त्सनाद्दीनमुखं रुदन्तमनिमित्ततः।
नखैर्लिखन्तमात्मानं रूक्षध्वस्तवपुःस्वरम्॥ ३१॥

आवेदयन्तं दुःखानि सम्बद्धाबद्धभाषिणम्।
नष्टस्मृतिं शून्यरतिं लोलं नग्नं मलीमसम्॥ ३२॥

रथ्याचैलपरीधानं तृणमालाविभूषणम्।
आरोहन्तं च काष्ठाश्वं तथा संकरकूटकम्॥ ३३॥

बह्वाशिनं पिशाचेन विजानीयादधिष्ठितम्।

**பிசாச கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:**

மனம் அமைதியற்று இருத்தல், ஓரிடத்திலும் நிலைக்காமை, ஓடுதல், எச்சில், நடனம், பாடுதல், சிரித்தல், மதுவகை, மாம்ஸம் ஆகியவற்றை விரும்புதல் அதட்டிய அளவில் பரிதாபமான முகத்தோற்றம், காரணமின்றி அழுதல், நகத்தால் உடலில் கீறிக்கொள்ளுதல், உடல் வறட்சி, சிதைந்த குரல், கஷ்டங்களைக் கூறுதல், பொருந்தியும், பொருந்தாமலும் பேசுதல், நினைவின்மை, தனித்து இருத்தலில் விருப்பம், சஞ்சலம், ஆடையின்றி இருத்தல், அழுக்கடைந்திருத்தல், தெருவில் கிடக்கும் துணிகளை தரித்தல், புற்களால் மாலைகட்டி அணிதல், மரக்குதிரை, குப்பைமேடு ஆகியவற்றில் ஏறுதல், அதிகம் உணவு கொள்ளல் ஆகியவை பிசாசக்ரஹத்தால் பீடிக்கப் பட்டிருப்பதன் குறிகளாகும்.

प्रेताकृतिक्रियागन्धं भीतमाहारविद्विषम्॥ ३४॥

तृणच्छिदं च प्रेतेन गृहीतं नरमादिशेत्।

**பிரேத கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :**

உருவம், செயல், மணம் ஆகியவற்றில் பிரேதத்தை ஒத்திருத்தல், பயம், உணவு வேண்டாமை, புற்களைத் துண்டித்தல் ஆகியவை பிரேத கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதன் குறிகளாகும்.

बहुप्रलापं कृष्णास्यं प्रविलम्बितयायिनम् ॥ ३५ ॥

शूनप्रलम्बवृषणं कूष्माण्डाधिष्ठितं वदेत् ।

**கூஷ்மாண்ட கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :**

அதிகமாகப் பிதற்றல், முகம் கறுப்பாக இருத்தல், மிக மெதுவாக நடத்தல், அண்டகோசம் வீங்கித்தொங்குதல் ஆகியவை கூஷ்மாண்ட கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

गृहीत्वा काष्ठलोष्टादि भ्रमन्तं चीरवाससम् ॥ ३६ ॥

नग्नं धावन्तमुत्त्रस्तदृष्टिं तृणविभूषणम् ।
श्मशानशून्यायतनरथ्यैकद्रुमसेविनम् ॥ ३७ ॥

तिलान्नमद्यमांसेषु संसक्तं रक्तलोचनम् ।
निषादाधिष्ठितं विद्याद् वदन्तं परुषाणि च ॥ ३८ ॥

**நிஷாத கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :**

கட்டை, கல் முதலியவற்றை எடுத்துக்கொண்டு சுற்றுதல், கந்தையை உடுத்துதல், ஆடையின்றி இருத்தல், ஓடுதல், கண்களில் மருட்சி, புற்களை அணிதல், மற்றும் மயானம், சூனியமான வீடு, சாலை, தனித்தமரம் இவற்றை அண்டியிருத்தல், எள் கலந்த அன்னம், மதுவகை, மாமிஸம்

ஆகியவற்றில் விருப்பம், கண் சிவந்திருத்தல், கடுமையான வார்த்தை கூறல் ஆகியவை நிஷாத கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதன் குறிகளாகும்.

याचन्तमुदकं चान्नं त्रस्तालोहितलोचनम्।
उग्रवाक्यं च जानीयान्नरमौकिरणार्दितम्॥ ३९॥

## மௌகிரண கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :

நீரையும், உணவையும் யாசித்தல், கண்கள் மருண்டும், சிவந்தும் இருத்தல், கடுமையான பேச்சு ஆகியவை மௌகிரண கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

गन्धमाल्यरतिं सत्यवादिनं परिवेपिनम्।
बहुनिद्रं च जानीयाद्वेतालेन वशीकृतम्॥ ४०॥

## வேதாள கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :

மணப்பொருள் மாலை இவற்றை விரும்புதல், உண்மை பேசுதல், நடுங்குதல், அதிகமாகத் தூங்குதல் இவை வேதாள கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகளாகும்.

अप्रसन्नदृशं दीनवदनं शुष्कतालुकम्।
चलन्नयनपक्ष्माणं निद्रालुं मन्दपावकम्॥ ४१॥

अपसव्यपरीधानं तिलमांसगुडप्रियम्।
स्खलद्वाचं च जानीयात् पितृग्रहवशीकृतम्॥ ४२॥

## பித்ரு கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் :

கண்கள் தெளிவின்றி இருத்தல், முகம் பரிதாபமாக இருத்தல், அண்ணம் வறண்டிருத்தல், இமையின்

உரோமங்கள் துடித்தல், பெரும்பாலும் தூங்கிக்கொண்டே யிருத்தல், அக்னிமந்தம் உடையவராக இருத்தல், உடைமை (உத்தரீயத்தை) அபஸ்வயமாக அணிதல் எள், மாம்ஸம், வெல்லம் ஆகியவற்றில் விருப்பம், பேச்சுத்தடை ஆகியவை பித்ரு கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதன் குறிகளாகும்.

गुरुवृद्धर्षिसिद्धाभिशापचिन्तानुरूपतः।
व्याहाराहार चेष्टाभिर्यथास्वं तद्ग्रहं वदेत्॥ ४३॥

## குரு முதலிய கிரஹங்களால் பீடிக்கப்பட்டதன் குறிகள்:

குருமார், வயோதிகர், முனிவர், ஸித்தர் ஆகியோரின் கோபம், கருத்து இவற்றை அனுசரித்து அமைந்த பேச்சு, உணவு, செயல் ஆகியவற்றின் மூலம் அந்தந்த கிரஹத்தால் பீடிக்கப்பட்டிருப்பதை அறியவேண்டும்.

कुमारबृंदानुगतं नग्नमुद्धतमूर्धजम्।
अस्वस्थमनसं दैर्घ्यकालिकं सग्रहं त्यजेत्॥ ४४॥

## சிகித்ஸைக்கு ஏற்கக் கூடாதவர்:

பாலர்களால் பின்தொடரப்பட்டவரும், ஆடையில்லாதவரும், செங்குத்தாக நிற்கும் கேசத்தையுடையவரும், மனத்தெளிவு இல்லாதவரும், பலநாட்களாக கிரஹத்தால் பீடிக்கப்பட்டவருமான நோயாளியை சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடாது.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां

षष्ठे उत्तरस्थाने भूतविज्ञानीयो नाम चतुर्थोऽध्यायः॥ ४॥

உத்தரஸ்தானம் - நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## पंचमोऽध्यायः - அத்தியாயம் - 5

अथाऽतो भूतप्रतिषेधं व्याख्यास्यामः।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः।

பூத பீடைக்கு சிகித்ஸை என்னும் அத்தியாயத்தை அடுத்து விளக்குகிறோம்.

भूतं जयेदहिंसेच्छं जपहोमबलिव्रतैः।
तपःशीलसमाधानदानज्ञानदयादिभिः॥ १ ॥

துன்புறுத்த விரும்பாத [1]கிரஹத்தை ஜபம், ஹோமம், பலிகொடுத்தல், விரதம், தவம், நன்னடத்தை, அமைதி யுண்டாக்கல், தானம் கொடுத்தல், நல்லறிவு, [2]கருணை முதலியவற்றால் வெல்லவேண்டும்.

குறிப்பு: 1. சுகமனுபவிக்கும் விருப்பத்தாலும், பூசிக்கப் பெறுவதில் விருப்பத்தாலும் (பிறரை) பீடிக்கும் கிரஹங்களுக்கே சிகித்ஸை கூறப்படுகிறது. துன்புறுத்த விரும்பும் கிரஹத்திற்கு சிகித்ஸை பயனளிக்காது என முன்னரே கூறப்பட்டது கவனிக்கத்தக்கது.

2. முதலிய என்பதால் ஓஷதிகளையும், ரத்னங் களையும் அணிதல், அடக்கம், கட்டுப்பாடு, பிராயச்சித்தம், உபவாஸம், மங்களம் செய்வித்தல் சரணடைதல் ஆகியவையும் கைரளியில் குறிப் பிடப்படுகின்றன.

हिंगुव्योषालनैपालीलशुनार्कजटाजटाः।
अजलोमी सगोलोमी भूतकेशी वचा लता ॥ २ ॥

कुक्कुटी सर्पगन्धाख्या तिलाः कालविषाणिके।
वज्रप्रोक्ता वयःस्था च शृंगी मोहनवल्ल्यपि ॥ ३ ॥

स्रोतोजांजनरक्षोघ्नं रक्षोघ्नं चान्यदौषधम्।
खराश्वश्वाविदुष्ट्रर्क्षगोधानकुलशल्यकात् ॥ ४ ॥

द्वीपिमार्जारगोसिंहव्याघ्रसामुद्रसत्वतः।
चर्मपित्तद्विजनखा वर्गेऽस्मिन् साधयेद्घृतम् ॥ ५ ॥

पुराणमथवा तैलं नवं तत्पाननस्ययोः।
अभ्यंगे च प्रयोक्तव्यमेषां चूर्णं च धूपने ॥ ६ ॥

एभिश्च गुटिकां युंज्यादंजने सावपीडने।
प्रलेपे कल्कमेतेषां क्वाथं च परिषेचने ॥ ७ ॥

प्रयोगोऽयं ग्रहोन्मादान् सापस्माराञ्शमं नयेत्।

காயம், த்ரிகடுகு, அரிதாரம், [1]கஸ்தூரி, உள்ளி, எருக்கு வேர், சடாமாஞ்சில், வெள்ளறுகு, அறுகு, வெண்ணொச்சி, வசம்பு, [2]ஞாழல், நீராரை, ஸர்ப்பகந்தி, எள், [3]காகோலீ, [4]க்ஷீரகாகோலீ, கள்ளி, [5]நெல்லி, கர்க்கடச்ருங்கீ, [6]புல்லுருவி, அஞ்சனக்கல், கடுகு மற்றும் அரக்கரின் உபத்ரவத்தைப் போக்கும் பொருள்(களான வசம்பு முதலியன) ஆகிய வற்றையும் கழுதை, குதிரை, வேட்டை முள்ளம்பன்றி, ஒட்டகம், கரடி, உடும்பு, கீரி, முள்ளம்பன்றி, சிறுத்தை, பூனை, மாடு, சிங்கம், புலி மற்றும் கடல் பிராணிகள் ஆகியவற்றின் தோல், பித்தம், பல், நகம், ஆகியவற்றையும் நஸ்யமிடுவதற்கும், அப்யங்கம் செய்வதற்கும் இதைப்

பிரயோகிக்கலாம். இவற்றின் சூர்ணத்தை புகையிடலாம். இவற்றின் குளிகையை அஞ்சனமாகவும், கல்கத்தை அவபீட நசியமாகவும், பூச்சாகவும் உபயோகிக்கலாம். இவற்றின் கஷாயத்தை ஊற்றுவதற்கு உபயோகிக்கலாம். இவ்வித சிகித்ஸை கிரஹபீடை, பைத்தியம், வலிப்பு ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு:1. नेपाली என்பதற்கு மனோசிலை என டல்ஹணரும்,

2. लता என்பதற்கு சதகுப்பை என இந்துவும்,

3 & 4. काणविकाणिके என்பதற்கு வாலுளுவை, வெள்ளை வாலுளுவை எனவும்,

5. वयस्था என்பதற்கு கடுக்காய் என கைரளி ஆசிரியரும்,

6. मोहनवल्ली என்பதற்கு பிராம்மி, வாகை என இந்துவும் பொருள் கூறுகிறார்கள்.

गजाह्वापिप्पलीमूलव्योषामलकसर्षपान् ॥ ८ ॥

गोधानकुलमार्जारमत्स्यपित्तप्रपेषितान् ।
नावनाभ्यंगसेकेषु विदधीत ग्रहापहान् ॥ ९ ॥

யானைத்திப்பிலி, கண்டதிப்பிலி[1], த்ரிகடு, நெல்லிக்காய், கடுகு, ஆகியவற்றை உடும்பு, கீரி, பூனை, மீன்[2] இவற்றின் பித்தத்துடன் சேர்த்தரைத்து நஸ்யம், அப்பியங்கம், நனைத்தல் ஆகியவற்றில் உபயோகிக்க கிரஹபீடையை நீக்கும்.

குறிப்பு: 1. मूल என்பதற்கு புஷ்கரமூலம் என அருணதத்தர் கூறுகிறார்.

2. शश முயல் என்றும், (ऋश्य) மான் என்றும், (ऋक्ष) கரடி என்றும் பாடங்கள் உள்ளன.

सिद्धार्थकवचाहिंगुप्रियंगुरजनीद्वयम्।
मंजिष्ठा श्वेतकटभी वरा श्वेताऽद्रिकर्णिका ॥ १० ॥

निम्बस्य पत्रं बीजं तु नक्तमालशिरीषयोः।
सुराह्वं त्र्यूषणं सर्पिर्गोमूत्रे तैश्चतुर्गुणे ॥ ११ ॥

सिद्धं सिद्धार्थकं नाम पाने नस्ये च योजितम्।
ग्रहान् सर्वान्निहन्त्याशु विशेषादासुरान् ग्रहान् ॥ १२ ॥

कृत्याऽक्ष्मीविषोन्मादज्वरापस्मारपाप्म च।

**ஸித்தார்த்தக் கிருதம் :**

வெண்கடுகு, வசம்பு, காயம், ஞாழல், மஞ்சள், மரமஞ்சள், மஞ்சட்டி, வெள்ளை *வாலுளுவை, த்ரிபலை, வெள்ளை மலையமுக்கி, வேப்பிலை, புங்கின்விதை, வாகையின் விதை, தேவதாரு, த்ரிகடு இவற்றின் கல்கமும் (நெய்க்கு) 4 மடங்கு பசுநீரும் சேர்த்து நெய் பக்குவம் செய்து பருகுவதற்கும், நஸ்யமிடுவதற்கும் உபயோகிக்கலாம். (இது) எல்லா கிரஹபீடைகளையும் விசேஷமாக அசுர கிரஹபீடைகளையும் போக்கும். ஏவல், அலக்ஷ்மி, விஷம், பைத்தியம், ஜ்வரம், காக்கைவலி, பாபம் ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு: *வெள்ளைக்குன்றி என அருணதத்தர் கூறுகிறார்.

एभिरेवौषधैर्बस्तवारिणा कल्पितोऽगदः ॥ १३ ॥

पाननस्यांजनालेपस्नानोद्धर्षणयोजितः।
गुणैः पूर्ववदुद्दिष्टो राजद्वारे च सिद्धिकृत् ॥ १४ ॥

இம்மருந்துப் பொருள்களுடன் ஆட்டுமூத்திரம் சேர்த்து பக்குவம் செய்து பருகுதல், நசியம், அஞ்ஜனம், பூச்சு, ஸ்னானம், பூசித்தேய்த்தல் ஆகியவற்றில் உபயோகிக்க முற்கூறப்பெற்ற குணம் உண்டாகும். ராஜவச்யமாகும்.

सिद्धार्थकव्योषवचाऽश्वगन्धानिशाद्वयं हिंगुपलाण्डुकन्दम्।
बीजं करंजात्, कुसुमं शिरीषात् फलं च वल्कं च कपित्थवृक्षात्॥ १५ ॥

समाणिमन्थं सनतं सकुष्ठं स्योनाकमूलं किणिही सिता च।
बस्तस्य मूत्रेण सुभावितं तत् पित्तेन गव्येन गुडान् विदध्यात्॥ १६ ॥

दुष्टव्रणोन्मादतमोनिशान्धानुद्बद्धकान् वारिनिमग्नदेहान्।
दिग्धाहतान् दर्पितसर्पदष्टां स्ते साधयन्त्यंजननस्यलेपैः॥ १७ ॥

வெண்கடுகு, த்ரிகடுகு, வசம்பு, அமுக்கிராக்கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், காயம், வெங்காயம், புங்கன்விதை, வாகைப்பூ, விளாஇலை, விளாம்பட்டை, இந்துப்பு, தகர விதை, கோஷ்டம், பெருவாகைவேர், வெள்ளைமலை யமுக்கி இவற்றை ஆட்டுமூத்தித்தில் ஊறவைத்து மாட்டுப் பித்தம் சேர்த்து குளிகை செய்யவேண்டும். துஷ்டவிரணம், பைத்தியம், திமிரம், மாலைக்கண் ஆகிய நிலையிலும், [1]தூக்குப் போட்டுக் கொண்டவர், நீரில் [2]மூழ்கியவர், விஷமுள்ளபாணத்தால் அடிக்கப்பட்டவர், கோபமுள்ள பாம்பால் கடிக்கப்பட்டவர் ஆகியோருக்கும், அஞ்ஜனம், நஸ்யம், மேற்பூச்சு ஆகிய வகையில் இதைப் பிரயோகிக்கலாம்.

**குறிப்பு:** 1-2. இவர்களுக்கு மூச்சுத்தடை காரணமாக இறந்தவர் போல் தோற்றமளிக்கும் நிலையிலும் இதைப் பிரயோகிக்கலாம்.

कार्पासास्थिमयूरपिच्छबृहतीनिर्माल्यपिण्डीतक-
त्वङ्मांसीवृकदंशविट्तुषवचाकेशाहिनिर्मोचकैः ।
नागेन्द्रद्विजशृंगहिंगुमरिचैस्तुल्यैः कृतं धूपनं
-स्कन्दोन्मादपिशाचराक्षससुरावेशज्वरघ्नं परम् ॥ १८ ॥

பருத்திக்கொட்டை, மயில்தோகை கண்டங்கத்திரி, *சிவநிர்மால்யம், மலங்காரக்காய், லவங்கப்பட்டை, சடாமாஞ்சில், பூனையின் மலம், உமி, வசம்பு, கேசம், பாம்புச்சட்டை, யானைப்பல், (பசுவின்) கொம்பு, காயம், மிளகு இவற்றை சம அளவு எடுத்து புகையிட ஸ்கந்த கிரஹபீடை, பைத்தியம், பிசாசு, ராக்ஷஸர், தேவகிரஹம் ஆகியவற்றால் உண்டான பீடையும், ஜ்வரமும் நீங்கும்.

குறிப்பு: *சோனப்புல் என இந்து பொருள் கூறுகிறார்.

त्रिकटुकदलकुंकुमग्रन्थिकक्षारसिंही-
निशादारुसिद्धार्थयुग्माम्बुशक्राह्वयैः
सितलशुनफलत्रयोशीरतिक्तावचा -
तुत्थयष्टीबलालोहितैलाशिलापद्मकैः ।
दधितगरमधूकसारप्रियाह्वाविषाख्या -
विपातार्क्ष्यशैलैः सचव्यामयैः ।
कल्कितैर्घृतमनवमशेषमूत्रांशसिद्धं मतं -
भूतरावाह्वयं पानतस्तद् ग्रहघ्नं परम् ॥ १९ ॥

**பூதராவம் :**

திரிகடு, பச்சிலை, குங்குமப்பூ, கண்டதிப்பிலி, யவ க்ஷாரம், கண்டங்கத்திரி, மஞ்சள், தேவதாரு, கடுகு, வெண்கடுகு, வெட்டிவேர், வெட்பாலையரிசி, வெள்ளை

சந்தனம், உள்ளி, த்ரிபலை, விளாமிச்சை, கடுகரோஹிணீ, வசம்பு, மயில்துத்தம், அதிமதுரம், சிற்றாமுட்டி, மஞ்சிட்டி, ஏலம், மனோசிலை, பதிமுகம், திருவட்டப் பிசின், கிரந்தி தகரம், இலுப்பையின் வைரம், ஞாழல், [1]கலப்பங்கிழங்கு, அதிவிடயம், அஞ்சனக்கல், செவ்வியம், கோஷ்டம் இவற்றின் கல்கத்துடன் பழைய நெய்யும் [2]எல்லா வகையான மூத்ரங்களும்[3] கலந்து பக்குவம் செய்ய வேண்டும். இது பூதராவம் (பூதங்களை விரட்டுவது) எனப்படும். இதைப் பருக விசேஷமாக கிரஹங்களின் பீடைகள் நீங்கும்.

குறிப்பு: 1. அதிவிடயம், காகோலி என அருணதத்தர் கூறுகிறார்.

2. மூத்ரவகை ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 5-ல் விளக்கப்பட்டுள்ளது.

3. ஒவ்வொரு மூத்ரவகையும் நெய்க்கு சமனளவு சேர்க்கவேண்டும்.

नतमधुकरंजलाक्षापटोलीसमङ्गावचा-
पाटलीहिंगुसिद्धार्थसिंहीनिशायुग्लतारोहिणी-
बदरकटुफलत्रिकाकाण्डदारुकृमिघ्नाजगन्धा-
मरांकोल्लकोशातकीशिग्रुनिम्बाम्बुदेन्द्राह्वयैः।
गदशुष्कतरुपुष्पबीजोग्रयष्ट्यद्रिकर्णीनिकुम्भा-
ग्निबिल्वैः समैः बल्कितैर्मूत्रवर्गेण सिद्धं घृतं
विधिविनिहितमाशु सर्वैः क्रमैर्योजितं हन्ति-
सर्वग्रहोन्मादकुष्ठज्वरांस्तन्महाभूतरावं स्मृतम्॥ २०॥

மகாபூதராவம்:

தகரவிதை, அதிமதுரம், புங்கு, அரக்கு, பேய்ப்புடல், மஞ்சிட்டி, வசம்பு, பாதிரி, காயம், வெண்கடுகு, கண்டங் கத்திரி, மஞ்சள், மரமஞ்சள், [1]ஞாழல், கடுகரோஹிணீ, இலந்தை, மிளகு, திரிபலை, தேவதாரு, வாய்விடங்கம், நாய்வேளை, நொச்சி, அழிஞ்சில், பீர்க்கு, முருங்கை, வேம்பு, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, கோஷ்டம், வாகை முள்ளு(முருங்கை)ப்பூவும், விதையும், வசம்பு, மலையமுக்கி, நாகதந்தி, சித்ரமூலம், பில்வம் இவற்றை சமன் எடை எடுத்து கல்கமாக்கி [2]மூத்ரவர்க்கம் கலந்து முறைப்படி நெய் பக்குவம் செய்து, [3] எல்லாவிதமாகவும் உபயோகிக்க எல்லாக் கிரஹங்களின் பீடை பைத்தியம், குஷ்டம், ஜ்வரம் ஆகியவற்றைப் போக்கும். இது மகாபூதராவம் எனப்படும்.

குறிப்பு: 1. लता என்பதற்கு நன்னாரி, சதகுப்பை என்று இந்து கூறுகிறார்.

2. மூத்ரவகை ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 5-ல் விளக்கப்பட்டுள்ளது.

3. எல்லாவிதமாகவும் என்பதால் பானம்-நசியம், அப்யங்கம் முதலியன கூறப்படுகின்றன.

ग्रहा गृह्णन्ति ये येषु तेषां तेषु विशेषतः ।
दिनेषु बलिहोमादीन् प्रयुंजीत चि कित्सकः ॥ २१ ॥

கிரஹங்கள் பீடிக்கும் அந்தந்த நாட்களில் அந்தந்த கிரஹங்களுக்கு பலிகொடுத்தல், ஹோமம் செய்தல் *முதலியவற்றை வைத்தியர் விசேஷமாக செய்யவேண்டும்.

குறிப்பு: *பலமுறை பயன்கண்ட மந்திரத்தை ஜபித்தல் நெய் பருகுதல் முதலியன கூறப்படுகின்றன.

स्नानवस्त्रवसामांसमद्यक्षीरगुडादि च।
रोचते यद्यदा येभ्यस्तत्तेषामाहरेत्तदा ॥ २२ ॥

அந்தந்த கிரஹங்களுக்குப் பிடித்ததாக, அந்தந்த காலத்தில் ஸ்னானம் செய்வித்தல், வஸ்திரம், மாம்ஸ எண்ணெய், மாமிசம், மதுவகை, பால், வெல்லம் முதலிய-வற்றை பிரயோகிக்க வேண்டும்.

रत्नानि गन्धमाल्यानि बीजानि मधुसर्पिषी।
भक्षायाश्च सर्वे सर्वेषां सामान्यो विधिरित्ययम् ॥ २३ ॥

**எல்லா கிரஹங்களுக்கும் பிடித்தவை :**

இரத்தினங்கள், மணப்பொருள், மாலை (யவை முதலிய) விதைகள், தேன், நெய், எல்லாவகையான பக்ஷயங்கள் ஆகியவை பொதுவாக எல்லாக் கிரஹங்களுக்கும் பிடித்த மானவை ஆகும்.

सुरर्षिगुरुवृद्धेभ्यः सिद्धेभ्यश्च सुरालये।
दिश्युत्तरस्यां तत्राऽपि देवायोपहरेद्बलिम् ॥ २४ ॥

पश्चिमायां यथाकालं दैत्यभूताय चत्वरे।
गन्धर्वाय गवां मार्गे सवस्त्राभरणं बलिम् ॥ २५ ॥

पितृनागग्रहे नद्यां नागेभ्यः पूर्वदक्षिणे।
यक्षाय यक्षायतने सरितोर्वा समागमे ॥ २६ ॥

चतुष्पथे राक्षसाय भीमेषु गहनेषु च।
रक्षसां दक्षिणस्यां तु पूर्वस्यां ब्रह्मरक्षसाम् ॥ २७ ॥

शून्यालये पिशाचाय पश्चिमां दिशमास्थिते।

### பலி கொடுத்தல் :

தேவர்கள், ரிஷிகள், குருமார், விருத்தர்கள், ஸித்தர்கள், ஆகியோருக்கு தேவாலயத்திலும், தேவருக்கு (கோவிலின்) வடக்குத்திசையிலும், அசுரர்க்கு தக்கதருணத்தில் மேற்கு திசையில் உள்ள முச்சந்தியிலும் கந்தவருக்கு வஸ்திரம், ஆபரணம் ஆகியவற்றுடன் கூடிய பலியை பசுக்கள் செல்லும் வழியிலும், பித்ருக்ரஹம், நாகக்ரஹம் இவற்றிற்கு நதியிலும், நாகங்களுக்கு தென்கிழக்கு பாகத்திலும், யக்ஷருக்கு யக்ஷருடைய ஸ்தானம் அல்லது நதிகள் கலக்குமிடத்திலும் பலிகொடுக்க வேண்டும். நாற்சந்தி அல்லது அடர்ந்த காட்டில் தெற்குத்திசையில் ராக்ஷஸர்க்கும், கிழக்குத் திசையில் ப்ரம்மராக்ஷஸர்க்கும் பலிகொடுக்க வேண்டும். பிசாசத்திற்கு மேற்குப்புறமாக உள்ள சூன்யமான ஆலயத்தில் பலி கொடுக்கவேண்டும்.

शुचिशुक्लानि माल्यानि गन्धाः क्षैरेयमोदनम् ॥ २८ ॥

दधि छत्रं च धवलं देवानां बलिरिष्यते ।

### பலிப்பொருள்கள் :

சுத்தமானவையும், வெண்ணிறமுள்ளவையுமான மாலைகளும், மணப்பொருள்கள், பாலால் பக்குவம் செய்யப்பட்ட அன்னம், தயிர், வெண்மையான குடை ஆகியவையும் தேவகிரஹங்களுக்குப் பிடித்தமான பலிப்பொருட்களாகும்.

हिंगुसर्षपषड्ग्रन्थाव्योपैरर्धपलोन्मितैः ॥ २९ ॥

चतुर्गुणे गवां मूत्रे घृतप्रस्थं विपाचयेत् ।
तत्पाननावनाभ्यंगैर्देवग्रहविमोक्षणम् ॥ ३० ॥

காயம், கடுகு, வசம்பு, த்ரிகடுகு ஆகியவற்றை வகைக்கு ½ பலம் எடுத்துக் கல்கமாக்கி 1 பிரஸ்த நெய்யும், 4 பிரஸ்த

பசுநீரும் சேர்த்து பக்குவம் செய்து பானம், நசியம், அபயங்கம் ஆகிய முறையில் உபயோகிக்க தேவகிரஹ பீடை நீங்கும்.

नस्यांजनं वचाहिंगुलशुनं बस्तवारिणा ।

வசம்பு, காயம், உள்ளி இவற்றை ஆட்டுமூத்ரம் சேர்த்து அரைத்து நசியமாகவும், அஞ்ஜனமாகவும் உபயோகிக்கலாம்.

दैत्ये बलिर्बहुफलः सोशीरकमलोत्पलः ॥ ३१ ॥

அசுர கிரஹங்களுக்கு விளாமிச்சை, தாமரை, நீலோத்பலம் ஆகியவற்றுடன் *பலவிதமான பழங்களை பலியாகக் கொடுக்கவேண்டும்.

குறிப்பு: *எலுமிச்சை, துருஞ்சி, தேங்காய், வாழை, கோவை முதலிய பழவகைகள் கைரளியில் கூறப்படுகின்றன.

नागानां सुमनोलाजगुडापूपगुडौदनैः ।
परमान्न मधु क्षीर कृष्ण मृन्नागकेसरैः ॥ ३२ ॥

वचापद्मपुरोशीररक्तोत्पलदलैर्बलिः ।
श्वेतपत्रं च रोध्रं च तगरं नागसर्षपाः ॥ ३३ ॥

शीतेन वारिणा पिष्टं नावनांजनयोर्हितम् ।

நாக கிரஹங்களுக்கு ஜாதிமல்லி, பொரி, வெல்லம் சேர்த்து தயாரிக்கப்பட்ட அப்பம், வெல்லம் கலந்த அன்னம், பரமான்னம், தேன், பால், கறுப்புமண், சிறு நாகப்பூ, வசம்பு, தாமரை, குக்கில் விளாமிச்சை, செங்கழுநீரின் இதழ் இவற்றைச் சேர்த்து பலி கொடுக்க

வேண்டும். வெண் தாமரை, வெள்ளிலோத்தி, கிரந்திதகரம், சிறுநாகப்பூ, கடுகு இவை குளிர்ந்தநீர் விட்டரைத்து நசியமிடுவதற்கும், அஞ்சனமிடுவதற்கும் ஏற்றவை.

यक्षाणां क्षीरदध्याज्यमिश्रकौदनगुग्गुलुः ॥ ३४ ॥

देवदारूत्पलं पद्ममुशीरं वस्त्रकांचनम् ।
हिरण्यं च बलिर्योज्यो-

யக்ஷகிரஹங்களுக்கு பால், தயிர், நெய், மாம்ஸம் கலந்த அன்னம், குக்கில், தேவதாரு, நீலோத்பலம், வெண்தாமரை, விளாமிச்சை, வஸ்திரம், தங்கநகை, தனித்தங்கம் ஆகிய வற்றை பலி கொடுக்கவேண்டும்.

-मूत्राज्यक्षीरमेकतः ॥ ३५ ॥

सिद्धं समोन्मितं पाननावनाभ्यञ्जने हितम् ।

பசுநீர், நெய், பால் இவற்றை சமஅளவு கலந்து பக்குவம் செய்து கொள்ளவேண்டும். இது பானம், நசியம், அப்யங்கம் ஆகியவற்றில் உபயோகிக்க ஏற்றதாகும்.

हरीतकी हरिद्रे द्वे लशुनो मरिचं वचा ॥ ३६ ॥

निम्बपत्रं च बस्ताम्बुकल्कितं नावनांजनम् ।

கடுக்காய், மஞ்சள், மரமஞ்சள், உள்ளி, மிளகு, வசம்பு, வேப்பிலை, இவற்றை ஆட்டு மூத்ரம்விட்டு கல்கமாக்கி, நசியமாகவும், அஞ்சனமாகவும் உபயோகிக்கவேண்டும்.

ब्रह्मरक्षोबलिः सिद्धं यवानां पूर्णमाढकम् ॥ ३७ ॥

तोयस्य कुम्भः पललं छत्रं वस्त्रं विलेपनम् ।

*யவை நிரம்பிய, பாத்ரம், நீர் 16 பிரஸ்தம், மாம்ஸம், குடை, வஸ்திரம், மணப்பூச்சுக்கள் ஆகியவை பிரம்ம ராக்ஷஸ கிரஹத்துக்கு பலிகொடுக்க வேண்டியவை ஆகும்.

குறிப்பு: ⋆ஏற்றத்தாழ்வின்றி 4 பிரஸ்தம் யவை என்று சிலரும் பொரிக்கப்பட்ட யவை என்று சிலரும், வேகவைக்கப்பட்ட யவை என்று சிலரும் கூறுவர்.

चूर्णाढकम् என்ற பாடத்தில் யவை தூள் 4 பிரஸ்தம் என்பது பொருள்.

गायत्रीविंशतिपलकाथेऽर्धपलिकैः पचेत् ॥ २८ ॥

त्र्यूषणत्रिफलाहिंगुषड्ग्रन्थामिशिसर्षपैः ।
सनिम्बपत्रलशुनैः कुडवान् सप्त सर्पिषः ॥ २९ ॥

गोमूत्रे त्रिगुणे पानेनस्याभ्यंगेषु तद्धितम् ।

கருங்காலி 20 பலம் எடுத்து (முறைப்படி) கஷாயமிட்டு அதில் திரிகடு, திரிபலை, காயம், வசம்பு, சதகுப்பை, கடுகு, வேப்பிலை, உள்ளி இவை வகைக்கு ½ பலம் எடுத்துக் கல்கமாக்கி நெய் 28 பலமும், பசுநீர் 84 பலமும் சேர்த்துப் பக்குவம் செய்யவேண்டும். இது (பிரம்மராக்ஷஸ கிரஹத்தால் பீடிக்கப்பட்டவருக்கு) பானம், நசியம், அப்யங்கம் ஆகியவையில் உபயோகிக்க ஏற்றதாகும்.

रक्षसां पललं शुक्लं कुसुमं मिश्रकौदनम् ॥ ४० ॥

बलिः पक्कामममांसानि निष्पावा रुधिरोक्षिताः ।

எள்ளுப்பொடி, வெண்ணிறமுள்ள மலர், மாம்ஸம் கலந்து பக்குவம் செய்யப்பட்ட அன்னம், பக்குவம் செய்யப் பட்ட மாம்ஸம், பக்குவம் செய்யப்படாத மாம்ஸம்,

ரத்தத்தில் நனைக்கப்பட்ட அவரை இவை ராக்ஷஸ கிரஹங்களுக்கான பலிப்பொருளாகும்.

குறிப்பு: निष्पाव என்ற சொல் மொச்சையைக் குறிப்பிடுவதாக சிலர் கூறுவர்.

नक्तमालशिरीषत्वङ्मूलपुष्पफलानि च ॥ ४१ ॥

तद्वच्च कृष्णपाटल्या बिल्वमूलं कटुत्रिकम् ।
हिंग्विन्द्रयवसिद्धार्थलशुनामलकीफलम् ॥ ४२ ॥

नावनांजनयोर्योज्यो बस्तमूत्रयुतो गदः ।
एभिरेव घृतं सिद्धं गवां मूत्रे चतुर्गुणे ॥४३ ॥

रक्षोग्रहान् वारयते पानाभ्यञ्जननावनैः ।

புங்கு, வாகை, கறுப்புப்பாதிரி இவற்றின் பட்டை, வேர், புஷ்பம், பழம் இவற்றையும் பில்வவேர், திரிகடு, காயம், வெட்பாலையரிசி, வெண்கடுகு, உள்ளி நெல்லி இவற்றையும் ஆட்டுநீரில் கலக்கி நசியமாகவும் அஞ்சனமாகவும் உபயோகிக்கலாம். இவற்றுடன் நெய்யும் நெய்க்கு 4 மடங்கு பசுமூத்ரமும் சேர்த்து பக்குவம் செய்து பானம், அப்யங்கம், நசியம் செய்விக்க ராக்ஷஸ கிரஹங்கள் நீங்கும்.

पिशाचानां बलिः सीधुः पिण्याकः पललं दधि ॥ ४४ ॥

मूलकं लवणं सर्पिः सभूतोदनयावकम् ।

கருப்பஞ்சாற்றுமது, எள்ளுப் பிண்ணாக்கு, மாம்ஸம், தயிர், முள்ளங்கி, இந்துப்பு, நெய், மாம்ஸம் கலந்த அன்னம், யவையன்னம் ஆகியவை பிசாச கிரஹத்திற்கு பலிப் பொருளாகும்.

हरिद्राद्वयमंजिष्ठामिशिसैन्धवनागरम् ॥ ४५ ॥

हिंगुप्रियंगुत्रिकटुरसोनत्रिफला वचा ।
पाटलाश्वेतकटभीशिरीषकुसुमैर्घृतम् ॥ ४६ ॥

गोमूत्रपादिकं सिद्धं पानाभ्यंजनयोर्हितम् ।
बस्ताम्बुपिष्टैस्तैरेव योज्यमंजननावनम् ॥ ४७ ॥

மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிட்டி, சதகுப்பை, இந்துப்பு, சுக்கு, காயம், ஞாழல், திரிகடு, உள்ளி, திரிபலை, வசம்பு ஆகியவற்றையும் பாதிரி, வெள்ளை மலையமுக்கி, வாகை ஆகியவற்றின் மலரையும் பசுமூத்ரத்தையும், பசுமூத்ரத்திற்கு ¼ பங்கு நெய்யும் சேர்த்துப் பக்குவம் செய்துகொள்ள வேண்டும். இது பருகுவதற்கும் அப்யங்கத்திற்கும் ஏற்றதாகும். இந்த திரவியங்களை ஆட்டுமூத்ரத்தில் அரைத்து அஞ்சனமாகவும், நசியமாகவும் உபயோகிக்கலாம்.

**குறிப்பு:** மஞ்சள் முதலியவற்றை கல்கமாக்கி பாதிரி முதலியவற்றின் மலர்க்கஷாயத்தில் கலந்து பக்குவம் செய்யவேண்டுமென இந்து விளக்குகிறார்.

देवर्षिपितृगन्धर्वे तीक्ष्णं नस्यादि वर्जयेत् ।
सर्पिः पानादि मृद्वस्मिन् भैषज्यमवचारयेत् ॥ ४८ ॥

**விலக்கவேண்டியவையும் ஏற்றவையும்:**

தேவர், ரிஷி, பித்ருக்கள், கந்தர்வர் ஆகிய கிரஹங்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கு தீக்ஷ்ணகுணமுள்ள நசியம் [1]முதலியவற்றைத் தவிர்க்கவேண்டும். நெய்பருகுதல் முதலிய மிருதுகுணமுள்ளவற்றை பிரயோகிக்கவேண்டும்.

**குறிப்பு:** 1. நசியம் முதலிய என்பதால் அஞ்சனம், அப்பியங்கம் முதலியவை கூறப்பட்டன.

2. பரிசுத்தமில்லாதவைகளையும் ஆத்திரம் மூட்டு பவைகளையும் பிரயோகிக்கக் கூடாது.

ऋते पिशाचान्सर्वेषु प्रतिकूलं च नाचरेत् ॥
सवैद्यमातुरं घ्नन्ति क्रुद्धास्ते हि महौजसः ॥ ४९ ॥

பிசாச கிரஹம் தவிர மற்ற கிரஹங்களால் பீடிக்கப்பட்ட நிலையில் விபரீதமானவற்றை செய்யக்கூடாது. ஏனெனில் சக்திவாய்ந்த அந்த கிரஹங்கள் கோபமடைந்து வைத்தியரையும், நோயாளியையும் கொல்லும்.

ईश्वरं द्वादशभुजं नाथमार्यावलोकितम् ।
सर्वव्याधिचि कित्सां च जपन् सर्वग्रहान् जयेत् ॥ ५० ॥

तथोन्मादानपस्मारादन्यं वा चित्तविप्लवम् ।

பன்னிரண்டு புஜங்கள் உள்ளவரும், *பார்வதியால் பார்க்கப்பட்டவரும், உலகத்தின் ஏகநாயகராக உள்ளவருமான பரமசிவனை தியானித்து கொண்டு எல்லா வியாதிகளையும் போக்கும் (பஞ்சாக்ஷரம் முதலிய) மந்திரத்தை ஜபிப்பதன் மூலமாய் எல்லாவித கிரஹபீடைகளையும் மற்றும் பைத்தியம், காக்கைவலி, மூளைக்கோளாறு ஆகியவற்றையும் வெல்லவேண்டும்.

குறிப்பு: ★ஆர்யாவலோகித என்னும் சொல் பௌத்தர்களின் ஒரு தேவதையைக் குறிப்பிடுவதாகவும் சொல்வதுண்டு. அடுத்து வருகிற மகாமாயா மாயூரி என்ற சொல்லும் இந்த இனத்தைச் சேர்ந்தவை என்பர்.

महाविद्यां चमायुरीं शुचिं तं श्रावयेत्सदा ॥ ५१ ॥

நோயாளியை (உடல், பேச்சு, மனம் ஆகியவற்றால்) தூயவராக இருக்கச்செய்யவேண்டும். மகாவித்யா மாயூரி என்ற மந்திரங்களை எப்போதும் கேட்கச் செய்யவேண்டும்.

भूतेशं पूजयेत् स्थाणुं प्रमथाख्यांश्च तद्गणान्
जपन् सिद्धांश्च तन्मन्त्रान् ग्रहान् सर्वानपोहति ॥ ५२ ॥

பூதகணங்களுக்குத் தலைவரான பரமசிவனையும் அவரைச் சேர்ந்தவைகளான பிரமதகணங்களையும் பூஜிக்க வேண்டும். கைகண்ட பலனுள்ள அவருடைய மந்திரங்-களை ஜபிப்பதன் மூலமாகவும் எல்லா கிரஹங்களையும் போக்கலாம்.

यच्चानन्तरयोः किंचिद्वक्ष्यतेऽध्याययोर्हितम्।
यच्चोक्तमिह तत्सर्वं प्रयुंजीत परस्परम् ॥ ५३ ॥

மேலும் அடுத்த இரு அத்தியாயங்களில் கூறப்பட விருக்கும் சிகித்ஸையையும் இவ்வத்தியாயத்தில் கூறிய சிகித்ஸையையும் *பரஸ்பரம் பிரயோகித்துக் கொள்ளலாம்.

குறிப்பு: *பரஸ்பரம் என்றதால் கிரஹங்களுக்கு கூறிய வற்றையும் தகுதிக்கேற்ப ஒவ்வொரு கிரஹத் திற்கும், அடுத்த இரு அத்தியாயங்களில் கூறப்படும் சிகித்ஸை முறைகளை இங்கு கூறப்பட்ட கிரஹங் கள் விஷயத்திலும் இங்கு கூறப்பட்ட சிகித்ஸை முறைகளை அடுத்த இரு அத்தியாயங்களின் விஷயங்களிலும் பிரயோகிக்கலாம் என்பது குறிப்பிடப்படுகிறது.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनु श्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने भूतप्रतिषेधोनाम पञ्चमोऽध्यायः ॥ ५ ॥

உத்தரஸ்தானம் - ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [षष्ठोऽध्यायः - அத்தியாயம் - 6]

சிகித்ஸை பொதுவாக அமைந்திருத்தல் காரணமாக அடுத்து பைத்தியநோய் சிகித்ஸை, காக்கைவலிப்பு சிகித்ஸை ஆகியவை கூறப்படுகின்றன. அவற்றுள் பைத்திய நோய் சம்பந்தமாக அதிகம் சொல்ல வேண்டி யிருப்பதால் முதலில் அதன் சிகித்ஸை ஆரம்பிக்கப்படு கிறது. பல பிரிவுகளைக் கொண்டிருப்பதாலும் பல சிகித்ஸை முறைகள் கூறப்படுவதாலும் இந்த அத்தியாயம் அதிக விஷயங்களைக் கொண்டதாகும்.

अथात उन्मादप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து பைத்திய நோய் சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

उन्मादाः षट् पृथग्दोषनिचयाधिविषोद्भवाः ।

**பைத்திய நோய் ஆறுவகை :**

தனித்த தோஷங்களால் மூன்றும், அவற்றின் கூட்டால் ஒன்றும், மனநோயால் ஒன்றும், விஷத்தால் ஒன்றும் என பைத்திய நோய் ஆறுவிதம் ஆகும்.

**குறிப்பு:** கடைசியாக உள்ள இரண்டுவகையும் வெளிக் காரணத்தால் ஏற்படுபவை. ஆதலால் அவற்றை ஒன்றாகவே சரகர் பிரிக்கிறார்.

उन्मादो नाम मनसो दोषैरुन्मार्गगैर्मदः ॥ १ ॥

शारीरमानसैर्दुष्टैः-

சரீரம், மனம் இவற்றின் *தோஷங்கள் கேடுற்று வழி மீறிச்சென்றது காரணமாக மனதில் உண்டாகும் வெறியானது (உன்மாதம்) பைத்திய நோய் எனப்படும்.

குறிப்பு: வாயு முதலிய சரீர தோஷங்களும் ரஜோகுணம், தமோகுணம் ஆகிய மனோ தோஷங்களும் பைத்திய நோய்க்கு காரணங்களாகும். புத்தி, உணர்வு, நினைவு, பக்தி, ஒழுக்கம், செயல், ஆகியவை சிதைவுற்ற நிலை பைத்தியம் எனப்படும்.

-अहितादन्नपानतः।
विकृतासात्म्यसमलाद्विषमादुपयोगतः ॥ २ ॥

विषमस्याल्पसत्वस्य व्याधिवेगसमुद्गमात्।
क्षीणस्य चेष्टावैषम्यात् पूज्यपूजाव्यतिक्रमात् ॥ ३ ॥

आधिभिश्चित्तविभ्रंशाद् विषेणोपविषेण च।
एभिर्वि हीनसत्वस्य हृदि दोषाः प्रदूषिताः ॥ ४ ॥

धियो विधाय कालुष्यं हत्वा मार्गान् मनोवहान्।
उन्मादं कुर्वते, तेन धीविज्ञानस्मृतिभ्रमात् ॥ ५ ॥

देहो दुःखसुखभ्रष्टो भ्रष्टसारथिवद्रथः।
भ्रमत्यचिन्तितारम्भः-

பத்தியமில்லாததும், முறை தவறி பக்குவம் செய்யப் பட்டதும், பழக்கமற்றதும், [1]அழுக்கடைந்ததும், (காலம், அளவு முதலியவற்றால்) முறை மீறியதுமான உணவு, பானம் இவற்றாலும், துக்கமும், மனோபலக் குறைவும் உள்ளவருக்கு நோய் வேகத்தாலும், உடல்பலக் குறைவு உள்ளவருக்கு மாறுப்பட்ட செயலாலும், வணங்கத்தக்க

வரை வணங்காமை, கவலையால் ஏற்பட்ட மனக் கலக்கம், விஷம், உபவிஷம் இவற்றாலும் இருதயத்தில் தோஷங்கள் மிகவும் கோபமடைந்து மனவலிமை அற்றவருக்கு புத்தியைக் கலக்கி மனதிற்குச் செல்லும் மார்க்கத்தை அடைத்து பைத்திய நோயை உண்டாக்கு கின்றன. நோயாளியானவர் இந்தநோய் காரணமாக புத்தி, அறிவு, நினைவு, ஆகியவற்றில் பிரமை கொண்டு துக்கம், சுகம் ஆகியவற்றின் உணர்வற்றவராகி, ஓட்டுபவன் இல்லாத ரதம்போல எண்ணமற்ற செயலுடன் சுற்றுவார்.

குறிப்பு:1. ஸங்கிரஹத்தின் शमल என்ற சொல்லுக்கு பாபம் என இந்து உரை கூறுகிறார்.

பைத்திய நோயின் முற்குறிகளை சங்கிரஹம் முதலிய நூல்களில் காண்க.

-तत्र वातात्कृशांगता ॥ ६ ॥

अस्थाने रोदनाक्रोशहसितस्मितनर्तनम् ।
गीतवादित्रवागङ्गविक्षेपास्फोटनानि च ॥ ७ ॥

असाम्ना वेणुवीणादिशब्दानुकरणं मुहुः ।
आस्यात्फेनागमोऽजस्रमटनं बहुभाषिता ॥ ८ ॥

अलंकारोऽनलंकारैरयानैर्गमनोद्यमः ।
गृद्धिरभ्यवहार्येषु तल्लाभे चावमानता ॥ ९ ॥

उत्पिण्डितारुणाक्षित्वं जीर्णे चान्ने गदोद्भवः ।

**வாதத்தால் உண்டாகும் பைத்திய நோய் :**

உடல் இளைப்பு காணப்படும் அழுதல், கூச்சலிடுதல், சிரித்தல், முறுவலித்தல், நடனமாடுதல், பாடுதல்,

வாத்யங்கள் போன்று சப்தமிடுதல், பேச்சு, உறுப்புக்களை வீசுதல், சொடுக்குதல் இவற்றை காரணமின்றியே செய்தல், குழல், வீணை முதலிய வாத்யங்கள் ஒலியை கடூரமாக போலியாக ஒலித்தல், வாயிலிருந்து அடிக்கடி நுரை உண்டாதல், எப்பொழுதும் சுற்றுதல், அதிகப்பேச்சு, அலங்கார சாதனமாக இல்லாத பொருள்களால் அலங்காரம் செய்து கொள்ளல், வாகனமில்லாதவற்றில் ஏறிச்செல்ல முயற்சித்தல், உணவு கொள்வதில் அதிக விருப்பம், அது கிடைத்த அளவில் அவமதித்தல், கண்கள் மேல்நோக்கியும், உருண்டையாகவும், சிவந்துமிருத்தல், உணவு ஜீரணித்த நிலையில் நோய்க்குறிகள் விசேஷமாகத் தோன்றுதல் ஆகியவை வாயுவால் உண்டான பைத்திய நோயின் குறிகளாகும்.

पित्तात्सन्तर्जनं क्रोधो मुष्टिलोष्टाद्यभिद्रवः ॥ १० ॥

शीतच्छायोदकाकाङ्क्षा नग्नत्वं पीतवर्णता ।
असत्यज्वलनज्वालातारकादीपदर्शनम् ॥ ११ ॥

**பித்தத்தால் உண்டாகும் பைத்திய நோய் குறிகள்:**

அதட்டுதல், கோபம் ஆகியவையும், முட்டி, ஓடு முதலியவற்றைக் கொண்டு அடிக்க ஓடுதல், குளிர்ந்தவையான நிழலையும், நீரையும் விரும்புதல், *ஆடையின்றி இருத்தல், மஞ்சளாக இருத்தல் ஆகியவையும், இல்லாத அக்னி ஜ்வாலை, நட்சத்திரம், விளக்கு ஆகியவற்றை (இருப்பதாக) காணுதலும் பித்தத்தால் உண்டான பைத்திய நோயில் காணப்படும் குறிகளாகும்.

**குறிப்பு:** *नेत्रत्वक्पीतवर्णता என்ற பாடத்தில் கண்ணும் சருமமும் மஞ்சள் நிறமாக இருத்தல் என பொருளாகும்.

कफादरोचकश्छर्दिरल्पेहाहारवाक्यता।
स्त्रीकामता रहःप्रीतिर्लालासिंघाणकस्रुतिः॥ १२॥

बैभत्स्यं शौचविद्वेषो निद्रा श्वयथुरानने।
उन्मादो बलवान् रात्रौ भुक्तमात्रे च जायते॥ १३॥

**கபத்தால் உண்டாகும் பைத்திய நோய்க் குறிகள்:**

ருசியின்மை, வாந்தி செய்தலும், உணவு கொள்ளலும், பேச்சும் குறைந்து காணப்படுதல், ஸ்த்ரீயை விரும்புதல், தனித்து இருக்க விருப்பம், வாய்நீரும் நாசிநீரும் ஒழுகுதல், அருவருக்கத்தக்க நிலை, சுத்தம் செய்துகொள்வதை விரும்பாமை, தூக்கம், முகத்தில் வீக்கம், இரவிலும் உணவு உட்கொண்டவுடனும் நோயின் பலம் அதிகரித்தல் ஆகியவை கபத்தால் உண்டான பைத்திய நோயில் காணப்படும் குறிகளாகும்.

सर्वायतनसंस्थानसन्निपाते तदात्मकम्।
उन्मादं दारुणं विद्यात् तं भिषक् परिवर्जयेत्॥ १४॥

**ஸன்னிபாத பைத்தியம்:**

மூன்று தோஷங்களின் சேர்க்கை காரணமாக உண்டாகும் ஸன்னிபாத பைத்திய நோயில் தனித்த தோஷங்களால் உண்டாகும் பைத்திய நோயின் காரணங்களும், அவற்றின் குறிகளும் கலந்து காணப்படும். இது மரணமுண்டாக்கக்கூடியது. அத்தகைய நோயுள்ளவரை சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடாது.

धनकान्तादिनाशेन दुःसहेनाभिषङ्गवान्।
पाण्डुर्दीनो मुहुर्मुह्यन् हाहेति परिदेवते॥ १५॥

रोदित्यकस्मान्म्रियते तद्गुणान् बहु मन्यते।
शोकक्लिष्टमना ध्यायन् जागरूको विचेष्टते ॥ १६ ॥

**மன நோயால் உண்டாகும் பைத்திய நோய் குறிகள்:**

செல்வம், மனதிற்கு உகந்தவர் முதலியவற்றின் இழப்பைப் பொறுக்காமையால், தாக்குதலையடைந்து உடல் வெளுத்தவராகி, பரிதாபத்தோற்றத்துடன் அடிக்கடி மயக்கமடைவர், ஹாஹா எனச் சொல்லிப் புலம்புவர். காரணமின்றி அழுவர், காரணமின்றி சிரிப்பர். இழந்த பொருளின் குணங்களைப்பற்றி பெருமிதப்படுத்தி எண்ணுவர். வருத்தத்தால் கலக்கமடைந்து அப்பொருளையே தியானம் செய்வர். கண் விழித்திருப்பார். விகாரமாய் சேஷ்டைகளைச் செய்வர்.

विषेण श्याववदनो नष्टच्छायाबलेन्द्रियः।
वेगान्तरेऽपि सम्भ्रान्तो रक्ताक्षस्तं विवर्जयेत् ॥ १७ ॥

**விஷத்தால் உண்டாகும் பைத்திய நோய்:**

விஷத்தால் உண்டாகும் பைத்திய நோயில் முகம் கறுத்தும், தேககாந்தி நீங்கியும் புலன்கள் பலங்குன்றியும் காணப்படும். விஷத்தின் வேகங்களுக்கு இடையிலும் மனக்கலக்கம் உண்டாகும். கண்கள் சிவக்கும். இத்தகைய நோயாளிக்கு சிகித்ஸை செய்யக்கூடாது.

अथानिलज उन्मादे स्नेहपानं प्रयोजयेत्।
पूर्वमावृतमार्गे तु सस्नेहं मृदु शोधनम् ॥ १८ ॥

**வாயுவால் உண்டான பைத்திய நோய்க்கு சிகித்ஸை:**

வாயுவால் உண்டான பைத்திய நோயில் முதலில் நெய்ப்புப் பொருளை பருகச் செய்யவேண்டும். வாயுவிற்கு

வழித்தடை ஏற்பட்டிருந்தால் நெய்ப்புப் பொருள் சேர்த்து மிருது குணமுள்ளவற்றால் சோதனம் செய்விக்கவேண்டும்.

कफपित्तभवेऽप्यादौ वमनं सविरेचनम् ।
स्निग्धस्विन्नस्य बस्तिं च शिरसः सविरेचनम् ॥ १९ ॥

तथास्य शुद्धदेहस्य प्रसादं लभते मनः ।

**கபம் - பித்தம் ஆகியவற்றால் உண்டான பைத்திய நோய்க்கு சிகித்ஸை :**

கபம் - பித்தம் ஆகியவற்றால் உண்டான பைத்திய நோயிலும் முதலில் நெய்ப்புப் பொருள் பருகுதல், வியர்வை சிகித்ஸை இவற்றைச் செய்வித்து பின்னர் வாந்தி, விரேசன சிகித்ஸைகளை செய்விக்கவேண்டும். பஸ்திப் பிரயோகம், விரேசன நசியம் ஆகியவற்றையும் செய்விக்கவேண்டும். இவ்வாறு உடல் சோதனம் செய்யப்படுபவருக்கு மனம் தெளிவடையும்.

குறிப்பு: வாயு, பித்தம், கபம் ஆகியவற்றாலுண்டாகும் பைத்திய நோய்க்கு தனித்தனியே நெய்ப்புப் பொருள் பிரயோகமுறைகள் சங்கிரஹத்தில் கூறப்படுகின்றன.

इत्थमप्यनुवृत्तौ तु तीक्ष्णं नावनमंजनम् ॥ २० ॥

हर्षणाश्वासनोत्रसभयताडनतर्जनम् ।
अभ्यंगोद्वर्तनालेपधूपान् पानं च सर्पिषः ॥ २१ ॥

युंज्यात्तानि हि शुद्धस्य नयन्ति प्रकृतिं मनः ।

இவ்வாறு சிகித்ஸை செய்வித்தும் நோய் தொடர்ந்து இருந்தால் தீக்ஷ்ணகுணமுள்ள நசியத்தையும், அஞ்சனத்தையும், உபயோகிக்கவேண்டும். சந்தோஷமுண்டாக்குதல்,

ஆறுதல் கூறுதல், கலங்கச்செய்தல், பயமுண்டாக்குதல், அடித்தல், அதட்டுதல் இவையும் ஏற்றவையாகும். அப்பியங்கம், பூசித்தேய்த்தல், பூச்சு, புகையிடுதல், நெய்பருகுதல் இவற்றை பிரயோகிக்கவேண்டும். சோதனம் செய்துகொண்டவருக்கு இவை மனதை சுயநிலைக்கு கொண்டுவிடும்.

हिंगुसौवर्चल व्योषैद्विपलांशैर्घृताढकम् ॥ २२ ॥

सिद्धं समूत्रमुन्मादभूतापस्मारनुत्परम् ।

**ஹிங்க்வாதி கிருதம் :**

காயம், ஸௌவர்ச்சல உப்பு, திரிகடு இவை வகைக்கு 2 பலம் எடுத்து கல்கமாக்கி [1]பசுநீரையும், 4 [2]பிரஸ்தம் நெய்யையும் கலந்து பக்குவம் செய்து உபயோகிக்க விசேஷமாக பைத்தியம், பூதக்ரஹபீடை, வலிப்பு ஆகியவை நீங்கும்.

குறிப்பு: 1. நெய்க்கு 4 மடங்கு பசுநீர் சேர்க்கவேண்டுமென சரகத்தில் கூறப்பட்டுள்ளது.

2. இரட்டிப்பு பரிபாஷையை அனுசரித்து நெய்யை இரண்டு பங்கு சேர்க்கலாம் என இந்து குறிப்பிடு கிறார்.

द्वौ प्रस्थौ स्वरसाद् ब्राह्म्या घृतप्रस्थं च साधितम् ॥ २३ ॥

व्योषश्यामात्रिवृद्दन्तीशंखपुष्पीनृपद्रुमैः ।
ससप्तलाकृमिहरैः कल्कितैरक्षसम्मितैः ॥ २४ ॥

पलवृद्ध्या प्रयुंजीत परं मात्रा चतुष्पलम् ।
उन्मादकुष्ठापस्मारहरं वन्ध्यासुतप्रदम् ॥ २५ ॥

वाक्स्वरस्मृतिमेधाकृद् धन्यं ब्राह्मीघृतं स्मृतम्।

*பிராம்மீ கிருதம் :*

பிராம்மிச்சாறு 2 [1]பிரஸ்தம், நெய் 1 பிரஸ்தம் இவற்றுடன் திரிகடு, கருஞ்சிவதை, சிவதை, [2]நாகதந்தி, சங்கங்குப்பி, சரக்கொன்றை, துராய், வாய்விளங்கம் இவற்றை வகைக்கு ¼ பலம் எடுத்து கல்கமாக்கி சேர்த்து நெய் பக்குவம் செய்துகொள்ளவேண்டும். உட்கொள்வதை தினமும் ஒவ்வொருபலமாக அதிகரிக்கவேண்டும். உபயோகத்தின் உத்தம அளவு நான்கு பலமாகும். பைத்தியம், குஷ்டம், காக்கை வலிப்பு, ஆகிய நோய்கள் நீங்கும். மலடிக்கும் பிள்ளைப்பேறு வாய்க்கும். பேச்சுத்திறன், குரல், நினைவு, மேதாசக்தி ஆகியவை உண்டாகும். பாக்யமுண்டாகும். இது பிராம்மீ கிருதமெனப்படும்.

குறிப்பு: 1. (இரட்டித்தல் பரிபாஷையை அனுசரித்து) பிராம்மீச்சாறு 64 பலம் என்றும் நெய் 32 பலம் என்றும் இந்து கூறுகிறார்.

2. (बिम्बी) கோவை என்றும் ஒரு பாடம் உண்டு.

वराविशालाभद्रैलादेवदार्वेलवालुकैः ॥ २६ ॥

द्विसारिवाद्विरजनीद्विस्थिराफलिनीनतैः।
वृहतीकुष्ठमंजिष्ठानागकेसरदाडिमैः ॥ २७ ॥

वेल्लतालीसपत्रैलामालतीमुकुलोत्पलैः।
सदन्तीपद्मकहिमैः कर्षांशैः सर्पिषः पचेत् ॥ २८ ॥

प्रस्थं भूतग्रहोन्मादकासापस्मारपाप्मसु।
पाण्डुकण्डूविषे शोपे मोहे मेहे गरे ज्वरे ॥ २९ ॥

अरेतस्यप्रजसि वा दैवोपहतचेतसि।
अमेधसि स्खलद्वाचि स्मृतिकामेऽल्पपावके ॥ ३० ॥

बल्यं मंगल्यमायुष्यं कान्तिसौभाग्यपुष्टिदम्।
कल्याणकमिदं सर्पिः श्रेष्ठं पुंसवनेषु च ॥ ३१॥

**கல்யாணக கிருதம் :**

திரிபலை, தும்மட்டி, பேரேலம், தேவதாரு, முசுமுசுக்கை, நன்னாரி, பெருநன்னாரி, மஞ்சள், மரமஞ்சள், ஓரிலை, மூவிலை, ஞாழல், கிரந்திதகரம், கண்டங்கத்திரி, கோஷ்டம், மஞ்சிட்டி, சிறுநாகப்பூ, மாதுளை, வாய்விளங்கம், தாளிசபத்ரம், ஏலம், ஜாதிமொட்டு, நீலோத்பலம், நாகதந்திவேர், பதிமுகம், சந்தனம் இவற்றை வகைக்கு ¼ பலம் வீதமெடுத்து கலக்கமாக்கி 1 பிரஸ்தம் நெய்யுடன் சேர்த்துப் பக்குவம் செய்து உபயோகிக்க பூதபீடை, பைத்தியம், இருமல், காக்கைவலிப்பு, பாபம் ஆகியவை நீங்கும். பாண்டு, அரிப்பு, விஷம், இளைப்பு, மயக்கம், பிரமியம், இடுவிஷம், ஜுரம், வீர்யமின்மை, மக்கட்பேறு இன்மை, முன்வினையால் மனம் தாக்கப் பட்டிருத்தல், மேதைக்குறைவு, பேச்சுத்தடை, நினைவை விரும்புதல், அக்னிமந்தம் ஆகியவற்றில் ஏற்றதாகும். பலம், மங்களம், ஆயுள், காந்தி, சௌபாக்யம், புஷ்டி ஆகியவற்றை உண்டாக்கும். இது கல்யாண கிருதம் எனப்படும். இது ஆண் மக்கட்பேறு உண்டாக்குவதில் சிறந்ததாகும்.

குறிப்பு: இரட்டித்தல் பரிபாஷையை அனுசரித்து இங்கு பிரஸ்தம் என்ற சொல் 32 பலஅளவை குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

एभ्यो द्विसारिवादीनि जले पक्त्वैकविंशतिम् ।
रसे तस्मिन् पचेत्सर्पिर्गृष्टिक्षीरचतुर्गुणम् ॥ ३२ ॥

वीराद्धिमेदाकाकोलीकपिकच्छूविषाणिभिः ।
शूर्पपर्णीयुतैरेतन्महाकल्याणकं परम् ॥ ३३ ॥

बृंहणं सन्निपातघ्नं पूर्वस्मादधिकं गुणैः ।

*மகாகல்யாணக கிருதம் :*

இவற்றுள் (கல்யாணக கிருதத்தின் கல்க்கச் சரக்குகளுள்) இருவித நன்னாரி முதலிய 21 சரக்குகளை (நெய்க்கு 16 மடங்கு நீரிலிட்டு நாலில் ஒன்றாய் குறுக்கி) கஷாய மாக்கிக்கொண்டு அதனுடன் நெய்யையும், (நெய்க்கு) 4 பங்கு அளவில் முதல் ஈற்றுப் பசுவின் பாலையும், கோவை *மேதா மகாமேதா, காகோலீ, பூனைக்காலி, ருஷபகம், காட்டுளுந்து, காட்டுப்பயறு இவற்றின் கல்க்கத்தையும் சேர்த்து பக்குவம் செய்து கொள்ளவேண்டும். இது மகாகல் யாண கிருதம் எனப்படும். உடலை பருக்கச்செய்யும். ஸன்னிபாதத்தைப் போக்கும். முற்கூறிய கல்யாண கிருதத்தைக் காட்டிலும் அதிக குணம் கொண்டதாகும்.

**குறிப்பு:** *आर्द्रमाष என்ற பாடத்தில் பசுமையான உளுந்து எனவும், द्विमाष என்ற பாடத்தில் உளுந்து, மொச்சை எனவும், ऋद्धिमेदा என்ற பாடத்தில் ருத்தி, மேதா எனவும் பொருள் கொள்ளவேண்டும்.

जटिला पूतना केशी चारटी मर्कटी वचा ॥ ३४ ॥

त्रायमाणा जया वीरा चोरकः कटुरोहिणी ।
वयःस्था शूकरी छत्रा सातिच्छत्रा पलंकषा ॥ ३५ ॥

महापुरुषदन्ता च कायस्था नाकुलीद्वयम्।
कटम्भरा वृश्चिकाली शालिपर्णी च तैर्घृतम्॥ ३६॥

सिद्धं चातुर्थिकोन्मादग्रहापस्मारनाशनम्।
महापैशाचकं नाम घृतमेतद्यथाऽमृतम्॥ ३७॥

बुद्धिमेधास्मृतिकरं बालानां चांगवर्धनम्।

**மகாபைசாசக கிருதம்:**

சடாமாஞ்சில், கடுக்காய், கந்தமாம்ஸீ, ஓரிலைத்தாமரை, பூனைக்காலி, வசம்பு, துராய், முன்னை, காகோலீ, சண்டக் கிழங்கு, கடுகரோஹிணீ, நெல்லிக்காய், பன்னிமோந்தான், கொத்தமல்லி, சதகுப்பை, அரக்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சிற்றேலம், ஸர்ப்பகந்தி, கீரிவெள்ளி, வாலுளுவை, தேட்கொடுக்கு, ஓரிலை இவற்றைச் சேர்த்துநெய் பக்குவம்செய்து கொள்ளவேண்டும். இதை உபயோகிக்க நான்காம் நாள் முறை (சாதுர்த்திக) ஜுரம், பைத்தியம், கிரஹபீடை, வலிப்பு ஆகியவை நீங்கும். இது மகா பைசாசகம் எனப்படும். அம்ருதம் போன்றது. புத்தி, மேதாசத்தி, நினைவாற்றல் ஆகியவற்றையும் உண்டாக்கும். பாலர்களின் உறுப்புக்களை வளரச்செய்யும்.

குறிப்பு: 1. குக்கில் என சக்ரதத்தர் கூறுகிறார்.

2. இந்த யோகத்திலுள்ள பெரும்பாலான சொற்கள் வழக்கில் அதிகமாக இல்லாதவை. எனவே இவற்றின் உரைகளில் உரையாசிரியர்கள் வேறுபடுகின்றனர்.

ब्राह्मीमैन्द्रीं विडंगानि व्योषं हिंगु जटां मुराम्॥ ३८॥

रास्नां विषघ्नां लशुनं विशल्यां सुरसां वचाम्।

ज्योतिष्मतीं नागविन्नामनन्तां सहरीतकीम् ॥ ३९ ॥

काञ्चीं च हस्तिमूत्रेण पिष्ट्वा छायाविशोषिता ।
बर्तिर्नस्यांजनालेपधूपैरुन्मादसूदनी ॥ ४० ॥

பிராம்மீ, பேய்த்தும்மட்டி, வாய்விளங்கம், திரிகடுகு, காயம், சடாமாஞ்சில், வாசனைப்புல், [1]சிற்றரத்தை, அதிவிடயம், உள்ளி, [2]கலப்பங்கிழங்கு, துளசி, வசம்பு, வாலுளுவை, நாகதந்தீ, அறுகு, கடுக்காய், கோபிமண் இவற்றை பானையில் நீர் விட்டரைத்து திரி (போல் மாத்திரை) செய்து நிழலில் காய வைத்துக் கொள்ள வேண்டும். இதை நசியம், அஞ்ஜனம், பூச்சு, புகையிடுதல் ஆகியவற்றில் உபயோகிக்க பைத்திய நோய் நீங்கும்.

குறிப்பு: 1. विषघ्ना என்பதற்கு கார்போகு, வாலுளுவை என இந்துவும், மஞ்சள், நீர்வேசி என டல்ஹணரும் உரை கூறுகின்றனர்.

2. சீந்தில் என டல்ஹணர் கூறுகிறார்.

अवपीडाश्च विविधाः सर्षपाः स्नेहसंयुताः ।
कटुतैलेन चाभ्यंगो ध्मापयेच्चास्य तद्रजः ॥ ४१ ॥

सहिंगुस्तीक्ष्णधूमश्च सूत्रस्थानोदितो हितः ।

[1]பலவித அவபீட நசியங்களையும், கடுகெண்ணெய் கலந்து உபயோகிப்பது ஏற்றதாகும். கடுகெண்ணெயால் அப்பியங்கம் செய்வதும் ஏற்றதாகும். கடுகுத் தூளை பைத்திய நோயாளியின் மூக்கிலிட்டு ஊதி நசியம் செய்விக்க வேண்டும். ஸூத்ரஸ்தானத்தில் கூறப்பட்ட தீக்ஷ்ண தூமப் [2]பொருள்களுடன் காயம் சேர்த்துப் புகையிடுவதும் ஏற்றது.

குறிப்பு: 1. தீக்ஷ்ணப் பொருள்களைக் கல்க்கமாக்கி விரேசன நஸ்யமாக உபயோகித்தல் அவபீட நசியம் எனப்படும்.

2. ஸூத்ரஸ்தானம். அத்தியாயம் - 21. சுலோகம் 17-ல் விளக்கப்பட்டுள்ளது.

शृगालशल्यकोलूकजतुकावृषबस्तजैः ॥ ४२ ॥

मूत्रपित्तशकृल्लोमनखचर्मभिराचरेत्।
धूपधूमांजनाभ्यंगप्रदेहपरिषेचनम् ॥ ४३ ॥

நரி, முள்ளம் பன்றி, [1]கோட்டான், வெளவால், [2]காளை, ஆடு இவற்றின் சிறுநீர், பித்தம்,. மலம், உரோமம், நகம், சருமம் ஆகியவற்றால் புகையிடுதல், புகைபிடித்தல், அஞ்சனம், அப்பியங்கம், பூச்சு நனைத்தல் ஆகியவை செய்விப்பதும் ஏற்றனவாகும்.

குறிப்பு: 1. जलौका என்ற பாடத்தில் அட்டை எனப் பொருள்.

2. वृक என்ற பாடத்தில் ஓநாய் எனப் பொருள்.

धूपयेत्सततं चैनं श्वगोमत्स्यैस्तुपूतिभिः।
वातश्लेष्मात्मके प्रायः-

பைத்திய நோயாளிக்கு அழுகிய (நாற்றமுள்ள) *நாய், பசு, மீன் இவற்றால் எப்பொழுதும் புகை போட வேண்டும். வாயு, கபம், ஆகியவற்றால் உண்டான பைத்திய நோயில் பெரும்பாலும் இவ்வாறு செய்ய வேண்டும்.

குறிப்பு: ★நாய் முதலியவற்றின் மாம்ஸத்தால் என கைரளியில் கூறப்படுகிறது.

-पैत्तिके तु प्रशस्यते ॥ ४४ ॥

तिक्तकं जीवनीयं च सर्पिः स्नेहश्च मिश्रकः ।

शीतानि चान्नपानानि मधुराणि लघूनि च ॥ ४५ ॥

பித்தத்தால் உண்டான பைத்திய நோயில் [1]திக்தக கிருதம், [2]ஜீவனீய கிருதம், [3]மிச்ரகஸ்னேகம் ஆகியவையும், பரிசம், வீர்யம், ஆகியவற்றில் குளிர்ச்சியானதும், இனிப்பானதும், எளிதில் ஜீரணிக்கக் கூடியதுமான உணவு, பானம் ஆகியவையும் ஏற்றவையாகும்.

குறிப்பு: 1. திக்தக கிருதம் சிகித்ஸாஸ்தானம் அத்தியாயம் 19-ல் விளக்கப் பட்டுள்ளது.

2. ஜீவனீய கணம் ஸூத்ரஸ்தானம் 15-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

3. மிச்ரகஸ்னேகம் சிகித்ஸாஸ்தானம் அத்தியாயம் 14-ல் விளக்கப்பட்டுள்ளன. நெய்ப்புப் பொருள் களின் கூட்டு என்றும் கூறுவர்.

विध्येच्छिरां यथोक्तां वा-

ஸிரையைக் குத்துவதை *விளக்கும் அத்தியாயத்தில் கூறப்பட்டவாறு ஸிரையைக் குத்த வேண்டும்.

குறிப்பு: *ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 27-ல் விளக்கப் பட்டுள்ளது.

-तृप्तं मेद्यामिषस्य वा ।

निवाते शाययेदेवं मुच्यते मतिविभ्रमात् ॥ ४६ ॥

கொழுப்பு அதிகரித்துள்ள பிராணியின் மாம்ஸம் உண்டு திருப்தி அடைந்தவரை காற்று வீசாத இடத்தில் படுக்கச் செய்ய பைத்திய நோயினின்று விடுபடுவார்.

प्रक्षिप्यासलिले कूपे शोषयेद्वा बुभुक्षया।
आश्वासयेत्सुहृत्तं वा वाक्यैर्धर्मार्थसंहितैः ॥ ४७ ॥

ब्रूयादिष्टविनाशं वा दर्शयेदद्भुतानि वा।
बद्धं सर्षपतैलाक्तं न्यस्तं चोत्तानमातपे ॥ ४८ ॥

कपिकच्छ्वाऽथवा तप्तैर्लोहतैलजलैः स्पृशेत्।
कशाभिस्ताडयित्वा वा बद्धं श्वभ्रे विनिःक्षिपेत् ॥ ४९ ॥

अथवा वीतशस्त्राश्मजने संतमसे गृहे।
सर्पेणोद्धृतदंष्ट्रेण दान्तैः सिंहैर्गजैश्च तम् ॥ ५० ॥

अथवा राजपुरुषा बहिर्नीत्वा सुसंयतम्।
भापयेयुर्वधेनैनं तर्जयन्तो नृपाज्ञया ॥ ५१ ॥

देहदुःखभयभ्यो हि परं प्राणभयं मतम्।
तेन याति शमं तस्य सर्वतो विप्लुतं मनः ॥ ५२ ॥

தண்ணீர் இல்லாத கிணற்றில் இருக்கச் செய்து பட்டினியால் இளைக்கச் செய்ய வேண்டும். அல்லது நண்பரானவர் தர்மமும், பொருளும் செறிந்த வார்த்தைகளால் ஆறுதல் கூற வேண்டும். அல்லது நேசிக்கப்பட்ட பொருள் அழிந்து விட்டது என்று கூற வேண்டும். அல்லது வியப்பு உண்டாக்குபவைகளை காண்பிக்க வேண்டும். அல்லது கடுகெண்ணெய் பூசிக் கொள்ளச் செய்து நோயாளியை கயிற்றால் கட்டி வெய்யிலில் மல்லாந்து இருக்கச் செய்து பூனைக் காலிலாவது காய்ச்சப்பட்ட இரும்பாலாவது, எண்ணெயாலாவது, நீராலாவது பரிசிக்க வேண்டும். அல்லது கயிற்றால் கட்டிய பின் சாட்டையால் அடித்து பள்ளத்தில் நோயாளியைப் போட வேண்டும். அல்லது சஸ்திரம், கல், மனிதர் ஆகியவை இல்லாததும்,

இருள் அடர்ந்ததுமான வீட்டில் இருக்கச் செய்து பற்கள் பிடுங்கப்பட்ட பாம்பு அல்லது நன்கு பழக்கப்பட்ட சிங்கம், யானை, இவற்றால் பயமுண்டாக்க வேண்டும். அல்லது அரசாங்க சிப்பந்தியானவர் நோயாளியை நகரத்து வெளியே அழைத்துச் சென்று நன்றாகக் கட்டி அரசரின் ஆணைப்படி அதட்டுவதுடன் கொன்று விடுவதாக பயமுண்டாக்க வேண்டும். உடல் வேதனை சம்பந்தமான பயத்தைக் காட்டிலும் பிராணபயம் மிகவும் தீவிரமல்லவா? இவ்வாறு செய்வதால் எல்லா விதத்திலும் கலக்கம் அடைந்திருந்த மனம் சாந்தி அடைகிறது.

सिद्धा क्रिया प्रयोज्येयं देशकालाद्यपेक्षया।

பன்முறை பயன்களை கண்ட இம்முறையை தேசம், காலம் முதலியவற்றிற்கு ஏற்ப பிரயோகிக்க வேண்டும்.

इष्टद्रव्यविनाशात्तु मनो यस्योपहन्यते ॥ ५३ ॥

तस्य तत्सदृशप्राप्तिसान्त्वाश्वासैः शमं नयेत्।

இஷ்டமான பொருள் நாசமடைந்தது காரணமாக மனக்கலக்கம் ஏற்பட்டவரின் மனத்தை அதற்கு சமமான பொருளை அடைவித்தல், ஆறுதல் கூறுதல், தேற்றுதல் ஆகியவற்றால் தெளிவடையச் செய்ய வேண்டும்.

कामशोकभयक्रोधहर्षेर्ष्यालोभसम्भवान् ॥ ५४ ॥

परस्परप्रतिद्वन्द्वैरेभिरेव शमं नयेत्।

விருப்பம், வருத்தம், பயம், கோபம், மனக்களிப்பு, பொறாமை, உலோபம் ஆகியவற்றுள் ஒன்றின் காரணமாக உண்டான பைத்திய நோயை எதிரிடையான குணமுள்ள இவற்றாலேயே அடக்க வேண்டும்.

குறிப்பு: ⋆ஸன்னிபாதம், விஷம் ஆகியவை காரணமாக உண்டான பைத்திய நோயாளியை சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது. அதனால் அவற்றிற்கு சிகித்ஸை முறை கூறப்படவில்லை.

भूतानुबन्धमीक्षेत प्रोक्तलिंगाधिकाकृतिम् ॥ ५५ ॥

यद्युन्मादे ततः कुर्याद्भूतनिर्दिष्टमौषधम् ।

இங்கு கூறப்பட்ட குறிகளுடன் அதிகக் குறிகளை அடையாளமாகக் கொண்ட பூதங்களாலான பைத்திய நோய் காணப்படின் பூதங்களுக்கு கூறப்பட்ட சிகித்ஸை செய்ய வேண்டும்.

बलिं च दद्यात्पललं यावकं सक्तुपिण्डिकाम् ॥ ५६ ॥

स्निग्धं मधुरमाहारं तण्डुलान् रुधिरोक्षितान् ।
पक्वामकानि मांसानि सुरामैरेयमासवम् ॥ ५७ ॥

अतिमुक्तस्य पुष्पाणि जात्याः सहचरस्य च ।
चतुष्पथे गवां तीर्थे नदीनां संगमेषु च ॥ ५८ ॥

பலி கொடுத்தல் :

நாற்சந்தி, மாட்டுக் கொட்டில், ஆறுகள் கலக்குமிடம் ஆகிய இடங்களில் எள்ளுப்பொடி, யவைச்சத்து மாப்பிண்டம், நெய்ப்பும், இனிப்பும், உள்ள உணவு, ரத்தம் தெளிக்கப்பட்ட அரிசி, பக்குவம் செய்யப்பட்டதும், பக்குவம் செய்யப்படாததுமான மாம்ஸம், சுரை என்னும் மது, மைரேயம் என்ற பேரீச்சையின் ஆஸவம், மல்லிகை மலர், ஜாதி மலர், குறிஞ்சி மலர் ஆகியவற்றை பலிப் பொருளாகக் கொடுக்க வேண்டும்.

निवृत्तामिषमद्यो यो हिताशी प्रयतः शुचिः ।
निजागन्तुभिरुन्मादैः सत्ववान्न स युज्यते ॥ ५९ ॥

மாம்ஸமும், மதுவும் உட்கொள்ளாமை, இதமான உணவு கொள்ளல், பொறுமை, உடல், பேச்சு, மனம் ஆகியவற்றில் தூய்மை, மனோபலம் கொண்டிருத்தல் என்ற குணங்கள் உள்ளவரை தோஷங்களாலும் வெளிக் காரணங்களாலும் உண்டாகும் பைத்திய நோய் பீடிப்பதில்லை.

प्रसाद इन्द्रियार्थानां बुद्ध्यात्ममनसां तथा ।
धातूनां प्रकृतिस्थत्वं विगतोन्मादलक्षणम् ॥ ६० ॥

**பைத்திய நோய் நீங்கியதன் குறி :**

புலன் பொருள்கள், புத்தி, ஆத்மா, மனம் ஆகியவை தெளிவடைதல் தாதுக்கள் தன்னிலையில் இருத்தல் ஆகியவை பைத்திய நோய் நீங்கியதன் குறிகளாகும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने उन्माद प्रतिषेधो नाम षष्ठोऽध्याय: ॥ ६ ॥

உத்தரஸ்தானம் - ஆறாவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ सप्तमोऽध्यायः - அத்தியாயம் - 7 ]

अथातोऽपस्मारप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து வலிப்பு நோய் சிகித்ஸை என்னும் அத்தியாயம் விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

*குறிப்பு:* ⋆*வலிப்பு நோயை காக்கை வலிப்பு, முயலகன் என்றும் கூறுவர். கால்கை வலிப்பு என்பது திரிந்து காக்கை வலிப்பு என ஆகியிருக்கக் கூடும் என்பதும் சிலர் கருத்து.*

स्मृत्यपायो ह्यपस्मारः स धीसत्त्वाभिसम्प्लवात् ।
जायतेऽभिहते चित्ते चिन्ताशोकभयादिभिः ॥ १ ॥

उन्मादवत्प्रकुपितैश्चित्तदेहगतैर्मलैः ।
हते सत्त्वे हृदि व्याप्ते संज्ञावाहिषु खेषु च ॥ २ ॥

तमो विशन् मूढमतिर्बीभत्साः कुरुते क्रियाः ।
दन्तान् खादन् वमन् फेनं हस्तौ पादौ च विक्षिपन् ॥ ३ ॥

पश्यन्नसन्ति रूपाणि प्रस्खलन् पतति क्षितौ ।
विजिह्माक्षिभ्रुवौ दोषवेगेऽतीते विबुध्यते ॥ ४ ॥

कालान्तरेण स पुनश्चैवमेव विचेष्टते ।

புத்தியும், மனமும் கலக்கமடைவதால் நினைவு அழியும். இது அபஸ்மாரம் (வலிப்பு) எனப்படும் கவலை, வருத்தம்,

[1]பயம் முதலியவற்றால் மனம் கலக்கப்பட்ட நிலையில் மனிதர் பைத்திய நோயில் கூறப்பட்டவாறு கோபமடைந்த மனம், உடல் ஆகியவற்றின் [2]தோஷங்களால் இருதயம் நிரம்பப் பெற்று, ஸத்வகுணம் குலைந்து, உணர்வை எடுத்துச் செல்லும் ஸ்ரோதஸ்ஸுகளிலும் தோஷங்கள் பரவிய நிலையில் தமோ குணத்தை அடைந்தவராகி அறிவுகுன்றி அருவருக்கத் தக்க (கீழ்க்கண்ட) சேஷ்டைகள் புரிவார். பற்களைக் கடிப்பார். நுரையாக வாந்தி உண்டாகும். கைகளையும், கால்களையும் உதறுவார். இல்லாத பொருள் களைக் காண்பர். தடுமாற்றத்துடன் பூமியில் விழுவார். கண்களும், புருவங்களும் குறுக்காகக் காணப்படும். தோஷத்தின் வேகம் நீங்கியவுடன் நினைவு ஏற்படும்.

மறுபடியும் (சில காலத்திற்குப் பின்) இவ்வாறே சேஷ்டைகள் புரிவர்.

குறிப்பு: 1. பயம் முதலிய என்பதால் காமம், குரோதம், மகிழ்ச்சி முதலியனவும் கூறப்படுகின்றன.

2. ரஜோ குணமும் தமோ குணமும் வாயு முதலிய தோஷங்களும் குறிப்பிடப்படுகின்றன.

अपस्मारश्चतुर्भेदो वाताद्यैर्निचयेन तु ॥ ५ ॥

## வலிப்பின் பிரிவுகள் :

தனித்த தோஷங்களால் மூன்றும் இவற்றின் கூட்டால் ஒன்றும் என வலிப்பு நோய் நால் வகைப்படும்.

रूपमुत्पत्स्यमानेऽस्मिन् हृत्कम्पः शून्यता भ्रमः ।
तमसो दर्शनं ध्यानं भ्रूव्युदासोऽक्षिवैकृतम् ॥ ६ ॥

अशब्दश्रवणं स्वेदो लालासिंघाणकस्रुतिः ।

अविपाकोऽरुचिर्मूर्च्छा कुक्ष्याटोपो बलक्षयः ॥ ७ ॥

निद्रानाशोऽङ्गमर्दस्तृट् स्वप्ने गानं सनर्तनम् ।
पानं तैलस्य मद्यस्य तयोरेव च मेहनम् ॥ ८ ॥

### வலிப்பு நோயின் முற்குறி :

இருதய நடுக்கம், இருதயத்தில் சூன்ய உணர்ச்சி, பிரமை, கண் இருளடைதல், சிந்தித்து இருத்தல், புருவங்களை விரித்தல், கண்கள் விகாரமடைதல், சப்தமில்லாத பொழுது சப்தத்தைக் கேட்டல், வியர்த்தல், வாய் நீரும் நாசி நீரும் பெருகுதல், ஜீரணிக்காமை, ருசியின்மை, மூர்ச்சை, வயிற்றில் இரைச்சல், பலக் குறைவு, தூக்கமின்மை, உறுப்புக்களில் வலி எரிச்சல் ஆகிய குறிகள் தோன்றும். நடனமாடிக் கொண்டு பாடுவதாகவும், மதுவகையையும், தைலத்தையும் பருகு வதுடன் அதையே சிறுநீராக கழிப்பதாகவும் கனவு காண்பர்.

तत्र वातात्स्फुरत्सक्थि प्रपतंश्च मुहुर्मुहुः ।
अपस्मारेति संज्ञां च लभते विस्वरं रुदन् ॥ ९ ॥

उत्पिण्डिताक्षः श्वसिति फेनं वमति कम्पते ।
आविध्यति शिरो दन्तान् दशत्याध्मातकन्धरः ॥ १० ॥

परितो विक्षिपत्यंगं विषमं विनतांगुलिः ।
रूक्षश्यावारुणाक्षित्वङ्नखास्यः कृष्णमीक्षते ॥ ११ ॥
चपलं परुषं रूपं विरूपं विकृताननम् ।

### வாயுவால் உண்டாகும் வலிப்பு நோய் :

வாயுவாலான வலிப்பு நோயில் கால் துடிக்கும். அடிக்கடி நினைவை இழந்து விடுவர். குரல் மாற்றத்துடன் அழுது

கொண்டு நினைவு பெறுவர். மேல் நோக்கிய உருண்ட கண்களை உடையவராகி பெருமூச்சு விடுவர். நுரையைக் கக்குவர், நடுக்கல், தலையை (சுவர் முதலியவற்றில்) முட்டிக் கொள்ளுதல், பற்களைக் கடித்தல், கழுத்து வீங்கிப் பருத்தல், உறுப்புக்களை மாறாக சுற்றிலும் வீசுதல், விரல்களை மடித்துக் கொள்ளுதல், கண்கள், சருமம், நகம், முகம் ஆகியவை வறண்டும், கறுத்தும் சிவந்துமிருத்தல், கறுப்பாகவும் சஞ்சலமாகவும், கடூரமாகவும், உருவம் குலைந்ததாகவும், விகாரமான முகம் கொண்டதாகவும் உள்ள ரூபத்தைக் காணுதல் இவை வாயுவால் உண்டான வலிப்பு நோயில் காணப்படும் குறிகளாகும்.

अपस्मरति पित्तेन मुहुः संज्ञां च विन्दति ॥ १२ ॥

पीतफेनाक्षिवक्त्रत्वगास्फालयति मेदिनीम् ।
भैरवादीप्तरुषितरूपदर्शी तृषाऽन्वितः ॥ १३ ॥

**பித்தத்தால் உண்டாகும் வலிப்பு நோய் :**

பித்தத்தால் உண்டாகும் வலிப்பு நோயில் அடிக்கடி நினைவிழந்து நினைவும் பெறுவர். நுரை, கண்கள், முகம், சருமம் ஆகியவை மஞ்சள் நிறமாக இருக்கும். (கை கால்களால்) பூமியைத் தட்டுவார். எரிச்சல் உண்டாகும். பயங்கரமானதும், ஒளிவுள்ளதும், கோபங்கொண்டதுமான உருவத்தை காண்பார்.

குறிப்பு: *உடனடியாக நினைவு பெறுவர் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

कफाच्चिरेण ग्रहणं चिरेणैव विबोधनम् ।
चेष्टाऽल्पा भूयसी लाला शुक्लनेत्रनखास्यता ॥ १४ ॥

### கபத்தால் உண்டாகும் வலிப்பு நோய் :

கபத்தால் உண்டாகும் வலிப்பு நோயில் தாமதமாகவே நினைவு நீங்கும். வெகு நேரத்திற்குப் பின்னரே நினைவு உண்டாகும். சேஷ்டைகள் குறைந்து காணப்படும். வாய் நீர் அதிகமாகவும், கண்கள், நகம், முகம் ஆகியவை வெளுத்தும் காணப்படும். வெண்ணிறமாக பொருள்களைக் காண்பர்.

-सर्वलिंगं तु वर्जयेत्।

### ஸன்னிபாத வலிப்பு நோய் அஸாத்யம் :

(ஸன்னிபாதங் காரணமாக) மூன்று தோஷங்களுக்கும் தனித்து கூறப்பட்ட குறிகள் ஒருங்கே காணப்படின் சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது.

अथाऽऽवृतानां धीचित्तहृत्खानां प्राक्प्रबोधनम्॥ १५॥

तीक्ष्णैः कुर्यादपस्मारे कर्मभिर्वमनादिभिः।

### வலிப்பு நோய் சிகித்ஸை :

வலிப்பு நோயில் (சாரீரமானஸிக தோஷங்களால்) சூழப்பட்ட புத்தி, மனம், இருதயம் இவற்றின் ஸ்ரோதஸ் ஸுகளை, தீக்ஷ்ண குணமுள்ள வாந்தி முதலியவற்றால் சோதனம் செய்து முதலில் தெளிவுறுத்த வேண்டும்.

वातिकं बस्तिभूयिष्ठैः, पैत्तं प्रायो विरेचनैः॥ १६॥

श्लैष्मिकं वमनप्रायैरपस्मारमुपाचरेत्।

வாயுவால் உண்டான வலிப்பை, பஸ்தி செய்வித்தலை *முக்கியமாகக் கொண்ட சிகித்ஸையாலும், பித்தத்தால் உண்டான வலிப்பை, விரேசனத்தை முக்கியமாகக்

கொண்ட சிகித்ஸைகளாலும், கபத்தால் உண்டான வலிப்பை, வாந்தி சிகித்ஸையை முக்கியமாகக் கொண்ட பிரயோகங்களாலும் குணப்படுத்த வேண்டும்.

குறிப்பு: *முக்கியமாக என்பதால் மற்ற சோதன முறைகளையும் ஏற்றவாறு பிரயோகிக்க வேண்டுமென்று குறிப்பிடப்படுகிறது.

सर्वतस्तुविशुद्धस्य सम्यगाश्वासितस्य च ॥ १७ ॥

अपस्मारविमोक्षार्थं योगान् संशमनान् शृणु ।

வமனம் விரேசனம் முதலியவற்றால் நன்கு சோதனம் செய்விக்கப்பட்டவரும் (கஞ்சி முதலியவற்றால்) தேறுதல் உண்டாக்கப்பட்டவருமான வலிப்பு நோயாளி வலிப்பு நோய் நீங்குவதற்கான நோயை அடக்குந் தன்மையுள்ள யோகங்களைக் கூறுகிறேன் கேள்.

गोमयस्वरसक्षीरदधिमूत्रैः शृतं हविः ॥ १८ ॥

अपस्मारज्वरोन्मादकामलान्तकरं पिबेत् ।

**பஞ்சகவ்ய கிருதம் :**

பசுவின் சாணிப் பால், பால், *தயிர், பசுநீர் இவற்றைச் சேர்த்து பசு நெய் பக்குவம் செய்து பருக வலிப்பு, ஜ்வரம், பைத்தியம், காமாலை ஆகியவை நீங்கும்.

குறிப்பு: *ஒவ்வொன்றும் சம அளவு என சரகத்தில் கூறப்படுகிறது. ஆனால் பசு நீர் 1 பங்கு, சாணிப் பால் ½ பங்கு, பால் 8 மடங்கு, நெய் 4 பங்கு, தயிர் 5 பங்கு, என்ற விகிதத்தில் சேர்ப்பது சம்பிரதாயமாகும். (ஸித்தயோகம்).

द्विपंचमूलत्रिफलाद्विनिशाकुटजत्वचः ॥ १९ ॥

सप्तपर्णमपामार्गं नीलिनीं कटुरोहिणीम् ।
शम्याकपुष्करजटाफल्गुमूलदुरालभाः ॥ २० ॥

द्विपलाः सलिलद्रोणे पक्त्वा पादावशेषिते ।
भार्गीपाठादकीकुम्भनिकुम्भव्योषरोहिषैः ॥ २१ ॥

मूर्वाभूतीकभूनिम्बश्रेयसीसारिवाद्वयैः ।
मदयन्त्यग्निनिचुलैरक्षांशैः सर्पिषः पचेत् ॥ २२ ॥

प्रस्थं तद्वद् द्रवैः पूर्वैः पंचगव्यमिदं महत् ।
ज्वरापस्मारजठरभगन्दरहरं परम् ॥ २३ ॥

शोफार्शः कामलापाण्डुगुल्मकासग्रहापहम् ।

**மகாபஞ்சகவ்ய கிருதம் :**

தசமூலம், திரிபலை, மஞ்சள், மரமஞ்சள், வெட்பாலைப் பட்டை, ஏழிலம் பாலை, நாயுருவி, அவுரி, கடுகரோஹிணீ, கொன்றை, புஷ்கர மூலம், பேயத்தி வேர், காஞ்சொறி இவற்றை வகைக்கு 2 பலம் எடுத்து 16 பிரஸ்த நீரிலிட்டுக் காய்ச்சி நாலில் ஒன்றாகுமாறு குறுக்கி அதில் சிறுதேக்கு, வட்டத் திருப்பி, துவரை, சிவதை, நாகதந்தீ, த்ரிகடு, வாசனைப் புல், பெருங்குரும்பை, ஓமம், நிலவேம்பு, யானைத் திப்பிலி, நன்னாரி, பெரு நன்னாரி, *மல்லிகை, கொடிவேலி, நொச்சி ஆகியவற்றை வகைக்கு 1/4 பலம் எடுத்து கல்கமாக்கி கலப்பதுடன் முற்கூறப் பெற்ற (பஞ்சகவ்ய) திரவப் பொருள்கள் (நான்கையும்) சேர்த்து, ஒரு பிரஸ்தம் நெய் பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இது மகா பஞ்சகவ்யம் எனப்படும். இது விசேஷமாக ஜ்வரம், வலிப்பு, மகோதரம், பவுத்ரம், வீக்கம், மூலம்,

காமாலை, பாண்டு, குன்மம், இருமல், கிரஹ பீடை ஆகியவற்றை விசேஷமாகப் போக்கும்.

குறிப்பு: *காட்டாத்தி என இந்து கூறுகிறார். காட்டு மல்லிகை எனச் சிலரும் மருதோன்றி எனச் சிலரும் கூறுவர்.

ब्राह्मीरसवचाकुष्ठशंखपुष्पीशृतं घृतम् ॥ २४ ॥

पुराणं मेध्यमुन्मादालक्ष्म्यपस्मारपाप्मजित् ।

*பிராம்மீ கிருதம் :*

நாட்பட்டதான நெய்யுடன் பிராமிச் சாற்றையும் வசம்பு, கோஷ்டம், சங்கங்குப்பி இவற்றின் கல்கத்தையும் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க வேண்டும். இது மேதா விலாசத்துக்கு ஏற்றது. பைத்தியம், அலக்ஷ்மி, வலிப்பு, பாபம் ஆகியவற்றை நீக்கும்.

तैलप्रस्थं घृतप्रस्थं जीवनीयैः पलोन्मितैः ॥ २५ ॥

क्षीरद्रोणे पचेत्सिद्धमपस्मारविमोक्षणम् ।

பால் 16 பிரஸ்தம், எண்ணெய் 1 பிரஸ்தம், நெய் 1 பிரஸ்தம் இவற்றுடன் ஜீவனீய கணச் சரக்குகளை வகைக்கு 1 பலமெடுத்து கல்கமாக்கி கலந்து பக்குவம் செய்து கொள்ள வேண்டும். வலிப்பு நோய் நீங்க இது கைகண்டது.

குறிப்பு: *ஜீவனீய கணம் ஸூத்ரஸ்தானம். அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

कंसे क्षीरेक्षुरसयोः काश्मर्येऽष्टगुणे रसे ॥ २६ ॥

कार्षिकैर्जीवनीयैश्च सर्पिः प्रस्थं विपाचयेत् ।
वातपित्तोद्भवं क्षिप्रमपस्मारं निहन्ति तत् ॥ २७ ॥

तद्वत् काशविदारीक्षुकुशक्वाथशृतं पयः।

பால் 2 பிரஸ்தம், கரும்புச் சாறு 2 பிரஸ்தம், பெருங் குமிழின் கஷாயம் 8 பிரஸ்தம், வகைக்கு ¼ பலம் அளவுள்ள ஜீவனீய கணச் சரக்குகளின் கல்க்கம் ஆகியவற்றை 1 பிரஸ்த நெய்யுடன் சேர்த்து பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இது வாயு, பித்தம் ஆகியவற்றால் உண்டான வலிப்பு நோயை உடனடியாக நீக்கும். நாணல், பால்முதுக்கன் கிழங்கு, கரும்பு, தர்ப்பை இவற்றின் கஷாயம் சேர்த்துப் பக்குவம் செய்த பாலும் அத்தகையது.

कूष्माण्डस्वरसे सर्पिरष्टादशगुणे शृतम्॥ २८॥

यष्टीकल्कमपस्मारहरं धीवाक्स्वरप्रदम्।

18 மடங்கு பூசணிக்காய்ச் சாற்றுடன் *நெய்யும், அதிமதுரக் கல்க்கமும் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க வலிப்பு நோய் நீங்கும். புத்தி பேச்சுத்திறன் குரல் ஆகியவற்றையும் பெறுவர்.

குறிப்பு: *நெய்க்கு எட்டில் ஒரு பங்கு அதிமதுரக் கல்க்கம் சேர்க்கலாம்.

कपिलानां गवां पित्तं नावने परमं हितम्॥ २९॥

श्वशृगालबिडालानां सिंहादीनां च पूजितम्।

கபிலைப் *பசுவின் பித்தத்தை நசியமிடுவது மிக ஏற்றதாகும். நாய், நரி, பூனை, சிங்கம் முதலியவற்றின் பித்தமும் சிறந்ததாகும்.

குறிப்பு: *மூத்ரம் என்றும் பாடம் உண்டு.

गोधानकुलनागानां वृषभर्क्षगवामपि॥ ३०॥

पित्तेषु साधितं तैलं नस्येऽभ्यंगे च शस्यते।

உடும்பு, கீரி, யானை, புள்ளி காளைமான், கரடி, பசு ஆகியவற்றின் பித்தம் சேர்த்து காய்ச்சிய தைலம் நசியமிடவும், அப்பியங்கத்திற்கும் சிறந்ததாகும்.

குறிப்பு: *உடும்பு முதலியவற்றின் பித்தத்தை ஒன்று சேர்த்து தைலம் காய்ச்ச வேண்டுமென்று இந்து விளக்குகிறார்.

त्रिफलाव्योषपीतद्रुयवक्षारफणिज्जकैः ।। ३१ ।।

श्रेयाह्वापामार्गकारंजबीजैस्तैलं विपाचितम्।
वस्तमूत्रे हितं नस्यं चूर्णं वा ध्मापयेद्भिषक् ।। ३२ ।।

திரிபலை, திரிகடு, மரமஞ்சள், யவக்ஷாரம், துளஸி, திருவட்டப் பிசின், நாயுருவி, புங்குவிதை, இவற்றின் கல்க்கமும், ஆட்டு மூத்ரமும் சேர்த்து தைலம் காய்ச்சி நசியமிடுவது சிறந்ததாகும். அல்லது (இங்கு கூறப்பட்ட திரிபலை முதலியவற்றின்) சூர்ணத்தை நாசியில் ஊதிச் செலுத்த வேண்டும்.

नकुलोलूकमार्जारगृध्रकीटाहिकाकजैः।
तुण्डैः पक्षैः पुरीषैश्च धूपमस्य प्रयोजयेत् ।। ३३ ।।

கீரி, கோட்டான், பூனை, கழுகு, புழு, பாம்பு, காக்கை ஆகியவற்றின் அலகு, இறக்கைகள், மலம் இவற்றால் புகையிட வேண்டும்.

शीलयेत्तैललशुनं पयसा वा शतावरीम्।
ब्राह्मीरसं कुष्ठरसं वचां वा मधुसंयुताम् ।। ३४ ।।

எண்ணெயுடன் உள்ளியையாவது, பாலுடன் தண்ணீர் விட்டான் கிழங்கையாவது, பிராம்மீச் சாற்றையாவது,

கோஷ்டத்தின் சாற்றையாவது, தேன் கலந்து வசம்பை யாவது உபயோகிப்பதை பழக்கமாகக் கொள்ள வேண்டும்.

குறிப்பு: ★பிராம்மீச் சாறு முதலியவற்றுடனும் தேன் கலந்து பிரயோகிக்குமாறு அருணதத்தர் கூறுகிறார்.

समं क्रुद्धैरपस्मारो दोषैः शारीरमानसैः ।
यज्जायते यतश्चैष महामर्मसमाश्रयः ।। ३५ ।।

तस्माद्रसायनैरेनं दुश्चिकित्स्यमुपाचरेत् ।

ஒரே சமயத்தில் கோபமடைந்த சரீர தோஷங்கள், மனோ தோஷங்கள் ஆகியவற்றால் வலிப்பு நோய் உண்டாகிறது. இந்நோய் மஹா மர்மஸ்தானமாகிய இருதயத்தை ஆதார மாகக் கொண்டது. ஆகையால் சிகித்ஸைக்கு கடினமான இந்நோயில் ரசாயன விதியில் கூறப்படும் முறையில் சிகித்ஸை செய்ய வேண்டும்.

குறிப்பு: ★39-வது அத்தியாயத்தில் ரசாயன விதி கூறப் படவிருக்கிறது.

तदार्तं चाग्नितोयादेर्विषमात्पालयेत्सदा ।। ३६ ।।

பாதுகாக்கும் முறை :

நெருப்பு, ★நீர் முதலியவற்றில் இருந்தும், மேடு பள்ள மான இடம் ஆகியவற்றில் இருந்தும் வலிப்பு நோயாளி யைப் பாதுகாக்க வேண்டும்.

குறிப்பு: ★நீர் முதலிய என்பதால் மரங்கள், மலைகள், தனித்துச் செல்லுதல், ஆயுதம் தாங்குதல், தனித்து இருத்தல் ஆகியவை கூறப்படுகின்றன.

मुक्तं मनोविकारेण त्वमित्थं कृतवानिति ।
न ब्रूयाद्विषयैरिष्टैः क्लिष्टं चेतोऽस्य बृंहयेत् ।। ३७ ।।

மன நோயிலிருந்து விடுபட்ட நோயாளியிடத்தில் அவர் செய்த செயல்களைப் பற்றிக் கூறக்கூடாது. துன்பமடைந்த அவருக்கு மனத்திற்கு விரும்பியவாறு புலன் நுகர்ச்சிகள் மூலம் மகிழ்ச்சி உண்டாக்க வேண்டும்.

*குறிப்பு: ★இந்த விதி, கிரஹ பீடை உள்ளவர் பைத்திய நோயாளி ஆகியோருக்கும் பொருந்தும்.*

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थानेऽपस्मारप्रतिषेधो नाम सप्तमोऽध्यायः ।। ७।।

*உத்தரஸ்தானம் — ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.*

★★★★★

# ।। उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ।।

## [अष्टमोऽध्यायः - *அத்தியாயம் - 8*]

அடுத்து கழுத்துக்கு மேல் உள்ள உறுப்புக்களில் உண்டாகும் நோய்க்கு சிகித்ஸை ஆரம்பிக்கப்படுகிறது. பிரதான மர்ம ஸ்தானமாகிய இருதயத்தைப் பற்றி பைத்தியம், வலிப்பு ஆகியவற்றை கூறப்பட்ட பின்னர், மற்றொரு பிரதான மர்ம ஸ்தானமாகிய தலையைப் பற்றிய நோய்களின் விளக்கம் ஆரம்பிக்கப்படுகிறது. தலையின் உறுப்புக்களில் கண் பிரதானமாதலால் அதன் நோய்கள் முதல் இடம் பெறுகின்றன. (அவற்றுள்ளும்) கண்ணின்

உறுப்புக்களின் பாதுகாப்பாக முதலில் இமைகள் அமைந்திருப்பதால் அவற்றின் நோய்களின் விளக்கம் ஆரம்பிக்கப்படுகிறது.

अथातो वर्त्मरोगविज्ञानीयमध्यायं व्याख्यास्यमः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து இமை (வர்த்ம) ரோகங்களை விளக்கும் அத்தியாயத்தை விவரிக்கிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

सर्वरोगनिदानोक्तैरहितैः कुपिता मलाः ।
अचक्षुष्यैर्विशेषेण प्रायः पित्तानुसारिणः ॥ १ ॥

शिराभिरूर्ध्वं प्रसृता नेत्रावयवमाश्रिताः ॥
वर्त्म सन्धिं सितं कृष्णं दृष्टिं वा सर्वमक्षि वा ॥ २ ॥

रोगान् कुर्युः-

ஸர்வரோக நிதானத்தில் (நி.அ.1) கூறப்பட்ட பைத்தியம் காரணமாகவும் முக்கியமாக [1]கண்ணுக்கு இதமில்லாத (உணவு வகை செயல் ஆகிய)வற்றாலும் [2]பெரும்பாலும் பித்தத்துடன் தொடர்பு [3]கொண்ட தோஷங்கள் கோபம் கொண்டு ஸிரைகள் மூலம் மேலே சென்று இமை, ஸந்தி, வெண்படலம், கரும்படலம், விழி, கண்முழுப் பகுதி என்றவாறு கண்ணின் உறுப்புக்களைச் சார்ந்து நோய்களை உண்டாக்குகின்றன.

**குறிப்பு:** 1. நெஞ்செரிவு உண்டாக்குபவை பொருந்தாத உணவு, அதிகக் குளிர்ச்சி, க்ஷாரம், புளிப்பு முதலியவை கூறப்படுகின்றன.

2. சில சமயம், வாத கபங்களையும் முக்கியமாகக் கொள்கின்றன.

3. வாயு, கபம், ரத்தம் ஆகியவை குறிப்பிடப் படுகின்றன.

-चलस्तत्र प्राप्य वर्त्माश्रयाः सिराः।
सुप्तोत्थितस्य कुरुते वर्त्मस्तम्भं सवेदनम् ॥ ३ ॥

पांशुपूर्णाभनेत्रत्वं कृच्छ्रोन्मीलनमश्रु च।
विमर्दनात् स्याच्च शमः कृच्छ्रोन्मीलं वदन्ति तम् ॥ ४ ॥

**(கிருச்ரோன்மீலனம்) சிரமத்துடன் இமை திறத்தல்:**

தூங்கி விழித்தவருக்கு வாயுவானது இமைகளின் ஸிரைகளை அடைந்து வேதனை உண்டாக்குவதுடன் இமைகளைத் தம்பிக்கச் செய்யும். கண்களில் புழுதி நிரம்பியது போன்ற உணர்வு (உண்டாதல்), சிரமத்துடன் இமைகளைத் திறத்தல், நீர்ப் பெருக்கு ஆகியவை காணப்படும். இமைகளைக் கசக்க நோய் தணியும். இந்த நோய் (க்ருச்ரோன்மீலனம்) சிரமத்துடன் இமையைத் திறத்தல் எனப்படும்.

चालयन् वर्त्मनी वायुर्निमेषोन्मेषणं मुहुः।
करोत्यरुङ् निमेषोऽसौ-

**(நிமேஷம்) தானே இமைத்தல் :**

வாயுவானது இமைகளை அசைத்து அடிக்கடி மூடித் திறக்கச் செய்யும். வலி ஏற்படாது. இந்த நோய் நிமேஷம் எனப்படும்.

-वर्त्म यत्तु निमील्यते ॥ ५ ॥

विमुक्तसन्धि निश्चेष्टं हीनं वातहतं हि तत्।

**(வாதஹதம்) வாயுவால் குலைக்கப்பட்ட இமை :**

*(வாயுவின் சஞ்சாரம் இல்லாததால்) இமைச்சந்தி விழும். உருவத்தில் குறுகி செயலிழக்கும். இமைகள் மூடிக் கொள்ளும் (திறக்காது) இந்த நோயை வாதஹதம் என்பர்.*

कृष्णाः पित्तेन बह्वयोऽन्तर्वर्त्म कुम्भीकबीजवत् ॥ ६ ॥

आध्मायन्ते पुनर्भिन्नाः पिटिकाः कुम्भिसंज्ञिताः।

**கும்பிகா :**

*பித்தங்காரணமாக இமையின் உட்புறத்தில் கருநிறமான வையும் ஆம்பல் விதைபோல் உள்ளவையுமான பலகொப் புளங்கள் உண்டாகும். இந்தநோய் கும்பிகா எனப்படும். கட்டிகளைப் பிளந்தால் அவை மறுபடியும் பருக்கும்.*

सदाहक्लेदनिस्तोदं रक्ताभं स्पर्शनाक्षमम् ॥ ७ ॥

पित्तेन जायते वर्त्म पित्तोत्क्लिष्टमुशन्ति तत्।

**(பித்தோத்க்லிஷ்டம்) பித்தத்தால் கிளர்ந்த இமை :**

*பித்தம் காரணமாக இமையில் எரிச்சல், கசிவு, குத்துவலி, செந்நிறம், பரிசித்தலைத் தாங்கமுடியாமை ஆகியவை காணப்படும். இந்நோயை பித்தோத்க்லிஷ்டம் என்பர்.*

करोति कण्डूं दाहं च पित्तं पक्ष्मान्तमास्थितम् ॥ ८ ॥

पक्ष्मणां शातनं चानु पक्ष्मशातं वदन्ति तम्।

**(பக்ஷ்மசாதம்) இமை மயிர் உதிர்தல் :**

இமை உரோமக்காலை அடைந்த பித்தமானது இமையில் அரிப்பையும், எரிச்சலையும் உண்டாக்கும். பிறகு இமை மயிரை உதிர்க்கும். இந்த நோயை பக்ஷ்ம சாதம் என்பர்.

पोथक्यः पिटिकाः श्वेताः सर्षपाभा घनाः कफात् ॥ ९ ॥

शोफोपदेहरुक्कण्डूपिच्छिलाश्रुसमन्विताः ।

**போதகீ :**

வீக்கம், அதைத்தல், வலி, அரிப்பு, பிசுபிசுப்புடன் கூடிய கண்ணீர் ஆகியவற்றுடன் கூடியவையும், கபங்காரணமாக உண்டானவையும், வெண்ணிறமானவையும், கடுகுபோன்ற அமைப்புக்கொண்டவையும், நெருக்கமானவையுமான கட்டிகள் உண்டாகும். இவை போதகீ எனப்படும்.

कफोत्क्लिष्टं भवेद्वर्त्म स्तम्भक्लेदोपदेहवत् ॥ १० ॥

**(கபோத்க்லிஷ்டம்) கபத்தால் கிளர்ந்தது :**

இமையானது தம்பிதம், கசிவு, அதைத்தல் ஆகியவற்றுடன் கூடியிருப்பின் கபோத்க்லிஷ்டம் எனப்படும்.

ग्रन्थिः पाण्डूररुक्पाकः कण्डूमान् कठिनः कफात् ।

कोलमात्रः स लगणः किंचिदल्पस्ततोऽथ वा ॥ ११ ॥

**லகணம் :**

கபங்காரணமாக, வெண்மையானதும், வலியும், பழுத்தலும் அற்றதும், அரிப்புடன் கூடியதும், கடினமானதும், இலந்தை அளவு அல்லது இலந்தையை விடச் சிறியதுமான கட்டி இமையில் உண்டாகும். இது லகணம் எனப்படும்.

रक्ता रक्तेन पिटिका तत्तुल्यपिटिकाचिता।
उत्संगाख्या-

**உத்ஸங்கம் :**

(இமையில், வாயு முதலியவற்றால் கேடடைந்த) ரத்தம் காரணமாக சிவந்த கட்டிகள் உண்டாகும். அதே மாதிரியான கட்டிகளால் சூழப்பட்டிருக்கும். இந்தநோய் உத்ஸங்கம் எனப்படும்.

-तथोत्क्लिष्टं राजिमत्स्पर्शनाक्षमम्॥ १२॥

***(உத்க்லிஷ்டபிடகா) :***

அவ்வாறே உத்க்லிஷ்ட நோயும் தோன்றுகிறது. இந்த நோயில் கோடுகளும் பரிசித்தலைப் பொறுக்க முடியாமையும் காணப்படும்.

अर्शोऽधिमांसं वर्त्मान्तः स्तब्धं स्निग्धं सदाहरुक्।
रक्तं रक्तेन तत्स्रावि छिन्नं छिन्नं च वर्धते॥ १३॥

***(அரிசஸ்) இமை மாம்ஸக் குருத்து :***

*ரத்தம் காரணமாக இமையின் உட்புறத்தில் அசைவின்றியும், நெய்ப்பு, எரிச்சல், வலி இவற்றுடன் கூடியதாகவும், செந்நிறமாகவும், ரத்தக்கசிவு உள்ளதாகவும், வெட்ட வெட்ட வளர்ச்சியடைவதுமாக மாம்ஸம் எழும்பியிருக்கும். இது வர்த்மார்சஸ் எனப்படும்.*

मध्ये वा वर्त्मनोऽन्ते वा कण्डूषारुग्वती स्थिरा।

मुद्गमात्राऽसृजा ताम्रा पिटिकाऽञ्जननामिका॥ १४॥

***அஞ்ஜன நாமிகா :***

*ரத்தம் காரணமாக இமையின் மத்தியில் அல்லது முடிவில் செந்நிறம் அரிப்பு, காந்தல், வலி இவற்றுடன்*

கூடியதாகவும், அசையாததாகவும், பயறு போன்றதாகவும் கட்டி காணப்படும். இது அஞ்ஜன நாமிகா எனப்படும்.

दोषैर्वर्त्म बहिः शूनं यदन्तः सूक्ष्मखाचितम् ।
सस्रावमन्तरुदकं बिसाभं बिसवर्त्म तत् ॥ १५ ॥

**(பிஸவர்த்ம) தாமரைத்தண்டிமை :**

(வாயு முதலிய) தோஷங்களால் இமையின் மேற்புறம் வீங்கியிருக்கும். உட்புறம் நுண்ணிய த்வாரங்களில் நீர் இருக்கும். கசிவு ஏற்படும். தாமரைத்தண்டுபோல் இமை அமைந்திருக்கும் இந்த நோய் பிஸவர்த்மம் எனப்படும்.

**குறிப்பு :** பிஸம் என்ற சொல் தாமரைத் தண்டைக் குறிக்கும்.

यद्वर्त्मोत्क्लिष्टमुत्क्लिष्टमकस्मान्म्लानतामियात् ।
रक्तदोषत्रयोत्क्लेशाद्वदंत्युत्क्लिष्टवर्त्म तत् ॥ १६ ॥

**உத்க்லிஷ்டவர்த்ம :**

ரத்தம், மூன்று தோஷங்கள் ஆகியவை கிளர்ந்தமை காரணமாக இமையானது அடிக்கடி கிளர்ச்சியடைந்து (காரணமின்றி) வாட்டத்தை அடையும். இந்தநோய் உத்க்லிஷ்டவர்த்ம எனப்படும்.

श्याववर्त्म मलैः सास्रैः श्यावं रुक्क्लेदशोफवत् ।

**(சியாவவர்த்ம) கரு இமை :**

ரத்தத்தோடு கூடிய (வாயு முதலிய) தோஷங்கள் காரணமாக இமையில் கரு நிறமும், வலி, கசிவு, வீக்கம் ஆகியவையும் காணப்படும். இந்த நோய் ச்யாவவர்த்ம எனப்படும்.

குறிப்பு: எரிச்சலும், அரிப்பும் காணப்படும் என சுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

श्लिष्टाख्यं वर्त्मनी श्लिष्टे कण्डूश्वयथुरागिणी ॥ १७ ॥

**(சிலிஷ்டவர்த்ம) இமை ஒட்டிக் கொள்ளுதல் :**

இமைகள் ஒட்டிக் கொள்வதுடன் அரிப்பு, வீக்கம், செந்நிறம் ஆகியவை காணப்படின் (ச்லிஷ்டவர்த்மம்) இமை ஒட்டிக் கொள்ளுதல் எனப்படும்.

वर्त्मनोऽन्तः खरा रूक्षाः पिटिकाः सिकतोपमाः ।
सिकतावर्त्म-

**(ஸிகதாவர்த்ம) மணல் இமை :**

இமையின் உட்புறத்தில் கரடானவையும், வறட்சியுள்ளனவாயும், சிறு மணல் போன்ற உருவமுள்ளவையுமான கட்டிகள் தோன்றின் (ஸிகதாவர்த்மம்) மணல் இமை எனப்படும்.

-कृष्णं तु कर्दमं कर्दमोपमम् ॥ १८ ॥

**(கர்த்தமம்) சேற்றிமை :**

கரு நிறத்துடனும், சேறுபோன்றும் இமைகள் காணப்படின் அந்நோய் (கர்த்தமம்) சேற்றிமை எனப்படும்.

बहलं बहलैर्मांसैः सवर्णैश्चीयते समैः ।

**(பஹளம்) தடித்த இமை :**

தடிப்புள்ளவையும், சமான நிறமுள்ளவையும், மேடு பள்ளமற்றவையுமான மாம்ஸங்களுடன் இமைகள் வளர்ச்சி அடையும். இந்த நோய் (பஹளம்) தடித்த இமை எனப்படும்.

कुकूणकः शिशोरेव दन्तोत्पत्तिनिमित्तजः ॥ १९ ॥

स्योत्तेन शिशुरुच्छूनताम्राक्षो वीक्षणाक्षमः ।
सवर्त्मशूलपैच्छिल्यः कर्णनासाक्षिमर्दनः ॥ २० ॥

**குகூணகம் :**

பற்கள் முளைப்பது காரணமாக குழந்தைகளுக்கே குகூணகம் என்னும் நோய் உண்டாகும். குகூணக நோயில் கண்கள் வீக்கத்துடனும், செந்நிறத்துடனும் இருத்தல், பார்க்க முடியாமை, இமைகளில் வலியும், பிசுபிசுப்பும் தோன்றுதல் ஆகியவை காணப்படும். காது, நாசி, கண்கள் ஆகியவற்றை தேய்ப்பர்.

**குறிப்பு:** தாய்ப்பால் தோஷம் காரணமாக இந்நோய் உண்டாகிறது என்றும் கூறுவர்.

पक्ष्मोपरोधे संकोचो वर्त्मनां जायते तथा ।
खरताऽन्तर्मुखत्वं च रोम्णामन्यानि वा पुनः ॥ २१ ॥

कण्टकैरिव तीक्ष्णाग्रैर्घृष्टं तैरक्षि शूयते ।
उष्यते चानिलादिद्विडल्पाहः शान्तिरुद्धृतैः ॥ २२ ॥

**(பக்ஷ்மரோதம்) இமை முள் :**

இமைகள் சுருங்கும். இமை உரோமங்கள் கரடாகவும், உட்புறம் நோக்கி வளைந்தும் காணப்படும். அல்லது வேறு உரோமங்கள் உண்டாகும். முட்கள் போன்ற கூரான முனையுள்ள அவற்றால் உராயப்பெறுவதால் கண்கள் வீங்கும். காந்தலுண்டாகும். காற்று முதலியவற்றை வெறுப்பர். இது (பக்ஷ்மரோதம்) இமை முள்நோய் எனப்படும். மயிர்களை (சந்தம்சயந்தரத்தால்) நீக்கினால் சில நாட்களுக்கு சுகமுண்டாகும்.

குறிப்பு: ஸுச்ருதத்தில் இந்நோய் "பக்ஷ்ம கோபம்" எனப் பெயரிடப்பட்டிருக்கிறது. "உபபக்ஷ்மமாலா" எனவே வேறொரு பெயரையும் டல்ஹணர் குறிப்பிடுகிறார்.

कनीनके बहिर्वर्त्म कठिनो ग्रन्थिरुन्नतः ।
ताम्रः पक्वोऽस्रपूयस्रुदलज्याध्मायते मुहुः ॥ २३ ॥

## அலஜி :

இமைகளுக்கு வெளியில் நாசியை ஒட்டிய பகுதியில் கடினமானதும், எழும்பியதும், செந்நிறம் பொருந்தியது மான முடிச்சு உண்டாகும். பழுத்த நிலையில் ரத்தமும், சீழும் வெளியேறும். இந்தநோய் அலஜி எனப்படும். அடிக்கடி உப்புசம் உண்டாகும்.

वर्त्मान्तर्मांसपिण्डाभः श्वयथुर्ग्रथितोऽरुजः ।
सास्रैः स्यादर्बुदो दोषैर्विषमो बाह्यतश्चलः ॥ २४ ॥

## அற்புதம் :

ரத்தத்துடன் கூடிய தோஷங்களால் இமையின் உட்புறத்தில் மாம்ஸபிண்டம் போல் திரண்டதும், வலியற்ற துமான வீக்கம் உண்டாகும். இமையின் வெளிப்புறத்தில் மேடு பள்ளங்கள் உள்ளதாகவும், அசைவுள்ளதாகவும் வீக்கம் தோன்றும். இந்தநோய் அற்புதம் எனப்படும்.

चतुर्विंशतिरित्येते व्याधयो वर्त्मसंश्रयाः ।

இவை இருபத்துநான்கும் இமையைச் சார்ந்த நோய்கள் ஆகும்.

आद्योऽत्र भेषजैः साध्यो द्वौ ततोऽर्शश्च वर्जयेत् ॥ २५ ॥

पक्ष्मोपरोधो याप्यः स्याच्छेषाञ्छस्त्रेण साधयेत् ।

## சிகித்ஸைக்கு ஏற்றவையும், மற்றவையும்:

முதலில் கூறப்பட்ட (க்ரச்ரோன்மீலம்) இமை திறப்பதில் கடினமானது என்னும்நோய், மருந்துகளால் குணப்படுத்தக் கூடியது.

அடுத்துக் கூறப்பட்ட (நிமேஷம்) தானே இமைத்தல் (வாதஹதம்) வாயுவால் குலைக்கப்பட்ட இமை ஆகிய இரண்டு நோய்களும் இமை மாம்ஸக்குருத்து நோயும் சிகித்ஸைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடாதவை ஆகும்.

(பக்ஷ்மரோதம்) இமைமுள் என்னும் நோய் பத்தியங்களால் காலம் தள்ள மாத்ரமே ஏற்றது. மற்றவை களை சஸ்திரப்பிரயோகத்தால் வெல்ல வேண்டும்.

குறிப்பு: शस्त्रौपधैर्जयेत् என்ற பாடத்தில் சஸ்திரப்பிரயோகத் தாலும், ஔஷதப்பிரயோகங்களாலும் வெல்ல வேண்டுமென்பது கருத்து.

कुट्टयेत्पक्ष्मसदनं छिन्द्यात्तेष्वपि चार्बुदम् ॥ २६ ॥

भिन्द्याल्लगणकुम्भीकाबिसोत्संगाञ्जनालजीः ।
पोथकीश्यावसिकताश्लिष्टोत्क्लिष्टचतुष्टयम् ॥ २७ ॥

सकर्दमं सबहलं विलिखेत्सकुकूणकम् ॥ २७ १/२ ॥

(பக்ஷ்ம சதனம்) இமைமயிர் உதிர்தல் என்னும் நோயில் (ஊசிக்கொத்து சஸ்திரத்தால்) பொளிய வேண்டும். அற்புத நோயில் (விருத்திபத்ரம் முதலியவற்றால்) பிளக்க வேண்டும். லகணம், கும்பீகம் (பிஸம்) தாமரைத்தண்டு இமை, உத்ஸங்கம், அஞ்சனநாமிகா, அலஜி ஆகியவற்றை பிளக்கவேண்டும். போதகி, (ச்யாவம்) கரு இமை, (ஸிகதம்) மணல் இமை, (ச்லிஷ்டம்) இமை ஒட்டிக் கொள்ளுதல்,

நான்குவகை (உத்க்லிஷ்டங்கள்) [1]கிளர்ந்த இமை நோய்கள், (கர்தமம்) சேற்றிமை, (பஹளம்) தடித்த இமை, (குகூணகம்) குழந்தை நோய்வகை ஆகிய நோய்களை (தேக்கிலை முதலியவைகளால்) சுறண்ட வேண்டும்.

குறிப்பு: 1. பித்தோத்க்லிஷ்டம், கபோத்க்லிஷ்டம், ரக்தோத்க்லிஷ்டம், உத்க்லிஷ்டவர்த்ம ஆகிய நான்கும் குறிப்பிடப்படுகின்றன.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने वर्त्मरोगविज्ञानीयोनामअष्टमोऽध्यायः ॥८॥

உத்தரஸ்தானம் -எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

★★★★★

## ॥ उत्तरस्थानम् - नवमोऽध्यायः ॥

### உத்தரஸ்தானம் - அத்தியாயம் - 9

अथातो वर्त्मरोगप्रतिषेधं व्याख्यास्यामः।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः।

அடுத்து (வர்த்மரோக பிரதிஷேதம்) இமை நோய்க்கு சிகித்ஸை என்னும் அத்தியாயத்தை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறுகின்றனர்.

कृच्छ्रोन्मीले पुराणाज्यं द्राक्षाकल्काम्बुसाधितम्।
ससितं योजयेत्स्निग्धं नस्यधूमांजनादि च ॥ १ ॥

(க்ருச்ரோன்மீலத்தில்) சிரமத்துடன் இமை திறத்தல் நோயில், நாட்பட்ட நெய்யுடன் திராக்ஷையின் கல்கமும், கஷாயமும் சேர்த்துப் பக்குவம் செய்து சர்க்கரை கலந்து [1]பிரயோகிக்கவேண்டும். நெய்ப்புள்ளவையான நசியம், தூமபானம், [2]அஞ்சனம் முதலியவற்றையும் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: 1. இரவில் பருகவேண்டுமென சங்கிரஹத்தில் காணப்படுகிறது. கழுத்துக்கு மேற்பட்ட உறுப்புக் களின் நோய் சிகித்ஸையில் இரவில் ஔஷதப் பிரயோகம் விசேஷமாக ஏற்றது என ஸுச்த்ர ஸ்தானம் 13-ஆம் அத்தியாயத்தில் கூறப்பட்டது கவனிக்கத்தக்கது. உட்பிரயோகத்திற்கும், வெளிப் பிரயோகத்திற்கும் ஏற்றது என கைரளியில் காணப்படுகிறது.

2. அஞ்சனம் முதலிய என்பதால் சங்க்ரஹத்தால் கூறப்பட்டவாறு நிரப்புதல், புடமிட்டுப் பிழிதல் ஆகியவையும் குறிப்பிடப்படுகின்றன. வாயுவைப் போக்கும் பொருள்களால் தயாரிக்கப்பட்ட பஸ்தியும், பாலில் வேகவைத்த ஆமணக்கு இலையால் இமைப்பகுதியில் வியர்வை உண் டாக்குதலும் செய்விக்கவேண்டுமென சங்க்ர ஹத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு செய்வித்தும் நோய் நீங்காவிடில் பயறளவு இடைவெளி விட்டு சுடவேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

कुम्भीकावर्त्म लिखितं सैन्धवप्रतिसारितम् ।
यष्टीधात्रीपटोलीनां क्वाथेन परिषेचयेत् ।। २ ।।

## கும்பீகாவர்த்ம நோய்க்கு சிகித்ஸை :

கும்பீகாவர்த்ம நோயில் (விருத்தி பத்திரம் முதலிய வற்றால்) கீறி இந்துப்புத் தூவியபின் அதிமதுரம், நெல்லி, பேய்ப்புடல் இவற்றின் கஷாயத்தை கண்களில் ஊற்ற வேண்டும்.

**குறிப்பு:** நெய்யையும் ஊற்றுமாறு சங்க்ரஹத்தில் கூறப் பட்டுள்ளது.

निवातेऽधिष्ठितस्याप्तैः शुद्धस्योत्तानशायिनः ।
बहिः कोष्णाम्बुतप्तेन स्वेदितं वर्त्म वाससा ॥ ३ ॥

निर्भुज्य वस्त्रान्तरितं वामांगुष्ठागुंलीधृतम् ।
न स्रंसते चलति वा वर्त्मैवं सर्वतस्ततः ॥ ४ ॥

मण्डलाग्रेण तत्तिर्यक् कृत्वा शस्त्रपदांकितम् ।
लिखेत्तेनैव पत्रैर्वा शाकशेफालिकादिजैः ॥ ५ ॥

फेनेन तोयराशेर्वा पिचुना प्रमृजन्नसृक् ।
स्थिते रक्ते सुलिखितं सक्षौद्रैः प्रतिसारयेत् ॥ ६ ॥

यथास्वमुक्तैरनु च प्रक्षाल्योष्णेन वारिणा ।
घृतेन सिक्तमभ्यक्तं बध्नीयान्मधुसर्पिषा ॥ ७ ॥

ऊर्ध्वाधः कर्णयोर्दत्त्वा पिण्डीं च यवसक्तुभिः ।
द्वितीयेऽहनि मुक्तस्य परिषेकं यथायथम् ॥ ८ ॥

कुर्याच्चतुर्थे नस्यादीन् मुञ्चेदेवाह्नि पंचमे ।

(வமனம், விரேசனம் ஆகிய) சோதனம் செய்வித்த பிறகு காற்று வீசாத இடத்தில் நோயாளியை இருக்கச்செய்து

மல்லாந்து படுத்தநிலையில் ஆப்த நண்பர்களால் பிடிக்கச் செய்து சிறிது சூடான நீரில் நனைக்கப்பட்ட துணியால் இமையின் வெளிப்புறத்தில் (ஒத்தடமிட்டு) வியர்வை உண்டாக்கவேண்டும். துணி சுற்றப்பட்ட இடதுகையின் கட்டைவிரல், ஆள்காட்டிவிரல் ஆகியவற்றால் இமையை மடித்து, நழுவாத வாறும், அசையாதவாறும் பிடித்துக் கொள்ளவேண்டும். மண்டலாக்ர சஸ்திரத்தினால் குறுக்காக இமை முழுதும் அடையாளம் செய்து கொண்டு அந்த சஸ்திரத்தினாலாவது தேக்கு பவழமல்லி ஆகியவற்றின் இலைகளினாலாவது கடல்நுரையாலாவது சுறண்ட வேண்டும். துணித்துண்டால் ரத்தத்தை துடைக்கவேண்டும். ரத்தக்கசிவு நின்றவுடன் நன்கு இமை சுறண்டப் பட்டதை அறிந்து தோஷம், நோய் இவற்றிற்கேற்ற பொருள்களுடன் தேன் கலந்து தடவவேண்டும். பிறகு வெந்நீரால் கழுவி, நெய்யை ஊற்றவேண்டும். வறுத்த யவை மாவை தேன் நெய்யுடன் கல்கமாக்கி வைத்து, காதுகளின் மேலும் கீழுமாக கட்டவேண்டும். *இரண்டாம்நாள் கட்டை அவிழ்த்து ஏற்றவாறு திரவங்களால் நனைக்க வேண்டும். நான்காம்நாள் நசியம் முதலியவை செய்விக்கவேண்டும். ஐந்தாம்நாள் கட்டை நீக்கிவிட வேண்டும்.

குறிப்பு: *கட்டை அவிழ்ப்பது (तृतीयेऽहनि) மூன்றாம்நாள் என்றும் பாடம் காணப்படுகிறது.

समं नखनिभं शोफकण्डूघर्षाद्यपीडितम् ॥ ९ ॥

विद्यात्सुलिखितं वर्त्म लिखेद् भूयो विपर्यये ।

**நன்கு கீறியதன் குறி :**

இமை சமமாகவும், நகம்போன்றதாகவும், வீக்கம், அரிப்பு, சிராய்ப்பு முதலியவற்றால் பீடிக்கப்படாமலும்

இருந்தால் நன்கு கீறப்பட்டதாக அறியவேண்டும். மாறான குறிகள் காணப்பட்டால் மீண்டும் இமையைக் கீற வேண்டும்.

रुक्पक्ष्मवर्त्मसदनस्रंसनादतिलेखनात् ॥ १० ॥

स्नेहस्वेदादिकस्तस्मिन्निष्टो वातहरः क्रमः ॥

**அதிகமாகக் கீறப்பட்டதன் குறிகளும் சிகித்ஸையும்:**

அதிகமாகக் கீறப்பட்டால் வலி, இமையிலுள்ள உரோமம் விழுதல், இமை நழுவுதல் ஆகியவை காணப் படும். இந்த நிலையில் வாயுவைப் போக்கும் நெய்ப்புச் சிகித்ஸை, வியர்ப்பித்தல் முதலியவை ஏற்றனவாகும்.

**குறிப்பு:** முதலியன என்பதால் வமனம், விரேசனம், பஸ்தி, நஸ்யம் முதலியன கூறப்படுகின்றன. (கைரளி)

अभ्यज्य नवनीतेन श्वेतरोध्रं प्रलेपयेत् ॥ ११ ॥

एरण्डमूलकल्केन पुटपाके पचेत्ततः ।
स्विन्नं प्रक्षालितं शुष्कं चूर्णितं पोटलीकृतम् ॥ १२ ॥

स्त्रियाः क्षीरे छगल्या वा मृदितं नेत्रसेचनम् ।

வெள்ளிலோத்திபட்டையை வெண்ணெய் தடவிய பிறகு ஆமணக்குவேர்க் கல்கத்தால் பூசி அதை புடபாக முறையில் பக்குவம் செய்யவேண்டும். பக்குவமானதும் நன்கு கழுவி காயவைத்துச் சூர்ணம் செய்யவேண்டும். அதை மெல்லிய துணியில் கட்டி தாய்ப்பால் அல்லது ஆட்டுப்பாலில் நனைத்து கண்களில் பிழியவேண்டும்.

शालितण्डुलकल्केन लिप्तं तद्वत् परिष्कृतम् ॥ १३ ॥

कुर्यान्नेत्रेऽतिलिखिते मृदितं दधिमस्तुना।
केवलेनापि वा सेकं मस्तुना जांगलाशिनः॥ १४॥

**அதிகமாக கீறப்பட்டால் செய்ய வேண்டியவை :**

வெண்ணெய் தடவப்பட்ட வெள்ளை லோத்தியை சாலியரிசிமாவின் கல்கத்தால் பூசி முற்கூறியதுபோல் புடபாக முறையில் பக்குவம் செய்து கொள்ளவேண்டும். அந்தச்சூர்ணத்தை தயிர்த்தெளிவில் நனைத்து, அதிக மாகக் கீறப்பட்ட இமைகளில் பிழியவேண்டும். அல்லது வறண்ட பிரதேசத்தில் சஞ்சரிக்கும் பிராணியின் மாம்ஸத்தை உண்ணச் செய்து, தனித்த தயிர்த்தெளிவை ஊற்றவேண்டும்.

पिटिका व्रीहिवक्त्रेण भित्वा तु कठिनोन्नताः।
निष्पीडयेदनु विधिः परिशेषस्तु पूर्ववत्॥ १५॥

கடினமானவையும், உயர்ந்தவையுமான கட்டிகளை வ்ரிஹிமுக சஸ்திரத்தால் பிளந்து அமுக்கவேண்டும். அடுத்துச் *செய்யவேண்டியவை முற்கூறப் பெற்றது போலாகும்.

குறிப்பு: *பூச்சு, கழுவுதல், கட்டுதல் முதலியவை ஏழாம் ஸ்லோகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

लेखने भेदने चायं क्रमः सर्वत्र वर्त्मनि।

சுரண்டலுக்கும், பிளத்தலுக்குமான முறையானது எல்லா இமை நோய்களிலும் இவ்வாறேயாகும்.

पित्तास्रोत्क्लिष्टयोः स्वादुस्कन्धसिद्धेन सर्पिषा॥ १६॥

सिराविमोक्षः स्निग्धस्य त्रिवृच्छ्रेष्ठं विरेचनम्।
लिखिते स्रुतरक्ते च वर्त्मनि क्षालनं हितम्॥ १७॥

यष्टीकषायः, सेकस्तु क्षीरं चन्दनसाधितम्।

பித்தம் கிளர்ந்த இமைநோய், ரத்தம் கிளர்ந்த இமை நோய் ஆகியவற்றில் *மதுரகணச்சரக்குகள் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட நெய்யைப் பருகச்செய்யவேண்டும். அதனால் நெய்ப்பு உண்டானபின், ஸிரையைக் குத்த வேண்டும். சிவதையையும், திரிபலையையும் விரேசனத்திற் காகக் கொடுக்கவேண்டும். இமையைக்கீறி ரத்தத்தை வெளியேற்றிய நிலையில் அவ்விடத்தை அதிமதுரக் கஷாயத்தால் சுத்தம் செய்யவேண்டும். சந்தனம் சேர்த்துப் பக்குவம் செய்த பாலை ஊற்றவேண்டும்.

குறிப்பு: *மதுரகணச்சரக்குகள் ஸூத்ரஸ்தானம் 10-ம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

पक्ष्मणां सदने सूच्या रोमकूपान् विकुट्टयेत्॥ १८॥

ग्राहयेद्वा जलौकोभिः, पयसेक्षुरसेन वा॥
वमनं नावनं सर्पिः शृतं मधुरशीतलैः॥ १९॥

இமையின் உரோமம் உதிரும் நோயில் ஊசியால் உரோமக் கால்களைக் குத்தவேண்டும். அல்லது அட்டை யினால் உரோமக்கால்களைப் பிடிக்கச் [1]செய்யவேண்டும். பால் அல்லது கருப்பஞ்சாற்றை (வாந்தி பொருள் கலந்து) பிரயோகித்து வாந்தியுண்டாக்க வேண்டும். [2]இனிப்புப் பொருள்கள், குளிர்ச்சி பொருந்திய பொருள்கள் ஆகியவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த நெய்யை நசிய மிட உபயோகிக்கவேண்டும்.

குறிப்பு:1. அங்கு தங்கிய கெட்ட ரத்தத்தை இவ்வாறு வெளியேற்ற வேண்டும்.

2. திராக்ஷை, தண்ணீர்விட்டான் கிழங்கு, கீரிப் பாலை முதலியவை கூறப்படுகின்றன.

संचूर्ण्य पुष्पकासीसं भावयेत्सुरसारसैः ।
ताम्रे दशाहं परमं पक्ष्मशाते तदंजनम् ।। २० ।।

புஷ்பகாஸீஸத்தை (அன்னபேதிவகை) சூரணித்து தாமிரப் பாத்திரத்தில் போட்டு [1]துளஸிச்சாறுவிட்டு 10 நாட்கள் ஊறவைத்து பிறகு அஞ்சனமிட இமை உரோமம் உதிர்வது நீங்கும்.

குறிப்பு: 1. செம்முருங்கைச்சாறு என பாஷ்யகாரர் உரை கூறுகிறார்.

पोथकीर्लिखिताः शुण्ठीसैन्धवप्रतिसारिताः ।
उष्णाम्बुक्षालिताः सिंचेत् खदिराढकिशिग्रुभिः ।। २१ ।।

अप्सिद्धैर्द्विनिशाश्रेष्ठामधुकैर्वा समाक्षिकैः ।

## போதகி சிகித்ஸை :

போதகி நோயில் (முற்கூறியவாறு விருத்திபத்திரம் முதலியவற்றால்) சுறண்டியபின் அவ்விடத்தில் சுக்கு, இந்துப்பு ஆகியவற்றின் நுண்ணிய பொடியைத் தூவ வேண்டும். வெந்நீரால் கழுவவேண்டும். கருங்காலி, துவரை, முருங்கை ஆகியவற்றையாவது மஞ்சள், மர மஞ்சள், திரிபலை, அதிமதுரம் ஆகியவற்றையாவது நீரிலிட்டுக்காய்ச்சி தேன் கலந்து கண்களில் ஊற்றவேண்டும்.

कफोत्क्लिष्टे विलिखिते सक्षौद्रैः प्रतिसारणम् ।। २२ ।।

सूक्ष्मैः सैन्धवकासीसमनोह्वाकणतार्क्ष्यजैः ।
वमनांजननस्यादि सर्वं च कफजिद्धितम् ।। २३ ।।

**(கபோத்க்லிஷ்ட) கபத்தால் கிளர்ந்த இமை நோயில் சிகித்ஸை :**

(கபோத்க்லிஷ்ட) கபத்தால் கிளர்ந்திருக்கிற இமை நோயில் (சஸ்திரத்தால்) சுறண்டியபின் இந்துப்பு, அன்ன பேதி, மனோசிலை, திப்பிலி, அஞ்சனக்கல் ஆகியவற்றின் நுண்ணிய பொடியைத் தேன் கலந்து தடவவேண்டும். கபத்தைப் போக்கும் தன்மையுள்ள, வாந்தி செய்வித்தல், அஞ்ஜனமிடல், நசியமிடல் முதலியவையும் ஏற்றவை யாகும்.

कर्तव्यं लगणेऽप्येतदशान्तावग्निना दहेत् ।

**லகண சிகித்ஸை :**

லகணம் என்னும் நோயிலும் பிளந்தபின் இவ்வாறே (சுறண்டுதல் முதலிய) சிகித்ஸை செய்யவேண்டும். இவ்வாறு செய்தும் நோய் நீங்காவிடில் தீயால் சூடுஇட வேண்டும்.

**குறிப்பு:** வமனமும், விரேசனமும் செய்விக்கலாமென சங்க்ரஹத்தில் கூறப்படுகிறது.

(स्विन्नं भित्वा विनिष्पीड्योत्संगां चा ऽ भ्यञ्जनामिकाम् ।
शिलैलासैन्धवनतैः सक्षौद्रैः प्रतिसारयेत् ।। २३ ।।)

உத்ஸங்கம் அஞ்ஜனநாமிகா என்னும் நோய்களில் வியர்ப்பித்து பிளந்து அமுக்கியபின் மனோசிலை, ஏலம், இந்துப்பு, தகரவிதை ஆகியவற்றின் நுண்ணிய தூளை தேன் கலந்து இடவேண்டும்.

कुकूणे खदिरश्रेष्ठानिम्बपत्रशृतं घृतम् ।। २४ ।।

पीत्वा धात्री वमेत्कृष्णायष्टीसर्षपसैन्धवैः ।

**குகூணகம் :**

குகூணக நோயில், பால் கொடுக்கும் தாயை, கருங்காலி, திரிபலை, வேப்பிலை ஆகியவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த நெய்யைப் பருகச்செய்து திப்பிலி, அதிமதுரம், கடுகு, இந்துப்பு ஆகியவற்றால் வாந்தி செய்விக்க வேண்டும்.

अभयापिप्पलीद्राक्षाकाथेनैनां विरेचयेत् ।। २५ ।।

கடுக்காய், திப்பிலி, திராக்ஷை இவற்றின் கஷாயத்தால் தாதிக்கு விரேசனம் செய்விக்கவேண்டும்.

मुस्ताद्विरजनीकृष्णाकल्केनालेपयेत्स्तनौ ।
धूपयेत्सर्षपैः साज्यैः-

கோரைக்கிழங்கு; மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி இவற்றின் கல்கத்தால் மார்பகத்தில் பூசவேண்டும். நெய் கலந்த கடுகால் மார்பகத்தில் புகைபோட வேண்டும்.

-शुद्धां क्वाथं च पाययेत् ।। २६ ।।

पटोलमुस्तमृद्वीकागुडूचीत्रिफलोद्भवम् ।

(வமனம், விரேசனம் ஆகியவற்றால்) சோதனம் செய்துகொண்ட தாதியைப் பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, திராக்ஷை, சீந்தில், திரிபலை இவற்றின் கஷாயத்தைப் பருகச் செய்யவேண்டும்.

शिशोस्तु लिखितं वर्त्म स्नुतासृग्वाऽम्बुजन्मभिः ।। २७ ।।

धात्र्यश्मन्तकजम्बूत्थपत्रक्वाथेन सेचयेत् ।

குழந்தையின் இமையை (இமையைக்கீறும் முறையில்) *கீறவேண்டும். அல்லது அட்டையால் ரத்தத்தை

வெளியேற்றவேண்டும். நெல்லி, சிறுமுன்னை, நாவல் இவற்றின் இலைக்கஷாயத்தை அவ்விடத்தில் ஊற்ற வேண்டும்.

குறிப்பு: ★இந்துப்பு, ரஸாஞ்ஜனம் இவற்றின் தூளைத் தேன் கலந்து தூவவேண்டும் என்றும் மற்றும் சில விசேஷ சிகித்ஸை முறைகளும் ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளன.

प्रायः क्षीरघृताशित्वाद्बालानां श्लेष्मजा गदाः ॥ २८ ॥

तस्माद्वमनमेवाग्रे सर्वव्याधिषु पूजितम् ।

**பாலர்களுக்கு வாந்தி செய்விப்பதன் அவசியம் :**

பால், நெய் இவற்றையே உண்பதால் பாலர்களுக்கு பெரும்பாலும்* கப நோய்களே உண்டாகின்றன. ஆகையால் எல்லா நோய்களிலும் பாலர்களுக்கு முதலில் வாந்தி செய்விப்பது சிறந்தது.

குறிப்பு: ★பெரும்பாலும் என்பதால் தாய்ப்பால் கேடு அடைவது காரணமாக வாதபித்த நோய்களும் உண்டாகின்றன என்பது குறிப்பிடப்படுகிறது.

सिन्धूत्थकृष्णापामार्गबीजाज्यस्तन्यमाक्षिकम् ॥ २९ ॥

चूर्णो वचायाः सक्षौद्रो मदनं मधुकान्वितम् ।
क्षीरं क्षीरान्नमन्नं च भजतः क्रमतः शिशोः ॥ ३० ॥

वमनं सर्वरोगेषु विशेषेण कुकूणके ।

தனித்த தாய்ப்பால், தாய்ப்பாலும் அன்னமும், தனித்த அன்னம் என்றவாறு உணவு கொள்ளும் மூவகை குழந்தை களுக்கும் முறையே இந்துப்பு, திப்பிலி, நாயுருவி

விதை, நெய், தாய்ப்பால், தேன் ஆகியவற்றையும் தேனுடன் வசம்பு சூர்ணத்தையும், அதிமதுரத்துடன் மருக்காரையையும், வாந்தி செய்விப்பதற்காகக் கொடுக்க வேண்டும். இந்த வாந்திமுறை குழந்தைகளுக்கு எல்லா நோய்களிலும், விசேஷமாக குகூணக நோயிலும் ஏற்றதாகும்.

सप्तलारससिद्धाज्यं योज्यं चोभयशोधनम् ॥ ३१ ॥

*துராய்ச்சாறு சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யை வாந்தி விரேசனம் ஆகிய இருவகை சோதனத்திற்காகவும் உபயோகிக்கலாம்.

குறிப்பு: *सप्तला என்பதற்கு சிகைக்காய் என்றும் பொருள் கூறுவார்.

द्विनिशारोध्रयष्ट्याह्वरोहिणीनिम्बपल्लवैः ।
कुकूणके हिता वर्तिः पिष्टैस्ताम्ररजोन्वितैः ॥ ३२ ॥

क्षीरक्षौद्रघृतोपेतं दग्धं वा लोहजं रजः ।

மஞ்சள், மரமஞ்சள், லோத்தி, அதிமதுரம், பீதரோஹிணீ, வேப்பந்துளிர், இவற்றுடன் தாமிரத்தின் நுண்ணியதூள் கலந்து (நீர் விட்டரைத்து) திரிபோல் மாத்திரை செய்து அஞ்ஜனமிடுவது குகூணக நோயில் ஏற்றதாகும். அல்லது அயத்தின் நுண்ணிய பொடியை பால், தேன், நெய் ஆகியவற்றுடன் சேர்த்து எரித்து எடுத்த சூர்ணத்தை சூர்ணஞ்ஜனமாக (அஞ்ஜனமாக) உபயோகிக்கலாம்.

குறிப்பு: ओलोहजम् எனக் கொண்டு கடல் நுரையை இவ்வாறு உபயோகிக்கும்படி சிலர் கூறுவர்.

அயத்தின் நுண்ணிய பொடியை எரித்து பால், தேன், நெய் இவற்றுடன் கலந்து உபயோகிக்கலாம் என்றும் கூறுவ துண்டு.

एलारसोनकतकशंखोषणफणिज्जकैः ॥ ३३ ॥

वर्तिः कुकूणपोथक्योः सुरापिष्टैः सकट्फलैः ।

ஏலம், உள்ளி, தேற்றான், சங்கு, மிளகு, ராமதுளஸி, சிறுகுமிழ் ஆகியவற்றை சுரை என்னும் மது விட்டரைத்து திரி செய்து குகூணகம், போதகீ இவற்றில் அஞ்சனமிடலாம்.

पक्ष्मरोधे प्रवृद्धेषु शुद्धदेहस्य रोमसु ॥ ३४ ॥

उत्सृज्य द्वौ भ्रुवोऽधस्ताद्भागौ भागं च पक्ष्मतः ।
यवमात्रं यवाकारं त्तिर्यक् छित्वाऽऽर्द्रवाससा ॥ ३५ ॥

अपनेयमसृक् तस्मिन्नल्पीभवति शोणिते ।
सीव्येत्कुटिलया सूच्या मुद्गमात्रान्तरैः पदैः ॥ ३६ ॥

बध्वा ललाटे पट्टं च तत्र सीवनसूत्रकम् ।
नातिगाढश्लथं सूच्या निक्षिपेदथ योजयेत् ॥ ३७ ॥

मधुसर्पिः कवलिकां न चास्मिन् बन्धमाचरेत् ।
न्यग्रोधादिकषायैश्च सक्षीरैः सेचयेद्रुजि ॥ ३८ ॥

**(பக்ஷ்மரோதம்) இமை முள்:**

பக்ஷ்மரோதம் என்னும் இமைமுள் நோயில் இமைமயிர் அதிகம் உண்டாகி மண்டியநிலையில், சோதனம் செய்வித்து, புருவத்திலிருந்து இரண்டுபங்கு தூரத்தையும் இமைமயிரிலிருந்து ஒரு பங்கு தூரத்தையும் தவிர்த்து, யவை அளவுக்கு குறுக்காக (சருமத்தையும் மாம்ஸத்தை யும்) கிழிக்கவேண்டும். நீரில் நனைக்கப்பட்ட துணியால் ரத்தத்தை நீக்கவேண்டும். ரத்தம் பெருகுவது குறைந்த வுடன் பயறளவு இடைவெளிவிட்டு, வளைந்த ஊசியால் தைக்கவேண்டும். நெற்றியில் வஸ்திரத்தை பட்டையாகக்

கட்டி அதில் தையல் நூலை ஊசியுடன் அதிக இறுக்கமோ அதிக தளர்ச்சியோயின்றி (சொருகி) வைக்கவேண்டும். பிறகு தேனும், நெய்யும் சேர்த்த துணித்துண்டை வைக்கவேண்டும். இந்தநோயில் கட்டுப் போடக்கூடாது. வலி ஏற்பட்டால் ந்யக்ரோதாதி கணச்சரக்குகளின் கஷாயத்துடன் பால் சேர்த்து அவ்விடத்தில் ஊற்ற வேண்டும்.

குறிப்பு: *ந்யக்ரோதாதி கணச்சரக்குகள் ஸூத்திர ஸ்தானம் 15-ம் அத்தியாயத்தில் விளக்கப் பட்டுள்ளன.

पंचमे दिवसे सूत्रमपनीयावचूर्णयेत् ।
गैरिकेण व्रणं युंज्यात्तीक्ष्णं नस्यांजनादि च ।। ३९ ।।

ஐந்தாம்நாள் நூலை அகற்றிவிட்டு காவித் தூளை விரணத்தில் தூவவேண்டும். தீக்ஷ்ணத்தன்மையுள்ள பொருள்களால் நசியம், அஞ்ஜனம் முதலியன செய்விக்கவேண்டும்.

குறிப்பு: அஞ்சனம் முதலிய என்பதால் வாய் கொப்பளித்தல் தூமபானம் முதலியன கூறப்படுகிறது.

दहेदशान्तौ निर्भुज्य वर्त्मदोषाश्रयां वलीम् ।
संदंशेनाधिकं पक्ष्म हृत्वा तस्याश्रयं दहेत् ।। ४० ।।

सूच्यग्रेणाग्निवर्णेन,-

இங்கு கூறப்பட்ட சிகித்ஸைகளைச் செய்தும், நோய் நீங்காவிடில் இமையில் தோஷங்கள் தங்கியுள்ள மடிப்பை பிதுக்கி சூடு இடவேண்டும்.

(ஸந்தம்சத்தால்) இடுக்கியால் அதிகப்படியான இமை உரோமங்களை அப்புறப்படுத்திவிட்டு, பழுக்கக் காய்ச்சப்

பட்ட ஊசிநுனியால் இமை உரோமக் கால்களை சுட வேண்டும்.

-दाहो बाह्यालजेः पुनः ।
भिन्नस्य क्षारवह्निभ्यां सुच्छिन्नस्यार्बुदस्य च ॥ ४१ ॥

**அலஜி அற்புதம் ஆகிய நோய்களுக்கு சிகித்சை:**

(விருத்தி பத்ர சஸ்திரத்தால்) பிளக்கப்பட்ட வெளிப்புற அலஜியில் க்ஷாரம் அல்லது தீயால் சூடு இட வேண்டும். அற்புத நோயில் (அடிப்பகுதி வரை) கிழித்த பின் க்ஷாரம் அல்லது தீயால் சூடு இட வேண்டும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तर स्थाने वर्त्मरोगप्रतिषेधो नाम नवमोऽध्यायः ॥९ ॥

*உத்தரஸ்தானம் — ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.*

★★★★★

# ॥ उत्तरस्थाने - உத்தரஸ்தானம் ॥

## [ दशमोऽध्यायः - அத்தியாயம் - 10 ]

अथातः सन्धिसितासितरोगविज्ञानीयं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து (கண்ணின்) ஸந்திகள், வெண்பகுதி, கரும்பகுதி ஆகியவற்றில் உண்டாகும் நோய்களின் விளக்கம் என்னும் அத்தியாயத்தை விவரிக்கிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

वायुः क्रुद्धः सिराः प्राप्य जलाभं जलवाहिनीः ।
अश्रु स्रावयते वर्त्मशुक्लसन्धेः कनीनकात् ॥ १ ॥

तेन नेत्रं सरुग्रागशोफं स्यात्स जलास्रवः ।

## சந்திப் பகுதியின் நோய்கள் :

### ஜலக் கசிவு :

வாயுவானது கோபமடைந்து கண்ணீரைத் தாங்கிச் செல்லும் ஸிரைகளை அடைந்து இமை வெண்பகுதி இவற்றின் சந்தியிலிருந்து நீர் போன்ற கண்ணீரை நாசியை ஒட்டிய பகுதி வழியாகப் பெருக்குகிறது. இதன் காரணமாக [1]கண்ணில் வலி உண்டாகும். செந்நிறம் வீக்கம் ஆகியவை காணப்படும். இந்த நோய் ஜலக் கசிவு எனப்படும்.

குறிப்பு: ★ சுச்ருதத்தில் சீழ்க் கசிவு, கபக் கசிவு, ரத்தக் கசிவு, பித்தக் கசிவு என நான்கு வகையாக கசிவு நோய் பிரித்து விளக்கப்படுகிறது. கண் கசிவு நோய் நேத்ரநாடீ என்றும், சுச்ருதத்தில் பெயரிடப் பட்டிருக்கிறது. ஜலாஸ்ராவம் என்னும் இந்த நோய் ஸுச்ருதத்தில் குறிப்பிடப்படவில்லை. வாயுவால் ஆஸ்ராவ நோய் ஏற்படுவதில்லை என டல்ஹணர் உறையில் கூறுகிறார். ஆனால் தனித்த பித்தாஸ்ராவம் இடம் பெறுகிறது. அஷ்டாங்க ஹிருதயத்தில் பித்தாஸ்ராவம் இடம் பெறவில்லை. வாயுவாலேற்படும் ஜலக்கசிவு நோயை அடுத்து கபக்கசிவு கூறப்படுகிறது. வாயுவை அடுத்து பித்தத்தைக் கூறாமல், கபக்கசிவு விளக்குவதற்கு காரணம் பித்தக்கசிவு நோய் தனித்து இல்லாமையே என்று கைரளியில் கூறப்படுகிறது.

1. வலி காணப்படாது என சுச்ருதத்திலும், வலி, செந்நிறம், வீக்கம் ஆகியவை காணப்படா என சங்க்ரஹத்திலும், சிறிதே வலி முதலியன உண்டு என கைரளியிலும் கூறப்பட்டுள்ளது.

कफात् कफास्रवे श्वेतं पिच्छिलं बहुलं स्रवेत् ॥ २ ॥

**கபக் கசிவு :**

கபக் கசிவு நோயில் கபம் காரணமாக வெண்ணிறமாகவும், பிசுபிசுப்புடனும், தடிப்புடனும் கண்ணீர் பெருகும்.

குறிப்பு: ⋆வலி காணப்படாது என டல்ஹணர் கூறுகிறார்.

कफेन शोफस्तीक्ष्णाग्रः क्षारबुद्बुदकोपमः ।
पृथुमूलबलः स्निग्धः सवर्ण मृदुपिच्छिलः ॥ ३ ॥

महानपाकः कण्डूमानुपनाहः स नीरुजः ।

**(உபநாஹம்) கண் வீக்கம் :**

கபங்காரணமாக நுனியில் கூர்மை உடையதாகவும் க்ஷாரம் பக்குவம் செய்யும் பொழுது உண்டாகும் கொப்புளம் போன்றதாகவும் விஸ்தாரமான அடிப்படை உடையதாகவும், [1]அதிக பலமுள்ளதாகவும், நெய்ப்பு உள்ளதாகவும், நிறத்தில் மாறுபாடின்றியும், மென்மை, பிசுபிசுப்பு ஆகியவை கொண்டதாகவும், பழுத்ததாகவும், [2]பழுத்தலின்றியும், அரிப்புடனும், வலியின்றியும் கண்ணில் [3]வீக்கம் காணப்படும். இது உபநாஹம் எனப்படும்.

குறிப்பு:1. चलः அசையும் தன்மை கொண்டதென்றும் பாடம் உண்டு.

2. சிறிதே பாகமுள்ளது என்று டல்ஹணர் கூறு கிறார்.

3. இந்த வீக்கம் நாசியை ஒட்டிய கண் பகுதியில் உண்டாகும் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

रक्ताद् रक्तास्रवे ताम्रं बहूष्णं चाश्रु सस्रवेत् ।। ४ ।।

**(ரத்தஸ்ராவம்) ரத்தக் கசிவு :**

கண்ணீரானது சிவந்தும், அதிகமாகவும், உஷ்ணமாகவும் பெருகும். ரத்தம் காரணமாக உண்டாகும் இந்நோய் ரத்தஸ்ராவம் எனப்படும்.

குறிப்பு: *அதிகத் தடிப்பின்றி கண்ணீர் பெருகும் என சுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

वर्त्मसन्ध्याश्रया शुक्ले पिटिका दाहशूलिनी ।
ताम्रा मुद्गोपमा भिन्ना रक्तं स्रवति पर्वणी ।। ५ ।।

**பர்வணீ :**

இமை சந்திகளை சார்ந்து வெண்படலத்தில் எரிச்சலையும், குலையையும் உண்டாக்குவதும் செந்நிற மானதும் பயறு போன்ற அளவுள்ளதுமான கட்டி உண்டா கும். இது பர்வணீ எனப்படும். உடைந்தால் ரத்தம் பெருகும்.

குறிப்பு: *கரும்பகுதி, வெண்பகுதி இவற்றின் ஸந்தியில் தோன்றுவதாக டல்ஹணர் கூறுகிறார்.

पूयास्रावे मलाः सास्रा वर्त्मसन्धेः कनीनकात्।
स्रावयन्ति मुहुः पूयं सास्रं त्वङ्मांसपाकतः ॥ ६ ॥

### (பூயாஸ்ராவம்) சீழ்க்கசிவு :

(பூயாஸ்ராவம்) சீழ்க்கசிவு என்னும் நோயில் ரத்தத்துடன் கூடிய வாயு முதலிய தோஷங்கள் சருமமும் மாம்ஸமும் பாகமடைவது காரணமாக இமைச் சந்தியிலிருந்தும் நாசியை ஒட்டிய கண் பகுதி வழியாக ரத்தத்துடன் சீழை அடிக்கடி கசியும்படிச் செய்கின்றன.

पूयालसो व्रणः सूक्ष्मः शोफसम्रम्भपूर्वकः।
कनीनसन्धावाध्मायी पूयास्रावी सवेदनः ॥ ७ ॥

### பூயாலஸ விரணம் :

நாசியை ஒட்டிய கண்பகுதியில் முதலில் வீக்கமும், கிளர்ச்சியும் தோன்றும். அடுத்து உப்புசம், சீழ் ஒழுகுதல், வேதனை ஆகியவற்றுடன் நுண்ணிய விரணம் உண்டாகும். இந்நோய் பூயாலஸ விரணம் எனப்படும்.

குறிப்பு: *இந்நோய் சன்னிபாதத்தால் உண்டாவது என டல்ஹணர் கூறுகிறார்.

कनीनस्यान्तरलजी शोफो रुक्तोददाहवान्।

### அலஜி :

நாசியை ஒட்டிய கண் பகுதியின் உட்புறமாக வலி, குத்துவலி, எரிச்சல் ஆகியவற்றுடன் வீக்கம் உண்டாகும். இது அலஜி எனப்படும்.

अपाङ्गे वा कनीने वा कण्डूषापक्ष्मपोटवान् ॥ ८ ॥

पूयास्रावी कृमिग्रन्थिर्ग्रन्थि कृमियुतोऽर्तिमान्।

**கிருமி க்ரந்தி :**

கடைக்கண் அல்லது நாசியை ஒட்டிய கண் பகுதியில் அரிப்பு, காந்தல், இமை மயிர் பிளத்தல் ஆகியவற்றுடனும், கிருமியுடனும், வலியுடனும், சீழ்க் கசிவுடனும் முடிச்சு காணப்படும். இது கிருமிக்ரந்தி எனப்படும்.

குறிப்பு: 1. பூயாலஸம், அலஜி, கிருமிக்ரந்தி ஆகியவையும் பூயாஸ்ராவம் போலவே ரத்தத்துடன் கூடிய மூன்று தோஷங்களால் உண்டாவதென கைரளியில் கூறப் பட்டுள்ளது.

2. வலியும் காந்தலும், இமைமயிர் பிளத்தலும் சுச்சிருதத்தில் குறிப்பிடப்படவில்லை. இந்த நோய் கபத்தாலுண்டாவதாக டல்ஹணர் கூறுகிறார்.

उपनाहकृमिग्रन्थिपूयालसकपर्वणीः ॥ ९ ॥

शस्त्रेण साधयेत्पंच सालजीनास्रवांस्त्यजेत् ।

**சாத்யம் - அசாத்யம் :**

இவற்றுள் உபநாஹம், கிருமி கிரந்தி, பூயாலஸகம், பர்வணீ ஆகியவற்றிற்கு சஸ்திரப் பிரயோகத்தால் சிகித்ஸை செய்ய வேண்டும். அலஜி நோயையும், (நான்கு வகையான) ஆஸ்ராவங்களையும்* என ஐந்து நோய் களையும் சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது.

குறிப்பு: *ஜலாஸ்ராவம், கபாஸ்ராவம், ரத்தாஸ்ராவம், பூயாஸ்ராவம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

पित्तं कुर्यात्सिते बिन्दूनसितश्यावपीतकान् ॥ १० ॥

मलाक्तादर्शतुल्यं वा सर्वं शुक्लं सदाहरुक् ।

रोगोऽयं शुक्तिकासंज्ञः सशकृद्भेदतृड्ज्वरः ॥ ११ ॥

## வெண்படல நோய்கள் :

**சுக்திகா :**

பித்தமானது வெண்பகுதியில் கருமை, இளங்கருமை, மஞ்சள் ஆகிய நிறமுள்ள புள்ளிகளை உண்டாக்கும் அல்லது வெண்பகுதி முழுவதும் அழுக்கடைந்த கண்ணாடி போல் காணப்படும். [1]எரிச்சல், வலி, பேதி, விடாய், ஜ்வரம் ஆகியவை காணப்படும். இந்நோய் சுக்திகா எனப்படும்.

**குறிப்பு:** ⋆अदाहरुक् என்ற பாடத்தில் எரிச்சலும், வலியும் இரா என்று பொருள்.

कफाच्छुक्ले समं श्वेतं चिरवृध्द्यधिमांसकम् ।
शुक्लार्म-

**சுக்லார்ம :**

கபங்காரணமாக வெண்பகுதியில் மேடுபள்ளமற்றதாகவும், வெண்மையாகவும், தாமதித்த வளர்ச்சியுடனும், மாம்ஸம் அதிகரிக்கும். இந்த நோய் சுக்லார்ம எனப்படும்.

**குறிப்பு:** ⋆வெண்படலத்தில் உண்டாகும் மாம்ஸ வளர்ச்சி அர்ம எனப்படும்.

-शोफस्त्वरुजः सवर्णो बहलोमृदुः ॥ १२ ॥

गुरुः स्निग्धोऽम्बुबिन्द्वाभो बलासग्रथितं स्मृतम् ।

**பலாஸக்ரதிதம் :**

(வெண்மண்டலத்தில்) வலியின்றியும், நிறமாற்றமின்றியும், நெருங்கியதும், கடினமானதும், பாரமானதும்,

நெய்ப்புள்ளதும், நீர்த்துளி போன்றும் வீக்கம் காணப்படும். இந்த நோய் பலாஸக்ரதிதம் (கபமுடிச்சு) எனப்படும்.

बिन्दुभिः पिष्टधवलैरुत्सन्नैः पिष्टकं वदेत् ॥ १३ ॥

**பிஷ்டகம் :**

(வெண்படலத்தில்) மாவு போன்று வெண்மையானவையும், எழும்பியவையுமான புள்ளிகள் ஏற்படும். இது பிஷ்டகம் எனப்படும்.

रक्तराजीततं शुक्लमुष्यते यत्सवेदनम् ।
अशोफाश्रूपदेहं च सिरोत्पातः स शोणितात् ॥ १४ ॥

**ஸிரோத்பாதம் :**

ரத்தம் கோபமடைந்தது காரணமாக வெண்படலத்தில் செந்நிறமான கோடுகள் பரவியிருத்தல், எரிச்சல், வேதனை ஆகியவை ஏற்படும். [1]வீக்கம், கண்ணீர் பெருகுதல், பூசியது போன்ற உணர்ச்சி ஆகியவை ஏற்படா. இந்நோய் ஸிரோத்பாதம் எனப்படும்.

குறிப்பு: *सशोफाश्रूपदेहं வீக்கம் முதலியன காணப்படும் எனவும் ஒரு பாடம் உண்டு.

उपेक्षितः सिरोत्पातो राजीस्ता एव वर्धयन् ।
कुर्यात्सास्रं सिराहर्षं तेनाक्ष्युद्वीक्षणाक्षमम् ॥ १५ ॥

**ஸிராஹர்ஷம் :**

ஸிரோத்பாத நோய்க்கு தக்க சிகித்ஸை அளிக்கப்படாவிடில் அந்தக் கோடுகள் வளர்ச்சி அடைந்து கண்ணீரைப் பெருக்குவதுடன் (ஸிராஹர்ஷ) ஸிரைக் கூச்ச நோயை உண்டாக்கும். அதனால் கண் பார்க்கும் தன்மையை இழக்கும்.

सिराजाले सिराजालं बृहद्रक्तं घनोन्नतम्।

*ஸிராஜாலம் :*

பெரியதாகவும், செந்நிறமாகவும், பாரமாகவும், உயர்ந்தும் ஸிரைகளின் பின்னல் காணப்படின் அந்த நோய் ஸிராஜாலம் எனப்படும்.

குறிப்பு: ★ஸிரைக்கூச்ச நோய்க்கு சிகித்ஸை அளிக்காததால் இந்த நோய் உண்டாகிறதென கைரளியில் கூறப்பட்டுள்ளது.

शोणितार्मसमं श्लक्ष्णं पद्माभमधिमांसकम् ॥ १६ ॥

*சோணிதார்ம :*

மேடு பள்ளமின்றியும், வழவழப்பாகவும், தாமரைப்பூ நிறமாகவும், எழும்பியதாகவும், மாம்ஸம் வளர்ச்சியடையும். இந்த நோய் சோணிதார்ம எனப்படும்.

குறிப்பு: ★ஸிராஜால நோய்க்கு தக்க சிகித்ஸை அளிக்காததன் காரணமாக இந்த நோய் உண்டாகிறது என்றும், இந்த நோய் வெண்பகுதி முழுவதும் பரவி இருக்கும் என்றும் கைரளியில் விளக்கப்பட்டுள்ளது.

नीरुक् श्लक्ष्णोऽर्जुनं बिन्दुः शशलोहितलोहितः।

*அர்ஜுனம் :*

வலியின்றியும், வழவழப்பாகவும், முயல் ரத்தம் போன்று சிவந்தும் புள்ளி காணப்படும். இது அர்ஜுனம் எனப்படும்.

मृद्वाशुवृद्ध्यरुङ्मांसं प्रस्तारि श्यावलोहितम् ॥ १७ ॥

प्रस्तार्यर्म मलैः सास्रैः-

*பிரஸ்தார்யார்ம :*

ரத்தத்துடன் கலந்த வாயு முதலிய தோஷங்கள் காரணமாக மாம்ஸமானது மென்மை, விரைவில் வளர்ச்சி, வலியின்மை, இளங்கறுமை, செம்மை ஆகிய குணம் உள்ளதாகவும், பரவுந்தன்மை உள்ளதாகவும் காணப்படும். இது பிரஸ்தார்யார்ம எனப் பொருள்.

குறிப்பு: *(प्रस्तारि) ''ப்ரஸ்தாரி'' என்பதற்குப் பரவும் தன்மையுள்ளது எனப்பொருள்.

-स्नावार्म स्नावसन्निभम्

*ஸ்நாவார்ம :*

இதுவே நரம்புகள் போல் காணப்படின் ஸ்நாவார்ம எனப்படும்.

शुष्कासृक्पिण्डवच्छ्यावं यन्मांसं बहलं पृथु ॥ १८ ॥

अधिमांसार्म तद्-

*அதிமாம்ஸார்ம :*

உறைந்து போன ரத்தக்கட்டி போன்று இளங்கறுப்பு நிறத்துடனும் தடிப்புடனும், பருத்தும் மாம்ஸம் காணப்படும். இது அதிமாம்ஸார்ம எனப்படும்.

-दाहधर्षवत्यः सिरावृताः ।
कृष्णासन्नाः सिरासंज्ञाः पिटिकाः सर्षपोपमाः ॥ १९ ॥

*ஸிரைக் கட்டிகள் :*

எரிச்சல், உறுத்தல் ஆகியவற்றுடன் கூடியவையும், ஸிரைகளால் சூழப்பட்டவையும், கருவிழி மண்டலத்தை

அடுத்து (வெண்மண்டலத்தில்) உண்டானவையும், கடுகு போன்ற அமைப்பு உள்ளவையுமான சிறு கட்டிகள் ஸிரைக்கட்டிகள் எனப்படும்.

शुक्तिहर्ष सिरोत्पातपिष्टकग्रथितार्जुनम् ।
साधयेदौषधैः षट्कं शेषं शस्त्रेण सप्तकम् ॥ २० ॥

नवोत्थं तदपि द्रव्यैः-

**சாத்யம் :**

சுக்திகா, ஸிராஹர்ஷம், ஸிரோத்பாதம், பிஷ்டகம், கிரந்தி, அர்ஜுனம் ஆகிய ஆறு நோய்களையும் [1]மருந்துகளால் குணமாக்க வேண்டும். மற்ற [2]எழுவகை நோய்களையும் சஸ்திரப்பிரயோகத்தால் குணமாக்கவேண்டும். இந்த எழுவகையான நோய்களையும் தோன்றிய புதிதில் மருந்துப் பொருள்களால் குணமாக்கலாம்.

**குறிப்பு:** 1. மருந்துகள் பின்னர் கூறப்படவிருக்கின்றன.

2. சுக்லார்ம, ஸிராஜாலம், சோணிதார்ம, பிரஸ்தார்யர்ம, ஸ்நாவார்ம, அதிமாம்ஸார்ம, ஸிரா பிடகை.

-अर्मोक्तं यच्च पंचधा ।
तच्छेद्यमसितप्राप्तं मांसस्रावसिरावृतम् ॥ २१ ॥

चर्मोद्दालवदुच्छ्रायि दृष्टिप्राप्तं च वर्जयेत् ।

**அர்ம சிகித்ஸை விதி :**

ஐந்து வகையான அர்மாக்களும் வெட்டப்படவேண்டும்.

### சிகித்ஸைக்குத் தகாதவை :

மாம்ஸம், நரம்பு, ஸிரைகள் ஆகியவற்றால் சூழப்பட்டதும் கரும்பகுதியை* (விழிப்பகுதியை) அடைந்ததும் காட்டுக்கொள் போன்று எழும்பியுமிருந்தால் சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது.

குறிப்பு: *கரும்பகுதியில் பரவிய நிலையிலும் இது சாத்யமாகும் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

पित्तं कृष्णेऽथवा दृष्टौ शुक्रं तोदाश्रुरागवत् ॥ २२ ॥

छित्वा त्वचं जनयति तेन स्यात्कृष्णमण्डलम् ।
पक्वजम्बूनिभं किंचिन्निम्नं च क्षतशुक्रकम् ॥ २३ ॥
तत्कृच्छ्रसाध्य-

## கரும் படல நோய்கள் :

### க்ஷதசுக்ரம் :

பித்தமானது, கரும்படலத்தில் அல்லது விழியில் முதல் படலத்தை பிளந்து குத்துவலி, கண்ணீர் பெருக்கு, செந்நிறம் ஆகியவற்றுடன் சுக்ரநோயை* தோற்றுவிக்கும். இது காரணமாக கரும்படலம், பழுந்த நாவற்பழம் போன்றும் சிறிது குழிவிழுந்தும் காணப்படும். இந்நோய் க்ஷதசுக்ரம் எனப்படும். மிக்க சிரமத்துடன் சிகித்ஸை செய்தால் நோய் நீங்கும்.

குறிப்பு: *வெண்ணிறமான மாம்ஸம் வளர்ச்சி பெருகுதல் சுக்ரம் எனப்படும்.

இந்நோய் ரத்தம் காரணமாக உண்டாவதென்றும் அசாத்யம் என்றும் உத்.அ. 5-ல் சு. 4-ல் டல்ஹணர் கூறுகிறார்.

-याप्यं तु द्वितीयपटलव्यधात्।
तत्र तोदादिबाहुल्यं सूचीविद्धाभकृष्णता ॥ २४ ॥

சுக்ர நோய் காரணமாக இரண்டாவது படலம் பிளவுபடின் அந்த நிலையில் குத்துவலி முதலியன அதிகரித்துக் காணப்படும். ஊசியால் குத்தப்பட்டது போன்று கருமை காணப்படும். பத்திய முறைகளால் காலந்தள்ள மாத்ரமே ஏற்றது.

तृतीयपटलच्छेदादसाध्यं निचितं व्रणैः।

சுக்ர நோய் காரணமாக மூன்றாவது படலம் பிளவுபடின் அது சிகித்ஸைக்கு அசாத்யமாகும். விரணங்கள் அதிகம் காணப்படும்.

शंखशुक्लं कफात्साध्यं नातिरुक् शुद्धशुक्रकम् ॥ २५ ॥

***சுத்த சுக்ரம் :***

கபம் காரணமாக உண்டானதும், சங்கு போன்று வெண்ணிறமுள்ளதும், அதிக வலியற்றதுமான இது சுக்ர நோய் சுத்த சுக்ரம் எனப்படும். இது ஸாத்யமாகும்.

आताम्रपिच्छिलास्रसृदाताम्रपिटिकाऽतिरुक्।
अजाविट्सदृशोच्छ्रायकार्ष्ण्या वर्ज्याऽसृजाऽजका ॥ २६ ॥

***அஜகா :***

ரத்தங்காரணமாக உண்டானதும், சிறிது செந்நிறம் பிசுபிசுப்பு ஆகியவற்றுடன் கூடிய கண்ணீர்ப்பெருக்கை உடையதும், அதிக வலியுள்ளதும், ஆட்டுமலம் போன்ற எழும்பி கருநிறமுள்ளதுமான சிறிது சிவந்த கட்டி அஜகா எனப்படும். இது அசாத்யமாகும்.

सिराशुक्रं मलैः सास्रैस्तज्जुष्टं कृष्णमण्डलम्।
सतोददाहताम्राभिः सिराभिरवतन्यते ॥ २७॥

अनिमित्तोष्णशीताच्छघनास्रस्रुक्च तत्त्यजेत्।

**ஸிரா சுக்ரம் :**

ரத்தத்துடன் கூடிய தோஷங்கள் காரணமாக கரும்பகுதி, குத்துவலி, எரிச்சல், செந்நிறம் இவற்றுடன் கூஷய ஸிரைகளால் பரவப்பெற்றிருக்கும். காரணமின்றி உஷ்ணம் (அல்லது) குளிர்ச்சி, தெளிவு (அல்லது) தடிப்பு ஆகிய குணமுள்ள கண்ணீரைப் பெருக்கும். ஸிரா சுக்ர மெனப்படும். இந்த நோய் அஸாத்யமாகும்.

दोषैः सास्रैः सकृत्कृष्णं नीयते शुक्ररूपताम् ॥ २८॥

धवलाभ्रोमलिप्ताभं निष्पावार्धदलाकृति।
अतितीव्ररुजारागदाहश्वयथुपीडितम् ॥ २९॥

पाकात्ययेन तच्छुक्रं वर्जयेत्तीव्रवेदनम्।

**(பாகாத்யயம்) பழுத்துக் காலங்கடந்தது :**

ரத்தத்துடன் கூடிய தோஷங்கள் காரணமாக கரும் படலம் முழுவதும் வெண்ணிறமான மேகங்களால் பூசப் பட்டது [1]போன்று ஒரே வெண்ணிறமாகும். அவரையின் அரைப் பருப்பு உருவங்கொண்டிருக்கும். மிகத் தீவிரமான வலியாலும், செந்நிறத்தாலும், எரிச்சலாலும், வீக்கத்தாலும் பீடிக்கப்படும். மிகப் பழுத்துக் காலங்கடந்தது காரணமாக தீவிரவேதனை உள்ள நிலையில் அஸாத்யமாகும்.

**குறிப்பு:** ⋆ सदृक् என்ற பாடத்தில் விழிப் பகுதியை உள்ளிட்ட (கரும்பகுதி) எனப் பொருள்.

यस्य वा लिंगनाशोऽन्तः श्यावं यद्वा सलोहितम् ॥ ३० ॥

अत्युत्सेधावगाढं वा साश्रु नाडीवृणावृतम् ।
पुराणं विपमं मध्ये विच्छिन्नं यच्च शुक्रकम् ॥ ३१ ॥

பார்வை அழிவுறுதல் அல்லது உட்புறம் கறுத்தாவது, சிறிது சிவந்தாவது இருத்தல், மிகவும் எழும்பி அல்லது ஆழமாக இருத்தல், கண்ணீருடன் இருத்தல், புரை விரணத்தால் சூழப்பெற்றிருத்தல், நாட்கடந்து இருத்தல், மேடுபள்ளமாக அமைந்திருத்தல், மத்தியில் தொடர்பின்றி இருத்தல், இந்நிலைகளில் உள்ள சுக்ர நோய் அஸாத்ய மாகும்.

पञ्चेत्युक्ता गदाः कृष्णे साध्यासाध्यविभागतः ॥ ३२ ॥

கரும்படலத்தில் தோன்றும் ஐந்து வித நோய்கள் இவ்வாறு சாத்ய அசாத்யப் பிரிவுகளுடன் விளக்கப்பட்டன.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने सन्धिसितासितरोगविज्ञानीयो नामदशमोऽध्यायः ॥ १० ॥

உத்தரஸ்தானம் – பத்தாவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ एकादशोऽध्यायः - அத்தியாயம் -11 ]

अथातः सन्धिसितासितरोगप्रतिषेधं व्याख्यास्यामः।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः॥

அடுத்து ஸந்திகள், வெண்படலம், கரும்படலம் ஆகியவற்றில் உண்டாகும் நோய்களின் சிகித்ஸை என்னும் அத்தியாயத்தை விளக்குவோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மஹரிஷிகள் கூறியுள்ளனர்.

उपनाहं भिषक् स्विन्नं भिन्नं व्रीहिमुखेन च।
लेखयेन्मण्डलाग्रेण ततश्च प्रतिसारयेत्॥ १॥

पिप्पलीक्षौद्रसिन्धूत्थैर्बध्नीयात्पूर्ववत्ततः।
पटोलपत्रामलकक्काथेनाश्च्योतयेच्च तम्॥ २॥

**(உபநாஹ) கண் வீக்கத்திற்குச் சிகித்ஸை :**

வைத்தியர் (உபநாஹ) கண் வீக்க நோயில் வியர்வை [1]உண்டாக்கிய பிறகு, வ்ரீஹி முகசஸ்திரத்தால் பிளந்து மண்டலாக்ர சஸ்திரத்தால் சுறண்ட வேண்டும். பிறகு திப்பிலி, தேன், இந்துப்பு ஆகியவற்றைக் கண்ணில் இட வேண்டும். [2]முற்கூறியவாறு கட்ட வேண்டும். புடல் இலை, நெல்லி இவற்றின் கஷாயத்தைக் கண்ணில் இடவேண்டும்.

குறிப்பு:1. இமை நோய் சிகித்ஸையில் கூறியவாறு, வெந்நீரில் நனைக்கப்பட்ட துணித் துண்டால், வியர்வை உண்டாக்க வேண்டும் எனக் கைரளியில் கூறப்பட்டுள்ளது. கடுமையான வியர்வை

உண்டாக்குதல் தவிர்க்கப்பட வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

2. உத்தரஸ்தானம் அத்தியாயம் 9 சுலோகம் 7-8ல் கூறப்பட்டவாறு சுத்தம் செய்து கட்ட வேண்டும். அசாத்ய தன்மை காரணமாக ஜலாஸ்ராவம், கபாஸ் ராவம், ரத்தாஸ்ராவம் ஆகியவற்றிற்குச் சிகித்ஸை விளக்கப்படவில்லை.

पर्वणी बडिशेनात्ता वाह्यसन्धित्रिभागतः ।
वृद्धिपत्रेण वध्याऽर्धे स्यादश्रुस्रुतिरन्यथा ॥ ३ ॥

चिकित्या चार्मवत्क्षांद्रसैन्धवप्रतिसारिता ।

**பர்வணீ சிகித்ஸை :**

பர்வணீ நோயில் வெளிப்புற ஸந்தியில் இருந்து மூன்றில் ஒரு பாகத்தில் படிச யந்திரத்தால் பிடித்துக் கொண்டு, மத்தியப் பகுதியில் விருத்தி பத்திர சஸ்திரத்தால் வெட்ட வேண்டும். மாறாகக் கீறப்படின் கண்ணீர் பெருகும். தேன், இந்துப்பு இவற்றைத் தூவி அர்ம *நோயில் நோய்க்குக் கூறப்பட இருக்கும் சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

குறிப்பு: *அர்ம நோய்க்குச் சிகித்ஸை அடுத்து 20-வது சுலோகத்தில் கூறப்பட இருக்கிறது. असृक्स्रुति என்ற பாடத்தில் ரத்தம் கசியும் என்பது பொருள். அசாத்யத் தன்மை காரணமாக பூயாஸ்ராவத்திற்குச் சிகித்ஸை கூறப்படவில்லை. (கைரளி)

पूयालसे सिरां विध्येत्ततस्तमुपनाहयेत् ॥ ४ ॥

कुर्वीत चाक्षिपाकोक्तं सर्वं कर्म यथाविधि ।

## பூயாலஸ சிகித்ஸை :

பூயாலஸ நோயில் [1]ஸிரையைக் குத்த வேண்டும். பிறகு கட்டுபோடவேண்டும். அக்ஷிபாக விதியில் கூறப்பட இருக்கிற சிகித்ஸையும் ஏற்றவாறு செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. தலையிலும், கண்ணிலும் உண்டாகும் நோய் விஷயத்தில் நெற்றியில் உள்ள ஸிரையைக் குத்த வேண்டுமென ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 27-ம் ஸ்லோகம் 9-ல் கூறப்பட்டதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

2. அக்ஷிபாக விதி உத்தரஸ்தானம் அத்தியாயம் -16 சுலோகம் 28-ல் கூறப்பட இருக்கிறது.

सैन्धवार्द्रककासीसलोहताम्रैः सुचूर्णितैः ॥ ५ ॥

चूर्णांजनं प्रयुंजीत सक्षौद्रैर्वा रसक्रियाम् ।

இந்துப்பு, இஞ்சி, அன்னபேதி, அயம், தாம்ரம் இவற்றைச் சூரணித்து சூர்ணாஞ்ஜனமாகப் பிரயோகிக்க வேண்டும். தேன் சேர்த்து [1]ரஸக்கிரியையாகவும் பிரயோகிக் கலாம்.

குறிப்பு: 1. தடிப்புள்ளத் திரவமாகச் செய்து கொள்வது இங்கு ரஸக்ரியை எனக் குறிக்கப்படுகிறது. அசாத்ய தன்மை காரணமாக அலஜி நோய்க்குச் சிகித்ஸை கூறப்படவில்லை.

कृमिग्रन्थिं करीषेण स्विन्नं भित्त्वा विलिख्य च ॥ ६ ॥

त्रिफलाक्षौद्रकासीससैन्धवैः प्रतिसारयेत् ।

## (கிருமிக்ரந்தி) கிருமி முடிச்சு நோய் :

கிருமி முடிச்சு நோயில் சாணத்தூள் முடிச்சால் வியர்வை உண்டாக்கிய பின்னர் பிளந்து, சுறண்டி, திரிபலை, தேன், அன்னபேதி, *இந்துப்பு இவற்றைக் கண்ணில் இட வேண்டும்.

குறிப்பு: *சுச்ருதத்தில் இவற்றுடன் துத்தமும் குறிப்பிடப்படுகிறது. व्रीही मुखं முதலியவற்றால் பிளக்க வேண்டும் எனவும், மண்டலாக்ரத்தால் சுறண்ட வேண்டும் எனவும் கைரளியில் கூறப்பட்டுள்ளது.

पित्ताभिष्यन्दवच्छुक्तिं-

## சுக்தி நோய் சிகித்ஸை :

*பித்தாபிஷ்யந்தத்திற்குக் கூறப்படவிருக்கும் சிகித்ஸையை சுக்தி நோய்க்குச் செய்ய வேண்டும்.

குறிப்பு: *பித்தாபிஷ்யந்த சிகித்ஸை உத்தரஸ்தானம் 16-ல் கூறப்பட இருக்கிறது.

-बलासाह्वयपिष्टके ॥ ७ ॥

कफाभिष्यन्दवन्मुक्त्वा सिराव्यधमुपाचरेत्।
बीजपूररसाक्तं च व्योषकट्फलमंजनम् ॥ ८ ॥

பலாஸக்ரதிதம், பிஷ்டகம் ஆகிய நோய்களில் கபாபிஷ்யந்த நோய்க்குக் கூறவிருக்கும் சிகித்ஸைகளைச் (ஸிரையைக் குத்துதல் நீங்கலாக) செய்ய வேண்டும். துருஞ்சிச் சாற்றில் ஊறவைக்கப்பட்ட த்ரிகடு, சிறு குமிழ் இவற்றால் அஞ்ஜனமும் இடலாம்.

जातीमुकुलसिन्धूत्थदेवदारुमहौषधैः ।
पिष्टैः प्रसन्नया वर्तिः शोफकण्डूघ्नमंजनम् ।। ९ ।।

ஜாதிமொட்டு, இந்துப்பு, தேவதாரு, சுக்கு இவற்றைப் பிரஸன்னை என்னும் மது வகையால் அரைத்து திரி செய்து அஞ்ஜனம் இட வீக்கமும், அரிப்பும் நீங்கும்.

रक्तस्यन्दवदुत्पातहर्षजालार्जुनक्रिया ।

ஸிரோத்பாதம், ஸிராஹர்ஷம், ஸிராஜாலம், அர்ஜுனம் ஆகியவற்றில் ரத்தாபிஷ்யந்த சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

குறிப்பு: ★ரத்தாபிஷ்யந்த சிகித்ஸை உத்தரஸ்தானம் அத்தியாயம் 16-ல் கூறப்பட இருக்கிறது.

सिरोत्पाते विशेषेण घृतमाक्षिकमंजनम् ।। १० ।।

முக்கியமாக ஸிரோத்பாத நோயில் நெய்யும், தேனும் கலந்து அஞ்ஜனமிட வேண்டும்.

குறிப்பு: அஞ்ஜனம் என்ற மூலச் சொல் ரசாஞ்ஜனத்தைக் குறிப்பிடுவதாக டல்ஹணர் கூறுகிறார்.

सिराहर्षे तु मधुना श्लक्ष्णपिष्टं रसांजनम् ।

நன்கு பொடிக்கப்பட்ட ரசாஞ்ஜனத்தைத் தேனில் கலந்து (ஸிராஹர்ஷ) ஸிரைக்கூச்ச நோயில் அஞ்ஜனமிட வேண்டும்.

अर्जुनंशर्करामस्तुक्षौद्रैराश्च्योतनं हितम् ।। ११ ।।

स्फटिकः कुंकुमं शंखो मधुकं मधुनाऽञ्जनम् ।
मधुना चांजनं शंखः फेनो वा सितया सहा ।। १२ ।।

அர்ஜுன நோயில் சர்க்கரை, தயிர்த்தெளிவு, தேன் இவற்றைக் கண்களில் இட வேண்டும். ஸ்படிகம், குங்குமம், சங்கு, அதிமதுரம் இவற்றைப் பொடித்துத் தேனுடன் கலந்து அஞ்ஜனம் இடவேண்டும். *ஸௌவீராஞ்ஜனத்தைத் தேனுடன் கலந்து அஞ்ஜனமிட வேண்டும். சங்கு அல்லது கடல் நுரையைச் சர்க்கரையுடன் கலந்து அஞ்ஜனமிட வேண்டும்.

**குறிப்பு:** *சங்க நாபியைத் தேனில் குழைத்து அஞ்ஜனமிட வேண்டும் என இந்து உரை கூறுகிறார்.

अर्मोक्तं पंचधा तत्र तनु धूमाविलं च यत्।
रक्तं दधिनिभं यच्च शुक्लवत्तस्य भेषजम्॥ १३॥

ஐந்து வகை அர்ம நோய்களுக்கும், மெல்லியது, புகை போன்று கலங்கியது, சிவந்தது, [1]தயிர் போன்றது ஆகிய நிலைகளில் சுக்ர [2]நோயில் கூறப்பட இருக்கிறவாறு சிகித்ஸை செய்ய வேண்டும்.

**குறிப்பு:** 1. ஈரத்தன்மை, வழவழப்பு, வெண்மை காரணமாக தயிர் போன்ற நிலை.

2. சுக்ர நோய் சிகித்ஸை இந்த அத்தியாயம் 30-வது ஸ்லோகத்தில் கூறப்பட இருக்கிறது.

उत्तानस्येतरत् स्विन्नं ससिन्धूत्थेन चार्जितम्।
रसेन बीजपूरस्य निमील्याक्षि विमर्दयेत्॥ १४॥

इत्थं संरोपिताक्षस्य प्रचलेऽर्माधिमांसके।
धृतस्य निश्चलं मूर्ध्नि वर्त्मनोश्च विशेषतः॥ १५॥

अपांगमीक्षमाणस्य वृद्धेऽर्मणि कनीनकात्।

वली स्याद्यत्र तत्रार्मं बडिशेनावलम्बितम् ॥ १६ ॥

नात्यायतं मुचुण्ड्या वा सूच्या सूत्रेण वा ततः ।
समन्तान्मण्डलाग्रेण मोचयेदथ मोचितम् ॥ १७ ॥

कनीनकमुपानीय चतुर्भागावशेषितम् ।
छिन्द्यात्कनीनकं रक्षोद्वाहिनीश्चाश्रुवाहिनीः ॥ १८ ॥

कनीनकव्यधादश्रु नाडी चाक्ष्णि प्रवर्तते ।
वृद्धेऽर्मणि तथाऽपाङ्गात्पश्यतोऽस्य कनीनकम् ॥ १९ ॥

## அர்ம்ம நோயில் அஸ்திர ப்ரயோக முறை :

இதற்கு மாறான நிலையில் நோயாளியை மல்லாந்து படுக்கச்செய்து வியர்ப்பித்து இந்துப்புக் கலந்த துருஞ்சிச் சாற்றைக் கண்ணில் இட்டு கண்ணை மூடித் தேய்க்க வேண்டும். வளர்ந்த அதிமாம்ஸத்திற்கு இவ்வாறு கிளர்ச்சியுறச் செய்து அசைவு உண்டாக்க வேண்டும். பிறகு தலையையும் முக்கியமாக இமைகளையும் அசையாமல் பிடிக்கச் செய்ய வேண்டும். நாசியை ஒட்டிய கண் பகுதியில் அர்ம நோய் அதிகரித்து உள்ள நிலையில் கடைக் கண்ணை நோக்கச் செய்து மடிப்புத் தோன்றும் இடத்தில் படிச யந்திரத்தால் பற்றிக் கொண்டு முசுண்டி சஸ்திரத்தாலாவது, ஊசியாலாவது, நூலினாலாவது அதிக நீளமின்றி (அர்மப் பகுதியை) விடுவிக்க வேண்டும். பிறகு அதை நாசியின் அருகில் கொணர்ந்து மண்டலாக்ர சஸ்திரத்தால் கால் பகுதி மிகுதி உள்ளவாறு நான்கு புறமும் வெட்ட வேண்டும். நாசியின் அருகில் உள்ள பகுதியையும் கண்ணீரை எடுத்துச் செல்லும் ஸிரைகளையும் பாதுகாக்க வேண்டும். (கன்னிகை) நாசியை ஒட்டிய கண் பகுதி அறுக்கப்பட்டால், கண்ணீரும்

(நாடீவிரணமும்) புரையும் உண்டாகும். அவ்வாறே கடைக் கண்ணில் இருந்து பரவும் அர்ம நோயில் நாசியை ஒட்டிய கண் பகுதியை (கன்னிகத்தைப்) பார்க்கச் செய்து, இவ்வாறே சஸ்திரப் பிரயோகம் செய்ய வேண்டும்.

குறிப்பு: 1. முன் சுலோகத்தில் கூறப்பட்டதற்கு எதிரிடையாக அர்மநோய் இருப்பின் (கருவிழியை அடைந்ததாகவும் மாம்ஸம், தசை நார்கள், ஸிரைகள் இவற்றால் சூழப்பட்டிருந்தால்) என்பது குறிக்கப்படுகிறது.

सम्यक् छिन्नं मधुव्योषसैन्धवप्रतिसारितम् ।
उष्णेन सर्पिषा सिक्तमभ्यक्तं मधुसर्पिषा ।। २० ।।

बध्नीयात्सेचयन्मुक्त्वा तृतीयादिदिनेषु च ।
करंजबीजसिद्धेन क्षीरेण क्वथितैस्तथा ।। २१ ।।

सक्षौद्रैर्द्विनिशारोध्रपटोलीयष्टिकिंशुकैः ।
कुरण्टमुकुलोपेतैर्मुञ्चेदेवाह्नि सप्तमे ।। २२ ।।

நன்கு வெட்டப்பட்ட பின்னர் த்ரிகடு, இந்துப்பு இவற்றைப் பொடித்து தேன் கலந்து பூச வேண்டும். சூடான நெய்யால் நனைக்க வேண்டும். தேனும், நெய்யும் கலந்து பூசிய பின்னர் [1]கட்ட வேண்டும். [2]மூன்றாம் நாள் முதலிய நாட்களில் கட்டை அவிழ்த்து புங்கன் விதையைச் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட பாலையாவது கருங்குறிஞ்சி மொட்டு, மஞ்சள், மர மஞ்சள், லோத்தி, பேய்ப் புடல், அதி மதுரம், புரசு ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட கஷாயத்தைத் தேன் கலந்தாவது ஊற்ற வேண்டும். ஏழாம் நாளில் கட்டை அகற்றி விட வேண்டும்.

குறிப்பு:1. யவை மாவுப் பிண்டம் முதலியவற்றை வைத்துக் கட்டு போட வேண்டும்.

2. இரண்டாவது நாளில் கட்டை அவிழ்க்காமலேயே அதிமதுர நெய்யை ஊற்ற வேண்டும் எனச் சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

3. வெயில், ஆகாயம் ஆகியவற்றைப் பார்க்கக் கூடாது.

सम्यक् छिन्ने भवेत्स्वास्थ्यं हीनातिच्छेदजान् गदान्।
सेकाञ्जनप्रभृतिभिर्जयेल्लेखनबृंहणैः ॥ २३ ॥

நன்றாகக் கீறப்படின் சுகமுண்டாகும். குறைவாக அல்லது அதிகமாகக் கீறியதாலுண்டான நோய்களை (முறையே) கரைத்தல், வலுவூட்டுதல் ஆகிய குணமுள்ள மருந்தை ஊற்றுதல், அஞ்ஜனமிடல் முதலியவற்றால் குணப்படுத்த வேண்டும்.

सितामनःशिलालैलालवणोत्तमनागरम्।
अर्धकर्षोन्मितं तार्क्ष्यं पलार्धं च मधुद्रुतम् ॥ २४ ॥

अञ्जनं श्लेष्मतिमिरपिल्लशुक्रार्मशोषजित्।

**கரைக்கும் அஞ்ஜனம் :**

சர்க்கரை, மனோசிலை, தாளகம், ஏலம், இந்துப்பு, சுக்கு ஆகியவை வகைக்கு 1/8 பலம், அஞ்ஜனக்கல் ½ பலம் இவற்றை தேனில் கலக்கி அஞ்ஜனமிட கபத்தால் உண்டான திமிரம், பில்லம், சுக்லம் மிகுதியுள்ள அர்ம நோய் ஆகியவை நீங்கும்.

त्रिफलैकतमद्रव्यत्वचं पानीयकल्किताम् ॥ २५ ॥

शरावपिहितां दग्ध्वा कपाले चूर्णयेत्ततः ।
पृथक्शेषौषधरसैः पृथगेव च भाविता ॥ २६ ॥

सा मषी शोषिता पेष्या भूयो द्विलवणान्विता ।
त्रीण्येतान्यंजनान्याह लेखनानि परं निमिः ॥ २७ ॥

திரிபலைச்சரக்கில் ஒன்றை [1]நீர்விட்டரைத்து சட்டியில் வைத்து மடக்கால் மூடி எரிக்கவேண்டும். பிறகு அதை எடுத்துச் சூரணித்து திரிபலையின் மற்ற இரண்டு சரக்குகளின் ரசத்திலும் தனித்தனியாக ஊறவைத்து காயவைக்க வேண்டும். பிறகு அந்தமஷியை இந்துப்பும், சௌவர்ச்சல உப்பும் கலந்து மீண்டும் அரைத்து உபயோகிக்கவேண்டும். [2]இம்மூன்றையும் சிறந்த கரைக்கும் அஞ்ஜனம் என நிமி என்னும் ஆசாரியர் கூறுகிறார்.

**குறிப்பு:** 1. நீர் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருப் பினும் சுத்தமான மழைநீரை தனிப்பாத்திரத்தில் பிடித்து எடுத்து வடிக்கட்டி உபயோகிப்பது சம்பிர தாயம். (ஸூத்ரஸ்தானம் 5-ம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட காங்கோதகம் என்பதை உப யோகிக்க வேண்டுமென சிலர் கூறுவர்.)

2. திரிபலைச் சரக்குகளுள் ஒவ்வொன்றையும் தாய்ச்சரக்காகக் கொண்டு இந்த அஞ்ஜனம் அமைவதால் இது மூன்று வகையாகும்.

सिराजाले सिरा यास्तु कठिना लेखनौषधैः ।
न सिद्ध्यन्त्यर्मवत्तासां पिटिकानां च साधनम् ॥ २८ ॥

**ஸிராஜால சிகித்ஸை :**

ஸிராஜால நோயில் கரைக்கும் ஔஷதங்கள் பிரயோகிக்கப்பட்டும் கடினமான ஸிரைகள் குணமாகா விடில் அர்மநோயில் போல் வெட்டச் செய்யவேண்டும். ஸிராபிடகை என்னும் நோயிலும் இவ்வாறே செய்ய வேண்டும்.

**குறிப்பு:** ஸிராபிடகைகளை ஊசியால் பிடித்துக்கொண்டு வெட்டவேண்டும். நுண்ணிய ஸிராபிடகைகளை கீறவேண்டும். மற்ற சிகித்ஸைகளை அர்மநோயில் போல் செய்யவேண்டும்.

दोपानुरोधाच्छुक्रेषु स्निग्धरूक्षा वरा घृतम् ।
तिक्तमूर्ध्वमसृक्स्रावो रेकसेकादि चेष्टते ॥ २९ ॥

**சுக்ர நோய் :**

நேத்ர [1]சுக்ர நோய்களில் தோஷங்களுக்கேற்ப நெய்ப்பு அல்லது வறண்ட சிகித்ஸை, திரிபலையை உபயோகித்தல், திக்தக கிருதத்தை பருகுதல் ஆகியவற்றைச் [2] செய்தபிறகு ரத்தத்தை வெளியேற்றுதல், விரேசனம், [3]நீர் ஊற்றுதல் முதலியன ஏற்றவையாகும்.

**குறிப்பு:** 1. நேத்ர சுக்ர நோயின் பிரிவுகள் முன் அத்தியா - யத்தில் விளக்கப்பெற்றுள்ளன.

2. கழுத்துக்கு மேற்பட்ட பகுதியிலிருந்து ரத்தத்தை வெளியேற்ற வேண்டும் என்றும் பொருள் உண்டு.

3. கரைக்கும் அஞ்ஜனம், தர்ப்பணம், புடபாகம் முதலியன குறிப்பிடப்படுகின்றன.

त्रिस्त्रिवृद्वारिणा पक्वं क्षतशुक्रे घृतं पिबेत्।
सिरयाऽनु हरेद्रक्तं जलौकोभिश्च लोचनात्॥३०॥

सिद्धेनोत्पलकाकोलीद्राक्षायष्टिविदारिभिः।
ससितेनाजपयसा सेचनं सलिलेन वा॥ ३१।

रागाश्रुवेदनाशान्तौ परं लेखनमंजनम्।

க்ஷதசுக்ரம் என்னும் நோயில் சிவதைக் கஷாயத்தால் [1]மூன்றுமுறை பக்குவம் செய்யப்பட்ட நெய்யைப் பருக வேண்டும். பிறகு ஸிரையைக் குத்துவதாலும் அட்டையின் மூலமாகவும் கண்ணிலிருந்து ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். நீலோத்பலம், காகோலீ, திராக்ஷை, அதிமதுரம், நிலக்குமிழ் ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப் பட்ட ஆட்டுப்பால் அல்லது நீரை சர்க்கரை கலந்து கண்ணில் ஊற்றவேண்டும். செந்நிறம், கண்ணீர் வேதனை இவை அடங்கிய நிலையில் கரைக்கும் அஞ்ஜனம் பிரயோகிக்க வேண்டும்.

குறிப்பு: சிவதைக் கஷாயத்தை அனுபானமாகவும் உபயோகிக்கவேண்டுமென இந்து உரை கூறு கிறார்.

நீலோத்பலம் முதலியன சேர்த்து பக்குவம் செய்த நீரையாவது மஞ்சிட்டி க்ஷீரகாகோலி, அதிமதுரம் ஆகியவை சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட ஆட்டுப்பாலையாவது சர்க்கரை சேர்த்து ஊற்ற வேண்டும் என சங்க்ரஹத்தில் காணப்படுகிறது.

वर्तयो जातिमुकुललाक्षागैरिकचन्दनैः॥ ३२॥

प्रसादयन्ति पित्तास्रं घ्नन्ति च क्षतशुक्रकम्।

திரி :

ஜாதிமல்லியின் மொட்டு, அரக்கு, காவி, சந்தனம், இவற்றைக் கலந்து திரிபோல் மாத்திரை செய்து உபயோகிக்க பித்த ரத்த கோபத்தால் உண்டான (கண்) நோய்களையும் விரண சுக்ரநோயையும் நீக்கும்.

दन्तैर्दन्तिवराहोष्ट्रगवाश्वाजखरोद्भवैः ॥ ३३ ॥

सशंखमौक्तिकाम्भाधिफेनैर्मरिचपादकैः ।
क्षतशुक्रमपि व्यापि दन्तवर्तिर्निवतयेत् ॥ ३४ ॥

தந்தவர்த்தி :

யானை, பன்றி, ஒட்டகம், பசு, குதிரை, ஆடு, கழுதை இவற்றின் பற்கள், சங்கு, முத்து, கடல்நுரை இவை சம அளவு, மொத்த எடைக்கு ¼ பங்கு மிளகு ஆகியவற்றை அரைத்து திரிசெய்து உபயோகிக்க அதிகம் பரவி இருக்கும் க்ஷதசுக்ரத்தைப் போக்கும்.

तमालपत्रं गोदन्तशंखफेनोऽस्थि गार्दभम् ।
ताम्रं च वर्तिर्मूत्रेण सर्वशुक्लकनाशिनी ॥ ३५ ॥

பச்சிலை, பசுவின்பல், சங்கு, கடல்நுரை, கழுதையின் எலும்பு, தாம்ரம் இவற்றை பசுநீர் விட்டரைத்து திரிசெய்து உபயோகிக்க எல்லாவிதமான சுக்ர நோய்களும் நீங்கும்.

रत्नानि दन्तशृंगाणि धातवस्त्र्यूषणं त्रुटिः ।
करंजबीजं लशुनो व्रणसादि च भेपजम् ॥ ३६ ॥

सव्रणाव्रणगम्भीरत्वक्स्थशुक्रघ्नमंजनम् ।

(முத்து முதலிய) ரத்னங்கள் (யானை முதலியவற்றின்) பற்கள், (பசு முதலியவற்றின்) கொம்புகள், (காவிமண்

முதலிய) தாதுக்கள், திரிகடு, ஏலம், புங்கன்விதை, உள்ளி, விரணத்தை [1]குதறச்செய்யும் பொருள் மேலும் விரணத்துடன் கூடியதும், விரணமற்றதும், ஆழமானதும் சருமத்தைப் பற்றியதுமான நேத்ர சுக்ர நோயைப் போக்க அஞ்ஜனமாக பிரயோகிக்கலாம்.

*குறிப்பு:* 1. எருமைக்கள்ளி அன்னபேதி முதலியன கூறப் படுகின்றன.

निम्नमुन्नमयेत्स्नेहपाननस्यरसाञ्जनैः ।। ३७ ।।

सरुजं नीरुजं तृप्तिपुटपाकेन शुक्रकम् ।

குழிவிழுந்ததும், வலியுடன் கூடியதுமான நேத்ர சுக்ரநோய்ப்பகுதியை நெய்ப்புப் பொருள் பருகுதல், நசியமிடுதல், மாம்ஸரஸம் பருகுதல் ஆகியவற்றால் எழும்பச் செய்யவேண்டும். வலி இல்லாத நிலையில் [1]தர்ப்பணம் [2]புடபாகம் ஆகியவற்றால் சிகித்ஸை செய்யவேண்டும்.

*குறிப்பு:* 1 & 2. ஸூத்ரஸ்தானத்தில் விளக்கப்பட்டுள்ளன.

शुद्धशुक्रे निशायष्टीसारिवाशाबराम्भसा ।। ३८ ।।

सेचनं रोध्रपोटल्या कोष्णाम्भोमग्नयाऽथवा ।

**சுத்த சுக்ரம்:**

சுத்த சுக்ர நோயில் மஞ்சள், அதிமதுரம், நன்னாரி, வெள்ளை லோத்தி இவற்றின் கஷாயத்தாலாவது சிறிது சூடான வெந்நீரில் அமுக்கி எடுக்கப்பட்ட லோத்திச் சூர்ணத்தின் முடிச்சாலாவது கண்களை நனைக்கவேண்டும்.

बृहतीमूलयष्ट्याह्वताम्रसैन्धवनागरैः ॥ ३९ ॥
धात्रीफलाम्बुना पिष्टैर्लेपितं ताम्रभाजनम् ।
यवाज्यामलकीपत्रैर्बहुशो धूपयेत्ततः ॥ ४० ॥

तत्र कुर्वीत गुटिकास्ता जलक्षौद्रपेपिताः ।
महानीला इति ख्याताः शुद्धशुक्रहराः परम् ॥ ४१ ॥

**மஹாநீல குளிகை :**

கண்டங்கத்திரிவேர், அதிமதுரம், தாமிரம், இந்துப்பு, சுக்கு ஆகியவற்றை நெல்லிக்காய்ச் சாறு விட்டரைத்து தாமிர பாத்திரத்தில் பூசி, யவை, நெய், நெல்லி இலை ஆகியவற்றால் பலமுறை புகை ஊட்டவேண்டும். பிறகு அதை எடுத்து தேனும் நீரும் விட்டரைத்து குளிகை செய்யவேண்டும். இது மஹாநீல குளிகை எனப்படும். இது விசேஷமாக சுத்த சுக்ர நோயைப் போக்கும்.

குறிப்பு: ★நெய்யில் நனைக்கப்பட்ட யவையாலும், நெல்லி இலையாலும் புகையூட்டவேண்டும்.

स्थिरे शुक्रे घने चास्य बहुशोऽपहरेदसृक् ।
शिरः कायविरेकांश्च पुटपाकांश्च भूरिशः ॥ ४२ ॥

நிலையாகவும், நெருக்கமாகவும் உள்ள சுக்ர நோயில் பல தடவைகளில் ரத்தத்தை வெளியேற்றவேண்டும். சோதன நசியம், விரேசனம், புடபாகம் ஆகியவற்றை அடிக்கடி பிரயோகிக்கவேண்டும்.

कुर्यान्मरिचवैदेहीशिरीषफलसैन्धवैः ।

घर्षणं त्रिफलाक्काथपीतेन लवणेन वा ॥ ४३ ॥

**கண்களைத் தேய்த்தல் :**

மிளகு, திப்பிலி, வாகைக்காய், இந்துப்பு ஆகிய வற்றாலாவது, திரிபலா கஷாயத்தில் ஊறவைக்கப்பட்ட இந்துப்பாலாவது கண்களை தேய்க்க வேண்டும்.

कुर्यादंजनयोगौ वा श्लोकार्धगदिताविमौ।
शंखकोलास्थिकतकद्राक्षामधुकमाक्षिकैः ॥ ४४ ॥

सुरादन्तार्णवमलैः शिरीपकुसुमान्वितैः।

சங்கு, இலந்தைக் கொட்டை, தேற்றான்கொட்டை, தந்தம், திராக்ஷை, அதிமதுரம், தேன் இவற்றாலாவது, கள், (யானை முதலியவற்றின்) பல், கடல்நுரை இவற்றுடன் வாகைப்பூ கலந்தாவது அஞ்ஜனமிடவேண்டும். இவ்வாறு அரை ஸ்லோகங்கள் இரண்டால் கூறப்பட்ட அஞ்ஜனங்களை உபயோகிக்கவேண்டும்.

धात्रीफणिज्जकरसे क्षारो लांगलिकोद्भवः ॥ ४५ ॥

उषितः शोषितश्चूर्णः शुक्रहर्षणमंजनम्।

கலப்பைக்கிழங்கின் க்ஷாரத்தை நெல்லி, கர்ப்பூர துளஸி இவற்றின் சாற்றில் ஒருநாள் ஊறவைத்து, காயவைத்து, சூரணித்து நேத்ர சுக்ரத்தில் தேய்க்க உபயோகிக்கலாம்.

मुद्गा वा निस्तुषाः पिष्टाः शंखक्षौद्रसमायुताः ॥ ४६ ॥

सारो मधूकान्मधुमान् मज्जा वाऽक्षात्समाक्षिकः।

சங்கு, தேன், தோல் நீக்கப்பட்ட பயறு ஆகியவற்றை யாவது, தேன் கலக்கப்பட்ட இலுப்பை வைரத்தையாவது,

தேன் கலக்கப்பட்ட தான்றிப்பருப்பையாவது அஞ்ஜனமிட உபயோகிக்கலாம்.

गोखराश्वोष्ट्रदशनाः शंखः फेनः समुद्रजः ॥ ४७॥

वर्तिरर्जुनतोयेन पिष्टा शुक्रकनाशिनी ।

பசு, கழுதை, குதிரை, ஒட்டகம் இவற்றின் பற்கள், சங்கு, கடல்நுரை இவற்றை மருதம்பட்டைக் கஷாயம் விட்டரைத்து திரிசெய்து (அஞ்ஜனமிட) (நேத்ர) சுக்ர நோய் நீங்கும்.

उत्सन्नं वा सशल्यं वा शुक्रं वालादिभिर्लिखेत् ॥ ४८ ॥

மேலெழும்பிய அல்லது சல்யத்துடன் கூடிய (நேத்ர) சுக்ர நோயின் பகுதியை மயிர் *முதலியவற்றால் சுறண்ட வேண்டும்.

குறிப்பு: *முதலியவற்றால் என்பதால் தேக்கு இலை முதலியவை குறிப்பிடப்படுவதாக அருணதத்தர் கூறுகிறார்.

பட்டுநூல் முதலியவற்றால் என கைரளியில் கூறப் பட்டுள்ளது.

सिराशुक्रे त्वहष्टिघ्ने चिकित्सा व्रणशुक्रवत् ।

(திருஷ்டி) விழி மண்டலத்தைக் கெடுக்காத ஸிரா சுக்ர நோயில் விரண சுக்ர நோய்க்கு கூறப்பெற்ற சிகித் ஸையே செய்யவேண்டும்.

குறிப்பு: அசாத்யமெனக் கூறப்பட்ட அஜகா, ஸிரா சுக்ரம், பாகாத்யசுக்ரம் இவற்றுள் மத்தியில்

கூறப்பட்ட ஸிரா சுக்ர நோய்க்கு விழி மண்டலத்தைக் கெடுக்காத நிலையில் இவ்வாறு சிகித்ஸை செய்யவேண்டுமென கூறப்பட்டதால், அஜகா பாகாத்ய நோய்களுக்கும் இவ்வித நிலையில் இதே சிகித்ஸை செய்ய வேண்டும் என்று கைரளியில் கூறப்பட்டுள்ளது.

पुण्ड्रयष्टयाह्वकाकोलीसिंहीलोहनिशांजनम् ॥ ४९ ॥

कल्कितं छागदुग्धेन सघृतैर्धूपितं यवैः ।
धात्रीपत्रैश्च पर्यायाद्वर्तिरत्रांजनं परम् ॥ ५० ॥

வறள் தாமரை, அதிமதுரம், காகோலீ, கண்டங்கத்திரி, அகில், மஞ்சள், அஞ்ஜனக்கல் இவற்றை ஆட்டுப்பால் விட்டரைத்து நெய் கலந்த யவையாலும், நெல்லி இலையாலும் மாற்றி மாற்றி புகை போடவேண்டும். பிறகு அதை எடுத்து (திரிசெய்து) அஞ்ஜனமிடவேண்டும். விழியைக் கெடுக்காத நிலையிலுள்ள ஸிராசுக்ர நோயில் இது சிறந்தது.

अशान्तावर्मवच्छस्त्रमजकाख्ये च योजयेत् ।

இவ்வாறு சிகித்ஸை செய்து ஸிராசுக்ரநோய் நீங்காவிடில் அர்ம நோயில் கூறியவாறு சஸ்திர சிகித்ஸை செய்ய வேண்டும். அஜகா என்னும் நோயிலும் (சாதாரண சிகித்ஸை முறையால் நோய் நீங்காவிடில்) அர்மநோயில் போல் சஸ்திர சிகித்ஸை செய்யவேண்டும்.

குறிப்பு: க்ஷதசுக்ர நோயின் உபத்ரவமாக உண்டான அஜகா நோய்க்கு சிகித்ஸை கூறப்பட்டுள்ளது.

ரத்தம் காரணமாக உண்டான அஜகா நோய்க்கு இல்லை என்று கைரளியில் கூறப்பட்டுள்ளது.

अजकायामसाध्यायां शुक्रेऽन्यत्र च तद्विधैः ॥ ५१ ॥
वेदनोपशमं स्नेहपानासृक्स्रावणादिभिः ।
कुर्याद्बीभत्सतां जेतुं शुक्रस्योत्सेधसाधनम् ॥ ५२ ॥

அசாத்யமான அஜகா நோயிலும் மற்றும் அத்தகைய நேத்ர சுக்ர நோயிலும் நெய்ப்புப் பொருள் பருகுதல், ரத்தத்தை வெளியேற்றுதல் முதலியவற்றால் வேதனையைக் குறைக்க வேண்டும். நேத்ர சுக்ர நோயின் பயங்கரத் தன்மையைப் போக்குவதற்காக கரைக்கும் தன்மையுள்ள அஞ்ஜனத்தை பிரயோகிக்கவேண்டும்.

नालिकेरास्थिभल्लाततालवंशकरीरजम् ।
भस्माद्भिः स्रावयेत्ताभिर्भावयेत्करभास्थिजम् ॥ ५३ ॥

चूर्णं शुक्रेष्वसाध्येषु तद्वैवर्ण्यघ्नमंजनम् ।
साध्येषु साधनायालमिदमेव च शीलितम् ॥ ५४ ॥

தேங்காய் ஓடு, சேங்கொட்டை, பனை ஓடு, மூங்கில் குருத்து இவற்றை சுட்டெரித்த சாம்பலை நீரில் கலக்கி வடிக்கட்டிக் கொள்ள வேண்டும். கழுதை எலும்புத் தூளை இந்த நீரில் ஊறவைத்து அஞ்ஜனமிட அசாத்யமான சுக்ர நோயில் நிற மாற்றத்தைப் போக்கும். இதையே தொடர்ந்து உபயோகித்தால் சாத்யமான நிலையில் உள்ள இந்த நோய்களைப் போக்குவதற்குப் போதுமானது.

अजकां पार्श्वतो विध्वा सूच्या विस्राव्य चोदकम् ।
समं प्रपीड्यांगुष्ठेन वसार्द्रेणानु पूरयेत् ॥ ५५ ॥

व्रणं गोमांसचूर्णेन बद्धं बद्धं विमुच्य च ।
सप्तरात्राद् व्रणे रूढे कृष्णभागे समे स्थिते ॥ ५६ ॥

स्नेहांजनं च कर्तव्यं नस्यं च क्षीरसर्पिपा।
तथा पि पुनराध्माने भेदच्छेदादिकां क्रियाम्॥ ५७॥

युक्त्या कुर्याद्यथा नातिच्छेदेन स्यान्निमज्जमनम्॥ ५७ १/२॥

**அஜகாவைப் பிளத்தல்:**

அஜகாவை ஊசியினால் பக்கங்களில் குத்தியபின் கட்டைவிரலால் சமமாக அமுத்தி (அஜகாவில் இருந்த) [1]நீரை வெளியேற்றவேண்டும். பிறகு விரணத்தை, மாம்ஸ எண்ணெயில் நனைக்கப்பட்ட பசு மாம்ஸத் தூளால் நிரப்ப வேண்டும். ஒவ்வொரு நாளும் அவிழ்த்துக் கட்டவேண்டும். ஏழு நாட்களுக்குப் பின் விரணம் ஆறிய நிலையில் கரும்படலம் சமமாகவும், உறுதியாகவும் இருக்கும்பொழுது, நெய்ப்புள்ள அஞ்ஜனத்தைப் பிரயோகிக்க வேண்டும். பாலிலிருந்து உண்டான நெய்யால் நசியமிடவேண்டும். இவ்விதமான சிகித்ஸை செய்தும் மறுபடியும் வீக்கங் கண்டால், அதிகம் வெட்டப்படுவதால் உண்டாகும் குழி விழுதல் ஏற்படாதவாறு, உத்தியாக பிளத்தல், வெட்டுதல் [2]முதலியவற்றைச் செய்யவேண்டும்.

குறிப்பு: 1. ரத்தம் முதலியவற்றையும் வெளியேற்ற வேண்டும்.

2. கரைக்குந்தன்மையுள்ள அஞ்ஜனம் முதலியவை கூறப்படுகின்றன.

नित्यं च शुक्रेषु शृतं यथास्वं पाने च मर्शे च घृतं विदध्यात्।
न हीयते लब्धबला तथाऽन्तस्तीक्ष्णांजनैर्दृक् सततं प्रयुक्तैः॥ ५८॥

எல்லாவித சுக்ர நோய்களிலும், தோஷங்களுக்கேற்ற ஔஷதங்கள் சேர்த்து பக்குவம் செய்யப்பெற்ற நெய்யை பருகுவதற்கும், மர்ச நசியம் இடுவதற்கும் எல்லாக் காலத்திலும் உபயோகிக்கவேண்டும். இவ்வாறு உட்புறம் பலம் பெறுவதால் கண்கள் அடிக்கடி உபயோகிக்கப்பட்ட தீக்ஷ்ணமான அஞ்ஜனங்களாலும் கேடுறுவதில்லை.

குறிப்பு: 1. அப்பியங்கம், ஊற்றுதல், தர்ப்பணம் பிரதி மர்சம் ஆகியவற்றிலும் நெய்யை உபயோகிக்க வேண்டுமென கூறப்படுகிறது.

மர்சம்-என்பது நெய்ப்புப் பொருளால் ஆன நசியத்தை அதிக அளவில் பிரயோகிப்பதையும்,

பிரதிமர்சம்-என்பது குறைந்த அளவில் பிரயோகிப்பதையும் குறிப்பனவாகும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने सन्धिसितासितरोगप्रतिषेधो नामैकादशोऽध्यायः ॥ ११ ॥

உத்தரஸ்தானம் - பதினோராவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [द्वादशोऽध्यायः - அத்தியாயம் - 12]

अथातो दृष्टिरोगविज्ञानीयमध्यायं व्याख्यास्यामः।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः।

அடுத்து விழியில் உண்டாகும் நோய்களை விளக்கும் அத்தியாயம் விவரிக்கப்படுகிறது. இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

सिरानुसारिणि मले प्रथमं पटलं श्रिते।
अव्यक्तमीक्षते रूपं व्यक्तमप्यनिमित्ततः॥ १॥

ஸிரைகளில் செல்லும் தோஷங்கள் முதல் *படலத்தில் தங்கியிருப்பின் தெளிவான பொருளையும், தெளிவற்றதாகக் காண்பர். காரணமின்றியே தெளிவாகவும் காண்பர்.

**குறிப்பு:** *முதல் படலம் என்ற சொல் உட்புறத்திலுள்ள முதல் படலத்தைக் குறிப்பதாக இந்து முதலானவர்களும் வெளிப்புறத்திலிருந்து முதல் படலத்தை குறிப்பிடுவதாக அருணதத்தரும் கருதுகின்றனர்.

प्राप्ते द्वितीयं पटलमभूतमपि पश्यति।
भूतं तु यत्नादासन्नं दूरे सूक्ष्मं च नेक्षते॥ २॥

दूरान्तिकस्थं रूपं च विपर्यासेन मन्यते।
दोषे मण्डलसंस्थाने मण्डलानीव पश्यति॥ ३॥

द्विधैकं दृष्टिमध्यस्थे बहुधा बहुधास्थिते।
दृष्टेरभ्यन्तरगते ह्रस्ववृद्धविपर्ययम्॥ ४॥

नान्तिकस्थमधः संस्थे दूरगं नोपरि स्थिते।
पार्श्वे पश्येन्नपार्श्वस्थे तिमिराख्योऽयमामयः ॥ ५ ॥

*திமிர நோய் :*

இரண்டாவது படலத்தில் தோஷங்கள் தங்கினால் இல்லாத பொருளையும் காண்பர். சமீபத்தில் உள்ள பொருளை மிக்க முயற்சியுடன் காண்பர். தொலைவில் உள்ள பொருளையும், நுண்ணிய பொருளையும் பார்க்க இயலாது. தொலைவில் அல்லது அருகில் உள்ள பொருளை மாறாகக் காண்பர். (இரண்டாவது படலத்தில்) தோஷங்கள் வட்டமாக அமைந்திருப்பின் (எதிரில்) வட்டம்ாக இருப்பதுபோல் காண்பர். தோஷங்கள் விழியின் நடுவில் இருப்பின் பொருளை இரண்டாகக் காண்பர். பலவாறாகப் பிரிந்து இருப்பின் (ஒரு) பொருளை பலவாறாகக் காண்பர். தோஷங்கள் விழியில் உள்புறம் இருப்பின் சிறிய பொருளையும் பெரிய பொருளையும் மாறாகக் காண்பர். விழி மண்டலத்திற்கு கீழ்ப்புறம் தோஷம் இருப்பின் அருகிலுள்ள பொருளைக் காணமாட்டார். விழிமண்டலத் திற்கு (மேற்புறம்) தோஷமிருப்பின் தொலைவிலுள்ள பொருளைக் காணமாட்டார். விழிமண்டலத்தின் பக்கங் களில் தோஷம் இருந்தால் அந்த பக்கத்தில் உள்ள பொருளைக் காணமாட்டார். இத்தகைய நோய் திமிர நோய் எனப்படும்.

प्राप्नोति काचतां दोषे तृतीयपटलाश्रिते।
तेनोर्ध्वमीक्षते नाधस्तनुचैलावृतोपमम् ॥ ६ ॥
यथावर्णं च रज्येत दृष्टिर्हीयेत च क्रमात्।

*காச நோய் :*

தோஷமானது மூன்றாம் படலத்தை அடையுமாயின் காசம் என்னும் பெயரை அடையும். கீழ்ப்புறம் பார்க்க இயலாது.

மேற்புறம் உள்ள பொருள்களை மெல்லிய துணியால் சூழப்பட்டிருப்பதுபோல் காண்பர். தோஷங்களின் நிறத்திற் கேற்ப கண்ணில் நிறமாற்றம் ஏற்படும். பார்வைத் திறன் படிப்படியாகக் குறையும்.

குறிப்பு: விழியில் நிறமாற்றம் ஏற்படும் விகிதத்தில் பார்வைச் சக்திகுறைவு ஏற்படும் என இந்து முதலானோர் கூறுகின்றனர்.

तथाऽप्युपेक्षमाणस्य चतुर्थं पटलं गतः ॥ ७ ॥

लिंगनाशं मलं कुर्वन् छादयेद्दृष्टिमण्डलम् ।

*லிங்கநாசம்:*

இந்த நிலையிலும் தக்க சிகித்ஸை செய்யாவிடில் தோஷம் நான்காம் படலத்தையடைந்து லிங்கநாசம் என்னும் நோயை உண்டாக்கும். (திருஷ்டி) விழி மணடலம் முழுவதையும் மூடிவிடும்.

तत्र वातेन तिमिरे व्याविद्धमिव पश्यति ॥ ८ ॥

चलाविलारुणाभासं प्रसन्नं चेक्षते मुहुः ।
जालानि केशान् मशकान् रश्मींश्चोपेक्षितेऽत्र च ॥ ९ ॥

काचीभूते दृगरुणा पश्यत्यास्यमनासिकम् ।
चन्द्रदीपाद्यनेकत्वं वक्रमृज्वपि मन्यते ॥ १० ॥

वृद्धः काचो दृशं कुर्याद्रजोधूमावृतामिव ।
स्पष्टारुणाभां विस्तीर्णां सूक्ष्मां वा हतदर्शनाम् ॥ २१ ॥

स लिंगनाशो-

## வாததிமிரம்-வாதகாசம்-வாதலிங்கநாசம் :

வாததோஷத்தால் உண்டான திமிரநோயில் சிதறியதாகவும், சஞ்சலமாகவும், [1]கலங்கியது போன்றும், இளஞ்செந்நிறமாகவும் தெளிவாகவும் அடிக்கடி காண்பர். வலை, கேசம், ஈக்கள், கிரணங்கள் ஆகியவற்றையும் காண்பர்.

திமிர நோய்க்கு தக்க சிகித்ஸை செய்யாததன் காரணமாக காச நோய் உண்டாகும் நிலையில் கண்கள் இளஞ்செந்நிறமாக இருக்கும். (பிறரின்) முகத்தை நாசி இல்லாததாகக் காண்பர். சந்திரன், விளக்கு முதலியவற்றை பலவாகக் காண்பர். கோணலான பொருளை [2]நேரானதாகக் காண்பர். காசநோய் வளர்ச்சியடைந்து கண் விழிப்பகுதியை புழுதி புகை ஆகியவற்றால் சூழப்பட்டது போன்றும் தெளிந்த செந்நிறமுள்ளதாகவும், பார்வை இழந்ததாகவும் தோற்றுவிக்கச் செய்யும். விழிப்பகுதி உருவத்தில் அகன்று அல்லது குறுகி அமையும். இந்நிலை லிங்கநாசம் எனப்படும்.

குறிப்பு:1. வாயுவின் சஞ்சல ஸ்வபாவம் காரணமாக சிலசமயம் கலங்கியதாகவும், சிலசமயம் தெளிவாகவும் காண்பர்.

2. நேரான பொருளை கோணலானதாகவும் காண்பர்.

-वाते तु संकोचयति दृक्सिराः ।
दृङ्मण्डलं विशत्यन्तर्गम्भीरा दृगसौ स्मृता ॥ १२ ॥

## கம்பீரா :

வாயுவானது நேத்ர ஸிரைகளை சுருங்கச் செய்கிறது. நேத்ர மண்டலம் உட்செல்லுகிறது. இந்த நோய் (*கம்பீராத்ருக்) ஆழ்ந்த கண் எனப்படும்.

குறிப்பு: ★கம்பீரா என்னும் சொல் ஆழ்ந்து செல்வதைக் குறிப்பதாகும். இதற்கு நீலிகா காசம் என்றும் சில நூல்களில் பெயர் காணப்படுகிறது. (ஸு்ச்.உத்த. 8-ம் அத்தியாயம் 18-ம் ஸ்லோகம்.)

पित्तजे तिमिरे विद्युत्खद्योतद्योतदीपितम्।
शिखितित्तिरिपत्राभं प्रायो नीलं च पश्यति ॥ १३ ॥

काचे दृक् काचनीलाभा तादृगेव च पश्यति।
अर्केन्दुपरिवेषाग्निमरीचीन्द्रधनूंषि च ॥ १४ ॥

भृंगनीला निरालोका दृक् स्निग्धा लिंगनाशतः।

**பித்ததிமிரம்-பித்த காசம்-பித்தலிங்கநாசம்:**

பித்தத்தால் உண்டான திமிர நோயில் மின்னல், மின்மினி ஆகியவற்றின் ஒளி போன்ற பிரகாசிப்பதாகவும், மயில், தித்திரி இவற்றின் இறக்கை போன்றும் கண் காணப்படும். பெரும்பாலும் நீலநிறமாகவும் பொருள்களைக் காண்பர். காசநிலையை அடைந்தால் விழி பளிங்கு நீலமாகத் தோன்றும். பளிங்கு நிறமாகப் பொருள்களைக் காண்பர். சூரியன், சந்திரன் இவர்களுக்குமேல் வட்டத்தையும் அக்னிக் கதிர்களையும், வானவில்லையும் காண்பர். லிங்கநாச நிலையில் விழி வண்டு போன்று நீலமாகவும், ஒளியின்றியும் நெய்ப்புக் கொண்டதாகவும் காணப்படும்.

दृष्टिः पित्तेन ह्रस्वाख्या सा ह्रस्वा ह्रस्वदर्शिनी ॥ १५ ॥

**(ஹ்ரஸ்வா) குறுகியது:**

பித்தம் காரணமாக விழி சிறியதாகும். (பெரிய பொருளும்) சிறியதாகக் காணப்படும். இந்த நோய் ஹ்ரஸ்வா எனப்படும்.

भवेत्पित्तविदग्धाख्या पीता पीताभदर्शना ।

**பித்த விதக்தா :**

(பித்தம் காரணமாக) விழி மஞ்சளாக இருக்கும் பொருள்களை மஞ்சள் நிறத்துடன் காண்பர். இது பித்த விதக்தா எனப்படும்.

कफेन तिमिरे प्रायः स्निग्धं श्वेतं च पश्यति ॥ १६ ॥

शंखेन्दुकुन्दकुसुमैः कुमुदैरिव चाचितम् ।
काचे तु निष्प्रभेन्द्वर्कप्रदीपाद्यैरिवाचितम् ॥ १७ ॥

सिताभा सा च दृष्टिः स्याल्लिंगनाशे तु लक्ष्यते ।
मूर्तः कफो दृष्टिगतः स्निग्धो दर्शननाशनः ॥ १८ ॥

बिन्दुर्जलस्येव चलः पद्मिनीपुटसंस्थितः ।
उष्णे संकोचमायाति छायायां परिसर्पति ॥ १९ ॥

शंखकुन्देन्दुकुमुदस्फटिकोपमशुक्लिमा ।

**கப திமிரம், கபகாசம், கபலிங்கநாசம் :**

கபத்தாலுண்டான திமிர நோயில் பெரும்பாலும் நெய்ப்பு உள்ளதாகவும், வெண்மையாகவும் பொருள்களைக் காண்பர். சங்கு, சந்திரன், முல்லைமலர், வெள்ளை ஆம்பல், இவற்றால் பரப்பப்பட்டது போன்று பொருள்களை காண்பர். காச நிலையை அடைந்தால் ஒளியற்றவையான சந்திரன், சூரியன், விளக்கு முதலியவற்றால் சூழப்பட்டது போன்று காண்பர். கண்கள் சிறிது வெளுப்பாகக் காணப்படும்.

லிங்கநாச நிலையில் நெய்ப்புள்ள கபமானது உருப்பெற்று விழியில் தங்கி கண்களின் பார்வைத் திறனை

அழிக்கும். தாமரை இலையை அடைந்த நீர்த்துளிபோல் *அசையும். உஷ்ணம் பட்டால் குறுகும். நிழலில் பரவும். சங்கு, முல்லை, சந்திரன், ஆம்பல், படிகக்கல் ஆகிய வற்றைப் போன்று வெண்ணிறத்துடன் தோன்றும்.

குறிப்பு: ★கையினால் கசக்க அசையும்.

रक्तेन तिमिरे रक्तं तमोभूतं च पश्यति ॥ २० ॥

काचेन रक्ता कृष्णा वा दृष्टिस्तादृक् च पश्यति।
लिंगनाशेऽपि तादृग् दृङ् निष्प्रभा हतदर्शना ॥ २१ ॥

**ரத்ததிமிரம், ரத்தகாசம், ரத்தலிங்கநாசம் :**

ரத்தத்தால் உண்டான திமிர நோயால் பொருளை சிவப்பாக அல்லது இருளடைந்ததாகக் காண்பர். காச நிலையில் விழி செந்நிறத்துடனோ, கருநிறத்துடனோ காணப்படும். சிவப்பாக அல்லது கறுப்பாகப் பொருள் களைக் காண்பர். லிங்கநாச நிலையிலும் அவ்வாறே இருப்பதுடன் விழி ஒளியையும் பார்வையையும் இழக்கும்.

संसर्गसन्निपातेषु विद्यात्संकीर्णलक्षणान्।
तिमिरादीनकस्माच्च तैः स्याद्व्यक्ताकुलेक्षणः ॥ २२ ॥

तिमिरे, शेषयोर्दृष्टौ चित्रो रागः प्रजायते।

இரு தோஷக் கூட்டுகளாலும், ஸன்னிபாதத்தாலும் உண்டான திமிரம் முதலியவற்றில் இந்தக் குறிகள் கலந்து காணப்படும். மேலும் இவற்றுள் திமிரநிலையில் காரணமின்றியே கண் தெளிந்தாவது, கலங்கியாவது இருக்கும். மற்ற இரு (காச, லிங்கநாச) நிலைகளில், கண்ணில் பலவகையான நிறம் காணப்படும்.

द्योत्यते नकुलस्येव यस्य दृङ् निचिता मलैः ॥ २३ ॥

नकुलान्धः स तत्राह्नि चित्रं पश्यति नो निशि।

**(நகுலாந்தம்) கீரிக்குருடு :**

அதிக தோஷங்கள் சேர்ந்தால் கண் கீரியின் கண்போல் காணப்படும். இந்தநோய் (நகுலாந்தம்) கீரிக்குருடு எனப் படும். பகலில் (பொருளை) பலநிறமாக காண்பர். இரவில் காண இயலாது.

अर्केऽस्तमस्तकन्यस्तगभस्तौ स्तम्भमागताः ॥ २४ ॥

स्थगयन्ति दृशं दोषा दोषान्धः स गदोऽपरः।

**(தோஷாந்த:) இரவுக்குருடு எனப்படும் அந்திமாலை:**

சூரியன் அஸ்தமிக்கும்பொழுது தோஷங்கள் தம்பித மடைந்து கண்ணை மறைக்கின்றன. இது (தோஷாந்த:) இரவுக்குருடு எனப்பெயர் கொண்ட மற்றொரு நோயாகும்.

दिवाकरकरस्पृष्टा भ्रष्टा दृष्टिपथान्मलाः ॥ २५ ॥

विलीनलीना यच्छन्ति व्यक्तमत्राह्नि दर्शनम्।

இந்த நோயில் சூரியனின் கிரணங்களால் பரிசிக்கப்பட்டு, விழியின் மார்க்கத்திலிருந்து தோஷங்கள் நழுவி உருகி மறைவதால் பகலில் தெளிவாகப் பார்வை ஏற்படுகிறது.

उष्णतप्तस्य सहसा शीतवारिनिमज्जनात् ॥ २६ ॥

त्रिदोषरक्तसंपृक्तो यात्यूष्मोर्ध्वं ततोऽक्षिणि।
दाहोषे मलिनं शुक्लमहन्याविलदर्शनम् ॥ २७ ॥

रात्रावान्ध्यं च जायेत विदग्धोष्मेन सा स्मृता।

### உஷ்ண விதக்தா :

உஷ்ணத்தால் துன்பப்பட்டவர், உடனடியாக குளிர்ந்த நீரில் மூழ்கினால் உஷ்ணமானது மூன்று தோஷங்கள் ரத்தம் ஆகியவற்றுடன் சேர்ந்து கொண்டு உடலில் மேல்பகுதிக்கு (தலைக்கு)ச் செல்லுகிறது. ஆகையால் கண்களில் எரிச்சலும், காந்தலும் ஏற்படும். வெண்பகுதி கலக்கமுறும். பகலில் கலங்கிய பார்வை, இரவில் கண்தெரியாமை ஆகியவை உண்டாகும். இந்தநோய் உஷ்ண விதக்தா எனப்படும்.

भृशमम्लाशनाद्दोषैः सास्रैर्या दृष्टिरचिता ॥ २८ ॥

सक्लेदकण्डूकलुषा विदग्धाऽम्लेन सा स्मृता ।

### அம்ல விதக்தா :

புளிப்புச்சுவையுள்ளவற்றை அதிக அளவு புசித்தல் காரணமாக கோபமடைந்த தோஷங்கள் ரத்தம் ஆகியவை கண்களில் பரவி கசிவு, அரிப்பு, கலக்கம் ஆகியவற்றை உண்டாக்கும். இந்நோய் அம்ல விதக்தா எனப்படும்.

शोकज्वरशिरोरोगसन्तप्तस्यानिलादयः ॥ २९ ॥

धूमाविलां धूमदृशं दृशं कुर्युः स धूमरः ।

### தூமரம் :

வருத்தம், ஜ்வரம், தலைநோய் இவற்றால் தாபமடைந்தவருக்கு வாயு முதலிய தோஷங்கள் கண்களை புகைபடிந்தது போன்று செய்துவிடும். பொருளை புகைபடிந்த தோற்றமுடையதாகக் க்காண்பர். இந்த நோயை தூமரம் என்பர்.

सहसैवाल्पसत्त्वस्य पश्यतो रूपमद्भुतम् ॥ ३० ॥

भास्वरं भास्करादिं वा वाताद्या नयनाश्रिताः ।

कुर्वन्ति तेजः संशोष्य दृष्टिं मुषितदर्शनाम् ॥ ३१ ॥

वैडूर्यवर्णां स्तिमितां प्रकृतिस्थामिवाव्यथाम् ।
औपसर्गिक इत्येष लिंगनाशो-

***வெளிக் காரணத்தினாலான லிங்கநாசம் :***

*மனோபலங் குன்றியவருக்கு திடீரென வியப்பூட்டும் (ஆச்சர்யம் உண்டாக்கும்) பொருள்களையாவது மிக்க ஒளி பொருந்திய சூரியன் முதலியவற்றையாவது பார்த்தல் காரணமாக கண்களில் உள்ள தோஷங்கள் அவ்விடத்தில் உள்ள தேஜோ தாதுவை வற்றச் செய்து, பார்க்கும் சக்தியை அழித்துவிடும். கண்களில் வைடூர்ய நிறம், தம்பிதம், ஸ்வபாவமாக இருத்தல் போல் வலியின்மை ஆகியவை காணப்படும். இது வெளிக்காரணத்திலான லிங்கநாசம் எனப்படும்.*

-अत्र वर्जयेत् ॥ ३२ ॥

विना कफाल्लिंगनाशान् गम्भीरां ह्रस्वजामपि ।
षट् काचा नकुलान्धश्च याप्याः, शेषांस्तु साधयेत् ।
द्वादश-

***அசாத்யம் - சாத்யம் :***

*கபத்தால் உண்டானது தவிர மற்ற (ஆறுவித) லிங்க [1]நாசங்கள் (கம்பீரம்) ஆழமானது (ஹ்ரஸ்வம்) குறுகியது ஆகியவற்றை சிகித்ஸைக்கு ஏற்றுக் கொள்ளக் கூடாது. [2]ஆறுவித காசம், (நகுலாந்தம்) கீரிக்குருடு ஆகியவை முற்றிலும் நீங்காவிடினும் பத்திய முறைகளால் காலந் தள்ளக் கூடியவையாகும். [3]மற்ற பனிரெண்டும் சாத்ய மாகும்.*

குறிப்பு: 1. மற்ற லிங்க நாசம் என்பதால் வாதம், பித்தம், ரத்தம் இருதோஷக் கூட்டு, ஸன்னிபாதம், வெளிக் காரணம் ஆகியவற்றால் உண்டான லிங்க நாசங்கள் குறிப்பிடப்படுகின்றன.

2. வாதம், பித்தம், கபம், ரத்தம், இருதோஷக் கூட்டு, ஸன்னிபாதம் ஆகியவற்றால் உண்டான காச நோய் குறிப்பிடப்படுகிறது.

3. வாதம், பித்தம், கபம், ரத்தம், இருதோஷக் கூட்டு, ஸன்னிபாதம் ஆகியவற்றால் உண்டான திமிர வகை ஆறும், கபலிங்க நாசமும், பித்த விதக்த திருஷ்டி, அந்தி மாலை, உஷ்ண விதக்தம், அம்ல விதக்தம், தூமரம் ஆகியவையும் குறிப்பிடப் படுகின்றன.

-इति गदा दृष्टौ निर्दिष्टाः सप्तविंशतिः ॥ ३३ ॥

இவ்வாறு விழியில் உண்டாகும் 27 நோய்களும் விளக்கப்பட்டன.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने दृष्टिरोगविज्ञानीयो नाम द्वादशोऽध्यायः ॥ १२ ॥

உத்தரஸ்தானம் — பன்னிரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ त्रयोदशोऽध्यायः - அத்தியாயம் -13 ]

अथाऽतस्तिमिरप्रतिषेधं व्याख्यास्यामः।
इति हस्माहुरात्रेयादयो महर्षयः।

அடுத்து திமிர நோய்ச் சிகித்ஸை பற்றி விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலானவர் கூறுகின்றனர்.

तिमिरं काचतां याति काचोऽप्यान्ध्यमुपेक्षया।
नेत्ररोगेष्वतो घोरं तिमिरं साधयेद् द्रुतम् ॥ १ ॥

உரிய முறையில் சிகித்ஸை செய்யாததன் காரணமாகத் திமிர நோய் கண் காச நிலையையும், காச நோயானது பார்வை இழப்பு நிலையையும் அடைகின்றன. ஆகையால் கண்ணோய்களுள் மிகவும் கொடூரமான திமிர நோய்க்கு விரைவாக சிகித்ஸை செய்ய வேண்டும்.

तुलां पचेत जीवन्त्या द्रोणेऽपां पादशोषिते।
तत्क्वाथे द्विगुणक्षीरं घृतप्रस्थं विपाचयेत् ॥ २ ॥

प्रपौण्डरीककाकोलीपिप्पलीरोध्रसैन्धवैः।
शताह्वामधुकद्राक्षासितादारुफलत्रयैः ॥ ३ ॥

कार्षिकैर्निशि तत्पीतं तिमिरापहरं परम्।

### ஜீவந்த்யாதி (கீரிப்பாலை) கிருதம் :

100 பலம் கீரிப்பாலையை 16 பிரஸ்த நீரிலிட்டுக் காய்ச்சி நாலில் ஒன்றாய்க் குறுக்கிக் கொள்ள வேண்டும். பிறகு அதனுடன் 1 பிரஸ்தம் நெய், 2 பிரஸ்தம் பால்

ஆகியவற்றையும் வறள் தாமரை, காகோலீ, திப்பிலி, லோத்தி, இந்துப்பு, சதகுப்பை, அதிமதுரம், திராக்ஷை, சர்க்கரை, தேவதாரு, திரிபலை, இவற்றை வகைக்கு 1/4 பலம் எடுத்துக் கல்கமாக்கி சேர்த்துப் பக்குவம் செய்து இரவில் பருக விசேஷமாக திமிர நோயைப் போக்கும்.

द्राक्षाचन्दनमंजिष्ठाकाकोलीद्वयजीवकैः ॥ ४ ॥

सिताशतावरीमेदापुण्ड्राह्वमधुकोत्पलैः ।
पचेज्जीर्णघृतप्रस्थं समक्षीरं पिचून्मितैः ॥ ५ ॥

हन्तितत्काचतिमिररक्तराजीशिरोरुजः ।

**திராக்ஷாதி கிருதம் :**

திராக்ஷை, சந்தனம், மஞ்சிட்டி, காகோலீ, க்ஷீராகாகோலீ, ஜீவகம், சர்க்கரை, தண்ணீர் விட்டான் கிழங்கு, மேதா, நாமக் கரும்பு, அதிமதுரம், நீலோத்பலம் இவற்றை வகைக்கு ¼ பலம் எடுத்து கல்கமாக்கி அதனுடன் 1 பிரஸ்தம் பழைய நெய்யும், ஒரு பிரஸ்தம் பாலும், சேர்த்துப் பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இதை உபயோகிக்க கண்காசம், திமிரம், ஸிரோத்பாதம் (செந்நிறக் கோடு) தலைவலி ஆகியவை நீங்கும்.

पटोलनिम्बकटुकादार्वीसेव्यवरावृषम् ॥ ६ ॥

सधन्वयासत्रायन्तीपर्पटं पालिकं पृथक् ।
प्रस्थमामलकानां च क्वाथयेन्नल्वणेऽम्भसि ॥ ७ ॥

तदाढकेऽर्धपलिकैः पिष्टैः प्रस्थं घृतात्पचेत् ।
मुस्तभूनिम्बयष्ट्याह्वकुटजोदीच्यचन्दनैः ॥ ८ ॥

सपिप्पलीकैस्तत्सर्पिर्घ्राणकर्णाक्षिरोगजित् ।

विद्रधिज्वरदुष्टारुर्विसर्पापचिकुष्ठनुत् ॥ ९ ॥

विशेषाच्छुक्रतिमिरनक्तान्ध्योष्णाम्लदाहकृत् ।

**படோலாதி கிருதம் :**

பேய்ப்புடல், வேம்பு, கடுகரோஹிணீ, மரமஞ்சள், விளாமிச்சை, திரிபலை, ஆடாதோடை, காஞ்சொறி, துராய்ப்பூண்டு, பர்ப்பாடகம் இவை வகைக்கு 1 பலம், நெல்லிக்காய் 1 பிரஸ்தம் இவற்றை 16 பிரஸ்த நீரிலிட்டுக் காய்ச்சி நாலில் ஒன்றாய்க் குறுக்கிக் கொள்ள வேண்டும். அதனுடன் கோரைக்கிழங்கு, நிலவேம்பு, அதிமதுரம், வெட்பாலை யரிசி, விளாமிச்சை, *சந்தனம் திப்பிலி இவற்றை வகைக்கு ½ பலம் எடுத்து கல்கமாக்கி 1 பிரஸ்தம் நெய் சேர்த்து பக்குவம் செய்து உபயோகிக்க நாசி, காது, கண் ஆகியவற்றில் உண்டாகும் நோய்களைப் போக்கும். வித்ருதிக் கட்டி, ஜ்வரம், சிறு கட்டிகள், விஸர்ப்பம், (கழுத்தில் உண்டாவதும், பழுக்காததுமான சிறுகட்டி) அபசீக் கட்டி, குஷ்டம் ஆகிய நோய்களைப் போக்கும். விசேஷமாக நேத்ர சுக்ரம், திமிரம், அந்திமாலை, உஷ்ண விதக்தம், அம்ல விதக்தம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: *सत्योवयत्यैः என்ற பாடத்தில் திரிகடு, செவ்வியம் என்று பொருள் கொள்ளவேண்டும்.

त्रिफलाष्टपलं काथ्यं पादशेषं जलाढके ॥ १० ॥

तेन तुल्यपयस्केन त्रिफलापलकल्कवान् ।
अर्धप्रस्थो घृतात्सिद्धः सितया माक्षिकेण वा ॥ ११ ॥

युक्तंपिबेत्तत्तिमिरी तद्युक्तं वा वरारसम् ।

## திரிபலா கிருதம்:

8 பலம் திரிபலையை 4 பிரஸ்த நீரிலிட்டுக் காய்ச்சி நாலில் ஒன்றாய்க் குறுக்கிக் கொள்ள வேண்டும். அந்தக் கஷாயத் துடன் சமஅளவு பாலும், திரிபலா கல்கம் 1 பலமும், நெய் ½ பிரஸ்தமும் சேர்த்துப் பக்குவம் செய்ய வேண்டும். திமிர நோயாளி இதை சர்க்கரையுடனாவது, தேனுடனாவது பருக வேண்டும். அல்லது திரிபலைக் கஷாயத்தை இந்த நெய் கலந்து பருக வேண்டும்.

यष्टीमधुद्विकाकोलीव्याघ्रीकृष्णामृतोत्पलैः ॥ १२ ॥

पालिकैः ससिताद्राक्षैर्घृतप्रस्थं पचेत्समैः ।
अजाक्षीरवरावासामार्कवस्वरसैः पृथक् ॥ १३ ॥

महात्रैफलमित्येतत्परं दृष्टिविकारजित् ।

## மகா த்ரைபலா கிருதம் :

அதிமதுரம், காகோலீ, க்ஷீரகாகோலீ, கண்டங்கத்திரி, திப்பிலி, சீந்தில், நீலோத்பலம், சர்க்கரை, திராக்ஷை இவற்றை வகைக்கு 1 பலம் எடுத்து கல்கமாக்கி அதனுடன் நெய், ஆட்டுப்பால், திரிபலா கஷாயம், ஆடாதோடைச் சாறு, கரிசாலைச் சாறு ஆகியவற்றை வகைக்கு 1 பிரஸ்தம் கலந்து பக்குவம் செய்து கொள்ள வேண்டும். இந்தக் கிருதம் மகாதிரிபலா க்ருதம் எனப்படும். கண்ணோய்களை விசேஷமாகப் போக்கும்.

त्रैफलेनाथ हविषा लिहानस्त्रिफलां निशि ॥ १४ ॥

यष्टीमधुकसंयुक्तां मधुना च परिप्लुताम् ।
मासमेकं हिताहारः पिबन्नामलकोदकम् ॥ १५ ॥

सौपर्णं लभते चक्षुरित्याह भगवान्निमिः ।

திரிபலா சூர்ணத்தை அதிமதுரத் தூள் கலந்து தேனில் குழப்பி திரிபலா கிருதத்துடன் இரவில் ஒரு மாதம் உட்கொள்ள வேண்டும். இதமான உணவு உண்பதுடன் நெல்லிச் சாற்றையும் பருகி வருபவருக்கு கருடனுடைய பார்வைக்கு ஒப்பான பார்வை உண்டாகுமென பகவான் நிமி கூறுகிறார்.

ताप्यायोहेमयष्ट्याह्वसिताजीर्णाज्यमाक्षिकैः ॥ १६ ॥

संयोजिता यथाकामं तिमिरघ्नी वरा वरा ।

**திரிபலா உபயோகம் :**

திரிபலையை விருப்பம் போல் பொன் நிமிளை, இரும்பு, பொன், அதிமதுரம், சர்க்கரை, நாட்பட்ட நெய், தேன், இவற்றுடன் கலந்து உபயோகிக்க திமிர நோய் நீங்கும். இம்முறை மிகச் சிறந்ததாகும்.

सघृतं वा वराक्वाथं शीलयेत्तिमिरामयी ॥ १७ ॥

अपूपसूपसक्तून्वा त्रिफलाचूर्णसंयुतान् ।

திமிர நோயாளி திரிபலா கஷாயத்தை நெய் கலந்து பருகிவர வேண்டும் அல்லது அப்பம், பருப்பு வகை, சத்துமா ஆகியவற்றை திரிபலா சூர்ணம் கலந்து உட்கொள்ளும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

पायसं वा वरायुक्तं शीतं समधुशर्करम् ॥ १८ ॥

பாலில் சமைத்த அன்னத்தைக் குளிர வைத்து தேனும், சர்க்கரையும் *கலந்து திரிபலையுடன் உட்கொள்ள வேண்டும்.

குறிப்பு: *திரிபலைக் கஷாயத்துடன் உண்ண வேண்டும் என கைரளியில் கூறப்படுகிறது.

प्रातर्भक्तस्य वा पूर्वमद्यात्पथ्यां पृथक् पृथक् ।
मृद्वीकाशर्कराक्षौद्रैः सततं तिमिरातुरः ॥ १९ ॥

திமிர நோயாளி கடுக்காயை திராட்சை, சர்க்கரை, தேன் இவற்றுள் ஒன்றுடன் ஒவ்வொரு நாளும் காலை அல்லது உணவிற்கு முன் உட்கொள்ள வேண்டும்.

स्रोतोजांशांश्चतुः षष्टिं ताम्रायोरूप्यकांचनैः ।
युक्तान् प्रत्येकमेकांशैरन्धमूषोदरस्थितान् ॥ २० ॥

ध्मापयित्वा समावृत्तं ततस्तच्च निषेचयेत् ।
रसस्कन्धकषायेषु सप्तकृत्वः पृथक् पृथक् ॥ २१ ॥

वैडूर्यमुक्ताशंखानां त्रिभिर्भागैर्युतं ततः ।
चूर्णांजनं प्रयुंजीत तत्सर्वतिमिरापहम् ॥ २२ ॥

சூர்ணாஞ்ஜனம் :

அஞ்சனக்கல் 64 பங்கு, தாமிரம், அயம், வெள்ளி, தங்கம் ஆகியவை வகைக்கு 1 பங்கு இவற்றை [1]எடுத்து அந்த மூஷை (குடுவை)யிலிட்டு எரித்து எடுத்து, பிறகு அதன் தூளை [2]மதுரகணம் முதலிய சரக்குகளின் கஷாயம் ஒவ்வொன்றிலும் ஏழு ஏழுமுறை [3]போட்டு எடுக்க வேண்டும். அதனுடன் வைடூரியம், முத்து, சங்கு இவற்றை வகைக்கு 1 பங்கு சேர்க்க வேண்டும். பிறகு சூரணித்து அஞ்ஜனமிட எல்லா விதமான திமிர நோய்களையும் போக்கும்.

குறிப்பு : 1. மூஷையை மேல் புறமும் மூடி எரித்தல் "அந்த மூஷை" எனப்படும். ஒரு பக்கம் துளையுள்ளதும்,

மற்ற இடங்களில் மூடப்பட்டதுமான மூஷை, "அந்த மூஷை" எனவும் கூறுவர்.

2. மதுரகணம் முதலிய என்பதால் அறுவகைச் சுவைகளுக்கு தனித்தனியாக கூறப்பட்ட கணங்கள் குறிப்பிடப் படுகின்றன. அவற்றை ஸூத்.அத். 10-ல் காணலாம்.

3. ஒவ்வொரு தடவையும் மூஷையிலிட்டுக் காய்ச்சி கஷாயத்திலிட வேண்டும்.

मांसीत्रिजातकायःकुंकुमनीलोत्पलाभयातुत्थैः ।
सितकाचशंखफेनकमरिचांजनपिप्पलीमधुकैः ॥ २३ ॥

चन्द्रेऽश्विनीसनाथे सुचूर्णितैरंजयेद्युगुलमक्ष्णोः ।
तिमिरार्मरक्तराजीकण्डूकाचादिशममिच्छन् ॥ २४ ॥

சடாமாஞ்சில், லவங்கப் பட்டை, ஏலம், லவங்கப் பத்திரி, அயம், குங்குமப்பூ, நீலோத்பலம், கடுக்காய், துத்தம், வெள்ளை ஸ்படிகம், சங்கு, கடல் நுரை, மிளகு, அஞ்சனக்கல், திப்பிலி, அதிமதுரம் இவற்றை (சந்திரன் அசுவினி நட்சத்திரத்தில் இருக்கும் நாளில்) நுண்ணிய பொடியாக்கி இரண்டு கண்களிலும் அஞ்ஜனமிட வேண்டும். இதனால் திமிரம், அர்ம நோய், செந்நிறக் கோடு, அரிப்பு, கண் காசம் முதலியவை நீங்கும்.

मरिचवरलवणभागौ भागौ द्वौ कणसमुद्रफेनाभ्याम् ।
सौवीरभागनवकं चित्रायां चूर्णितं कफामयजित् ॥ २५ ॥

மிளகு 1 பங்கு, இந்துப்பு 1 பங்கு, திப்பிலி 2 பங்கு, கடல் நுரை 2 பங்கு, ஸௌவீராஞ்ஜனம் 9 பங்கு (ஒன்று சேர்த்து)

சித்திரை நட்சத்திரத்தன்று சூர்ணித்து கண்ணிலிட கபத்தா லான கண்ணோய்கள் நீங்கும்.

**குறிப்பு:** *मरिचवर என்பதைச் செம்முருங்கை விதை எனச் சிலர் கூறுவர்.

द्राक्षामृणालीस्वरसे क्षीरमद्यवसासु च।
पृथक् दिव्याप्सु स्रोतोजं सप्तकृत्वो निषेचयेत्॥ २६॥

तच्चूर्णितं स्थितं शंखे दृक्प्रसादनमंजनम्।
शस्तं सर्वाक्षिरोगेषु विदेहपतिनिर्मितम्॥ २७॥

அஞ்ஜனக் கல்லை (காய்ச்சிய பின்னர்) திராட்சைச் சாறு, தாமரைத் தண்டுச் சாறு, பால், மதுவகை, மாம்ஸ எண்ணெய், (காங்கோதகம்) சுத்தமான மழைநீர், இவை ஒவ்வொன்றிலும் ஏழு முறை போட்டு வைக்க வேண்டும். பிறகு சூர்ணம் செய்து சங்கில் வைத்திருந்து அஞ்ஜனமிட கண்களுக்கு தெளிவு உண்டாகும். கண்ணில் எல்லாப் பகுதிகளிலும் உண்டாகும் நோய்களிலும் ஏற்றதாகும். இம்முறை விதேஹ நாட்டரசரால் கூறப்பட்டதாகும்.

निर्दग्धं बादरांगारैस्तुत्थं चेत्थं निषेचितम्।
क्रमादजापयःसर्पिःक्षौद्रे तस्मात् पलद्वयम्॥ २८॥

कार्षिकैस्ताप्यमरिचस्रोतोजकटुकानतैः।
पटुरोध्रशिलापथ्यकणैलांजनफेनकैः॥ २९॥

युक्तं पलेन यष्ट्याश्च मूषान्तर्ध्मातचूर्णितम्।
हन्ति काचार्मनक्तान्ध्यरक्तराजीः सुशीलितः॥ ३०॥

चूर्णो विशेषात्तिमिरं भास्करो भास्करो यथा।

**பாஸ்கர சூர்ணம் :**

இலந்தைக் கட்டையின் தணலில் மயில் துத்தத்தைக் காய்ச்சி *ஆட்டுப்பால், நெய், தேன் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் அவ்வாறே (மேற்சொல்லப் பெற்றவாறே 7 தடவை) நனைக்க வேண்டும். அத்தகைய மயில் துத்தம் இரண்டு பலம், பொன் நிமிளை, மிளகு, ஸ்ரோதோஞ்ஜனம், கடுகரோஹிணீ, தகரை, இந்துப்பு, லோத்தி, மனோசிலை, கடுக்காய், திப்பிலி, ஏலம், ஸௌவீராஞ்ஜனம், கடல் நுரை இவை வகைக்கு ¼ பலம், அதிமதுரம் 1 பலம், ஆகிய வற்றைச் சேர்த்து மூஷையிலிட்டு ஊதி எடுத்து சூர்ணிக்க வேண்டும். பாஸ்கரம் என்ற இந்த சூர்ணத்தை பழக்கமாக உபயோகிக்க மேற்சொன்ன கண்காசம், அர்ம நோய், அந்திமாலை, சிவப்புக் கோடுகள் ஆகியவையும், விசேஷமாக திமிர நோயும், சூரியனால் இருள் விலகுவது போல நீங்கும்.

குறிப்பு: *ஆட்டின் நெய் என்றும் கூறுவர்.

त्रिंशाद्भागा भुजंगस्य गन्धपाषाणपंचकम् ॥ ३१ ॥

शुल्बतालकयोर्द्वौ द्वौ वंगस्यैकोऽञ्जनात्त्रयम् ।
अन्धमूषीकृतं ध्मातं पक्वं विमलमंजनम् ॥ ३२ ॥

तिमिरान्तकरं लोके द्वितीय इव भास्करः ।

**விமலாஞ்ஜனம் :**

[1]காரீயம் 30 பங்கு, கந்தபாஷாணம் (கந்தகம்) 5 பங்கு, தாம்ரம் 2 [2]பங்கு தாளகம் 2 பங்கு, வெள்ளீயம் 1 பங்கு, அஞ்சனக்கல் 3 பங்கு இவற்றை அந்த மூஷையிலிட்டு ஊதி, பக்குவம் செய்ய வேண்டும். இது விமலாஞ்ஜனம்

எனப்படும். (இருளைப் போக்குகின்ற) இரண்டாவது சூரியன் போல் திமிர நோயைப் போக்கும்.

குறிப்பு: 1. சுத்தி செய்யப்பட்டவைகளையே உபயோகிக்க வேண்டும்.

2. तारक வெள்ளி என்றும் பாடம் உண்டு.

गोमूत्रेछगणरसेऽम्लकांजिके च स्त्रीस्तन्ये हविषि विषे च माक्षिके च।
यत्तुत्थं ज्वलितमनेकशो निषिक्तं तत्कुर्याद्गरुडसमं नरस्य चक्षुः ॥ ३३॥

துத்தத்தை நெருப்பிலிட்டு பழுக்கக் காய்ச்சி பசுமூத்ரம், பசுஞ்சாண நீர், புளித்தகாடி, தாய்ப்பால், நெய், நீர், தேன் ஆகியவை *ஒவ்வொன்றிலும் பலதடவை இட்டு எடுத்து உபயோகிக்க கருடனின் பார்வையை ஒத்த பார்வையை உண்டாக்கும்.

குறிப்பு: *இவ்வாறு 7 தடவை இட வேண்டுமென அருணதத்தர் கூறுகிறார்.

श्रेष्ठाजलं भृंगरसं सविषाज्यमजापयः।
यष्टीरसं च यत्सीसं सप्तकृत्वः पृथक् पृथक् ॥ ३४ ॥

तप्तं तप्तं पायितं तच्छलाका नेत्रे युक्ता साञ्जनाऽनंजना वा।
तैमिर्यार्मस्रावपैच्छिल्यपैल्लं कण्डूं जाड्यं रक्तराजीं च हन्ति ॥ ३५ ॥

*சலாகை :*

*காரீயத்தைப் பழுக்கக் காய்ச்சிக் காய்ச்சி திரிபலா கஷாயம், கரிசாலைச் சாறு, நீர், நெய், ஆட்டுப்பால், அதி மதுர கஷாயம் ஆகியவை ஒவ்வொன்றிலும் ஏழு தடவை இட்டு எடுக்க வேண்டும். பிறகு அதனால் (சலாகை) குச்சி தயாரித்து அதை அஞ்ஜனத்துடனாவது, தனித்தாவது உபயோகிக்க திமிரம், அர்மம், கசிவு, வழவழப்பு, பில்ல*

நோய், அரிப்பு, திமிர்த்தல், செந்நிறக் கோடு ஆகியவற்றைப் போக்கும்.

रसेन्द्रभुजगौ तुल्यौ तयोस्तुल्यमथांजनम् ।
ईषत्कर्पूरसंयुक्तमंजनं तिमिरापहम् ॥ ३६ ॥

பாதரஸம், காரீயம் ஆகியவை சம அளவு அவற்றின் கூட்டுக்கு சமஅளவு அஞ்ஜனக்கல் கர்ப்பூரம் [1]சிறிதளவு இவற்றைக் கலந்து அஞ்ஜனமிட திமிர நோய் நீங்கும்.

**குறிப்பு:** ⋆கர்ப்பூரம் 1/16 பங்கு.

यो गृध्रस्तरुणरविप्रकाशगल्लस्तस्यास्यं समयमृतस्य गोशकृद्भिः ।
निर्दग्धं समधृतमंजनं च पेष्यं योगोऽयं नयनबलं करोति गार्ध्रम् ॥ ३७॥

இளஞ் சூரியனைப் போன்ற மிகச் சிவப்பு நிறமுள்ள கன்னப்பகுதி கொண்ட கழுகு உரிய காலத்தில் இறந்தவுடன் அதன் முகத்தை பசுஞ் சாணத்தால் எரித்து அதற்கு சம அளவு அஞ்ஜனக்கல் கூட்டி அரைக்க வேண்டும். இதைக் கண்ணிலிட கழுகுப் பார்வை போன்ற பார்வை பலம் உண்டாகும்.

कृष्णसर्पवदने सहविष्कं दग्धमंजनमनिसृतधूमम् ।
चूर्णितं नलदपत्रविमिश्रं भिन्नतारमपि रक्षति चक्षुः ॥ ३८ ॥

கருநாகத்தின் முகத்தில் நெய்யுடன் அஞ்ஜனக் கல்லை வைத்து புகை வெளியேறாதவாறு எரித்து [1]அதனுடன் விளாமிச்சை, பச்சிலை ஆகியவற்றைக் கலந்து சூரணித்து விழி பிளந்து விட்ட கண்ணையும் காப்பாற்றும்.

**குறிப்பு:** 1. ஜடாமாம்ஸீ என அருணதத்தர் கூறுகிறார்.

2. கருநாகத்தின் வாயில் நெய்யையும், அஞ்ஜனக் கல்லையும் வைத்து தர்ப்பையினால் சுற்றி மண்

பூசி, பாம்பின் வாயை கீழ் நோக்கி வைத்து பசுஞ் சாணத்தால் எரித்து, அஞ்ஜனக் கல்லை எடுக்க வேண்டும் எனவும், பச்சிலை, விளாமிச்சை, நீலோத்பலம், ஆகிய சமஅளவு கலக்க வேண்டு மெனவும், சங்கிரஹம் 19-வது அத்தியாயத்தில் ஒரு யோகம் காணப்படுகிறது.

कृष्णंसर्पं मृतं न्यस्य चतुरश्चापि वृश्चिकान् ।
क्षीरकुम्भे त्रिसप्ताहं क्लेदयित्वा प्रमन्थयेत् ॥ ३९ ॥

तत्र यन्नवनीतं स्यात्पुष्णीयात्तेन कुक्कुटम् ।
अन्धस्तस्य पुरीषेण प्रेक्षते ध्रुवमंजनात् ॥ ४० ॥

இறந்து போன கருநாகத்தையும், நான்கு தேள்களையும் பால் நிரம்பிய குடத்தில் கொதிக்க வைத்து 21 நாட்களுக்குப் பின் கடைந்து எடுத்த வெண்ணெயை கோழிக்கு கொடுத்து வளர்க்க வேண்டும். அந்தக் கோழியின் மலத்தை அஞ்ஜனமிட குருடரும் பார்வை பெறுவர் என்பது உறுதி.

कृष्णसर्पवसा शंखः कतकात् फलमंजनम् ।
रसक्रियेयमचिरादन्धानां दर्शनप्रदा ॥ ४१ ॥

கருநாகத்தின் மாம்ஸ எண்ணெய், சங்கு, தேற்றான் கொட்டை, ஸௌவீராஞ்ஜனம், இவற்றால் ரஸக்ரியை செய்து உபயோகிக்க குருடருக்கும் விரைவில் பார்வை கிட்டும்.

मरिचानि दशार्धपिचुस्ताप्यात्तुत्थात्पलं पिचुर्यष्ट्याः ।
क्षीरार्द्रदग्धमंजनमप्रतिसाराख्यमुत्तमं तिमिरे ॥ ४२ ॥

## அப்பிரதிஸாராஞ்ஜனம்:

மிளகு (எண்ணிக்கையில்) 10, பொன்னி மிளை 1/8 பலம், துத்தம் 1 பலம், அதிமதுரம் ¼ பலம் இவற்றைப் பாலில்

நனைத்துப் பிறகு (மூஷையிலிட்டு) எரித்து திமிர நோயில் அஞ்ஜனமிடுவது சிறந்ததாகும். இது அப்பிரதிஸாரம் (மறுக்க முடியாதது) எனப்படும்.

अक्षबीजमरिचामलकत्वक्तुत्थयष्टिमधुकैर्जलपिष्टैः ।
छाययैव गुटिकाः परिशुष्का नाशयन्ति तिमिराण्यचिरेण ॥ ४३ ॥

தான்றி விதை, மிளகு, நெல்லிப் பட்டை, மயில்துத்தம், அதிமதுரம் ஆகியவற்றை நீர் விட்டரைத்து குளிகை செய்து நிழலிலுலர்த்தி உபயோகிக்க திமிர நோயை விரைவில் போக்கும்.

मरिचामलकजलोद्भवतुत्थांजनताप्यधातुभिः क्रमवृद्धैः ।
षण्माक्षिक इति योगस्तिमिरार्मक्लेदकाचकण्डूहन्ता ॥ ४४ ॥

**ஷண்மாக்ஷிகம்[1] :**

மிளகு, நெல்லி, [2]சங்கு, மயில்துத்தம், அஞ்ஜனக்கல், ஸ்வர்ண மாக்ஷிகம், ஆகியவற்றை அடுத்தடுத்து ஒரு பங்கு அதிகமாக இருக்கும்படி எடுத்து அரைத்து உபயோகிக்க திமிரம், அர்மம், கசிவு, கண்காசம், அரிப்பு ஆகியவற்றைப் போக்கும். இது ஷண்மாக்ஷிகம் எனப்படும்.

குறிப்பு: 1. ஆறு பங்கு ஸ்வர்ண மாக்ஷிகம் சேர்க்கப் படுவதால் ஷண்மாக்ஷிகம் எனப் பெயர்படும்.

2. கடல் நுரை என்றும், தாமரை என்றும் பொருள் கூறுவர்.

रत्नानि रूप्यं स्फटिकं सुवर्णं स्रोतोंजनं ताम्रमयः सशंखम् ।
कुचन्दनं लोहितगैरिकं च चूर्णांजनं सर्वदृगामयघ्नम् ॥ ४५ ॥

(வைரம், மரகதம் முதலிய) இரத்னங்கள், வெள்ளி, ஸ்படிகம், தங்கம், அஞ்ஜனக்கல், தாமிரம், அயம், சங்கு,

மஞ்சள் சந்தனம், செங்காவி இவற்றைச் சூர்ணித்து அஞ்ஜனமாக பிரயோகிக்க எல்லா விதமான கண்ணோய் களையும் போக்கும்.

குறிப்பு: ⋆लोहित என்ற மூலச் சொல் தனித்து செஞ்சந்தனத்தைக் குறிப்பதாக கைரளியிலும், குங்குமப்பூ எனச் சிலர் கூறுவர் என்பதாக அருணதத்தர் உரையிலும் காணப்படுகின்றது.

तिलतैलमक्षतैलं भृंगस्वरसोऽसनाच्च निर्यूहः ।
आयसपात्रविपक्कं करोति दृष्टेर्बलं नस्यम् ॥ ४६ ॥

நல்லெண்ணெய், தான்றியெண்ணெய், கரிசாலைச் சாறு, வேங்கையின் கஷாயம், ஆகியவற்றை இரும்புப் பாத்தி ரத்தில் இட்டு பக்குவம் செய்து நசியம் செய்ய கண்களுக்கு பலமுண்டாகும்.

குறிப்பு: நல்லெண்ணெய் முதலியன சமஅளவு என கைரளியில் கூறப்படுகிறது.

दोषानुरोधेन च नैकशस्तं स्नेहास्रविस्रावणरेकनस्यैः ।
उपाचरेदंजनमूर्धबस्तिबस्तिक्रियातर्पणलेपसेकैः ॥ ४७ ॥

திமிர நோயாளிக்கு தோஷத்திற்கேற்ப நெய்ப்புப் பொருள் பிரயோகித்தல், ரத்தத்தை வெளியேற்றுதல், விரேசனம், நஸ்யம், ⋆அஞ்ஜனம் சிரோபஸ்தி, பஸ்திப் பிரயோகம், கண்ணில் நெய்ப்புப் பொருள் நிரம்புதல், பூச்சு, திரவப் பொருளை ஊற்றுதல் ஆகியவற்றால் பலதடவை சிகித்ஸை செய்ய வேண்டும்.

குறிப்பு: ⋆சிரோபஸ்தி ஸூத்.அத்.22-ல் விளக்கப் பட்டுள்ளது.

सामान्यं साधनमिदम्-

இவ்வாறு பொது சிகித்ஸை கூறப்பட்டது.

-प्रतिदोपमतः शृणु ॥ ४८ ॥

அடுத்து தனித்த தோஷங்களால் உண்டாகும் திமிர நோய்க்கு சிகித்ஸை கூறப்படுகிறது.

वातजे तिमिरे तत्र दशमूलाम्भसा घृतम् ।
क्षीरे चतुर्गुणे श्रेष्ठाकल्कपक्वं पिबेत्ततः ॥ ४९ ॥

**வாத திமிர நோய்க்கு சிகித்ஸை :**

இவற்றுள் வாத திமிர நோயில் தசமூல கஷாயத்துடன் நெய்யும், நெய்க்கு நான்கு மடங்கு பாலும், திரிபலையின் கல்கமும் சேர்த்துப் பக்குவம் செய்து பருக வேண்டும்.

त्रिफलापञ्चमूलानां कपायं क्षीरसंयुतम् ।
एरण्डतैलसंयुक्तं योजयेच्च विरेचनम् ॥ ५० ॥

இவ்வாறு நெய்ப்பு உண்டாக்கிய பின் *திரிபலை பஞ்சமூலம் இவற்றின் கஷாயத்துடன் பாலும், ஆமணக்கு எண்ணெயும் கலந்து விரேசனத்திற்காகப் பிரயோகிக்க வேண்டும்.

समूलजालजीवन्तीतुलां द्रोणेऽम्भसः पचेत् ।
अष्टभागस्थिते तस्मिंस्तैलप्रस्थं पयः समम् ॥ ५१ ॥

बलात्रितयजीवन्तीवरीमूलैः पलोन्मितैः ।
यष्टीपलैश्चतुर्भिश्च लोहपात्रे विपाचयेत् ॥ ५२ ॥

लोह एव स्थितं मासं नावनादूर्ध्वजत्रुजान् ।

वातपित्तामयान् हन्ति तद्विशेषाद्दृगाश्रयान् ॥ ५३ ॥

केशास्यकन्धरास्कन्धपुष्टिलावण्यकान्तिदम् ।

வேருடன் கூடிய 100 பலம் கீரிப் பாலையை 16 பிரஸ்த நீரிலிட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகக் குறுக்கி அதற்குச் சமஅளவு [1]பாலும் 1 பிரஸ்தம் நல்லெண்ணெயும், கலந்து சிற்றாமுட்டி, பேராமுட்டி, யானைத் துத்தி, கீரிப்பாலை, தண்ணீர் விட்டான் ஆகியவற்றின் வேர் வகைக்கு 1 பலம், அதிமதுரம் 4 பலம் ஆகியவற்றின் கல்கத்தையும் சேர்த்து இரும்புப் பாத்திரத்திலிட்டு பக்குவம் செய்ய வேண்டும். இரும்புப் பாத்திரத்திலேயே ஒரு மாதம் வைக்க வேண்டும். இதை நசியமிட கழுத்துக்கு மேல் பாகத்தில் வாத பித்தங்கள் காரணமாக உண்டாகும் நோய்களையும் விசேஷமாக கண்ணோய்களையும் போக்கும். கேசம், முகம், கழுத்து, தோள் ஆகியவற்றிற்கு பலம், அழகு, ஒளி ஆகியவற்றை உண்டாக்கும்.

குறிப்பு: 1. கல்கத்தின் அளவு அதிகமாக இருந்ததால் இரட்டித்தல் பரிபாஷையை அனுசரித்து பிரஸ்தம் என்பது 32 பலம் எனக் கொள்ள வேண்டும்.

सितैरण्डजटासिंहीफलदारुवचानतैः ॥ ५४ ॥

घोपया बिल्वमूलैश्च तैलं पक्वं पयोन्वितम् ।
नस्यं सर्वोर्ध्वजत्रूत्थवातश्लेष्माभयार्तिजित् ॥ ५५ ॥

வெள்ளாமணக்கு [1]வேர், கண்டங்கத்திரிப் [2]பழம், தேவதாரு, [3]வசம்பு, தகரவிதை, சதகுப்பை, பில்வவேர் ஆகியவற்றின் கல்கமும், பாலும் சேர்த்துத் தைலம் பக்குவம் செய்து நசியமிட; கழுத்துக்கு மேல் பாகங்களில் வாத கபங்கள் உண்டாகும் எல்லா நோய்களையும் வெல்லும்.

குறிப்பு: 1. जटा-என்னும் மூலச்சொல் - சடாமாஞ்சிலையும்,

2. फल-என்னும் மூலச்சொல் மருக்காரையும் குறிப்பதாக கைரளியில் கூறப்பட்டுள்ளது.

3. दारुवचा-என்பதற்குப் பதிலாக दारुनिशा-என்னும் பாடத்தில் மர மஞ்சள் எனக் கொள்ள வேண்டும்.

वसाऽञ्जने च वैयाघ्री वाराही वा प्रशस्यते।
गृध्राहिकुक्कुटोत्था वा मधुकेनान्विता पृथक्॥ ५६॥

புலி அல்லது [1]பன்றியின் மாம்ஸ எண்ணெயை [2]அஞ்ஜனமிடுவது சிறந்தது. அல்லது கழுகு, பாம்பு, கோழி இவற்றுள் ஒன்றின் மாம்ஸ எண்ணெயுடன் அதிமதுரம் சேர்த்து அஞ்ஜனமிடலாம்.

குறிப்பு: 1. புலி முதலியவற்றின் மாம்ஸ எண்ணெயுடனும் அதிமதுரம் கலந்து உபயோகிக்கும்படி இந்து கூறுகிறார்.

2. நசியமும் செய்யலாம் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

प्रत्यंजने च स्रोतोजं रसक्षीरघृते क्रमात्।
निषिक्तं पूर्ववद्योज्यं तिमिरघ्नमनुत्तमम्॥ ५७॥

**(பிறகு செய்ய வேண்டியது) பிரத்யஞ்ஜனம் :**

அஞ்ஜனக் கல்லை (சூடாக்கி) அடுத்தடுத்து மாம்ஸரஸம், பால், நெய், ஆகியவற்றில் போட்டெடுத்து [2]முன் கூறியவாறு அஞ்ஜனமிட வேண்டும். இது திமிர நோயைப் போக்குவதில் சிறந்ததாகும்.

குறிப்பு:1. அஞ்ஜனமிட்டதால் கண்ணுக்கு ஏற்பட்ட தீமையை அகற்றுவதற்காக பிரயோகிக்கப்படும் மாற்று அஞ்ஜனம் பிரத்தியஞ்ஜனம் எனப்படும்.

2. முற்கூறியவாறு என்பதால் அதிமதுரம் சேர்த்து உபயோகிக்க வேண்டுமென்பது கூறப்படுகிறது.

न चेदेवं शमं याति ततस्तर्पणमाचरेत्।

இவ்வாறு சிகித்ஸை செய்தும் வாத திமிர நோய் நீங்காவிடில் கண்ணில் நெய்ப்புப் *பொருளை நிரப்ப வேண்டும்.

குறிப்பு: *கண்ணில் நெய்ப்புப் பொருளை (தர்ப்பணம்) இடும் முறை ஸுத். அத்தி.24-ல் விளக்கப் பட்டுள்ளது.

शताह्वाकुष्ठनलदकाकोलीद्वययष्टिभिः ॥ ५८ ॥

प्रपौण्डरीकसरलपिप्पलीदेवदारुभिः।<br>
सर्पिरष्टगुणक्षीरं पक्कं तर्पणमुत्तमम् ॥ ५९ ॥

சதகுப்பை, கோஷ்டம், சடாமாஞ்சில், காகோலீ, க்ஷீரகாகோலீ, அதிமதுரம், நாமக் கரும்பு, சரள தேவதாரு, திப்பிலி, தேவதாரு இவற்றை கல்கமாக்கி நெய்யும் அதற்கு 8 மடங்கு பாலும் சேர்த்துப் பக்குவம் செய்து தர்ப்பணமாக நிரப்பச் சிறந்ததாகும்.

मेदसस्तद्वदैणेयाद्दग्धसिद्धात् खजाहतात्।<br>
उद्धृतं साधितं तेजो मधुकोशीरचन्दनैः ॥ ६० ॥

கறுப்பு மானின் கொழுப்பை பாலிலிட்டு, பக்குவம் செய்து கடைந்தெடுத்த நெய்ப்புப் பொருளை, அதிமதுரம்,

விளாமிச்சை, சந்தனம் ஆகியவற்றுடன் சேர்த்துப் பக்குவம் செய்து கண்ணில் நிரப்பலாம்.

श्वाविच्छल्यकगोधानां दक्षतित्तिरिबर्हिणाम् ।
पृथक्पृथगनेनैव विधिना कल्पयेद्रसाम् ॥ ६१ ॥

இருவகை முள்ளம் பன்றி, உடும்பு, கோழி, தித்திரிப் பறவை, மயில் ஆகியவற்றின் மாம்ஸ எண்ணெயையும் தனித்தனியாக இவ்வாறே பக்குவம் செய்து நிரப்ப உபயோகிக்கலாம்.

प्रसादनं स्नेहनं च पुटापाकं प्रयोजयेत् ।

தெளிவு உண்டாக்குவதும், நெய்ப்புச் *செய்வதுமான புடபாகத்தையும் பிரயோகிக்கலாம்.

குறிப்பு: *புட பாகத்தின் விளக்கத்தை ஸூத்ர.அத். 24-ல் காண்க.

वातपीनसवच्चात्र निरूहं सानुवासनम् ॥ ६२ ॥

இந்த வாத திமிர நோயில், வாத பீனிசத்திற்கு கூறப்பட இருக்கிற முறையிலும் சிகித்ஸை செய்ய வேண்டும். அனுவாஸன பஸ்தியும், கஷாய பஸ்தியும் ஏற்றவையாகும்.

पित्तजे तिमिरे सर्पिर्जीवनीयफलत्रयैः ।
विपाचितं पाययित्वा स्निग्धस्य व्यधयेत्सिराम् ॥ ६३ ॥

**பித்த திமிர சிகித்ஸை :**

பித்த திமிர நோயில் [1]ஜீவனீய கணச் சரக்குகளையும் திரிபலையையும் சேர்த்து நெய் பக்குவம் செய்து பருகச் செய்து நெய்ப்பு உண்டான [2]பின் ஸிரையை குத்த வேண்டும்.

குறிப்பு: 1. ஜீவனீய கணம் ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது.

2. சரக்குகளின் கஷாயம் கல்கம் ஆகியவற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்ய வேண்டுமென கைரளியில் காணப்படுகிறது. நெற்றியில் ஸிரையைக் குத்த வேண்டும்.

शर्करैलात्रिवृच्चूर्णैर्मधुयुक्तैर्विरेचयेत् ।

தேனுடன் சர்க்கரை, ஏலம், சிவதைச் சூர்ணம் ஆகிய வற்றைக் கலந்து கொடுத்து விரேசனம் உண்டாக்க வேண்டும்.

सुशीतान् सेकलेपादीन् युंज्यान्नेत्रास्यमूर्धसु ॥ ६४ ॥

குளிர்ச்சி உள்ளவையான நனைத்தல், பூச்சு முதலிய வற்றை கண்கள், முகம், தலை ஆகியவற்றில் பிரயோகிக்க வேண்டும்.

सारिवापद्मकोशीरमुक्ताशाबरचन्दनैः ।
वर्तिः शस्ताऽञ्जने, चूर्णस्तथा पद्मोत्पलाञ्जनैः ॥ ६५ ॥

सनागपुष्पकर्पूरयष्ट्याह्वस्वर्णगैरिकैः ।

நன்னாரி, பதிமுகம், *விளாமிச்சை முத்து, வெள்ளை லோத்தி, சந்தனம் இவற்றைச் சேர்த்து திரிபோல குளிகை தயாரித்து அஞ்ஜனமிடலாம். அவ்வாறே தாமரை, நீலோத் பலம், அஞ்ஜனக்கல், சிறு நாகப்பூ, பச்சைக் கர்ப்பூரம், அதிமதுரம், பொன்காவி ஆகியவற்றின் சூர்ணத்தையும் அஞ்ஜனமிடலாம்.

குறிப்பு: *मुस्ता என்னும் பாடத்தில் கோரைக் கிழங்கு எனக் கொள்ள வேண்டும்.

सौवीरांजनतुत्थकशृंगीधात्रीफलस्फटिककर्पूरम् ॥ ६६ ॥

पंचांशं पंचांशं त्र्यंशमथैकांशमंजनं तिमिरघ्नम् ।

ஸௌவீராஞ்ஜனம் 5 பங்கு, மயில் துத்தம் 5 [1]பங்கு கர்க்கடச் ச்ருங்கி 3 பங்கு, [2]நெல்லிக்காய், ஸ்படிகம், (பச்சைக்) கர்ப்பூரம் ஆகியவை வகைக்கு 1 பங்கு இவற்றைச் சேர்த்து அஞ்ஜனமிட திமிர நோய் நீங்கும்.

குறிப்பு: 1. शृङ्गीधात्रीफल என்பதை ஒரே சொல்லாகக் கொண்டு உயர்ந்த நெல்லிக் காயைக் குறிப்பதாகவும், அளவு 3 பங்கு எனவும்,

2. स्फटिककर्पूर என்பதும் ஒரே சொல்லாகக் கொள்ளப் பட்டு, பச்சைக் கர்ப்பூரத்தைக் குறிப்பதாகவும் உரை கூறுவதுண்டு.

नस्यं चाज्यं शृतं क्षीरजीवनीयसितोत्पलैः ॥ ६७ ॥

*பால் ஜீவனீய கணம், சர்க்கரை, நீலோத்பலம் இவற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து நஸ்யமிடலாம்.

குறிப்பு: *ஜீவனீய கஷாயத்தில் சர்க்கரை நீலோத்பலம் ஆகியவற்றின் கல்கமும் நெய்க்கு 4 மடங்கு பாலும் சேர்த்து கிருதம் பக்குவம் செய்ய வேண்டுமென கைரளியில் கூறப்பட்டுள்ளது.

श्लेष्मोद्ध्वेऽमृताकाथवराकणशृतं घृतम् ।
विध्येत्सिरां पीतवतो दद्याच्चानु विरेचनम् ॥ ६८ ॥

क्वाथं पूगाभयाशुण्ठीकृष्णाकुम्भनिकुम्भजम्

## கபத்தால் உண்டான திமிரத்திற்கு சிகித்சை :

கபத்தாலுண்டான திமிர நோயில் சீந்தில் கஷாயம், திரிபலை, திப்பிலி இவற்றின் கல்கம் ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய் பருகச் செய்து, பிறகு ஸிரையைக் குத்த வேண்டும். பிறகு பாக்கு, கடுக்காய், சுக்கு, திப்பிலி, சிவதை, நாகதந்தி இவற்றின் கஷாயத்தை விரேசனத்திற்காகப் பருகச் செய்ய வேண்டும்.

ह्रीबेरदारुद्विनिशाकृष्णाकल्कैः पयोन्वितैः ॥ ६९ ॥

द्विपंचमूलनिर्यूहे तैलं पक्कं च नावनम् ।

தசமூல கஷாயத்தில் பாலும், வெட்டி வேர், தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், திப்பிலி இவற்றின் கல்கமும் சேர்த்து தைலம் பக்குவம் செய்து நஸ்யமிடலாம்.

शंखप्रियंगुनेपालीकटुत्रिकफलत्रिकैः ॥ ७० ॥

दृग्वैमल्याय विमला वर्तिः स्यात् ।-

### விமலாவர்த்தி :

சங்கு, ஞாழல், மனோசிலை, திரிகடு, திரிபலை இவற்றைச் சேர்த்து திரிபோல குளிகை செய்து அஞ்ஜனமிட கண்கள் தெளிவடையும். இது விமலாவர்த்தி எனப்படும்.

-कोकिला पुनः ॥

कृष्णलोहरजोव्योषसैन्धवत्रिफलांजनैः ॥ ७१ ॥

### கோகிலாவர்த்தி :

அயப்பொடி, த்ரிகடு, இந்துப்பு, திரிபலை, அஞ்ஜனக் கல் இவற்றைச் சேர்த்து திரிபோன்று குளிகை செய்து அஞ்சனமிடலாம். இது கோகிலாவர்த்தி எனப்படும்.

शशगोखरसिंहोष्ट्रद्विजा ललाटमस्थि च।
श्वेतगोवालमरिचशंखचन्दनफेनकम् ॥ ७२ ॥

पिष्टं स्तन्याजदुग्धाभ्यां वर्तिस्तिमिरशुक्रजित्।

முயல், மாடு, கழுதை, சிங்கம், ஒட்டகம் இவற்றின் பற்களையும், நெற்றி எலும்பையும், வெள்ளைப் பசுவின் வாலின் உரோமம், மிளகு, சங்கு, சந்தனம், கடல் நுரை ஆகியவற்றையும், தாய்ப்பாலும், ஆட்டுப்பாலும் விட்டு அரைத்து திரிபோல் குளிகை செய்து அஞ்ஜனமிட; திமிரமும் நேத்ர சுக்ர நோயும் நீங்கும்.

रक्तजे पित्तवत्सिद्धिः शीतैश्चास्रं प्रसादयेत् ॥ ७३ ॥

**ரத்தத் திமிர சிகித்ஸை :**

ரத்தத்தால் உண்டான திமிர நோயில் பித்த திமிர நோய்க்குக் கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்விப்பதுடன் *குளிர்ந்த பொருள்களை உபயோகித்து ரத்தத்தைத் தெளியச் செய்யும் சிகித்ஸையையும் செய்ய வேண்டும்.

குறிப்பு: *உணவு, பானம், மருந்து உட்கொள்ளல், நனைத்தல், பூசுதல், முதலியவற்றில் உபயோகித்தல் குறிப்பிடப்படுகின்றது.

द्राक्षया नलदरोध्रयष्टिभिः शंखताम्रहिमपद्मपत्रकैः।
सोत्पलैश्छगलदुग्धवर्तितैरस्रजं तिमिरमाशु नश्यति ॥ ७४ ॥

*திராட்சை, சடாமாம்ஸீ, லோத்தி, அதிமதுரம், சங்கு, தாமிரம், சந்தனம், தாமரை இலை, நீலோத்பலம், இவற்றை ஆட்டுப்பால் சேர்த்து அரைத்து திரிபோல் குளிகை செய்து அஞ்ஜனமிட ரத்த திமிர நோய் விரைவில் அழியும்.

குறிப்பு: *लाक्षया என்னும் பாடத்தில் கொம்பரக்கு எனப் பொருள் கொள்ள வேண்டும் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

संसर्गसन्निपातोत्थे यथादोषोदयं क्रिया ।

இரு தோஷக் கூட்டு, மூன்று தோஷக் கூட்டு ஆகியவற்றால் உண்டான கண்ணோயில் அதிகரித்த தோஷத்திற்குரிய சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

सिद्धं मधूककृमिजिन्मरिचामरदारुभिः ॥ ७५ ॥

सक्षीरं नावनं तैलं पिष्टैर्लेपो मुखस्य च ।

இலுப்பை, வாய்விளங்கம், மிளகு, தேவதாரு இவற்றின் கல்கத்துடன் பால் சேர்த்துத் தைலம் காய்ச்சி நஸ்யமிட வேண்டும். இவற்றை (நீர்விட்டு) அரைத்து முகத்திலும் பூசலாம்.

नतनीलोत्पलानन्तायष्टयाह्वसुनिषण्णकैः ॥ ७६ ॥

साधितं नावने तैलं शिरोबस्तौ च शस्यते ।

தகரை விதை, நீலோத்பலம், நன்னாரி, அதிமதுரம், [1]நீராரை இவற்றைச் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட தைலம், [2]நசியமிடவும், சிரோபஸ்தி செய்விக்கவும் உபயோகிக்கச் சிறந்தது.

குறிப்பு: 1. இவற்றின் கஷாயமும் கல்கமும் சேர்த்து எனக் கைரளியில் கூறப்பட்டுள்ளது.

2. ஸூத்ர. 22-வது அத்தியாயத்தில் விளக்கப் பட்டுள்ளது.

दद्यादुशीरनिर्यूहे चूर्णितं कणसैन्धवम् ॥ ७७ ॥

तच्छ्रुतं सघृतं भूयः पचेत्क्षौद्रं घने क्षिपेत् ।
शीते चास्मिन् हितमिदं सर्वजे तिमिरेऽञ्जनम् ॥ ७८ ॥

**ஸன்னிபாத திமிர நோயில் அஞ்ஜனம் :**

விளாமிச்சைக் கஷாயத்தில் திப்பிலியையும், இந்துப்பையும் பொடித்துப் போட வேண்டும். வடிக்கட்டி நெய் சேர்த்து பக்குவம் செய்து, இறுகியதும், குளிர்ந்ததுமான நிலையில் தேன் கலந்து கொள்ள வேண்டும். இது ஸன்னிபாதங் காரணமாக உண்டான திமிர நோய்களில் அஞ்ஜனமிட ஏற்றதாகும்.

**குறிப்பு:** *இம்முறையில் கல்கம் கூறப்படவில்லை.

अस्थीनि मज्जपूर्णानि सत्त्वानां रात्रिचारिणाम् ।
स्रोतोजांजनयुक्तानि वहत्यम्भसि वासयेत् ॥ ७९ ॥

मासं विंशतिरात्रं वा ततश्चोद्धृत्य शोषयेत् ।
समेपशृंगीपुष्पाणि सयष्ट्याह्वानि तान्यनु ॥ ८० ॥

चूर्णितान्यंजनं श्रेष्ठं तिमिरे सान्निपातिके ।

இரவில் சஞ்சரிக்கும் (கோட்டான், முள்ளம்பன்றி முதலிய) பிராணிகளின், எலும்புச் சத்து நிரம்பிய எலும்புகளை அஞ்ஜனக் கல்லுடன் சேர்த்து, ஓடும் நிரில் ஒரு மாதம் அல்லது இருபது நாட்கள் வைத்திருக்க வேண்டும். பிறகு எடுத்துக் காய வைத்து அதனுடன் ஆட்டுக்கோட்டுப் பாலைப் பூவையும், அதிமதுரத்தையும் சேர்த்துப் பொடித்து அஞ்ஜனமிடுவது ஸன்னிபாதத்தில் உண்டான திமிர நோயில் சிறந்ததாகும்.

काचेऽप्येषा क्रिया मुक्त्वा सिरां, यन्त्रनिपीडिताः ॥ ८१ ॥

आन्ध्याय स्युर्मला दद्यात्स्राव्ये त्वस्रे जलौकसः ।

திமிர நோய்க்கு கூறப்பெற்ற சிகித்ஸைகளை கண் காச நிலையிலும் செய்ய வேண்டும். ஸிரையைக் குத்துதல் கூடாது. ஏனெனில் யந்த்ரங்களால் தோஷங்கள் பீடிக்கப் படின், அவை விரைவில் பார்வைச் சக்தியை அழிக்கும். ரத்தம் வெளியேற்றப் படவேண்டிய நிலையில், அட்டை யின் மூலம் ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

गुडः फेनोऽञ्जनं कृष्णा मरिचं कुंकुमाद्रजः ॥ ८२ ॥

रसक्रियेयं सक्षौद्रा काचयापनमंजनम् ।

கண் காச நோயில் வெல்லம், கடல் நுரை, அஞ்ஜனக்கல், திப்பிலி, மிளகு, குங்குமப்பூப்பொடி, தேன் இவற்றைச் சேர்த்து ரஸக்கிரியை செய்து அஞ்ஜனமிட்டு காலந் தள்ளலாம்.

नकुलान्धे त्रिदोषोत्थेतैमिर्यविहितो विधिः ॥ ८३ ॥

**(நகுலாந்த) கீரிக்குருடு நோய்க்கு சிகித்ஸை :**

கீரிக்குருடு நோயில் சன்னிபாத திமிர நோய்க்கு கூறப் பட்ட சிகித்ஸையை செய்ய வேண்டும்.

रसक्रिया घृतक्षौद्रगोमयस्वरसद्रुतैः ।
तार्क्ष्यगैरिकतालीसैर्निशान्ध्ये हितमञ्जनम् ॥ ८४ ॥

**(ராத்ரியந்த) அந்தமாலை நோயில் சிகித்ஸை :**

அஞ்ஜனக்கல், காவிமண், தாளிசபத்திரி இவற்றை நெய், தேன், பசுஞ்சாணச்சாறு ஆகியவற்றுடன் கலக்கி ரஸக்ரியை

செய்ய வேண்டும். இந்த அஞ்ஜனம் (ராத்ரியந்த நோய்) அந்தி மாலை நோயில் ஏற்றதாகும்.

दध्ना विघृष्टं मरिचं रात्र्यन्धेऽञ्जनमुत्तमम् ।

அந்தி மாலை நோயில், தயிர் சேர்த்து மிளகை இழைத்து அஞ்ஜனமிடுவது சிறந்ததாகும்.

करंजिकोत्पलस्वर्णगैरिकाम्भोजकेसरैः ॥ ८५ ॥

पिष्टैर्गोमयतोयेन वर्तिर्दोषान्ध्यनाशिनी ।

புங்கன் விதை, நீலோத்பலம், பொன் காவி மண், தாமரைக் கேஸரம் இவற்றை பசுஞ்சாண நீர்விட்டரைத்துத் திரி செய்து அஞ்ஜனமிட அந்திமாலை நோயைப் போக்கும்.

अजामूत्रेण वा कौन्तीकृष्णास्रोतोजसैन्धवैः ॥ ८६ ॥

அல்லது அரேணுகம், திப்பிலி, ஸ்ரோதோஞ்ஜனம், இந்துப்பு இவற்றை பெண் ஆட்டின் மூத்ரம் விட்டரைத்து திரி போன்று செய்து அஞ்ஜனமிடலாம்.

कालानुसारीत्रिकटुत्रिफलालमनःशिलाः ।
सफेनाश्छागदुग्धेन रात्र्यन्धे वर्तयो हिताः ॥ ८७ ॥

*தகரம், திரிகடு, திரிபலை, அரிதாரம், மனோசிலை, கடல் நுரை இவற்றை ஆட்டுப்பால் விட்டரைத்து திரி போல் குளிகை செய்யலாம். இதன் அஞ்ஜனம் அந்தி மாலை நோயில் ஏற்றது.

குறிப்பு: *कालानुसारी என்பதை கறுப்பு நன்னாரி எனச் சிலரும், மஞ்சள் சந்தனம் எனச் சிலரும், வெந்தயம் எனச் சிலரும் கூறுவர்.

सन्निवेश्य यकृन्मध्ये पिप्पलीरदहन्पचेत्।
ताः शुष्का मधुना घृष्टा निशान्धे श्रेष्ठमंजनम्॥ ८८॥

[1]கல்லீரலின் மத்தியில் திப்பிலியை வைத்து திப்பிலி தீய்ந்து [2]விடாதவாறு பக்குவம் செய்ய வேண்டும். அதை எடுத்துக் காய வைத்துத் தேன் விட்டரைத்து அந்திமாலை நோயில் அஞ்ஜனமிடுவது சிறந்ததாகும்.

குறிப்பு: 1. உடும்பு, முயல், மயில் இவற்றின் கல்லீரலில் வைத்து பக்குவம் செய்ய வேண்டும்.

2. திப்பிலியை கல்லீரலில் வைத்து மண் பூசி புடபாக முறையில் பக்குவம் செய்ய வேண்டும் என ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளதும் சட்டியில் வைத்து பக்குவம் செய்யக்கூடாது என கைரளியில் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

खादेच्च प्लीहयकृती माहिषे तैलसर्पिषा।

எருமையின் மண்ணீரலையும், கல்லீரலையும் எண் ணெயுடனும், நெய்யுடனும் சேர்த்து உண்ண வேண்டும்.

घृते सिद्धानि जीवन्त्याः पल्लवानि च भक्षयेत्॥ ८९॥

तथाऽतिमुक्तकैरण्डशेफाल्यभिरुजानि च।
भृष्टं घृतं कुम्भयोनेः पत्रैः पाने च पूजितम्॥ ९०॥

கிரிப்பாலையின் துளிரை நெய்யில் பக்குவம் செய்து உண்ண வேண்டும். அவ்வாறே மல்லிகை, ஆமணக்கு, நொச்சி, தண்ணீர் விட்டான் இவற்றின் துளிர்களையும் உபயோகிக்கலாம். அகத்தியிலையிட்டுப் பொரிக்கப்பட்ட *நெய் பருகுவதற்கும் ஏற்றதாகும்.

குறிப்பு: *நசியம் முதலியவற்றிலும் உபயோகிக்கலாம் என்பது கருத்து.

धूमराख्याम्लपित्तोष्णविदाहे जीर्णसर्पिषा।
स्निग्धं विरेचयेच्छीतैः शीतैर्दिह्याच्च सर्वतः ॥ ९१ ॥

**தூமரம், அம்ல விதக்தம், பித்த விதக்தம், உஷ்ண விதக்தம் ஆகியவற்றிற்கு சிகித்ஸை :**

தூ மரம், அம்ல விதக்தம், பித்த விதக்தம், உஷ்ண விதக்தம் ஆகியவற்றில் நாட்பட்ட நெய்யைப் பருகச் [1]செய்து நெய்ப்பு உண்டாக்கி, குளிர்ச்சி [2]பொருந்திய வற்றால் விரேசனம் உண்டாக்க வேண்டும். [3]குளிர்ச்சிப் பொருள்களை உடல் பூராவும் பூச வேண்டும்.

குறிப்பு: 1. கிருதத்தால் அப்பியங்கம் செய்வித்து நெய்ப்பு உண்டாக்கி என அருணதத்தர் கூறுகிறார்.

2. திராட்சை முதலியவற்றால் விரேசனம் உண் டாக்க வேண்டும் என்பது கைரளி உரையில் கூறப்பட்டுள்ளது.

3. சந்தனம், அத்திப்பட்டை, தாமரை, தாமரைச் சாறு முதலியன கூறப்படுகின்றன என கைரளியில் காணப்படுகிறது.

गोशकृद्रसदुग्धाज्यैर्विपक्वं शस्यतेऽञ्जनम्।
स्वर्णगैरिकतालीसचूर्णावापा रसक्रिया ॥ ९२ ॥

பசுவின் சாண நீர், பால், நெய் ஆகியவற்றைச் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட ஸௌவீராஞ்சனமும் சிறந்ததாகும்.

பொன்காவியும், தாளீச சூரணமும் சேர்த்த ரஸக் கிரியையும் ஏற்றதாகும்.

मेदाशाबरकानन्तामंजिष्ठादार्वियष्टिभिः ।
क्षीराष्टांशं घृतं पक्वं सतैलं नावनं हितम् ।। ९३ ।।

மேதா, வெள்ளி, லோத்தி, நன்னாரி, மஞ்சிட்டி, மர மஞ்சள், அதிமதுரம், பால் பாலில் 1/8 பங்காக நெய்யும் எண்ணெயும் இவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்து நசியமிடுவது இதமானதாகும்.

तर्पणं क्षीरसर्पिः स्यादशाम्यपि सिराव्यधः ।

பாலில் இருந்து எடுக்கப்பட்ட *நெய்யை நேத்ர தர்ப்பணமாக உபயோகிக்கலாம். இவ்வித சிகித்ஸையால் நோய் நீங்காவிடில் ஸிரையைக் குத்தலாம்.

குறிப்பு: *ஸூத். அத். 24-ல் விளக்கப்பட்டுள்ளது.

चिन्ताभिघातभीशोकरौक्ष्यामोत्कटकासनात् ।। ९४ ।।

विरेकनस्यवमनपुटपाकादिविभ्रमात् ।
विदग्धाहारवमनात् क्षुत्तृष्णादिविधारणात् ।। ९५ ।।

अक्षिरोगावसानाच्च पश्येत्तिमिररोगिवत् ।

கவலை, தாக்குதல், பயம், வருத்தம், வறட்சி, ஆமம், குந்திட்டிருத்தல் ஆகியவற்றாலும் முறை தவறியவையான விரேசனம், நசியம், வாந்தி, புடபாகம் முதலிய சிகித்ஸை களாலும் சிறிதே பக்குவம் அடைந்த உணவு வாந்தியாவ தாலும் பசி, விடாய், முதலியவற்றைப் பொறுத்துக் கொண்டிருப்பதாலும், கண்ணோய்களின் இறுதி நிலை யிலும் மனிதர் திமிர நோயாளி போல் காண்பர்.

यथास्वं तत्र युंजीत दोषादीन् वीक्ष्य भेषजम् ।। ९६ ।।

இவற்றில் தோஷங்களைப் பிரித்தறிந்து ஏற்றவாறு ஔஷதங்களை உபயோகிக்க வேண்டும்.

सूर्योपरागानलविद्युदादिविलोकनेनोपहतेक्षणस्य।
सन्तर्पणं स्निग्धहिमादि कार्यं तथाञ्जनं हेम घृतेन घृष्टम्॥ ९७॥

சூரிய கிரஹணம், தீ, *மின்னல் முதலியவற்றைக் கண்டதால் கண்பார்வை பாதிக்கப் பெற்றவருக்கு நெய்ப்பு, குளிர்ச்சி முதலியன பொருந்தியவற்றைக் கொண்டு உடலைப் பருக்கச் செய்யும் சிகித்ஸை ஏற்றதாகும். தங்கத்தை நெய்யில் இழைத்து கண்ணில் அஞ்ஜனமிட வேண்டும்.

குறிப்பு: *முதலிய என்பதால் மிக நுண்ணியவையும், ஒளி பொருந்தியவையுமான பொருள்கள் கூறப்படுகின்றன.

ஸந்தர்ப்பணம் என்பதால் நெய்ப்புப் பொருள்கள் மூலம் கண்ணுக்கு செய்யப்படுகிற தர்ப்பண சிகித்ஸையையும் கொள்ளலாம்.

चक्षूरक्षायां सर्वकालं मनुष्यै-
र्यत्नः कर्तव्यो जीविते यावदिच्छा।
व्यर्थो लोकोऽयं तुल्यरात्रिंदिवानां
पुंसामन्धानां विद्यमानेऽपि वित्ते ॥९८॥

உயிர் வாழ விரும்பும் வரை மனிதர் கண்ணைப் பாதுகாப்பதில் எப்பொழுதும் முயற்சி உடையவராக இருக்க வேண்டும். செல்வந்தராயினும் பார்வை இழந்தவருக்கு இரவும், பகலும் ஒன்று போலாகி உலகம் பயனற்றதாகும்.

त्रिफला रुधिरस्रुतिर्विशुद्धिर्मनसो निर्वृतिरंजनं चनस्यम्।
शकुनाशनता सपादपूजा घृतपानं च सदैव नेत्ररक्षा॥ ९९॥

**கண்களைப் பாதுகாக்கும் முறை :**

திரிபலையை உபயோகித்தல், ரத்தத்தை வெளியேற்றுதல், சோதன சிகித்ஸை, மன நிம்மதி, அஞ்சனமும், நசியமும் உபயோகித்தல், பக்ஷிகளின் மாமிஸத்தை உண்ணுதல், பாதங்களை பாதுகாத்தல், நெய் பருகுதல் ஆகியவை கண்ணைப் பாதுகாப்பவையாகும்.

**குறிப்பு:** ★பாதங்களை பாதுகாத்தலால் கண்களுக்குக் கிடைக்கும் அனுகூலம் குறித்து 16-ம் அத்தியாயத்தின் இறுதியில் கூறப்படவிருக்கிறது.

अहितादशनात्सदा निवृत्तिर्भृशभास्वचलसूक्ष्मवीक्षणाच्च ।
मुनिना निमिनोपदिष्टमेतत् परमं रक्षणमीक्षणस्य पुंसाम् ॥ १०० ॥

**விலக்க வேண்டியவை :**

ஏற்காத உணவையும், மிக ஒளியுள்ளவையும், அசை உள்ளவையும், நுண்ணியவையுமான பொருள்களை (மிகுதி யாகப்) பார்த்தலையும் எக்காலத்திலும் தவிர்க்க வேண்டும். கண்ணை பாதுகாக்க இவை முக்கியமானவை என நிமி முனிவரால் உபதேசிக்கப்பட்டது.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने तिमिरप्रतिषेधो नाम त्रयोदशोऽध्यायः ॥ १३ ॥

உத்தரஸ்தானம் — பதின்மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

# ।। उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ।।

## [ चतुर्दशोऽध्यायः - அத்தியாயம் -14 ]

अथातो लिंगनाशप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து லிங்க நாச நோய்க்கு சிகித்ஸை என்னும் அத்தியாயத்தை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

विध्येत्सुजातं निःप्रेक्ष्यं लिंगनाशं कफोद्भवम् ।
आवर्तक्यादिभिः षड्भिर्विवर्जितमुपद्रवैः ।। १ ।।

நன்கு உருவானதும், பார்க்கும் சக்தியை [1]குலைத்ததும், கபத்தால் உண்டானதுமான லிங்க நாச [2]நோயில் ஆவர்த்தகீ முதலிய ஆறு உபத்ரவங்கள் அற்ற நிலையில் (இனிக் கூறப்படும் முறையில்) குத்த வேண்டும்.

குறிப்பு:1. மற்ற தோஷங்களால் உண்டான லிங்க நாசம் அஸாத்யமாகும்.

2. ஆவர்த்தகீ முதலியவை அடுத்து விளக்கப்படவிருக்கின்றன.

सोऽसंजातो हि विषमो दधिमस्तुनिभस्तनुः ।
शलाकयावकृष्टोऽपि पुनरूर्ध्वं प्रपद्यते ।। २ ।।

करोति वेदनां तीव्रां दृष्टिं च स्थगयेत्पुनः ।

**முதிர்ச்சியடையாத நிலையும் குத்தக் கூடாததன் காரணமும்:**

லிங்க நாச நோய் முதிர்ச்சி பெறாத நிலையில் சமநிலையற்றும், தயிர்த் தெளிவு போன்று மெல்லியதாகவும் இருக்கும். இது சலாகையால் (த்ருஷ்டி மண்டலத்திலிருந்து

நாசியை நோக்கி) இழுக்கப் படினும் மறுபடியும் மேற்புறத்தை அடையும். தீவிரமான வலியை உண்டாக்கும். மறுபடியும் பார்வையை மறைத்துவிடும்.

श्लेष्मलैः पूर्यते चाशु सोऽन्यैः सोपद्रवैश्चिरात् ॥ ३ ॥

## இரு விதமாகவும் மூடுவதற்குக் காரணம்:

நன்கு வளர்ச்சி அடையாத நிலையில் லிங்க நாசம் குத்தப்படின் கபத்தை அதிகரிக்கச் செய்யும் பொருள்களின் உபயோகத்தால் விரைவாகவும், மற்ற பொருள்களின் உபயோகத்தால், உபத்வரவங்களுடன் தாமதித்தும் மீண்டும் நிரப்பப் பெறும்.

श्लैष्मिको लिंगनाशो हि सितत्वाच्छ्लेष्मणः सितः ।
तस्यान्यदोषाभिभवाद्भवत्यानीलता गदः ॥ ४ ॥

## கபலிங்க நாசம் :

கபத்தின் வெண்மை காரணமாக கபலிங்க நாசம் வெளுப்பாக இருக்கும். மற்ற இரு தோஷங்களால் ஆக்ரமிக்கப்பட்டால் சிறிது நீலமாகக் காணப்படும்.

तत्रावर्तचला दृष्टिरावर्तक्यरुणासिता ।

## ஆவர்த்தகீ :

நீர்ச்சுழி போல் சஞ்சலமாகவும், இளம் செந்நிறம், வெண்மை ஆகிய நிறமுள்ளதாகவும், விழி காணப்படின் அந்த உபத்ரவம் ஆவர்த்தகீ எனப்படும்.

शर्कराऽर्कपयोलेशनिचितेव घनाति च ॥ ५ ॥

## சர்க்கரா :

எருக்கம் பால் சிறிது வைக்கப்பட்டது போன்றும் மிகவும்

தடித்தும் கண்விழி காணப்படின் அந்த உபத்ரவம் சர்க்கரா எனப்படும்.

राजीमती दृङ्निचिता शालिशूकाभराजिभिः ।

*ராஜீமதி :*

சாலி நெல்லின் சுனை போன்ற நிறமுள்ள கோடுகளால் நிரம்பியதாக விழி காணப்படின் அந்த உபத்ரவம் ராஜீமதி எனப்படும்.

विषमच्छिन्नदग्धाभा सरुक् छिन्नांशुका स्मृता ॥ ६ ॥

*சின்னாம்சுகா :*

விழி ஏற்றத்தாழ்வான அமைப்புடனும், இடைவெளியுடனும், தீச்சுட்டது போன்றும், வலியுடனும் காணப்படின் அந்த உபத்ரவம் சின்னாம்சுகா எனப்படும்.

दृष्टिः कांस्यसमच्छाया चन्द्रकी चन्द्रकाकृतिः ।

*சந்த்ரகீ :*

வெண்கல ஒளியுடனும், மயில் தோகைக் கண் போன்ற உருவத்துடனும் விழி காணப்படின் அந்த உபத்ரவம் சந்த்ரகீ எனப்படும்.

छत्राभा नैकवर्णा च छत्रकी नाम नीलिका ॥ ७ ॥

*சத்ரகீ:*

(உயர்ந்திருப்பது காரணமாக) குடை போன்றும், பல நிறம் உடையதாகவும் விழி காணப்படின் அந்த உபத்ரவம் சத்ரகீ எனப்படும். இதற்கு நீலிகா என்றும் பெயர்.

न विध्येदसिराहाणां न तृट्पीनसकासिनाम्।
नाजीर्णभीरुवमितशिरःकर्णाक्षिशूलिनाम्॥ ८॥

**குத்தக் கூடாதவை :**

ஸிரைக் குத்தும் *சிகித்ஸையை தவிர்க்கும்படி கூறப் பட்ட வர்களுக்கும், விடாய், பீனிசம், இருமல், அஜீர்ணம், தலைவலி, காதுவலி, கண்வலி ஆகியவை உள்ளவர் களுக்கும், பயந்தவர், வாந்தி எடுத்தவர், ஆகியோருக்கும் லிங்க நாச நோயில் குத்தும் சிகித்ஸை கூடாது.

குறிப்பு: *ஸூத்.அத்.27-ல் விளக்கப்பட்டுள்ளது.

अथ साधारणे काले शुद्धसम्भोजितात्मनः।
देशे प्रकाशे पूर्वाह्णे भिषग्जानूच्चपीठगः॥ ९॥

यन्त्रितस्योपविष्टस्य स्विन्नाक्षस्य मुखानिलैः।
अंगुष्ठमृदिते नेत्रे दृष्टौ दृष्ट्वोत्प्लुतं मलम्॥ १०॥

स्वां नासां प्रेक्षमाणस्य निष्कम्पं मूर्ध्नि धारिते।
कृष्णादर्धांगुलं मुक्त्वा तथाऽधोर्धमपाङ्गतः॥ ११॥

तर्जनीमध्यमांगुष्ठैः शलाकां निश्चलं धृताम्।
दैवच्छिद्रं नयेत्पार्श्वादूर्ध्वमामन्थयन्निव॥ १२॥

सव्यं दक्षिणहस्तेन नेत्रं सव्येन चेतरत्।
विध्येत्-

**லிங்க நாசத்தில் குத்தும் முறை :**

(ச்ராவண முதலிய) சாதாரண காலத்தில், முற்பகலில், பிரகாசமான இடத்தில் முழங்கால் உயரமுள்ள பீடத்தில் வைத்தியர் உட்கார்ந்து கொள்ள வேண்டும். வாந்தி

விரேசன சிகித்ஸை ஆகியவற்றிற்குப் பின் சாதாரண உணவு உட்கொண்ட பிறகுநோயாளியை உட்காரச் செய்து கட்டிப் போட வேண்டும். வாய்க் காற்றினால் நோயாளியின் கண்களில் வியர்வை உண்டாக்கி (கண்களை) கட்டை விரலால் கசக்கி, கண்ணில் மேலெழும்பும் தோஷத்தைக் கண்டு, (நோயாளியை) தன் மூக்கைப் பார்க்கும்படிச் சொல்லி, நோயாளியின் தலையை அசையாமல் மற்றோரால் பிடிக்கும்படிச் செய்து கருவிழியிலிருந்து (நோயாளியின் விரல்படி) அரை அங்குலம் விட்டும் அவ்வாறே கடைக் கண்ணிலிருந்து ¼ அங்குலம் விட்டும், ஆள்காட்டி விரல் நடுவிரல் கட்டை விரல் ஆகியவற்றால் சலாகையை நடுக்கமின்றிப் பிடித்துக் கொண்டு பக்கங்களிலிருந்து மேற்புறத்தில் கடைவது போல சலாகையை தைவீகமாக அமைந்த துவாரத்தை நோக்கிச் செலுத்த வேண்டும். இடது கண்ணை வலது கையாலும், வலது கண்ணை இடது கையாலும் குத்த வேண்டும்.

-सुविद्धे शब्दः स्यादरुक् चाम्बुलवस्रुतिः ॥ १३ ॥

सान्त्वयन्नातुरं चानु नेत्रं स्तन्येन सेचयेत् ।
शलाकायास्ततोऽग्रेण निर्लिखेन्नेत्रमण्डलम् ॥ १४ ॥

अबाधमानः शनकैर्नासां प्रति नुदंस्ततः ।
उत्सिंचनाच्चापहरेद्दृष्टिमण्डलगं कफम् ॥ १५ ॥

स्थिरे दोषे चले वापि स्वेदयेदक्षि बाह्यतः ।
अथ दृष्टेषु रूपेषु शलाकामाहरेच्छनैः ॥ १६ ॥

घृताप्लुतं पिचुं दत्त्वा बद्ध्वाक्षं शाययेत्ततः ।
विद्धादन्येन पार्श्वेन तमुत्तानं द्वयोर्व्यधे ॥ १७ ॥

निवाते शयनेऽभ्यक्तशिरःपादं हिते रतम् ।

நன்கு குத்தப்பட்டால் சப்தம் உண்டாகும்' வலியின்மையும், நீர்த்துளிக் கசிதலும் காணப்படும். நோயாளிக்கு ஆறுதல் கூறுவதுடன் (சலாகை கண்ணிலிருக்கும் பொழுதே) தாய்ப்பாலால் கண்களை நனைக்க வேண்டும். சலாகையின் நுனியால் விழி மண்டலத்தைச் சுறண்ட வேண்டும். தீங்கு ஏற்படாதவாறு விழி மண்டலத்திலிருந்து நீக்கவேண்டிய பகுதியை நாசியை நோக்கி மெதுவாகத் தள்ளி எடுக்க வேண்டும். காறுவதன் மூலமும் மிகுந்த தோஷத்தை வெளிப்படுத்த வேண்டும். லிங்க நாசத்துக்கு காரணமான மலமானது உறுதியாகவோ, நிலையற்றதாகவோ காணப்படின் கண்ணின் வெளிப்புறத்தில் [1]வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை செய்ய வேண்டும். (கண்) மலம் நீங்கியபின் உருவத்தைக் காணும் நிலையில் சிறிது சிறிதாக சலாகையை எடுக்க வேண்டும். பிறகு நெய்யில் நனைக்கப்பட்ட துணித்துண்டை கண்ணில் வைத்து கட்டி காற்று அதிகமாக வீசாத இடத்தில் இருக்கச்செய்து தலையிலும் காலிலும் நெய்ப்புப் பொருள் தடவி இதமானவற்றை உட்கொள்ளச் செய்து குத்தப்பட்ட கண்ணுள்ளதற்கு மறுபக்கமாக படுக்கச் செய்ய வேண்டும். இரண்டு கண்களிலும் குத்தப்பட்டால் மல்லாந்து படுக்கச் செய்ய வேண்டும்.

**குறிப்பு:** ⋆வெந்நீர் அல்லது சூடாக்கப்பட்ட துணிச் சுருளால் வியர்வை உண்டாக்க வேண்டும்.

क्षवथुं कासमुद्गारं ष्ठीवनं पानमम्भसः ॥ १८ ॥

अधोमुखस्थितिं स्नानं दन्तधावनभक्षणम् ।
सप्ताहं नाचरेत्स्नेहपीतवच्चात्र यन्त्रणा ॥ १९ ॥

## விலக்க வேண்டியவை :

தும்மல், இருமல், ஏப்பம், காறித் துப்புதல், நீர் பருகுதல், கீழ் நோக்கி இருத்தல், குளித்தல், பல் துலக்குதல், கடித்து உண்ணல் ஆகியவற்றை ஏழு நாட்கள் வரை தவிர்க்க வேண்டும். [1]நெய்ப்புப் பொருள் பருகியவருக்கு கூறப்பட்ட கட்டுப்பாட்டு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

*குறிப்பு:* 1. சூத்ர. அத்தியாயம் 16-ல் விளக்கப்பட்டுள்ளது.

> முன்பு கூறப்பட்ட வர்த்மலேகனம், அர்மசேதனம் ஆகியவற்றிலும் பத்திய முறை கடைப்பிடிக்கப் படவேண்டுமென கைரளியில் கூறப்பட்டுள்ளது. ஏப்பம், தும்மல், இருமல், காறித்துப்புதல், தூக்குதல் ஆகியவற்றை 3 நாட்களும், ஸ்னானம், நீர் குடித்தல், பல் துலக்குதல், கீழ் நோக்கிப் பார்த்தல் ஆகியவற்றை 7 நாட்களும் தவிர்க்க வேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

शक्तितो लंघयेत्सेको रुजि कोष्णेन सर्पिषा ।
सव्योषामलकं वाट्यमश्नीयात्सघृतं द्रवम् ।। २० ।।

विलेपीं वा त्र्यहाच्चास्य क्वाथैर्मुक्त्वाऽक्षि सेचयेत् ।
वातघ्नैः सप्तमे त्वह्नि सर्वथैवाक्षि मोचयेत् ।। २१ ।।

உடல் பலத்திற்கு ஏற்ப உபவாஸமிருக்கச் செய்ய வேண்டும். வலி ஏற்படின் இளஞ்சூடான நெய்யை (கண்ணில்) ஊற்ற வேண்டும். த்ரிகடு, நெல்லி ஆகியவை சேர்த்த [1]யவை உணவை நெய்யுடன் கலந்து திரவமாக உண்ண வேண்டும். அல்லது [2] விலேபியை உட்கொள்ள வேண்டும். மூன்று நாட்களுக்குப் பிறகு கட்டை அவிழ்த்த பின்னர் வாயுவைப் போக்கும் பொருளின் கஷாயத்தால் கண்ணை நனைக்க வேண்டும். (பிறகு முன்புபோல் செய்ய

வேண்டியதைச் செய்து கட்ட வேண்டும்). ஏழாம் [3]நாள் கட்டை அறவே நீக்க வேண்டும்.

குறிப்பு:1. யவை உணவுடன் சிறிது இந்துப்பும் கலக்க வேண்டுமெனவும் வெந்நீரையும் பருக வேண்டுமெனவும் ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. அதிக அளவு பருக்கையுடன் கூடிய கஞ்சி விலேபி எனப்படும்.

3. 10-வது நாளிலும் கட்டை நீக்கலாம் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

यन्त्रणामनुरुध्येत दृष्टेरास्थैर्यलाभतः ।
रूपाणि सूक्ष्मदीप्तानि सहसा नावलोकयेत् ॥ २२ ॥

பார்வைச் சக்தி உறுதிப்படும் வரை கட்டுப்பாட்டை அனுசரிக்க வேண்டும். நுண்ணியதும் ஒளி பொருந்தியதுமான பொருளைத் திடீரெனப் பார்ப்பது கூடாது.

शोफरागरुजादीनामधिमन्थस्य चोद्भवः ।
अहितैर्वेधदोषाच्च यथास्वं तानुपाचरेत् ॥ २३ ॥

ஏற்காத செயல்களாலும், முறை கேடாகக் குத்தப் பெறுவதாலும், வீக்கம் செந்நிறம், வலி முதலியனவும், அதிமந்தம் என்னும் கண்ணோயும் ஏற்படக் கூடும். இந்த நோய்களில் ஏற்றவாறு சிகித்ஸை செய்ய வேண்டும்.

कल्किताः सघृता दूर्वायवगैरिकसारिवाः ।
मुखालेपे प्रयोक्तव्या रुजारागोपशान्तये ॥ २४ ॥

அறுகு, யவை, காவி, நன்னாரி ஆகியவற்றை அரைத்து நெய்யுடன் *கலந்து முகத்தில் பூச வலியும், செந்நிறமும் நீங்கும்.

**குறிப்பு:** ★தலையிலும் பூசலாம் என சங்கிரகத்தில் கூறப்பட்டுள்ளது.

ससर्षपास्तिलास्तद्वन्मातुलुंगरसाप्लुताः।

*கடுகுடன் எள் சேர்த்து அரைத்து துருஞ்சிச் சாற்றில் கலந்தும் பூசலாம்.

**குறிப்பு:** ★எள்ளைச் சிறிது வறுத்து உபயோகிக்க வேண்டுமென சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

पयस्यासारिवापत्रमंजिष्ठामधुयष्टिभिः ॥ २५ ॥

अजाक्षीरयुतैर्लेपः सुखोष्णः शर्मकृत्परम्।

க்ஷீரகோகோலீ, நன்னாரி, பச்சிலை, மஞ்சிட்டி, அதிமதுரம் ஆகியவற்றை ஆட்டுப்பால் சேர்த்து (அரைத்து) *சிறிது சூடாக்கி முகத்தில் பூச மிகவும் சுகமுண்டாகும்.

**குறிப்பு:** ★குளிர்ச்சியாகவும் பூசலாமென ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

வீக்கம் முதலியவற்றைப் போக்கும் (கைரளி).

रोध्रसैन्धवमृद्वीकामधुकैश्छागलं पयः ॥ २६ ॥

शृतमाश्च्योतनं योज्यं रुजारागविनाशनम्।

லோத்தி, இந்துப்பு, திராட்சை, அதிமதுரம் ஆகியவற்றைச் சேர்த்து ஆட்டுப் பால் பக்குவம் செய்து கண்ணில் இட வலியும் செந்நிறமும் நீங்கும்.

मधुकोत्पलकुष्ठैर्वा द्राक्षालाक्षासितान्वितैः ॥ २७ ॥

அல்லது அதிமதுரம், நீலோபலம், கோஷ்டம், திராட்சை, கொம்பரக்கு, சர்க்கரை இவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்த ஆட்டுப் பாலைக் கண்ணில் இட வேண்டும்.

वातघ्नसिद्धे पयसि शृतं सर्पिश्चतुर्गुणे।
पद्मकादिप्रतीवापं सर्वकर्मसु शस्यते ॥ २८ ॥

வாயுவைக் கண்டிக்கும் பொருள்களைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட பால் (நெய்க்கு) 4 மடங்கும், பத்மகாதி *கணச்சரக்குகளின் கல்கமும் சேர்த்து நெய் பக்குவம் செய்து எல்லாவகையாலும் (ஊற்றுதல் நசியம் பானம் ஆகியவற்றில்) உபயோகிக்கலாம்.

குறிப்பு: *பத்மகாதிகணம் ஸூத்ரஸ்தானம் அத்தியாயம் 15-ல் விளக்கப்பட்டுள்ளது. வாயுவைக் கண்டிக்கும் பொருள்களைச் சேர்த்துக் காய்ச்சிப் பாலுடன் உணவு கொள்ள வேண்டும் எனவும், பத்மகாதி கணச்சரக்குகளின் கல்கம் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகிக்க வேண்டும் எனவும் ஸங்கிர ஹத்தில் கூறப்பட்டுள்ளது.

सिरां तथाऽनुपशमे स्निग्धस्विन्नस्य मोक्षयेत्।
मन्थोक्तां च क्रियां कुर्याद्विधे रूढेऽञ्जनं मृदु ॥ २९ ॥

இவ்வாறு சிகித்ஸை செய்தும் நோய் நீங்காவிடில் நெய்ப்புச் சிகித்ஸையும், வியர்வை உண்டாக்கும் சிகித்ஸையும் செய்வித்து [1]ஸிரையைக் குத்தி ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். [2]அதிமந்த சிகித்ஸையில் கூறப்படவிருக்கிற சிகித்ஸையையும் செய்ய வேண்டும். குத்தப்பட்ட இடம் ஆறிய பின்னர் மிருது குணமுள்ள அஞ்சனமிட[3] வேண்டும்.

குறிப்பு:1. நெற்றியில் உள்ள ஸிரையைக் குத்த வேண்டு மென கைரளியில் கூறப்பட்டுள்ளது.

2. அடுத்த அத்தியாயத்தில் விளக்கப்பட இருக் கிறது.

3. அஞ்சனம் அடுத்துக் கூறப்படுகிறது.

आढकीमूलमरिचहरितालरसांजनैः ।
विद्धेऽक्ष्णि सगुडा वर्तिर्योज्या दिव्याम्बुपेषिता ॥ ३० ॥

துவரை வேர், மிளகு, அரிதாரம், ரஸாஞ்ஜனம் ஆகிய வற்றுடன் வெல்லம் சேர்த்து சுத்தமான மழை நீர் விட்டு அரைத்து திரி போன்ற குளிகையைச் செய்து (லிங்க நாசத்தில்) குத்தப்பட்ட இடத்தில் உபயோகிக்க வேண்டும்.

जातीशिरीषधवमेषविषाणिपुष्पवैडूर्यमौक्तिकफलं पयसा सुपिष्टम् ।
आजेन ताम्रममुना प्रतनु प्रदिग्धं सप्ताहतः पुनरिदं पयसैव पिष्टम् ॥ ३१॥

पिण्डांजनं हितमनातपशुष्कमक्ष्णि विद्धे प्रसादजननं बलकृच्च दृष्टेः ।

**பிண்டாஞ்ஜனம் :**

ஜாதிமல்லி, வாகை, ஞம விருக்ஷம், ஆடு தீண்டாப் பாளை இவற்றின் புஷ்பம், வைடூர்யம், முத்து இவற்றை ஆட்டுப்பால் விட்டு அரைத்து தாமிரத்தில் மெல்லியதாகப் பூச வேண்டும். ஏழு நாட்களுக்குப் பின்னர் அதை (பூச்சை) எடுத்து (ஆட்டுப்)பால் விட்டு அரைத்து, நிழலில் உலர்த்தி, குத்தப்பட்ட கண்ணில் பிண்டாஞ்சனமாக உபயோகிக்க வேண்டும். இது கண்களுக்குத் தெளிவை உண்டாக்கும். பார்வைக்குப் பலத்தை உண்டாக்கும்.

स्रोतोजविद्रुमशिलाम्बुधिफेनतीक्ष्णै-
-रस्यैव तूल्यमुदितं गुणकल्पनाभिः ॥ ३२ ॥

ஸ்ரோதோஞ்சனம், பவழம், மனோசிலை, கடல் நுரை, மிளகு ஆகியவற்றையும் இவ்வாறே செய்து உபயோகிக்க இதே பலன் உண்டாகும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने लिंगनाशप्रतिषेधो नाम चतुर्दशोऽध्यायः ॥ १४ ॥

உத்தரஸ்தானம் — பதினான்காவது அத்தியாயம் முற்றிற்று.

*****

[library stamp]

## ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

### [पंचदशोऽध्यायः - அத்தியாயம் - 15]

अथातः सर्वाक्षिरोगविज्ञानीयं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து (ஸர்வாக்ஷி ரோக விஜ்ஞானீயம்) அனைத்துக் கண் நோய் விளக்கம் என்னும் அத்தியாயத்தை விவரிக்கிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

वातेन नेत्रेऽभिष्यन्दे नासानाहोऽल्पशोफता ।
शंखाक्षिभ्रूललाटस्य तोदस्फुरणभेदनम् ॥ १ ॥

शुष्काल्पा दूषिका शीतमच्छं चाश्रु चला रुजः ।
निमेषोन्मेषणं कृच्छ्राज्जन्तूनामिव सर्पणम् ॥ २ ॥

अक्ष्याध्मातमिवाभाति सूक्ष्मैः शल्यैरिवाचितम् ।
स्निग्धोष्णैश्चोपशमनं सोऽभिष्यन्दः-

## (வாதாபிஷ்யந்தம்) வாயுவால் உண்டான கண்ணீர்ப் பெருக்கு நோய் :

வாயுவால் ஏற்பட்ட (அபிஷ்யந்த) கண்ணீர்ப் பெருக்கு நோயில் நாசியில் வீக்கம், (கண்ணில்) சிறிது வீக்கம், நெற்றிப் பொட்டுக்கள், கண்கள், புருவம், நெற்றி ஆகியவற்றில் குத்து வலியும், துடிப்பும், பிளத்தல் போன்ற வேதனைகள் தோன்றுதல், வறண்டும், குறைந்தும் பீளை காணுதல் குளிர்ச்சியாயும், தெளிந்தும் கண்ணீர் பெருகுதல், நிலையற்ற வேதனை சிரமத்துடன் கண்களை மூடித் திறத்தல், பூச்சிகள் ஊர்வது போன்ற உணர்வு ஆகியவை உண்டாகும். கண் வீங்கியிருப்பது போன்று இருத்தல், நுண்ணிய (முள்) சல்லியங்களால் சூழப் பெற்றது போன்றிருத்தல் ஆகியவையும் காணப்படும். நெய்ப்பும், உஷ்ணமுள்ள சிகித்ஸையால் இந்த நோய் நீங்கும்.

-उपेक्षितः ॥ ३ ॥

अधिमन्थौ भवेत्तत्र कर्णयोर्नदनं भ्रमः ।
अरण्येव च मथ्यन्ते ललाटाक्षिभ्रुवादयः ॥ ४ ॥

### அதிமந்தம்[1] :

(வாத) அபிஷ்யந்த நோய்க்கு தக்க சிகித்ஸை செய்யாவிடில் அதிமந்தம் என்ற நோய் ஏற்படும். இந்த நோயில் காது இரைச்சல், பிரமை ஆகியவையும் நெற்றி, கண்கள், புருவம் [2]முதலியவற்றில் அரணிக் கட்டையால் கடைவது போன்ற வலியும் காணப்படும்.

குறிப்பு:1. அதிகமாகக் கடையப்படுவது போன்ற வலி உண்டாவதால் அதிமந்தம் எனப்படும்.

2. முதலிய என்பதால் நாசி, கன்னம், நெற்றிப் பொட்டு முதலிய இடங்களும் குறிப்பிடப்படு கின்றன.

தலையின் ஒரு பாதியில் மற்றும் பல வேதனை களும் காணப்படும் என சுச். உத். அத். 6-ல் சுலோகம் 13-ல் கூறப்பட்டுள்ளது.

हताधिमन्थः सोऽपि स्यात् प्रमादात्तेन वेदनाः ।
अनेकरूपा जायन्ते व्रणो दृष्टौ च दृष्टिहा ॥ ५ ॥

**ஹதாதிமந்தம் :**

அதிமந்த நோய்க்கு தக்க சிகித்ஸை செய்யப்படாவிடில் அது ஹதாதிமந்தம் என்னும் நோயாக மாறும். இதனால் பலவிதமான வேதனைகள் உண்டாகும். விழியில், பார்வைச் சக்தியை அழிக்கும் தன்மையுள்ள விரணம் ஏற்படும்.

**குறிப்பு :** இந்நிலை அசாத்யமாகும்.

मन्याऽक्षिशंखतो वायुरन्यतो वा प्रवर्तयन् ।
व्यथा तीव्रामपैच्छिल्यरागशोफं विलोचनम् ॥ ६ ॥

संकोचयति पर्यश्रु सोऽन्यतोवातसंज्ञितः ।

**அன்யதோவாதம் :**

மென்னி, கண்கள், நெற்றிப் பொட்டு ஆகியவற்றிலாவது மற்ற இடங்களிலாவது வாயு தீவிரமான வலியை உண்டாக்கும். கண்ணில் பிசுபிசுப்பு இன்மை, செந்நிறம், வீக்கம் ஆகியவை ஏற்படா. விழியை சுருங்கச் செய்யும். கண்களில் நீர் தளும்பும். இந்த நோய் அன்யதோவாதம் எனப்படும்.

तद्विज्जिह्मं भवेन्नेत्रमूनं वा वातपर्यये ॥ ७ ॥

**வாத பர்யயம் :**

வாத விபர்யய நோயில் அன்யதோவாத நோயில் போன்று உபத்ரவங்கள் காணப்படும். மேலும் கண்கள் கோணலாகவாவது அளவில் குறைந்தாவது காணப்படும்.

दाहो धूमायनं शोफः श्यावता वर्त्मनो बहिः ।
अन्तःक्लेदोऽश्रु पीतोष्णं रागः पीताभदर्शनम् ॥ ८ ॥

क्षारोक्षितक्षताक्षित्वं पित्ताभिष्यन्दलक्षणम् ।

**(பித்தாபிஷ்யந்தம்) பித்தத்தால் உண்டாகும் கண்ணீர்ப் பெருக்கு நோய் :**

எரிச்சல், புகைதல் போன்ற உணர்ச்சி, வீக்கம், இமையின் வெளிப்புறம் கறுத்துக் காணுதல், இமையின் உட்புறம் கசிவுடனிருத்தல், கண்ணீர் மஞ்சள் நிறத்துடன் உஷ்ண மடைந்து இருத்தல், கண்ணில் செந்நிறம், மஞ்சளாகக் காணுதல், க்ஷாரம் தூவப்பட்ட விரணம் போல் இருத்தல் ஆகியவை பித்தாபிஷ்யந்தக் குறிகளாகும்.

ज्वलदंगारकीर्णाभं यकृत्पिण्डसमप्रभम् ॥ ९ ॥

अधिमन्थे भवेन्नेत्रं-

**(பித்தாதிமந்தம்) பித்தத்தால் உண்டாகும் அதிமந்தம் :**

அதிமந்த நிலையில் கண்கள், ஜ்வலிக்கும் நெருப்புத் தூள்கள் இரைக்கப் பட்டது போன்றும், கல்லீரல் போன்ற ஒளியுடனுமிருக்கும்.

-स्यन्दे तु कफसम्भवे ।
जाड्यं शोफो महान् कण्डूर्निद्राऽन्नानभिनन्दनम् ॥ १० ॥

सान्द्रस्निग्धबहुश्वेतापिच्छावद्दूपिकाश्रुता।

**(கபாபிஷ்யந்தம்) கபத்தால் உண்டாகும் கண்ணீர்ப் பெருக்கு நோய்:**

சுறுசுறுப்பின்மை, அதிக வீக்கம், அரிப்பு, தூக்கம், உணவு வேண்டாமை, பீளையும், கண்ணீரும் இறுக்கமாகவும், நெய்ப்புடனும், அளவில் அதிகமாகவும், வெண்மை யாகவும், பிசுபிசுப்புடனும் இருத்தல் ஆகியவை கபத்தால் உண்டான (அபிஷ்யந்தத்தில்) கண்ணீர்ப்பெருக்கு நோயில் காணப்படும்.

अधिमन्थे नतं कृष्णमुन्नतं शुक्लमण्डलम् ॥ ११ ॥

प्रसेको नासिकाध्मानं पांसुपूर्णमिवेक्षणम्।

**கபத்தாலுண்டான அதிமந்தம் :**

அதிமந்த நிலையில் கரும்படலம் தாழ்ந்தும், வெண் படலம் உயர்ந்தும் இருத்தல், வாய் நீர் ஊறுதல், நாசி வீங்கி யிருத்தல், கண்கள் புழுதி நிரம்பியது போன்றிருத்தல் ஆகியவை காணப்படும்.

रक्ताश्रुराजीदूपीकशुक्लमण्डलदर्शनम् ॥ १२ ॥

रक्तस्यन्देन नयनं सपित्तस्यन्दलक्षणम्।

**(ரத்தாபிஷ்யந்தம்) ரத்தங் காரணமாக உண்டாகும் கண்ணீர்ப் பெருக்கு நோய் :**

கண்ணீர், கோடுகள், பீளை, நேத்ர மண்டலம் ஆகியவை சிவந்து காணுதல் மற்றும் பித்தாபிஷ்யந்தக் குறிகள் ஆகியவை ரத்தாபிஷ்யந்தத்தில் காணப்படும்.

मन्थेऽक्षि ताम्रपर्यन्तमुत्पाटनसमानरुक् ॥ १३ ॥

रागेण बन्धूकनिभं ताम्यति स्पर्शनाक्षमम् ।
असृङ्निमग्नारिष्टाभं कृष्णमग्न्याभदर्शनम् ॥ १४ ॥

*ரத்தத்தால் உண்டான அதிமந்த நோய்:*

ரத்தத்தால் உண்டான அதிமந்த நிலையில் கண்களின் ஓரத்தில் செந்நிறமும் பிளப்பது போன்ற வலியும் காணப் படும். செம்மையால் செம்பரத்தையை ஒத்திருக்கும். ஓய்ச்சல் உண்டாகும். பரிசித்தலைத் தாங்க முடியாது. கருவிழியானது ரத்தத்தில் நனைந்த வேப்பங்காயை ஒத்திருக்கும். பொருள்களை அக்னிக்கு ஒப்பாகக் காண்பர்.

अधिमन्था यथास्वं च सर्वे स्यन्दाधिकव्यथाः ।
शंखदन्तकपोलेषु कपाले चातिरुक्कराः ॥ १५ ॥

எல்லா அதிமந்த நோய்களும், அந்தந்த தோஷத்தால் உண்டான (அபிஷ்யந்த) கண்ணீர்ப் பெருக்கு நோயைக் காட்டிலும் அதிக வலி உண்டாக்குபவையாகும். நெற்றிப் பொட்டுக்கள், பற்கள், கன்னம், மண்டை ஓடு ஆகியவற்றில் அதிக வலியை உண்டாக்கும்.

वातपित्तातुरं घर्षतोदभेदोपदेहवत् ।
रूक्षदारुणवर्त्माक्षि कृच्छ्रोन्मीलनिमीलनम् ॥ १६ ॥

विकूणनविशुष्कत्वशीतेच्छाशूलपाकवत् ।
उक्तः शुष्काक्षिपाकोऽयं-

**(சுஷ்காக்ஷிபாகம்) கண் வறட்சி அழலை :**

வாயு, பித்தம் ஆகியவற்றால் கண்கள் பீடிக்கப் பட்டிருக்கும். உறுத்தல், குத்துவலி, பிளத்தல், பூசியது

போன்ற உணர்ச்சி ஆகியவை காணப்படும். இமைகளும் கண்களும் வறண்டனவாகவும், பயங்கரமான தோற்றம் உடையனவாகவும் இருக்கும். சிரமத்துடன் இமைகளை மூடித் திறத்தல், சுருக்கம், உலர்ந்திருத்தல், குளிர்ச்சியில் விருப்பம், சூலை, அழற்சி ஆகியவை கண்களில் ஏற்படும். இந்நோய் சுஷ்காக்ஷிபாகம் எனப்படும்.

-सशोफः स्यात्त्रिभिर्मलैः ॥ १७ ॥

सरक्तैस्तत्र शोफोऽतिरुग्दाहष्ठीवनादिमान् ।
पक्वोदुम्बरसंकाशं जायते शुक्लमण्डलम् ॥ १८ ॥

अश्रूष्णशीतविशदपिच्छिलाच्छघनं मुहुः ।

**(ஸசோபபாகம்) வீக்கத்துடன் கண் பழுத்தல் :**

வீக்கத்தில் வலி, எரிச்சல், நீர் சுரத்தல் முதலியவை அதிகரித்துக் காணப்படும்.

வெண் படலம், பழுத்த அத்திப்பழம் போன்றிருக்கும். அடிக்கடி உஷ்ணமாகவும், குளிர்ந்தும், பிசுபிசுப்பின்றியும், பிசுபிசுப்புடனும், தெளிந்தும், தடித்தும், கண்ணீர் பெருகும். ஸசோபபாகம் எனப்படும் இந்த நோய் ரத்தத்துடன் சேர்ந்த மூன்று தோஷங்களாலும் உண்டாகிறது.

अल्पशोफेऽल्पशोफस्तु पाकोऽन्यैर्लक्षणैस्तथा ॥ १९ ॥

**அல்ப சோப பாகம் (குறைவான வீக்கத்துடன் பழுத்தல்) :**

குறைந்த வீக்கத்துடன் இதே குறிகள் காணப்படின் அல்ப சோப பாகம் எனப்படும்.

अक्षिपाकात्यये शोफः संरम्भः कलुषाश्रुता।
कफोपदिग्धमसितं सितं प्रक्लेदरागवत् ॥ २० ॥

दाहो दर्शनसंरोधो वेदनाश्चानवस्थिताः।

### *(அக்ஷிபாகாத்யயம்) கண் பழுத்தலின் முற்றிய நிலை:*

*அக்ஷிபாகாத்யயம் என்னும் நோயில் (கண்ணில்) வீக்கமும், கலக்கமும் உண்டாகும். கலங்கிய கண்ணீர், கபத்தால் பூசப்பட்டது போன்று கரும்படலம் இருத்தல் ஆகியவை காணப்படும். வெண்படலம் கசிவுடனும் செந்நிறத்துடனும் இருக்கும். எரிச்சலுண்டாகும். பார்வைத் தடை ஏற்படும். நிலையற்ற வேதனைகள் காணப்படும்.*

अन्नसारोऽम्लतां नीतः पित्तरक्तोल्बणैर्मलैः ॥ २१ ॥

शिराभिर्नेत्रमारूढः करोति श्यावलोहितम्।
सशोफदाहपाकाश्रु भृशं चाविलदर्शनम् ॥ २२ ॥

अम्लोपितोऽयम्

### *(அம்லோஷிதா) புளிப்பூறல் கண் :*

*பித்தம், ரத்தம் ஆகியவை அதிகமாகக் கலந்த தோஷங்களால் உணவின் ஸாரம், புளிப்பாக்கப்பட்டு ஸிரைகள் மூலம் கண்களை அடையுமாயின் கண்களை கருஞ்சிவப்பு நிறமுள்ளதாக்கும். வீக்கம், எரிச்சல், புண், கண்ணீர் ஆகியவற்றை உண்டாக்கும். மிகவும் கலங்கிய பார்வை ஏற்படும். இந்நோய் அம்மோஷிதா எனப்படும்.*

-इत्युक्ता गदाः षोडश सर्वगाः।

இவ்வாறு கண் முழுவதையும் சார்ந்த பதினாறு நோய்களும் கூறப்பட்டன.

हताधिमन्थमेतेषु साक्षिपाकात्ययं त्यजेत् ॥ २३ ॥

இவற்றுள் ஹதாதிமந்தம் என்னும் நோயையும் அக்ஷிபாகாத்யயம் என்னும் நோயையும் சிகித்ஸையில் தவிர்க்க வேண்டும்.

वातोद्भूतः पंचरात्रेण दृष्टिं सप्ताहेन श्लेष्मजातोऽधिमन्थः ।
रक्तोत्पन्नो हन्ति तद्वत्त्रिरात्रात् मिथ्याचारात् पैत्तिकः सद्य एव ॥ २४॥

முறை கேடாகக் கையாளப்படின், வாயுவால் உண்டான அதிமந்த நோய் ஐந்து நாட்களிலும், கபத்தால் உண்டானது ஏழு நாட்களிலும், ரத்தத்தால் உண்டானது மூன்று நாட்களிலும், பித்தத்தால் உண்டானது உடனடியாகவும் பார்வையை அழிக்கும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने सर्वाक्षिरोगविज्ञानीयो नाम पंचदशोऽध्यायः ॥ २५॥

உத்தரஸ்தானம் — பதினைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

Central Library of Indian Medicines
21 NOV

## ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ षोडशोऽध्यायः - அத்தியாயம் -16 ]

अथातः सर्वाक्षिरोगप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ॥

அடுத்து (ஸர்வாக்ஷிரோக பிரதிஷேதம்) அனைத்துக் கண்ணோய் சிகித்ஸை என்னும் அத்தியாயத்தை விளக்கு கிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

प्राग्रूप एव स्यन्देषु तीक्ष्णं गण्डूषनावनम् ।
कारयेदुपवासं च कोपादन्यत्र वातजात् ॥ १ ॥

**(அபிஷ்யந்தம்) கண்ணீர்ப் பெருக்கு நோய்க்கு சிகித்ஸை :**

வாயுவால் உண்டான கண்ணீர்ப் பெருக்கு (*வாதா பிஷ்யந்த) நோய் நீங்கலாக மற்ற கண்ணீர்ப் பெருக்கு (அபிஷ்யந்த) நோய்களில் முற்குறிகள் காணும் நிலை யிலேயே, உபவாசமும் இருத்தலையும், தீக்ஷ்ணமுள்ள பொருள்களால் வாய் கொப்பளித்தலையும், நசியமிடு தலையும் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: *வாயு காரணமாக உண்டான அபிஷ்யந்த நிலையில் உபவாசத்தை மாத்திரமே தவிர்க்க வேண்டுமென கைரளியில் உரை கூறப்படுகிறது.

दाहोपदेहरागाश्रुशोफशान्त्यै बिडालकम् ।
कुर्यात्सर्वत्र पत्रैलामरिचस्वर्णगैरिकैः ॥ २ ॥

सरसांजनयष्ट्याह्वनतचन्दनसैन्धवैः ।

## புறவளையம் இடுதல்* :

எல்லா விதமான (அபிஷ்யந்த) கண்ணீர்ப் பெருக்கு நோய்களிலும் எரிச்சல், அதைப்பு, செந்நிறம், கண்ணீர்ப் பெருக்கு, வீக்கம் ஆகியவை நீங்குவதற்காக பச்சிலை, ஏலம், மிளகு, பொன்காவி, ரஸாஞ்சனம், அதிமதுரம், தகரவிதை, சந்தனம், இந்துப்பு ஆகியவற்றைக் கலந்து புறவளையமிட வேண்டும்.

குறிப்பு: *புறவளையம் - கண்ணில் வெளிப்புறத்தில், இமை உரோமங்களில் படாதவாறு பற்றிடுதல்.

सैन्धवं नागरं तार्क्ष्यं भृष्टं मण्डेन सर्पिषः ॥ ३ ॥

वातजे घृतभृष्टं वा योज्यं शबरदेशजम् ।

## வாயு அபிஷ்யந்தத்தில் புறவளையம் :

வாயுவால் உண்டான அபிஷ்யந்த நோயில் இந்துப்பு, சுக்கு, அஞ்சனக்கல் ஆகியவற்றை நெய்த் தெளிவில் பொரித்து கண்ணில் மேல் புறவளையமாகப் பூசலாம் அல்லது பாச்சோத்தியை நெய்யில் பொரித்து கண்ணில் மேல் புறவளையமாகப் பூசலாம்.

मांसीपद्मककालीययष्ट्याह्वैः पित्तरक्तयोः ॥ ४ ॥

## பித்த - ரக்த அபிஷ்யந்தங்களில் புறவளையம் :

பித்தம் அல்லது ரத்தத்தால் உண்டான (அபிஷ்யந்த) கண்ணீர்ப் பெருக்கு நோயில் சடாமாஞ்சில், பதிமுகம், மரமஞ்சள், அதிமதுரம் ஆகியவற்றை அரைத்துப் புற வளையமாய் பூசலாம்.

मनोह्वाफलिनीक्षौद्रैः कफे -

## கப அபிஷ்யந்தத்தில் புறவளையம் :

கபத்தால் உண்டான (அபிஷ்யந்த) கண்ணீர்ப் பெருக்கு நோய் மனோசிலை, ஞாழல், தேன் இவற்றை கண்ணின் மேல் பூசலாம்.

-सर्वैस्तु सर्वजे ।

ரத்தம், ஸன்னிபாதம் இவற்றால் உண்டாகும் அபிஷ்யந்த நோயில் இங்கு (தனித்த தோஷங்களுக்கு) கூறப்பட்ட எல்லாப் பொருள்களையும் அரைத்துக் கண்ணின் மேல் புறவளையமாகப் பூசலாம்.

सितमरिचभागमेकं चतुर्मनोह्वं द्विरष्टशाबरकम् ।
संचूर्ण्य वस्त्रबद्धं प्रकुपितमात्रेऽवगुण्ठनं नेत्रे ।। ५ ।।

கண்கள் கோபமடைந்தவுடன், (அபிஷ்யந்த நோய் தோன்றிய நிலையில்) முருங்கை விதை 1 பங்கு, மனோசிலை 4 பங்கு, பாச்சோற்றி 16 பங்கு, இவற்றைத் தூளாக்கி (மெல்லிய) துணியில் கட்டி கண்களின் மேல் தூவ வேண்டும்.

आरण्याश्छगणरसे पटावबद्धाः सुस्विन्ना नखवितुषीकृताः कुलत्थाः।
तच्चूर्णं सकृदवचूर्णनान्निशीथे नेत्राणां विधमति सद्य एव कोपम् ।। ६ ।।

காட்டுக் கொள்ளை துணியில் கட்டி, பசுஞ் சாண நீரில் நன்கு வேகவைத்து நகத்தால் அதன் தோலை நீக்க வேண்டும். பிறகு அதை சூரணித்து இரவில் ஒரு தடவை கண்ணிலிட *உடனடியாக நேத்ர கோபத்தைப் போக்கும்.

குறிப்பு: *இங்கு நேத்ர கோபம் என்பது அபிஷ்யந்த நோயைக் குறிக்கும் என கைரளியில் கூறப் பட்டுள்ளது.

घोपाभयातुत्थकयष्टिरोध्रैर्मूती सुसूक्ष्मैः श्लथवस्त्रबद्धैः।
ताम्रस्थधान्याम्लनिमग्नमूर्तिरर्ति जयत्यक्षिणि नैकरूपाम् ॥ ७ ॥

[1]சதகுப்பை, கடுக்காய், துத்தம், அதிமதுரம், லோத்தி, இவற்றை நன்கு பொடித்து தளர்ச்சியான (சிறு) மூட்டையாகக் கட்டி செப்புப் பாத்திரத்திலுள்ள [2]காடியில் தோய்த்து கண்களில் வைக்க பலவிதமான வலிகளையும் போக்கும்.

**குறிப்பு:** 1. घोष என்ற பாடத்தில் திரிகடு எனக் கொள்ள வேண்டும்.

2. அந்த நீரைக் கண்களில் இடவேண்டும் என்று கைரளியில் கூறப்பட்டுள்ளது.

षोडशभिः सलिलपलैः पलं तथैकं कटंकटेर्याः सिद्धम्।
सेकोऽष्टभागशिष्टः क्षौद्रयुतः सर्वदोषकुपिते नेत्रे ॥ ८ ॥

எல்லா தோஷங்களாலும் ஏற்பட்ட அபிஷ்யந்த நோயில், மரமஞ்சளை 16 பல நீரிலிட்டுக் காய்ச்சி, எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் கொண்டு அதனுடன் தேன் சேர்த்து கண்களில் ஊற்ற வேண்டும்.

वातपित्तकफसन्निपातजां नेत्रयोर्बहुविधामपि व्यथाम्।
शीघ्रमेव जयति प्रयोजितः शिग्रुपल्लवरसः समाक्षिकः ॥ ९ ॥

முருங்கைத் தளிர்ச் சாற்றுடன் தேன் கலந்து கண்களில் இட்டால் வாயு, பித்தம், கபம், ஸன்னிபாதம் இவற்றால் உண்டான பலவிதமான வலியையும் விரைவில் போக்கும்.

तरुणमुरुबूकपत्रं मूलं च विभिद्य सिद्धमाजे क्षीरे।
वाताभिष्यन्दरुजं सद्यो विनिहन्ति सक्तुपिण्डिका चोष्णा ॥ १० ॥

**வாயுவால் உண்டான அபிஷ்யந்தத்திற்கு சிகித்ஸை :**

ஆமணக்கின் துளிரையும், வேரையும் இடித்து ஆட்டுப் பாலில் வேக வைத்து கண்ணிலிட வாயுவால் உண்டான அபிஷ்யந்தமும் வலியும் உடன் நீங்கும். சூடாக்கப்பட்ட சத்துமாப் பிண்டமும் இத்தகைய குணமுள்ளதாகும்.

குறிப்பு: ★ ஆமணக்குத் துளிர், ஆமணக்கு வேர், ஆமணக்குப் பட்டை, கண்டங்கத்திரி வேர் இவற்றுள் ஒன்றை பாலில் பக்குவம் செய்து உபயோகிக்க வேண்டும் என சுச்ருதத்தில் காணப் படுகிறது.

आश्च्योतनं मारुतजे क्वाथो बिल्वादिभिर्हितः ।
कोष्णः सहैरण्डजटाबृहतीमधुशिग्रुभिः ॥ ११ ॥

ஆமணக்குவேர், கண்டங்கத்திரி, செம்முருங்கை இவற்றுடன் பில்வாதி பஞ்சமூலம் சேர்த்துக் கஷாயம் தயாரித்து சிறிது சூடாக இருக்கும் பொழுது, வாயுவால் உண்டான (அபிஷ்யந்த) கண்ணீர்ப் பெருக்கு நோயில் கண்ணிலிட வேண்டும்.

ह्रीबेरवक्रशार्ङ्गेष्टोदुम्बरत्वक्षु साधितम् ।
साम्भसा पयसाऽऽजेन शूलाश्च्योतनमुत्तमम् ॥ १२ ॥

வெட்டிவேர், தகரவிதை, ★குன்றி, அத்திப்பட்டை இவற்றுடன் நீரும், ஆட்டுப்பாலும், சேர்த்துப் பக்குவம் செய்து கண்ணில் இட (கண்ணிலுண்டாகும்) சூலை நீங்கும்.

குறிப்பு: ★ஸுச்ருதத்தில் मञ्जिष्ठा மஞ்சிட்டி என்ற பாடம் காணப்படுகிறது.

मंजिष्ठारजनीलाक्षाद्राक्षाद्धिमधुकोत्पलैः ।
क्वाथः सशर्करः शीतः सेचनं रक्तपित्तजित् ॥ १३ ॥

**ரத்த - பித்தாபிஷ்யந்தத்துக்கு சிகித்ஸை :**

மஞ்சிட்டி, மஞ்சள், அரக்கு, திராட்சை, ருத்தி, அதிமதுரம், நீலோத்பலம் இவற்றைக் கஷாயமிட்டு சர்க்கரை கலந்து குளிர வைத்து கண்களில் ஊள்ள ரத்தத்தாலும், பித்தத்தாலும் உண்டான (அபிஷ்யந்த) நோய் நீங்கும்.

कसेरुयष्ट्याह्वरजस्तान्तवे शिथिलं स्थितम् ।
अप्सु दिव्यासु निहितं हितं स्यन्देऽस्रपित्तजे ।। १४ ।।

நீர்க்கோரை, அதிமதுரம் ஆகியவற்றின் நுண்ணிய சூரணத்தைத் துணியில் தளர்த்தியாகக் கட்டி (காங்கோதகம் என்னும்) சுத்தமான நீரில் நனைத்துக் கண்களில் இட ரத்தப் பித்தத்தால் உண்டான அபிஷ்யந்த நோய் நீங்கும்.

पुण्ड्रयष्टीनिशामूती प्लुता स्तन्ये सशर्करे ।
छागदुग्धेऽथवा दाहरुग्रागाश्रुनिवर्तनी ।। १५ ।।

நாமக் கரும்பு, அதிமதுரம், மஞ்சள் *இவற்றை துணியில் முடிந்து சர்க்கரை கலந்த தாய்ப்பால் அல்லது ஆட்டுப் பாலில் நனைத்து கண்ணில் இட எரிச்சல், வலி, செந்நிறம், கண்ணீர்ப் பெருகுதல் ஆகியவற்றைப் போக்கும்.

**குறிப்பு:** *இவற்றின் நுண்ணிய தூளை உபயோகிக்க வேண்டும்.

श्वेतरोध्रं समधुकं घृतभृष्टं सुचूर्णितम् ।
वस्त्रस्थं स्तन्यमृदितं पित्तरक्ताभिघातजित् ।। १६ ।।

வெள்ளி லோத்தியை அதிமதுரத்துடன் சேர்த்து, நெய் விட்டு வறுத்து நுண்ணிய தூளாக்கி, துணியில் கட்டி தாய்ப்பாலில் நனைத்துக் கசக்கிக் கண்ணிலிட பித்தம், ரத்தம், தாக்குறுதல், இவற்றால் உண்டான அபிஷ்யந்தம் நீங்கும்.

குறிப்பு: ★தாக்குறுவதாலும் அபிஷ்யந்த நோய் உண்டாகுமென இதன் மூலம் குறிப்பிடப்படுகிறது.

नागरत्रिफलानिम्बवासारोध्ररसः कफे।
कोष्णमाश्च्योतनं-

**கபத்தால் உண்டான அபிஷ்யந்தத்திற்கு சிகித்ஸை :**

கபத்தாலுண்டான அபிஷ்யந்த நோயில் சுக்கு, திரிபலை, வேம்பு, ஆடாதோடை, பாற்சோற்றி இவற்றின் ரஸத்தை சிறிது சூடாக்கி கண்ணிலிட வேண்டும்.

-मिश्रैर्भेषजैः सान्निपातिके॥ १७॥

ஸன்னிபாதத்தால் உண்டான அபிஷ்யந்த நோயில் இங்கு கூறப்பட்ட ஔஷதங்களை ஏற்றவாறு கண்களில் இட வேண்டும்.

குறிப்பு: ★சிறிது சூடாக்கி உபயோகிக்க வேண்டுமென கைரளியில் கூறப்படுகிறது.

सर्पिः पुराणं पवने, पित्ते शर्करयाऽन्वितम्।
व्योषसिद्धं कफे पीत्वा यवक्षारावचूर्णितम्॥ १८॥

स्रावयेद्रुधिरं भूयस्ततः स्निग्धं विरेचयेत्।

நாட்பட்ட நெய்யை, வாயுவால் உண்டான அபிஷ்யந்த நோயில் தனித்தும், பித்தத்தால் உண்டான அபிஷ்யந்த நோயில் சர்க்கரை கலந்தும், கபத்தால் உண்டான அபிஷ்யந்த *நோயில் த்ரிகடு சேர்த்து பக்குவம் செய்து யவக்ஷாரம் கலந்து பருகச் செய்ய வேண்டும். ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். பிறகு நெய்ப்பு உண்டாக்கி விரேசனம் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: *த்ரிகடுவின் கல்கமும், கஷாயமும் சேர்த்து என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

आनूपवेसवारेण शिरोवदनलेपनम् ॥ १९ ॥

उष्णेन शूले, दाहे तु पयः सर्पिर्युतैर्हिमैः ॥

*(கண்ணில்)* சூலை காணப்படின் சதுப்பு நிலப் பிராணியின் மாம்ஸப் பொடித் தூவலை சூடாக்கி தலை, முகம் ஆகியவற்றில் பூச வேண்டும். எரிச்சல் காணப்படின் *(பரிசத்திலும், வீர்யத்திலும்)* குளிர்ச்சியுள்ள பொருள்களை அரைத்துப் பாலும், நெய்யும் கலந்து பூச வேண்டும்.

तिमिरप्रतिषेधं च वीक्ष्य युंज्याद्यथायथम् ॥ २० ॥

கோபம் அடைந்த தோஷத்தை அறிந்து ஏற்றவாறு திமிர சிகித்ஸையையும் செய்விக்க வேண்டும்.

अयमेव विधिः सर्वो मन्थादिष्वपि शस्यते ।

**அதிமந்தம் முதலியவற்றிற்கு சிகித்ஸை :**

இங்கு கூறப்பட்ட [1]எல்லா சிகித்ஸைகளையும் அதிமந்தம்[2] முதலிய நோய்களிலும் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: 1. எல்லாம் என்பதால் இமையில் மேல்பூச்சு, ஊற்றுதல், சூரண உபயோகம், முகப்பூச்சு ஆகியவை ஒவ்வொரு நாளும் செய்விக்கும்படி கூறப்படுகின்றன.

2. முதலிய என்பதால் அன்யதோவாதம் முதலியன கூறப்படுகின்றன.

अशान्तौ सर्वथा मन्थे भ्रुवोरुपरि दाहयेत् ॥ २१ ॥

இவ்விதமான எல்லா சிகித்ஸைகளாலும் அதிமந்த நோய் நீங்காவிடில் புருவத்திற்கு மேல் தீயால் சுட வேண்டும்.

रूप्यं रूक्षेण गोदध्ना लिम्पेन्नीलत्वमागते।
शुष्के तु मस्तुना वर्तिर्वाताख्यामयनाशिनी ॥ २२ ॥

**திரி (குளிகை) வகைகள் :**

வெள்ளித் தகட்டை, நெய்ப்புத் தன்மை நீக்கப்பட்ட பசுந்தயிரால் பூச வேண்டும். அந்தப் பூச்சு நீல நிறத்தையும் உலர்ந்த நிலையையும் அடைந்த பொழுது பூச்சுப் பொருளை தயிர்த் தெளிவு விட்டரைத்து திரிபோல் குளிகை செய்து உபயோகிக்க வாயுவால் உண்டான கண்ணோய்கள் நீங்கும்.

सुमनःकोरकाः शंखस्त्रिफला मधुकं बला।
पित्तरक्तापहा वर्तिः पिष्टा दिव्येन वारिणा ॥ २३ ॥

மல்லிகை மொட்டு, சங்கு, திரிபலை, அதிமதுரம், சிற்றாமுட்டி ஆகியவற்றை சுத்தமான மழைநீர் விட்டரைத்துத் திரி போல் குளிகை செய்து கண்ணிலிட பித்தம், ரத்தம் ஆகியவற்றினால் உண்டான நோய் நீங்கும்.

सैन्धवं त्रिफला व्योपं शंखनाभिः समुद्रजः।
फेन ऐलेयकं सर्जो वर्तिः श्लेष्माक्षिरोगनुत् ॥ २४ ॥

இந்துப்பு, திரிபலை, திரிகடு, சங்கநாபி, கடல் *நுரை முசுமுசுக்கை, மருத்து வெள்ளை ஆகியவற்றைச் சுத்தமான மழைநீர் விட்டரைத்து திரி போல் குளிகை செய்து உபயோகித்தால் கபத்தால் உண்டான (அபிஷ்யந்த) கண்ணோய் நீங்கும்.

குறிப்பு: *शैलेयकं என்னும் பாடத்தில் சிலாஜது அல்லது கல்நார் எனப் பொருள்.

प्रपौण्डरीकं यष्ट्याह्वं दार्वीं चाष्टपलं पचेत्।
जलद्रोणे रसे पूते पुनः पक्के घने क्षिपेत्॥ २५॥

पुष्पांजनाद्दशपलं कर्षं च मरिचात्ततः।
कृतश्चूर्णोऽथवा वर्तिः सर्वाभिष्यन्दसम्भवान्॥ २६॥

हन्ति रागरुजाघर्षान् सद्यो दृष्टिं प्रसादयेत्।
अयं पाशुपतो योगो रहस्यं भिषजां परम्॥ २७॥

***பாசுபத யோகம் :***

*வறள் தாமரை, அதிமதுரம், மரமஞ்சள் இவற்றை வகைக்கு எட்டு பலம் எடுத்து 16 பிரஸ்த நீரிலிட்டுக் காய்ச்சி (எட்டிலொன்றாய்க்) குறுக்கிக் கொள்ள வேண்டும். பிறகு வடிக்கட்டி காய்ச்சி இறுகிவரும் நிலையில் அதனுடன் [1]புஷ்பாஞ்சனம் 10 பலமும், மிளகு ¼ பலமும் சேர்த்து சூர்ணம் அல்லது திரிசெய்து உபயோகிக்க [2]எல்லா அபிஷ்யந்தம் காரணமாக உண்டாகும் செந்நிறம், வலி, உறுத்தல் ஆகியவற்றைப் போக்கும். உடனடியாக கண்களுக்குத் தெளிவை உண்டாக்கும். இது பாசுபத யோகம் எனப்படும். இது வைத்யருக்கான மேலான ரகஸ்யமாகும்.*

*குறிப்பு:* 1. Zinc Oxide *எனச் சிலர் கூறுவர்.*

2. *ஸன்னிபாத அபிஷ்யந்தத்தைக் குறிப்பதாக கைரளியில் காணப்படுகிறது.*

शुष्काक्षिपाके हविषः पानमक्ष्णोश्च तर्पणम्।
घृतेन जीवनीयेन नस्यं तैलेन वाऽणुना॥ २८॥

परिषेको हितश्चात्र पयः कोष्णं ससैन्धवम्।

### சுஷ்காக்ஷிபாக சிகித்ஸை :

சுஷ்காக்ஷிபாக நோயில் [1]நெய் பருக வேண்டும். ஜீவனீய கணச் [2]சரக்குகள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யால் இரண்டு கண்களையும் நிரப்ப வேண்டும். அல்லது அணு [3]தைலத்தால் நஸ்யமிட வேண்டும். இளஞ் சூடான பாலை இந்துப்புக் கலந்து இந்நோயில் கண்களில் இடல் இதமாகும்.

குறிப்பு: 1. வாத அபிஷ்யந்த நோய்க்கு கூறப்பட்ட நெய்யைப் பருக வேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்படு கிறது.

2. ஜீவனீய கிருதத்தை நசியமும் பானமும் செய்யலாம் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

3. அணு தைலம் சூத்ரஸ்தானம் அத்தியாயம் 20-ல் விளக்கப்பட்டுள்ளது.

सर्पियुक्तं स्तन्यपिष्टमंजनं च महौषधम् ॥ २९ ॥

वसा वाऽऽनूपसत्त्वोत्था किंचित्सैन्धवनागरा।

*அஞ்சனக்கல்லை தாய்ப்பால் விட்டிழைத்து நெய் கலந்து கண்களில் இடுவது சிறந்த ஔஷதமாகும். அல்லது சதுப்பு நிலப் பிராணியின் மாம்ஸ எண்ணையுடன் சிறிதளவு இந்துப்பும், சுக்கும் கலந்து கண்ணிலிடலாம்.

குறிப்பு: ★சுக்கை தாய்ப்பால் விட்டு இழைத்து நெய் கலந்து அஞ்ஜனமிடலாம் எனவும்,

★சுக்கையாவது, அஞ்சனக் கல்லையாவது தாய்ப்பால் விட்டிழைத்து நெய் கலந்து உபயோகிக் கலாம் எனவும் பொருள் கொள்வதுண்டு.

घृताक्तान् दर्पणे घृष्टान् केशान् मल्लकसम्पुटे ॥ ३० ॥

दग्ध्वाऽऽज्यपिष्टा लोहस्था सा मषी श्रेष्ठमंजनम् ।

மனித கேசத்தை நெய்யில் குழப்பி முகம் பார்க்கும் கண்ணாடியில் அரைத்து மடக்கு ஸம்புடத்தில் *வைத்து எரித்து (எடுத்த களிச் சாம்பலை) நெய்யில் குழப்பி இரும்புப் பாத்திரத்தில் வைத்திருக்க வேண்டும். இந்த மை கண்ணிலிடச் சிறந்ததாகும்.

குறிப்பு: ★மண் பூசி உட்புகையாக எரிக்க வேண்டும் என கைரளியில் விளக்கப்பட்டுள்ளது.

सशोफे वाऽल्पशोफे च स्निग्धस्य व्यधयेत्सिराम् ॥ ३१ ॥

रेकः स्निग्धे पुनर्द्राक्षापथ्याक्राथत्रिवृद्धृतैः ।

(அதிக) வீக்கம், அல்லது சிறிது வீக்கத்துடன் கூடிய (அக்ஷிய பாகத்தில்) கண் அழலை நோயில் நெய்ப்புச் சிகித்ஸை [1]செய்வித்து ஸிரையைக் குத்த வேண்டும். மறுபடியும் நெய்ப்பு உண்டாக்கி [2]திராக்ஷை கடுக்காய் ஆகியவற்றின் கஷாயத்தாலும், சிவதை நெய்யாலும் விரேசனம் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: 1. வியர்வை சிகித்ஸையும் செய்விக்க வேண்டும் என ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. திராக்ஷை கடுக்காய் ஆகியவற்றின் கஷாயத்தில் சிவதைப் பொடியும் நெய்யும் கலந்து உபயோகித்து விரேசனம் செய்விக்க வேண்டுமென சந்தர நந்தனர் கூறுகிறார்.

श्वेतरोध्रं घृते भृष्टं चूर्णितं तान्तवस्थितम् ॥ ३२ ॥

उष्णाम्बुना विमृदितं सेकः शूलहरः परम् ।

வெள்ளி லோத்தியை நெய்யில் பொரித்து சூரணித்து துணியில் கட்ட வேண்டும். பிறகு அந்த முடிச்சை வெந்நீரில் நனைத்துக் கசக்கிக் கண்களில் பிழிய வலியை விசேஷமாக போக்கும்.

दार्वीप्रपौण्डरीकस्य क्वाथो वाऽऽश्च्योतने हितः ॥ ३३ ॥

அல்லது மரமஞ்சள், வறள் தாமரை ஆகியவற்றின் கஷாயம் கண்ணிலிட ஏற்றது.

सन्धावांश्च प्रयुंजीत घर्षरागाश्रुरुग्घरान् ॥

அரிப்பு, செந்நிறம், கண்ணீர்ப் பெருக்கு, வலி ஆகிய வற்றைப் போக்கக் கூடிய [1]ஸந்தாவம் எனப்படும் அஞ்ஜனங்களையும் [2]பிரயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. இம்முறைகள் அடுத்து கூறப்பட இருக்கின்றன.

2. முற்கூறிய சிகித்ஸை பயனளிக்காத நிலையில் இவ்வாறு செய்ய வேண்டுமென சங்க்ரஹத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ताम्रं लोहे मूत्रघृष्टं प्रयुक्तं नेत्रे सर्पिर्धूपितं वेदनाघ्नम् ।
ताम्रे घृष्टो गव्यदध्नः सरो वा युक्तः कृष्णासैन्धवाभ्यां वरिष्ठः ॥ ३४ ॥

தாம்ரத்தை இரும்புப் பாத்திரத்தில் இட்டு பசுநீர் விட்டரைத்து நெய்யால் புகை உண்டாக்க வேண்டும். அதை கண்ணிலிட வேதனை நீங்கும் அல்லது பசுவின் தயிர்த் தெளிவை திப்பிலி, இந்துப்பு ஆகியவற்றுடன் கலந்து செம்பிலிட்டு [1]இழைத்து பிரயோகித்தல் சிறந்தது.

குறிப்பு: 1. செம்பினாலேயே இழைக்க வேண்டுமெனவும், நெய்யால் புகையூட்டி உபயோகிக்க வேண்டும் எனவும் கைரளியில் காணப்படுகிறது.

2. வீக்கம், உறுத்தல், கண்ணீர், வேதனை ஆகியவை நீங்கும் என ஸங்க்ரஹத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

शंखं ताम्रे स्तन्यघृष्टं घृताक्तैः शम्याः पत्रैर्धूपितं तद्यवैश्च ।
नेत्रे युक्तं हन्ति सन्धावसंज्ञं क्षिप्रं धर्षं वेदनां चातितीव्राम् ॥ ३५ ॥

தாமிரத்தில் தாய்ப்பால் விட்டு சங்கை இழைக்க வேண்டும். வன்னியிலை, யவை இவற்றுடன் நெய் கலந்து இதனால் புகையூட்ட வேண்டும். ஸந்தாவம் என்ற இந்த அஞ்ஜனம் கண்ணிலிடப்படின், உறுத்தலையும், மிகவும் அதிகமாக உள்ள வேதனையையும் விரைவில் நீக்கும்.

उदुम्बरफलं लोहे घृष्टं स्तन्येन धूपितम् ।
साज्यैः शमीच्छदैर्दाहशूलरागाश्रुहर्षजित् ॥ ३६ ॥

இரும்புப் *பாத்திரத்தில் அத்திப் பழத்தை தாய்ப்பால் விட்டரைத்து நெய்யில் நனைக்கப்பட்ட வன்னி இலையால் புகையூட்ட வேண்டும். இதைக் கண்ணிலிட எரிச்சல், சூலை, செந்நிறம் கண்ணீர்ப் பெருக்கு, கண் கூச்சம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: ⋆ लोह என்ற மூலச் சொல் இங்கு பொதுவாக எல்லா உலோகங்களையும் குறிக்கும் என கைரளியில் கூறப்படுகிறது.

शिग्रुपल्लवनिर्यासः सुघृष्टस्ताम्रसम्पुटे ।
घृतेन धूपितो हन्ति शोफघर्षाश्रुवेदनाः ॥ ३७ ॥

முருங்கைத் தளிர்ச் சாற்றை தாமிர சம்புடத்திலிட்டு நன்றாக இழைத்து நெய்யால் புகையூட்ட வேண்டும். இதைக் கண்ணிலிட வீக்கம், உறுத்தல், கண்ணீர்ப் பெருக்கு, வேதனை ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு: ★ரஸக்ரியை போன்று தடிப்பாகும் வரை இழைக்க வேண்டும் எனவும் தாமிரத்தாலேயே இழைக்க வேண்டுமெனவும் கைரளியில் கூறப்படுகிறது.

तिलाम्भसा मृत्कपालं कांस्ये घृष्टं सुधूपितम्।
निम्बपत्रैर्घृताभ्यक्तैर्घर्षशूलाश्रुरागजित् ॥ ३८ ॥

மண் சட்டி ஓட்டினை வெண்கலப் *பாத்திரத்தில் எள்ளின் நீர் விட்டிழைக்க வேண்டும். நெய்யில் நனைக்கப்பட்ட வேப்பிலையால் புகையூட்ட வேண்டும். இதைக் கண்ணிலிட உறுத்தல், சூலை, கண்ணீர்ப் பெருகுதல், செந்நிறம் ஆகியவை நீங்கும்.

குறிப்பு: ★எள் இலையின் நீரால் இழைக்க வேண்டுமென கைரளியில் கூறப்படுகிறது.

सन्धावेनांजिते नेत्रे विगतौषधवेदने।
स्तन्येनाश्च्योतनं कार्यं त्रिः परं नांजयेच्च तैः ॥ ३९ ॥

கண்ணில் ஸந்தாவாஞ்சனம் பிரயோகிக்கப் பட்டபின் மருந்தால் ஏற்பட்ட வேதனை நீங்கிய நிலையில் தாய்ப் பாலைக் கண்ணில் இடவேண்டும். ஸந்தாவாஞ்ஜனங்களை மூன்று முறைக்கு மேல் உபயோகிக்கக் கூடாது.

तालीसपत्रचपलानतलोहरजोञ्जनैः।
जातीमुकुलकासीससैन्धवैर्मूत्रपेषितैः ॥ ४० ॥

ताम्रमालिप्य सप्ताहं धारयेत्पेषयेत्ततः ।
मूत्रेणैवानुगुटिकाः कुर्याच्छायाविशोषिताः ॥ ४१ ॥
ताः स्तन्यघृष्टा घर्षाश्रुशोफकण्डूविनाशनाः ।

*குளிகை :*

*தாளீசபத்திரி, திப்பிலி, தகரவிதை, அயப்பொடி, அஞ்சனக்கல், ஜாதி மொட்டு, அன்னபேதி, இந்துப்பு ஆகியவற்றை பசுநீர் விட்டரைத்து, தாமிரத்தில் பூசி 7 நாட்கள் வைத்திருக்க வேண்டும். பிறகு (அந்தப் பூச்சுப் பொருளை) பசுநீர் விட்டரைத்துக் குளிகை செய்து நிழலில் உலர்த்த வேண்டும். இதை தாய்ப்பால் விட்டிழைத்துக் கண்ணிலிட உறுத்தல், கண்ணீர்ப் பெருகுதல், வீக்கம், அரிப்பு ஆகியவற்றைப் போக்கும்.

**குறிப்பு:** *चपला என்பதற்கு கடுக்காய் என கைரளியில் உரை கூறப்பட்டுள்ளது. ஆனால் ஸங்க்ரஹத்தில் திப்பிலியே குறிப்பிடப்பட்டுள்ளது.

व्याघ्रीत्वङ्मधुकं ताम्ररजोऽजाक्षीरकल्कितम् ॥ ४२ ॥
शम्यामलकपत्राज्यधूपितं शोफरुक्प्रणुत् ।

*கண்டங்கத்திரியின் தோல், அதிமதுரம், தாம்ரப் பொடி ஆகியவற்றை ஆட்டுப்பால் விட்டரைத்து நெய்யில் நனைக்கப்பட்டவையான வன்னியிலை, நெல்லியிலை ஆகியவற்றால் புகையூட்ட வேண்டும். இதை கண்ணிலிட வீக்கமும், வலியும் நீங்கும்.

**குறிப்பு:** *त्वक् என்ற மூலச் சொல் லவங்கப் பட்டையைக் குறிப்பதாகவும் கொள்ள இடமுண்டு.

अम्लोषिते प्रयुंजीत पित्ताभिष्यन्दसाधनम् ॥ ४३ ॥

பித்தாபிஷ்யந்த நோய்க்கு கூறப்பட்ட சிகித்ஸையை அம்லோஷித நோயில் செய்ய வேண்டும்.

उत्क्लिष्टाः कफपित्तास्रनिचयोत्थाः कुकूणकः ।
पक्ष्मोपरोधः शुष्काक्षिपाकः पूयालसो बिसः ॥ ४४ ॥

पोथक्यम्लोषितोऽल्पाख्यः स्यन्दमन्था विना निलात् ।
एतेऽष्टादश पिल्लाख्या दीर्घकालानुबन्धिनः ॥ ४५ ॥

**பில்லம் :**

கபோத் கிலிஷ்டம், பித்தோத் கிலிஷ்டம், ரத்தோத் கிலிஷ்டம், ஸன்னிபாதோத் கிலிஷ்டம், குகூணம், பக்ஷ்மோபரோதம், சுஷ்காக்ஷி பாகம், பூயாலஸம், பிஸவர்த்ம, போதகீ, அம்லோஷிதம், அல்பசோபம், வாயு நீங்கலாக மற்றவைகளால் உண்டான மூவகை அபிஷ்யந்தங்களும் மூவகை அதிமந்தங்களும் ஆகிய பதினெட்டு நோய்களும் வெகு நாட்கள் தொடர்ந்து இருப்பின் பில்லம் என்ற பெயரை அடையும்.

चिकित्सापृथगेतेषां स्वंस्वमुक्ता -

இவற்றிற்குத் தனித்தனியாக சிகித்ஸை முறை கூறப்பட்டது.

-अथ वक्ष्यते ।

पिल्लीभूतेषु सामान्यात् -

பில்லத் தன்மையை அடைந்த இந்த நோய்களுக்கு பொதுவான சிகித்ஸை அடுத்துக் கூறப்படுகிறது.

-अथ पिल्लाख्यरोगिणः ॥ ४६ ॥

स्निग्धस्य छर्दितवतः सिराविद्धहृतासृजः ।
विरिक्तस्य च वर्त्मानु निर्लिखेदाविशुद्धितः ॥ ४७ ॥

பில்ல நோயாளிக்கு நெய்ப்பு சிகித்ஸை, வாந்தி செய்வித்தல், ஸிரையைக் குத்தி ரத்தத்தை வெளியேற்றுதல், விரேசன சிகித்ஸை ஆகியவை செய்விக்கப் பட்டபின் சுத்தம் ஏற்படும்வரை இமையை (தேக்கு இலை முதலியவற்றால்) *சுறண்ட வேண்டும்.

குறிப்பு: *அட்டையால் ரத்தத்தை வெளியேற்றவும் வேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

तृत्थकस्य पलं श्वेतमरिचानि च विंशतिः ।
त्रिंशता कांजिकपलैः पिष्ट्वा ताम्रे निधापयेत् ॥ ४८ ॥

पिल्लानपिल्लान् कुरुते बहुवर्षोत्थितानपि ।
तत्सेकेनोपदेहाश्रुकण्डूशोफांश्च नाशयेत् ॥ ४९ ॥

துத்தம் 1 பலம், முருங்கை விதை (எண்ணிக்கையில்) 20, இவற்றை 30 பலம் காடி விட்டரைத்து தாமிர பாத்திரத்தில் வைக்க வேண்டும். இந்த திரவத்தை கண்ணில் இட பல வருஷங்களாய் இருப்பினும் பில்ல நோயையும் போக்கும். அதைப்பு, கண்ணீர், அரிப்பு, வீக்கம் ஆகியவற்றையும் போக்கும்.

குறிப்பு: *தேவையான சரக்குகளைக் காடி விட்டு அரைத்து, 32 பலம் காடியில் தாமிர பாத்திரத்தில் கலக்கி வைத்திருந்து உபயோகிக்க வேண்டுமென ஸங்க்ர ஹத்தில் காணப்படுகிறது.

करंजबीजं सुरसं सुमनःकोरकाणि च।
संक्षुद्य साधयेत्क्वाथे पूते तत्र रसक्रिया॥ ५०॥

अंजनं पिल्लभैषज्यं पक्ष्मणां च प्ररोहणम्।

புங்கு விதை, துளஸி, ஜாதி மல்லிகை மொட்டு இவற்றை இடித்துக் கஷாயமிட்டு வடிகட்டி *ரஸக்ரியை தயாரிக்க வேண்டும். இதை அஞ்ஜனமிட பில்ல நிலையை அடைந்த கண்ணோய்கள் நீங்கும். இமை உரோமங்களும் முளைக்கும்.

குறிப்பு: *ரஸக்ரியை வடிக்கட்டிய கஷாயம் முதலிய திரவத்தை அடுப்பிலேற்றி தேன் போல் தடிப் பாகும் வரை பக்குவம் செய்தல்.

रसांजनं सर्जरसो रीतिपुष्पं मनःशिला॥ ५१॥

समुद्रफेनो लवणं गैरिकं मरिचानि च।
अंजनं मधुना पिष्टं क्लेदकण्डूघ्नमुत्तमम्॥ ५२॥

ரஸாஞ்ஜனம், *மருத்துவெள்ளை புஷ்பாஞ்ஜனம், மனோசிலை, கடல் நுரை, இந்துப்பு, காவி, மிளகு ஆகிய வற்றைத் தேன் விட்டரைத்து கண்ணில் அஞ்சனமிட கசிவு, அரிப்பு ஆகியவற்றை சிறப்பாகப் போக்கும்.

குறிப்பு: *जातिपुष्पं என்ற பாடத்தில் ஜாதி மல்லிகை என்று பொருள்.

अभयारसपिष्टं वा तगरं पिल्लनाशनम्।
भावितं बस्तमूत्रेण सस्नेहं देवदारु च॥ ५३॥

*அல்லது கிரந்தித் தகரத்தை கடுக்காய்க் கஷாயம் விட்டரைத்து கண்ணிலிட, பில்ல நிலையடைந்த கண்

நோய்கள் நீங்கும். ஆட்டு மூத்ரத்தில் ஊற வைக்கப்பட்ட தேவதாருவை நெய்ப்புப் பொருள் கலந்து கண்ணிலிடலாம்.

குறிப்பு: ⋆नागर என்ற பாடத்தில் சுக்கு எனப் பொருள்.

सैन्धवत्रिफलाकृष्णाकटुकाशंखनाभयः ।
सताम्ररजसो वर्तिः पिल्लशुक्रकनाशिनी ॥ ५४ ॥

திரி :

இந்துப்பு, திரிபலை, திப்பிலி, கடுகரோஹிணீ, சங்கு, தாமிரத்தூள் ஆகியவற்றைச் சேர்த்து திரி செய்து கண்ணிலிட, பில்ல நோய்கள் (கண்) சுக்ரம் ஆகியவற்றைப் போக்கும்.

पुष्पकासीसचूर्णो वा सुरसारसभावितः ।
ताम्रे दशाहं तत् पैल्लचपक्ष्मशातजिदंजनम् ॥ ५५ ॥

அல்லது புஷ்பகாஸீஸ (அன்ன பேதி வகையின்) சூர்ணத்தை தாமிரப் பாத்திரத்திலிட்டு துளசிச் சாற்றில் பத்து நாட்கள் ஊற வைத்துப் (பின்னர் கண்ணில்) அஞ்ஜனமிட, பில்ல நிலையடைந்த கண்ணோய்கள், இமை மயிர் உதிர்தல் ஆகியவை நீங்கும்.

अलं च सौवीरकमंजनं च ताभ्यां समं ताम्ररजः सुसूक्ष्मम् ।
पिल्लेषु रोमाणि निषेवितोऽसौ चूर्णः करोत्येकशलाकयाऽपि ॥ ५६ ॥

அரிதாரம் (1 பங்கு) ஸௌவீராஞ்சனம் (1 பங்கு) இவற்றிற்கு சம அளவு நுண்ணியதாக தாமிரத் தூள் இவற்றின் சூர்ணத்தை சலாகையால் ஒரு முறை அஞ்ஜனம்

இடுவதாலேயே பில்ல நிலையை அடைந்த கண் நோய்களில் இமை மயிர்கள் உண்டாகும்.

लाक्षानिर्गुण्डीभृंगदार्वीरसेन श्रेष्ठं कार्पासं भावितं सप्तकृत्वः ।
दीप:प्रज्वाल्य:सर्पिषातत्समुत्था श्रेष्ठापिल्लानां रोपणार्थे मषी सा ॥ ५७ ॥

சிறந்த *பருத்தியை அரக்கு, நொச்சி, கரிசாலை, மரமஞ்சள் ஆகியவற்றின் ரஸத்தில் ஏழு முறை ஊற வைக்க வேண்டும். பிறகு நெய்யில் அந்த பஞ்சை இட்டு தீபமாக எரித்து அதிலிருந்து உண்டாகும் மஷியினால் அஞ்ஜனமிடுதல் பில்ல நிலையை அடைந்த கண் நோய்களை ஆறச் செய்வதில் சிறந்ததாகும்.

குறிப்பு: *விதை முதலியவை அகற்றப்பட்ட பருத்தி என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

वर्त्मावलेखं बहुशस्तद्वच्छोणितमोक्षणम् ।
पुनःपुनर्विरेकं च नित्यमाश्च्योतनांजनम् ॥ ५८ ॥

नावनं धूमपानं च पिल्लरोगातुरो भजेत् ।

பில்ல நிலையை அடைந்த கண்ணோய் உள்ளவர் இமையைச் சுரண்டுதல், ரத்தத்தை வெளியேற்றுதல், விரேசனம், கண்ணில் மருந்தைப் பிழிதல், அஞ்ஜனமிடல், நசியமிடுதல், புகைபிடித்தல் ஆகிய சிகித்ஸை முறையை பல தடவை செய்து கொள்ள வேண்டும்.

पूयालसे त्वशान्तेऽन्ते दाहः सूक्ष्मशलाकया ॥ ५९ ॥

**பூயாலசத்தில் தனி சிகித்ஸை:**

பூயாலஸ நோய் *நீங்காவிடில் முடிவில் நுண்ணிய சலாகையால் சூடு இட வேண்டும்.

குறிப்பு: *மற்ற எல்லா சிகித்ஸைகளும் பயனற்ற நிலை குறிப்பிடப்படுகிறது.

चतुर्न्नवतिरित्यक्ष्णो हेतुलक्षणसाधनैः ।
परस्परमसंकीर्णाः कात्स्न्र्येनगदिता गदाः ॥ ६० ॥

இவ்வாறு, தனித் தனியாக காரணம், குறிகள், சிகித்ஸை ஆகியவற்றுடன் வெவ்வேறாக அமைந்துள்ள 94 கண்ணோய்களும் முற்றிலும் கூறப்பட்டன.

सर्वदा च निषेवेत स्वस्थोऽपि नयनप्रियः ।
पुराणयवगोधूमशालिषष्टिककोद्रवान् ॥ ६१ ॥

मुद्गादीन् कफपित्तघ्नान् भूरिसर्पिः परिप्लुतान् ।
शाकं चैवंविधं मांसं जांगलं दाडिमं सिताम् ॥ ६२ ॥

सैन्धवं त्रिफलां द्राक्षां वारि पाने च नाभसम् ।
आतपत्रं पदत्राणं विधिवद्दोषशोधनम् ॥ ६३ ॥

**கண்ணுக்கு இதமானவை :**

ஆரோக்யமாய் இருப்பவராயினும் கண்களைக் காக்க விரும்பி, அதிக நெய் கலந்தவையும், கப பித்தங்களை போக்குபவையுமான நாட்பட்ட யவை, கோதுமை, சாலி, அறுபதாங்குறுவை, கேழ்வரகு, பயறு [1]முதலியவற்றையும்[1] இத்தகைய[2] குணமுள்ள காய்வகைகளையும், வறண்ட பிரதேசப் பிராணியின் மாமிசம், மாதுளை, சர்க்கரை, இந்துப்பு, திரிபலை, திராட்சை ஆகியவற்றையும் பருகுவதற்கு சுத்தமான மழை நீரையும், குடை, செருப்பு முறையான சோதன சிகித்ஸை ஆகியவற்றையும் எல்லாக் காலத்திலும் உபயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1. முதலிய என்பதால் காராமணி நீவார தான்யம், நாட்பட்ட வ்ரீஹி, நெல் ஆகியவை குறிப்பிடப் படுகின்றன.

2. இத்தகைய என்பதால் அதிக நெய் சேர்ந்தவையும் கப பித்தங்களைப் போக்குபவையுமான காய்கள் குறிப்பிடப்படுகின்றன.

वर्जयेद्वेगसंरोधमजीर्णाध्यशनानि च।
क्रोधशोक-दिवास्वप्नरात्रिजागरणातपान् ॥ ६४ ॥

विदाहि विष्टम्भकरं यच्चेहाहारभेषजम् ॥

***நீக்க வேண்டியவை :***

(14 விதமான) *வேகங்களை அடக்குதல், உணவு ஜீரணிக்காத நிலையில் உணவு உட்கொள்ளுதல், உண்டவுடனே உண்ணல், கோபம், வருத்தம், பகல் தூக்கம், இரவு கண் விழித்தல், வெயில் ஆகியவற்றையும், நெஞ்செரிவு உண்டாக்குபவையும், தம்பிதம் செய்பவையுமான செயல், உணவு, மருந்து ஆகியவற்றையும் விலக்க வேண்டும்.

குறிப்பு: *14 விதமான வேகங்களும் சூத்ரஸ்தானம் 4-ம் அத்தியாயத்தில் விளக்கப் பட்டுள்ளன.

द्वे पादमध्ये पृथुसंन्निवेशे शिरे गते ते बहुधा च नेत्रे।
ता म्रक्षणोद्वर्तनलेपनादीन् पादप्रयुक्तान्नयनं नयन्ति ॥ ६५॥

***(பாதாப்யங்கம்) பாதத்தைப் பாதுகாத்தல் :***

(ஒவ்வொரு) பாதத்தின் மத்தியிலும், பரவலாக அமைந்த இரு ஸிரைகள் உள்ளன. அவை பலவாறாகப் பிரிந்து கண்களை அடைகின்றன. இவை பாதங்களில் தடவப்பட்ட

அப்பியங்கம், பூசித் தேய்த்தல், பூச்சு முதலியவற்றை கண்களுக்கு எடுத்துச் செல்கின்றன.

मलौष्ण्यसंघट्टनपीडनाद्यै स्ता दूषयन्ते नयनानि दृष्टाः ।
भजेत्सदा दृष्टिहितानि तस्मादुपानदभ्यञ्जनधावनानि ॥ ६६ ॥

அழுக்கு, உஷ்ணம், உராய்தல், அழுத்துதல் *முதலியவற்றால் இந்த நான்கு ஸிரைகளும் கோபமடைந்து கண்களைக் கெடுக்கின்றன. ஆகையால் கண்களுக்கு இதம் செய்பவையாக பாதரட்சை அணிதல், அப்பியங்கம் செய்தல், கழுவுதல் ஆகியவற்றை எப்பொழுதும் செய்ய வேண்டும்.

**குறிப்பு:** *முதலியவற்றால் என்பதால் சமமற்றது, கடினமானது, முள் நிறைந்தது ஆகிய நடை பாதைகளும் கூறப்படுகின்றன.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां

षष्ठे उत्तरस्थाने सर्वाक्षिरोगप्रतिषेधो नाम षोडशोऽध्यायः ॥ १६ ॥

உத்தரஸ்தானம் — பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ सप्तदशोऽध्यायः - அத்தியாயம் - 17 ]

अथातः कर्णरोगविज्ञानीयं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து செவி நோய்களைப் பற்றி விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

प्रतिश्यायजलक्रीडाकर्णकण्डूयनैर्मरुत् ।
मिथ्यायोगेन शब्दस्य कुपितोऽन्यैश्च कोपनैः ॥ १ ॥

प्राप्य श्रोत्रसिराः कुर्याच्छूलं स्रोतसि वेगवत् ।
अर्धावभेदकं स्तम्भं शिशिरानभिनन्दनम् ॥ २ ॥

चिराच्च पाकं पक्वं तु लसीकामल्पशः स्रवेत् ।
श्रोत्रं शून्यमकस्माच्च स्यात्संचारविचारवत् ॥ ३ ॥

### வாயுவால் ஏற்படும் காது நோய் :

சளிப்பு என்னும் நாசிநோய், நீரில் விளையாடுதல், காதைக் குடைதல் ஆகியவற்றாலும் சீர்கேடான முறையில் ஒலியைக் கேட்பதாலும் மற்றும் *ஸர்வரோக நிதானத்தில் கூறப்பட்ட காரணங்களாலும் வாயு கோபித்து காதுகளின் ஸிரைகளை அடைந்து காது த்வாரத்தில் தீவிரத் தன்மையுள்ள வலியை உண்டாக்கும். (அர்த்தாவபேதகம்) ஒற்றைத் தலைவலி, தம்பிதம், குளிர்ச்சியை விரும்பாமை ஆகியவை காணப்படும். வெகு காலத்திற்குப் பின்னரே பாகத்தை அடையும். பாகம் அடைந்த நிலையில் குறைந்த அளவில் கசிவை வெளியேற்றும். காது சூன்யமாகத் தோன்றும்.

காரணமின்றி செவி மூடியது போன்றும், திறந்தது போன்றும் உணரப்படும்.

**குறிப்பு:** ⋆ஸர்வ ரோக நிதானம். நிதானஸ்தானம் அத்தியாயம் 1-ல் விளக்கப்பட்டுள்ளது. காது நோய்கள் - 25 வகைகள் என கைரளியிலும், சுச்ருதத்திலும், 4 வகைகள் என சரகத்திலும் கூறப் பட்டுள்ளது.

शूलं पित्तात् सदाहोषाशीतेच्छाश्वयथुज्वरम् ।
आशुपाकं प्रपक्वं च सपीतलसिकास्रुति ॥ ४ ॥

सा लसीका स्पृशेद्यद्यत्तत्पाकमुपैति च ।

**பித்தத்தால் உண்டான காது நோய் :**

பித்தத்தால் உண்டான காது நோய்களில் எரிச்சல், காந்தல், குளிர்ச்சியில் விருப்பம், வீக்கம், ஜ்வரம் ஆகியவற்றுடன் காதில் வலி காணப்படும். விரைவில் பாகமடையும். பாக மான நிலையில் மஞ்சள் நிறமாக நிணநீர் கசிவும். அக்கசிவு படும் இடங்களில் அழலை ஏற்படும்.

कफाच्छिरोहनुग्रीवागौरवं मन्दता रुजः ॥ ५ ॥

कण्डूः श्वयथुरुष्णेच्छा पाकाच्छ्वेतघनास्रुतिः ।

**கபத்தால் உண்டான காது நோய் :**

கபம் காரணமாக உண்டான காது நோயில் தலை, தாடை, கழுத்து ஆகியவை பாரமாக இருக்கும். வலி குறைந்து காணப்படும். அரிப்பு, வீக்கம், உஷ்ணத்தில் விருப்பம் ஆகியவை காணப்படும். பக்குவமடைந்த நிலையில் வெண்ணிறமாகவும், தடித்தும் கசிவு வெளியேறும்.

करोतिश्रवणे शूलमभिघातादिदूषितम् ॥ ६ ॥

रक्तं पित्तसमानार्ति किंचिद्वाऽधिकलक्षणम् ।

**ரத்தத்தால் உண்டான காது நோய்:**

அடிபடுதல் முதலியவற்றால் கேடடைந்த ரத்தமானது காதில் வலியை உண்டாக்கும். பித்தத்தால் உண்டான காது நோயில் ஏற்படுவது போன்று வேதனைகள் காணப்படும். அல்லது அவையே *சிறிது அதிகரித்துக் காணப்படும்.

**குறிப்பு:** *वातिकलक्षणं என்ற பாடத்தில் வாயுவால் உண்டாகும் காது நோய்க் குறிகள் காணப்படும் என்பது பொருள்.

शूलं समुदितैर्दोषैः सशोफज्वरतीव्ररुक् ॥ ७ ॥

पर्यायादुष्णशीतेच्छं जायते श्रुतिजाड्यवत् ।
पक्वं सितासितारक्तघनपूयप्रवाहि च ॥ ८ ॥

**ஸன்னி பாதத்தால் உண்டான காது நோய் :**

ஸன்னி பாதத்தால் உண்டான காது நோயில் வீக்கம், ஜ்வரம், தீவிரவலி, உஷ்ணத்திலும், குளிர்ச்சியிலும் மாற்றி மாற்றி விருப்பம், காதுமந்தம் ஆகியவற்றுடன் வலி உண்டாகும். பக்குவமடைந்த நிலையில் வெள்ளை, கறுப்பு, இளஞ் சிவப்பு ஆகிய நிறத்துடனும் தடித்தும் சீழ். வெளியேறும்.

शब्दवाहिसिरासंस्थे शृणोति पवने मुहुः ।
नादानकस्माद्विविधान् कर्णनादं वदन्ति तम् ॥ ९ ॥

**(கர்ணநாதம்) காது இரைதல் :**

ஒலியை எடுத்துச் செல்லும் ஸிரைகளில் வாயு தங்கியிருந்தால் காரணமின்றி அடிக்கடி *பலவித ஒலி களைக் கேட்பர். இந்த நோயை கர்ணநாதம் என்பர்.

குறிப்பு: ★காது இரைச்சல், உரக்கக் கூறுதல், மிருதங்க ஒலி, பறையின் ஒலி போன்றவை கூறப்படுகின்றன.

श्लेष्मणाऽनुगतो वायुर्नादो वा समुपेक्षितः ।
उच्चैः कृच्छ्राच्छ्रुतिं कुर्याद्बधिरत्वं क्रमेण च ॥ १० ॥

*(பாதிர்யம்) செவிடு :*

கபத்துடன் தொடர்பு கொண்ட வாயு காரணமாகவாவது, கர்ணநாத நோய்க்குத் தக்க சிகித்ஸை செய்யாமையாலாவது, உரத்த ஒலியையும் சிரமப்பட்டுக் கேட்பர். நாளடைவில் காது கேளாமை (செவிட்டுத் தன்மை) ஏற்படும்.

वातेन शोषितः श्लेष्मा श्रोतो लिम्पेत्ततो भवेत् ।
रुग्गौरवं पिधानं च स प्रतीनाहसंज्ञितः ॥ ११ ॥

*பிரதீநாஹம் :*

வாயு காரணமாக வற்றிய கபமானது காது ஸ்ரோதஸ்ஸில் பூசி நிற்பதால் வலி, பார உணர்ச்சி, அடைப்பு ஆகியவை ஏற்படும். இந்த நோய் பிரதீநாஹம் எனப்படும்.

कण्डूशोफौ कफाच्छ्रोत्रे स्थिरौ तत्संज्ञया स्मृतौ ।

*அரிப்பு - வீக்கம் :*

கபங் காரணமாக காதில் அரிப்பும், வீக்கமும் நிலை பெற்றுக் காணப்படும். இவை முறையே காது அரிப்பு என்னும் காது வீக்கம் என்றும் கூறப்படும்.

कफो विदग्धः पित्तेन सरुजं नीरजं त्वपि ॥ १२ ॥

घनपूतिबहुक्लेदं कुरुते पूतिकर्णकम् ।

**(பூதி கர்ணம்) செவி நாற்றம் :**

பித்தத்தால் கபம் எரிக்கப்படுவதால் தடிப்பு, கெட்ட நாற்றம் இவற்றுடன் அதிக அளவு கசிவானது வலியுடனோ, வலியின்றியோ ஏற்படும். *இந்நோய் (பூதிகர்ணம்) செவிநாற்றம் எனப்படும்.

குறிப்பு: ⋆பூதி என்னும் சொல் துர்க் கந்தத்தைக் குறிக்கும்.

वातादिदूषितं श्रोत्रं मांसासृक्क्लेदजा रुजम् ॥ १३ ॥

खादन्तो जन्तवः कुर्युस्तीव्रां स कृमिकर्णकः ।

**கிருமி கர்ணம் :**

மாமிஸம் ரத்தம் இவற்றின் கசிவால் உண்டான கிருமிகள் வாயு முதலியவற்றால் கேடடைந்த செவிப் பகுதியை அரித்து உண்டு தீவிரமான வலியை உண்டாக்கும். இந்த நோய் கிருமி கர்ணம் எனப்படும்.

श्रोत्रकण्डूयनाज्जाते क्षते स्यात्पूर्वलक्षणः ॥ १४ ॥

विद्रधिः पूर्ववच्चान्यः शोफोऽर्शो-

**கர்ண வித்ருதிக் கட்டி :**

காதைக் குடைவதால் உண்டான விரணம் காரணமாக முன்பு நிதானஸ்தானத்தில் கூறப்பட்டவாறு கபத்தால் உண்டான வித்ருதிக் கட்டியின் குறிகளுடன் செவி வித்ருதிக் கட்டி உண்டாகும். முன்பு நிதான ஸ்தானத்தில் கூறப்பட்டவாறு தோஷங்களால் உண்டாகும் வித்ருதி வீக்கமும் உண்டாகும்.

-अर्बुदमीरितम् ।

तेषु रुक् पूतिकर्णत्वं बधिरत्वं च बाधते ॥ १५ ॥

**(கர்ண மூலம்) கர்ணாற்புதம் :**

காதில் மூலக் குருத்து, அற்புதக் கட்டி என இரு நோய்கள் உண்டாகும். இவை (இமை நோய்ப் பகுதியில்) விளக்கப்பட்டன. இந்நோய்களில் வலி, கெட்ட நாற்றம், காது கேளாமை ஆகியவை ஏற்படும்.

**குறிப்பு:** ★இவற்றின் குறிகள் (வர்த்ம) இமை நோய் நிதானத்தில் கூறப்பட்ட இமைப்புற்று, இமை முளை போன்றதாகும் என கைரளியில் கூறப் பட்டுள்ளது.

गर्भेऽनिलात्संकुचिता शष्कुली कूचिकर्णकः ।

**கூசிகர்ணம் :**

கர்ப்பத்தில் வாயுவினால் காதுமடல் குறுக்கப் பட்டிருப்பின் அது கூசிகர்ணம் எனப்படும்.

एको नीरुगनेको वा गर्भे मांसांकुरः स्थिरः ॥ १६ ॥

पिप्पली पिप्पलीमानः-

**கர்ண பிப்பலீ :**

(வாயுவினால் காது மடலில்) வலியின்றியும், நிலை பெற்றதாயும், திப்பிலி போன்றதுமான ஒன்று அல்லது பல மாம்ஸக் குருத்துக்கள் கருவிலேயே உண்டாகும். இந்நோய் கர்ண பிப்பலீ எனப்படும்.

-सन्निपाताद्विदारिका ।
सवर्णः सरुजः स्तब्धः श्वयथुः स उपेक्षितः ॥ १७ ॥

कटुतैलनिभं पक्वः स्रवेत् कृच्छ्रेण रोहति ।
संकोचयति रूढा च सा ध्रुवं कर्णशष्कुलीम् ॥ १८ ॥

**கர்ணவிதாரிகா :**

ஸன்னிபாதம் காரணமாக காது மடலில் சரும நிறங் கொண்டதும், வலியுடன் கூடியதும், தம்பித்துள்ளதுமான வீக்கம் உண்டாகும். இந்நோய் விதாரிகா எனப்படும். இந்நோய்க்கு சிகித்ஸை செய்யாவிடில் பழுத்து கடுகெண்ணெய் போன்று கசிவை வெளிப்படுத்தும். மிகவும் கஷ்டத்தின் பேரில் ஆறும். விரணம் ஆறினாலும் நிச்சயமாக காது மடலைச் சுருங்கச் செய்யும்.

सिरास्थः कुरुते वायुः पालीशोषं तदाह्वयम् ।

**பாலீசோஷம் :**

வாயுவானது (காதின்) ஸிரைகளில் தங்கி காது மடலை சுருங்கச் செய்யும். இந்த நோய் பாலீசோஷம் எனப்படும்.

कृशा दृढा च तन्त्रीवत् पाली वातेन तन्त्रिका ॥ १९ ॥

**தந்த்ரிகா :**

வாயு காரணமாக காது மடல் மெலிந்து உறுதியாக கம்பி போன்று காணப்படும். இந்த நோய் தந்த்ரிகா எனப்படும்.

सुकुमारे चिरोत्सर्गात्सहसैव प्रवर्धिते ।
कर्णे शोफः सरुक् पाल्यामरुणः परिपोटवान् ॥ २० ॥

परिपोटः स पवनात्-

**பரிபோடம் :**

நளினமான இயல்புடைய காதில் உண்டாக்கப்பட்ட துவாரத்தை வெகு காலத்திற்குப் பின் விரைவாக பெரியதாக தாக்கினால், வாயுவினால் காது மடலில் வலி, செந்நிறம், பிளப்பு ஆகியவற்றுடன் வீக்கம் காணப்படும். இந்த நோய் பரிபோடம் எனப்படும்.

-उत्पातः पित्तशोणितात्।
गुर्वाभरणभाराद्यैः श्यावो रुग्दाहपाकवान्॥ २१ ॥
श्वयथुः स्फोटपिटिकारागोषाक्लेदसंयुतः।

**உத்பாதம் :**

*கனமான ஆபரணங்களின் பாரம் முதலியவற்றால் கோபமடைந்த பித்தம், ரத்தம் ஆகியவற்றால் கருநிறம், வலி, அழற்சி, பழுத்தல், கொப்பளம், கட்டி, செந்நிறம், காந்தல், கசிவு ஆகியவற்றுடன் வீக்கம் உண்டாகும். இந்நோய் கர்ண உத்பாதம் எனப்படும்.*

पाल्यां शोफोऽनिलकफात्सर्वतो निर्व्यथः स्थिरः॥ २२ ॥
स्तब्धः सवर्णः कण्डूमानुन्मन्थो गल्लिरश्च सः।

**உன்மந்தம் - கல்லிரம் :**

*வாயு, கபம் ஆகியவை காரணமாக காது மடல் முழுவதிலும், வலியற்றதும், நிலையற்றதும், தம்பித்ததும், சரும நிறமுள்ளதுமான வீக்கம், அரிப்புடன் தோன்றும். இது உன்மந்தம் அல்லது கல்லிரம் எனப்படும்.*

दुर्विद्धे वर्धिते कर्णे सकण्डूदाहपाकरुक्॥ २३ ॥
श्वयथुः सन्निपातोत्थः स नाम्ना दुःखवर्धनः॥

**துக்கவர்த்தனம் :**

*முறைமீறிக் குத்தப் பட்டபின் ஆற்றப்பட்ட காதில் ஸன்னி பாதங்காரணமாக அரிப்பு, எரிச்சல், பழுத்தல், வலி ஆகியவற்றுடன் வீக்கம் உண்டாகும். இந்த நோய் துக்கவர்த்தனம் எனப்படும்.*

कफासृक्कृमिजाः सूक्ष्माः सकण्डूक्लेदवेदनाः ॥ २४ ॥

लेह्याख्याः पिटिकास्ता हि लिह्युः पालीमुपेक्षिताः ।

**லேஹ்யா :**

*கபம், ரத்தம் ஆகியவற்றால் உண்டான கிருமி காரணமாக அரிப்பு, கசிவு, வேதனை ஆகியவற்றுடன் நுண்ணிய கட்டிகள் உண்டாகும். இவை லேஹ்யா எனப்படும். தக்க சிகித்ஸை செய்யாவிடில் அவை காது மடலை அரித்து விடும்.*

पिप्पली सर्वजं शूलं विदारी कूचिकर्णकः ॥ २५ ॥

एषामसाध्या, याप्यैका तन्त्रिकाऽन्यांस्तु साधयेत् ।
पंचविंशतिरित्युक्ताः कर्णरोगा विभागतः ॥ २६ ॥

**சிகித்ஸைக்கு ஏற்றவையும் - மற்றவையும் :**

*இவற்றுள் பிப்பிலி, ஸன்னிபாதத்தால் உண்டான காதுவலி, விதாரி, குசிகர்ணம் ஆகியவை சிகித்ஸைக்கு ஏற்றவையல்ல. தந்த்ரிகா என்னும் நோய் பத்திய முறையால் காலந்தள்ள மாத்ரமே ஏற்றது. மற்றவற்றிற்கு சிகித்ஸை செய்யலாம். இவ்வாறு காது நோய்கள் 25-ம் கூறப்பட்டன.*

*குறிப்பு:★ சுச்ருதஸம்ஹிதை முதலியவற்றில் கர்ண ரோகங்கள் 28 வகையெனக் குறிப்பிடப் பட்டுள்ளது. சரகஸம்ஹிதையில் நான்கு வகை எனக் கூறப்படுகிறது.*

इतिश्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने कर्णरोगविज्ञानीयो नाम सप्तदशोऽध्यायः ॥ १७ ॥

*உத்தரஸ்தானம் — பதினேழாவது அத்தியாயம் முற்றிற்று.*

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ अष्टादशोऽध्यायः - அத்தியாயம் - 18 ]

अथातः कर्णरोगप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து காது நோய் சிகித்ஸையை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

कर्णशूले पवनजे पिबेद्रात्रौ रसाशितः
वातघ्नसाधितं सर्पिः, कर्णं स्विन्नं च पूरयेत् ॥ १ ॥

पत्राणां पृथगश्वत्थबिल्वार्कैरण्डजन्मनाम् ।
तैलसिन्धूत्थदिग्धानां स्विन्नानां पुटपाकतः ॥ २ ॥

रसै कवोष्णैस्तद्वच्च मूलकस्यारलोरपि: ।

### வாயுவால் உண்டான காது வலிக்கு சிகித்ஸை:

வாயுவால் உண்டான காது நோயுள்ளவர் இரவில் மாம்ஸ ரஸத்துடன் உணவு உட்கொண்ட [1]பின்னர் வாயுவைப் போக்கும் பொருள்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யைப் பருக வேண்டும். காதில் வியர்வை உண்டாக்கிய பின் [2]அரசு, பில்வம், எருக்கு, ஆமணக்கு இவற்றுள் ஒன்றின் இலையை எண்ணெயும், இந்துப்பும் கலந்து பூசி புடபாக முறையில் பக்குவம் செய்து அதன் சாற்றைச் சிறிது சூடாக காதில் நிரப்பலாம். அவ்வாறே முள்ளங்கி, பெருவாகை ஆகியவற்றின் சாற்றையும் காதில் நிரப்பலாம்.

குறிப்பு:1. உணவு உட்கொள்ளாத நிலையிலும், பால் அனுபானத்துடன் இரவில் இங்கு கூறப்பட்ட நெய்யைப் பருகலாம் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. அரசின் தளிரில், நெய், தைலம், மாம்ஸ எண்ணெய் ஆகியவற்றைத் தடவி பக்குவம் செய்ய வேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

गणे वातहरेऽम्लेषु मूत्रेषु च विपाचितः ॥ ३ ॥
महास्नेहो द्रुतं हन्ति सुतीव्रामपि वेदनाम् ।

வாயுவைப் போக்கும் சரக்குகள்[1], புளிப்புப் பொருள்கள்[2], சிறுநீர்[3] வகை ஆகியவற்றைக் கலந்து மகாஸ்னேஹம்[4] பக்குவம் செய்து உபயோகிக்க தீவிரமான (காது) வலியையும் போக்கும்.

குறிப்பு: 1. பத்ரதார்வாதிக் கணச் சரக்குகள் முதலியவை ஸூத்ர. அத். 15-ல் விளக்கப்பட்டுள்ளன.

2. புளிப்புப் பொருள்கள் ஸூத்ர ஸ்தானம். அத். 10-ல் விளக்கப்பட்டுள்ளன.

3. எட்டு வகையான சிறுநீர்களும் ஸூத்ர ஸ்தானம். அத்தியாயம் 5-ல் விளக்கப்பட்டுள்ளன.

4. நெய், தைலம், மாம்ஸ எண்ணெய், எலும்புச் சத்து இவற்றின் கூட்டுக்கு மகாஸ்னேஹம் என்பது பெயர்.

महतः पञ्चमूलस्य काष्ठात्क्षौमेण वेष्टितात् ॥ ४ ॥

तैलसिक्तात्प्रदीप्ताग्रात् स्नेहः सद्यो रुजापहः ॥

**சுடர் தைலம் :**

மகாபஞ்ச மூலச் சரக்குகளின் கட்டையை பட்டு துணியால் சுற்றி (அதை) எண்ணெயில் நனைத்து நுனியில்

கொளுத்த வேண்டும். அதிலிருந்து வெளிவரும் நெய்ப்புப் பொருளை உபயோகிக்க வலி உடன் நீங்கும்.

குறிப்பு: ★இவற்றின் கட்டையை 18 அங்குல நீளம் எடுத்து 6 அங்குல நீளத்திற்கு பட்டு வஸ்திரத்தால் சுற்றி நெய்ப்புப் பொருளில் நனைத்து நுனியில் கொளுத்தி சுடர் தைலம் சேகரிக்க வேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

★கட்டையை தலை கீழாகப் பிடிக்க வேண்டும் என டல்ஹணர் கூறுகிறார்.

योज्यश्चैवं भद्रकाष्ठात्कुष्ठात्काष्ठाच्च सारलात् ॥ ५ ॥

தேவதாருக் கட்டை, கோஷ்டம், ஸரளதேவதாருக் கட்டை, இவற்றிலிருந்து இவ்வாறே எடுக்கப்பட்ட நெய்ப்புப் பொருளையும் உபயோகிக்கலாம்.

वातव्याधिप्रतिश्यायविहितं हितमत्र च ।

வாத நோய் சிகித்ஸையிலும் (பிரதிச்சாயம்) சளிப்பு நோய் சிகித்ஸையிலும் கூறப்பட்ட முறைகள் இந்நோயிலும் ஏற்றவையாகும்.

குறிப்பு: ★அர்த்தித சிகித்ஸையும் ஏற்றதென சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

वर्जयेच्छिरसा स्नानं शीताम्भःपानमह्न्यपि ॥ ६ ॥

தலை முழுகுதலைத் தவிர்க்க வேண்டும். பகலிலும் குளிர்ந்த நீரைப் பருகுதல் கூடாது.

குறிப்பு: ★அதிகக் காற்றும் தவிர்க்கப் படவேண்டுமென சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

पित्तशूले सितायुक्तघृतस्निग्धं विरेचयेत् ।
द्राक्षायष्टिशृतं स्तन्यं शस्यते कर्णपूरणम् ॥ ७ ॥

### பித்தத்தால் உண்டான காது வலிக்கு சிகித்ஸை :

பித்தத்தால் உண்டான காதுவலி உள்ளவருக்கு சர்க்கரை கலக்கப்பட்ட *நெய்யை பருகச் செய்து நெய்ப்பு உண்டாக்கிய பின் விரேசனம் செய்விக்க வேண்டும். திராட்சையும், அதிமதுரமும் சேர்த்து தாய்ப்பாலைப் பக்குவம் செய்து காதில் நிரப்புவது சிறந்ததாகும்.

குறிப்பு: *நெய்ப்பு உண்டாகும் வரை காலை வேளைகளில் ஒவ்வொரு நாளும் பருக வேண்டுமென சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

यष्ट्यनन्ताहिमोशीरकाकोलीरोध्रजीवकैः ।
मृणालबिसमंजिष्ठासारिवाभिश्च साधयेत् ॥ ८ ॥

यष्टीमधुरसप्रस्थक्षीरद्विप्रस्थसंयुतम् ।
तैलस्य कुडवं नस्यपूरणाभ्यंजनैरिदम् ॥ ९ ॥

निहन्ति शूलदाहोषाः केवलं क्षौद्रमेव वा ।

அதிமதுரம், அறுகு, சந்தனம், விளாமிச்சை, காகோலீ, லோத்தி, ஜீவகம், தாமரைத் தண்டு, தாமரைக் கிழங்கு, மஞ்சிட்டி, நன்னாரி ஆகியவற்றின் கல்கமும், ஒரு பிரஸ்தம் [1]அதிமதுரக் கஷாயமும், பால் இரண்டு பிரஸ்தமும் 4 பலம் தைலமும் சேர்த்துப் பக்குவம் செய்து நாசியில் இடுதல், காதில் நிரப்புதல், (காதைச் சுற்றிலும்) அப்பியங்கம் ஆகிய முறைகளில் உபயோகிக்க சூலை, எரிச்சல், காந்தல் ஆகியவற்றைப் போக்கும். அல்லது [2]தேனை தனித்தும் உபயோகிக்கலாம்.

குறிப்பு: 1. அதிமதுரம் 4 பலம் எடுத்து 16 மடங்கு நீரிலிட்டு எட்டிலொன்றாய் குறுக்கி கஷாயமும் தயாரிக்க வேண்டும் என சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

2. காதில் நிரப்ப தேனை உபயோகிக்கும்படி சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

यष्टयादिभिश्च सघृतैः कर्णौ दिह्यात्समन्ततः ॥ १० ॥

*அதிமதுரம் முதலியவற்றை நெய்யுடன் கலந்து காதைச் சுற்றிலும் பூசலாம்.

குறிப்பு: *அதிமதுரம் முதலியன முந்திய யோகத்தில் கூறப்பட்டுள்ளன.

वामयेत् पिप्पलीसिद्धसर्पिःस्निग्धं कफोद्भवे ।
धूमनावनगण्डूषस्वेदान् कुर्यात्कफापहान् ॥ ११ ॥

### கபத்தால் உண்டான காது வலிக்கு சிகித்ஸை :

கபத்தால் உண்டான காது வலியால் திப்பிலி சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட நெய்யைப் பருகச் செய்து நெய்ப்பு உண்டாக்கிய பின்னர் வாந்தி செய்விக்க வேண்டும். கபத்தைப் போக்குபவையான புகை பிடித்தல், நசியமிடல், வாய் கொப்பளித்தல், வியர்வைச் சிகித்ஸை ஆகிய வற்றையும் செய்விக்க வேண்டும்.

लशुनार्द्रकशिग्रूणां मुरुंम्या मूलकस्य च ।
कदल्याः स्वरसः श्रेष्ठः कदुष्णः कर्णपूरणे ॥ १२ ॥

உள்ளி, இஞ்சி, முருங்கை, செம்முருங்கை, முள்ளங்கி, வாழை இவற்றின் சாற்றைச் சிறிது சூடாக்கி காதில் நிரப்புவது சிறந்ததாகும்.

**குறிப்பு:** ★இவற்றுள் ஒன்றின் சாற்றை காதில் நிரப்ப வேண்டும் என அருணதத்தர் உரையிலும், கைரளி உரையிலும் காணப்படுகிறது. இந்தச் சாறுகளை தனித்தும், கலந்தும் உபயோகிக்கலாம் என சுச்ருதத்திலும், சங்க்ரஹத்திலும் கூறப்பட்டுள்ளது. மேலும் காதில் உண்டாகும் சூலை, வீக்கம், பாரமா யிருத்தல் ஆகியவையும் நீங்கும் என்று சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

अर्काङ्कुरानम्लपिष्टांस्तैलाक्तांल्लवणान्वितान्।
सन्निधाय स्नुहीकाण्डे कोरिते तच्छदावृतान्॥ १३॥

स्वेदयेत्पुटपाकेन स रसः शूलजित्परम्।

புளிப்புப் *பொருள் விட்டரைக்கப்பட்ட எருக்கந் துளிரை எண்ணெயும் இந்துப்பும் கலந்து, கள்ளியைக் கீறி, அதனுள் வைத்து கள்ளி மடலால் மூடி, புடபாக முறையில் பக்குவம் செய்து சாறு எடுத்து உபயோகிக்க; சூலையைப் போக்கும்.

**குறிப்பு:** ★காடி என அருணதத்தர் கூறுகிறார்.

रसेन बीजपूरस्य कपित्थस्य च पूरयेत्॥ १४॥

सुक्तेन पूरयित्वा वा फेनेनान्ववचूर्णयेत्।

துருஞ்சிச் சாறு, விளாவின் சாறு ஆகியவற்றாலும் காதை நிரப்பலாம். அல்லது காதில் காடியை நிரப்பி கடல் நுரையைத் தூவலாம்.

अजाविमूत्रवंशत्वक्सिद्धं तैलं च पूरणम्॥ १५॥

सिद्धं वा सार्षपं तैलं हिङ्गुतुम्बुरुनागरैः।

வெள்ளாட்டு மூத்ரம், செம்மறியாட்டு மூத்ரம், மூங்கில் பட்டை ஆகியவற்றைச் சேர்த்துத் தைலம் பக்குவம் செய்து காதில் நிரப்பலாம். அல்லது காயம், தூம்பூணரிசி, சுக்கு ஆகியவற்றைக் கலந்து கடுகுத் தைலம் பக்குவம் செய்தும், காதில் நிரப்பலாம்.

रक्तजे पित्तवत्कार्यं सिरां चाशु विमोक्षयेत् ॥ १६ ॥

**ரத்தத்தால் உண்டான காது வலிக்கு சிகித்ஸை :**

ரத்தம் காரணமாக உண்டான காது வலிக்கு, பித்தங் காரணமாக உண்டான காது வலிக்கு கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்வதுடன் விரைவாக ஸிரையைக் குத்த வேண்டும்.

पक्के पूयवहे कर्णे धूमगण्डूषनावनम् ।
युंज्यान्नाडीविधानं च दुष्टव्रणहरं च यत् ॥ १७ ॥

(காது நோயில்) பக்குவம் அடைந்து சீழை வெளியேற்றும் நிலையில் புகை பிடித்தல்; வாய் கொப்பளித்தல், நசிய மிடுதல் *ஆகியவற்றையும், புரைக்கு கூறப்பட்ட சிகித்ஸையையும், துஷ்டவிரண சிகித்ஸையையும் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: *नाडीविधान என்பதற்கு நாடீஸ்வேதம் என கைரளியில் பொருள் கூறப்பட்டுள்ளது.

स्रोतः प्रमृज्य दिग्धं तु द्वौ कालौ पिचुवर्तिभिः ।
पुरेण धूपयित्वा तु माक्षिकेण प्रपूरयेत् ॥ १८ ॥

सुरसादिगणक्वाथफाणिताक्तां च योजयेत् ।
पिचुवर्तिं सुसूक्ष्मैश्च तच्चूर्णैरवचूर्णयेत् ॥ १९ ॥

शूलक्लेदगुरुत्वानां विधिरेष निवर्तकः।

சீழ் படிந்துள்ள காது த்வாரத்தை இரு வேளைகளிலும் பஞ்சுத் திரியால் துடைத்து குக்கில் மூலம் புகையூட்டிய பின்னர் அதில் தேனை நிரப்ப வேண்டும். ஸுரஸாதி கணச் சரக்குகளின் கஷாயத்தை *ரஸக் கிரியையாக்கி அதில் நனைக்கப்பட்ட பஞ்சுத் திரியை காதில் இட வேண்டும். ஸுரஸாதி கணச் சரக்குகளின் நுண்ணிய சூர்ணத்தை காதிலிட வேண்டும். இம்முறையானது சூலை, கசிவு, பாரமாயிருத்தல் ஆகியவற்றைப் போக்கும்.

குறிப்பு: *கஷாயத்துடன் தேன் பாகு சேர்த்து ரஸக்கிரியை தயாரிக்க வேண்டும் என்றும் சிலர் கூறுவதாக கைரளியில் காணப்படுகிறது.

प्रियंगुमधुकाम्बष्ठाधातक्युत्पलपर्णिभिः ॥ २० ॥

मंजिष्ठालोध्रलाक्षाभिः कपित्थस्य रसेन च।
पचेत्तैलं तदास्रावं निगृह्णात्याशु पूरणात् ॥ २१ ॥

ஞாழல், அதிமதுரம், வட்டத்திருப்பி, காட்டாத்திப்பூ, நீலோத்பலம், ஓரிலை, மூவிலை, காட்டுளுந்து, காட்டுப் பயறு, மஞ்சிட்டி, லோத்தி, அரக்கு ஆகியவற்றுடன் விளாவின் சாறு கலந்து, தைலம் பக்குவம் செய்து காதில் நிரப்ப விரைவில் கசிவைப் போக்கும்.

नादबाधिर्ययोः कुर्याद् वातशूलोक्तमौषधम्।
श्लेष्मानुबन्धे श्लेष्माणं प्राग्जयेद्वमनादिभिः ॥ २२ ॥

**காது இரைச்சல், செவிடு:**

காது இரைச்சல் நோயிலும், செவிட்டு நோயிலும் வாயுவால் உண்டான காது வலிக்கு கூறப்பட்ட

சிகித்ஸையைச் செய்ய வேண்டும். கபம் தொடர்பு கொண்டிருப்பின் வாந்தி செய்வித்தல் முதலியவற்றால் கபத்தை முதலில் போக்க வேண்டும்.

एरण्डशिग्रुवरुणमूलकात्पत्रजे रसे ।
चतुर्गुणे पचेत्तैलं क्षीरे चाष्टगुणोन्मिते ॥ २३ ॥

यष्ट्याह्वाक्षीरकाकोलीकल्कयुक्तं निहन्ति तत् ।
नादबाधिर्यशूलानि नावनाभ्यंगपूरणैः ॥ २४ ॥

ஆமணக்கு, முருங்கை, மாவிலிங்கை முள்ளங்கி இவற்றின் இலைச் சாறு, தைலத்துக்கு 4 பங்கு, பால் எட்டுப் பங்கு, அதிமதுரம், க்ஷீராகாகோலீ, இவற்றின் கல்கம் ஆகியவற்றைச் சேர்த்து தைலம் பக்குவம் செய்து நசிய மிடுதல், அப்யங்கம் செய்தல், காதில் நிரப்புதல் ஆகியவற்றில் உபயோகிக்க காதிரைச்சல், செவிடு, காதுவலி ஆகியவை நீங்கும்.

पक्वं प्रतिविषाहिंगुमिशित्वक्स्वर्जिकोषणैः ।
ससूक्तैः पूरणात्तैलं रुक्स्रावाश्रुतिनादनुत् ॥ २५ ॥

அதிவிடயம், காயம், சதகுப்பை, லவங்கப்பட்டை, ஸர்ஜக்ஷாரம், மிளகு இவற்றுடன் காடி சேர்த்து தைலம் பக்குவம் செய்து காதில் நிரப்ப வலி (சீழ்க்) கசிவு, செவிடு, காதிரைச்சல் ஆகியவற்றைப் போக்கும்.

कर्णनादे हितं तैलं सर्षपोत्थं च पूरणे ।

காது இரைச்சல் நோயில் கடுகெண்ணையைக் காதில் நிரப்புவதும் ஏற்றதாகும்.

शुष्कमूलकखण्डानां क्षारो हिंगु महौषधम् ॥ २६ ॥
शतपुष्पावचाकुष्ठदारुशिग्रुरसांजनम् ।

सौवर्चलयवक्षारस्वर्जिकौद्भिदसैन्धवम् ॥ २७ ॥

भूर्जग्रन्थिबिडं मुस्ता मधुयुक्तं चतुर्गुणम् ।
मातुलुङ्गरसस्तद्वत् कदलीस्वरसश्च तैः ॥ २८ ॥

पक्वं तैलं जयत्याशु सुकृच्छ्रानपि पूरणात् ।
कण्डूक्लेदं च बाधिर्यपूतिकर्णत्वरुक्कृमीन् ॥ २९ ॥

क्षारतैलमिदं श्रेष्ठं मुखदन्तामयेषु च ।

**க்ஷார தைலம் :**

உலர்ந்த முள்ளங்கித் துண்டுகளை எரித்து எடுத்த க்ஷாரம், காயம், சுக்கு, சதகுப்பை, வசம்பு, கோஷ்டம், தேவதாரு, முருங்கை, ரஸாஞ்சனம், ஸௌவர்ச்சல உப்பு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், உவர் மண்ணுப்பு, இந்துப்பு, பூர்ஜ மரத்தின் கணு, வளையலுப்பு, கோரைக் கிழங்கு, தைலத்துக்கு 4 பங்கு இனிப்பான காடி, 4 பங்கு துருஞ்சிச் சாறு, 4 பங்கு வாழைச்சாறு ஆகியவற்றைச் சேர்த்து தைலம் பக்குவம் செய்து காதில் நிரப்ப அரிப்பு, சீழ்கசிவு, காது கேளாமை, காதில் உண்டாகும் நாற்றம், காதுவலி, காதிலுண்டாகும் கிருமி ஆகியவற்றைப் போக்கும். இது க்ஷாரதைலம் எனப்படும். இது வாய், பல் ஆகியவற்றில் உண்டாகும் *நோய்களிலும் உபயோகிக்க சிறந்ததாகும்.

குறிப்பு: *கண்டூஷமாக உபயோகிக்க வேண்டும் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

अथ सुप्ताविव स्यातां कर्णौ रक्तं हरेत्ततः ॥ ३० ॥

காது உணர்ச்சியின்றி இருப்பின் ரத்தத்தை வெளியேற்ற வேண்டும்.

सशोफक्लेदयोर्मन्दश्रुतेर्वमनमाचरेत्।

ஒலியை மந்தமாக கிரஹிப்பவருக்கு (காதில்) வீக்கமும், கசிவும், உள்ள நிலையில் வாந்தி செய்விக்க வேண்டும்.

बाधिर्यं वर्जयेद्बालवृद्धयोश्चिरजं च यत्॥ २१॥

பாலர், முதியவர் ஆகியோருக்கு உண்டானதும், நாட்பட்டதுமாகிய செவிட்டு நோய்க்கு சிகித்ஸை செய்யக் கூடாது.

प्रतिनाहे परिक्लेद्य स्नेहस्वेदैर्विशोधयेत्।
कर्णशोधनकेनानु कर्णं तैलस्य पूरयेत्॥ २२॥

ससूक्तसैन्धवमधोर्मातुलुंगरसस्य वा।
शोधनाद्रूक्षतोत्पत्तौ घृतमण्डस्य पूरणम्॥ २३॥

**பிரதிநாஹ சிகித்ஸை :**

ப்ரதிநாஹ நோயில் நெய்ப்பு சிகித்ஸையாலும், வியர்ப்பித்தலாலும், கசிவு உண்டாக்கிய பின் கர்ண சோதன யந்திரத்தால் சுத்தம் செய்ய வேண்டும். பிறகு எண்ணெயை யாவது காடி, இந்துப்பு, தேன் ஆகியவை கலக்கப்பட்ட துருஞ்சிச் சாற்றையாவது காதில் நிரப்ப வேண்டும்.

அதிகமாகச் சுத்தி செய்ததன் காரணமாக வறட்சி ஏற்பட்டிருப்பின் நெய்த் தெளிவைக் காதில் நிரப்ப வேண்டும்.

क्रमोऽयं मलपूर्णेऽपि कर्णे-

காதில் அழுக்கு நிரம்பி இருந்தாலும் இவ்வாறே சிகித்ஸை செய்ய வேண்டும்.

-कण्ड्वां कफापहम्।

नस्यादि, तद्वच्छोफेऽपि कटूष्णैश्चात्र लेपनम् ॥ ३४ ॥

**காது அரிப்பு, காது வீக்கம் ஆகியவற்றுக்கு சிகித்ஸை:**

காது அரிப்பு நோயில், கபத்தைப் போக்கக் கூடிய [1]நசியம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். காது வீக்க நோயிலும் அவ்வாறே செய்வித்து காரமும், உஷ்ண பரிசமும், உஷ்ண வீர்யமும் உள்ளவற்றால் [2]பூச வேண்டும்.

குறிப்பு: 1. புகை பிடித்தல் முதலியவை சங்க்ரஹத்தில் கூறப்படுகின்றன. உணவு, பானம் முதலியவையும் ஏற்றதென சந்தரநந்தனர் கூறுகிறார்.

2. ஊற்றவும் வேண்டுமென சங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

कर्णस्रावोदितं कुर्यात्पूतिकृमिककर्णयोः ।
पूरणं कटुतैलेन विशेपात् कृमिकर्णके ॥ ३५ ॥

**பூதி கர்ணம், கிருமி கர்ணம் ஆகியவற்றிற்கு சிகித்ஸை :**

(பூதி கர்ணம்) காதில் நாற்றம் - கிருமி கர்ணம் ஆகிய வற்றில் காதுக் கசிவு நோய்க்குக் கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

கிருமி நோயை போக்க கடுகெண்ணெயை காதில் நிரப்புவது அதற்கு விசேஷ சிகித்ஸை ஆகும்.

वमिपूर्वा हिता कर्णविद्रधौ विद्रधिक्रिया ।

**கர்ணவித்ருதி :**

காதில் உண்டாகும் வித்ருதிக் கட்டி நோயில் வாந்தி சிகித்ஸையை செய்வித்தபின் *வித்ருதி சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

குறிப்பு: ★சிகித்ஸாஸ்தானம் 13-வது அத்தியாயத்தில் கூறப்பட்டள்ளது.

पित्तोत्थकर्णशूलोक्तं कर्तव्यं क्षतविद्रधौ ॥ ३६ ॥

**க்ஷதவித்ருதி :**

காயம் காரணமாக காதில் உண்டாகும் வித்ருதிக் கட்டிக்கு பித்தத்தால் உண்டாகும் காது வலிக்குக் கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

अर्शोर्बुदेषु नासावद्-

**காதில் உண்டாகும் மூலக் குருத்து - அற்புதங்களுக்கு சிகித்ஸை :**

காதில் உண்டாகும் (அர்சஸ்) மூலக் குருத்து - (அர்புதம்) புற்று ஆகியவற்றில் முறையே நாசியில் உண்டாகும். குருத்து, புற்று ஆகியவற்றிற்கு கூறப்படவிருக்கிற சிகித்ஸையைச் செய்விக்க வேண்டும்.

-आमा कर्णविदारिका ।
कर्णविद्रधिवत्साध्या यथादोषोदयेन च ॥ ३७ ॥

**கர்ண விதாரிகா :**

காதில் உண்டாகும் விதாரிகா நோய் பழுக்காமல் இருந்தால் கர்ண வித்ருதி சிகித்ஸை செய்து குணமாக்க வேண்டும். தோஷங்களுக்கு ஏற்பவும் சிகித்ஸை செய்ய வேண்டும்.

पालीशोषेऽनिलश्रोत्रशूलवन्नस्यलेपनम् ।
स्वेदं च कुर्यात् स्विन्नां चपालीमुद्वर्तयेत्तिलैः ॥ ३८ ॥

प्रियालबीजयष्टयाह्वहयगन्धायवान्वितैः।

**(பாலீசோஷம்) காது மடல் சுருக்கு நோய் :**

*பாலீசோஷ நோயில் வாயுவால் உண்டான காது வலிக்குக் கூறப்பட்டவாறு நசியமிடுதல், பூசுதல், வியர்ப்பித்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும். வியர்வை உண்டாக்கிய பின் சாரப் பருப்பு, அதிமதுரம், அமுக்கிராக் கிழங்கு, யவை, எள் இவற்றை( கல்க்கமாக்கி) தேய்க்க வேண்டும்.*

ततः पुष्टिकरैः स्नेहैरभ्यंगं नित्यमाचरेत् ॥ ३९ ॥

பிறகு உடலை பருக்கச் செய்யும் (பொருள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட) நெய்ப்புப் பொருள்களால் ஒவ்வொரு நாளும் அப்பியங்கம் செய்ய வேண்டும்.

शतावरीवाजिगन्धापयस्यैरण्डजीवकैः।
तैलं विपक्वं सक्षीरं पालीनां पुष्टिकृत्परम् ॥ ४० ॥

தண்ணீர் விட்டான் கிழங்கு, அமுக்கராக் கிழங்கு, க்ஷீரகாகோலி, ஆமணக்கு, ஜீவகம் ஆகியவற்றின் *கல்க்கத்தையும், பாலையும் சேர்த்து தைலம் பக்குவம் செய்து, உபயோகிக்க விசேஷமாக (கர்ணபாலிக்கு) காது மடலுக்கு புஷ்டி உண்டாக்கும்.

குறிப்பு: *தண்ணீர் விட்டான் கிழங்கு முதலியவற்றின் கஷாயமும் சேர்க்க வேண்டுமென கைரளியில் கூறப்பட்டுள்ளது.

कल्केन जीवनीयेन तैलं पयसि पाचितम्।
आनूपमांसक्वाथे च पालीपोषणवर्धनम् ॥ ४१ ॥

சதுப்பு நிலப் பிராணியின் மாம்ஸ கஷாயத்தில் ஜீவனீயப் பொருள்களின் கல்க்கமும், பாலும் சேர்த்து தைலம்

பக்குவம் செய்து உபயோகிக்க காது மடலுக்கு புஷ்டியும், வளர்ச்சியும் உண்டாக்கும்.

पालीं छित्त्वाऽतिसङ्क्षीणां शेषां सन्धाय पोषयेत् ।

காது மடல் மிகவும் வற்றியிருப்பின் அந்தப் பகுதியை நீக்கி விட்டு, எஞ்சிய பகுதியை இணைத்து வளர்க்க வேண்டும்.

याप्यैवं तन्त्रिकाख्याऽपि-

**கர்ண தந்த்ரிகா :**

காது மடல் சுருக்க நோய்க்கு கூறப்பட்ட சிகித்ஸையை செய்து தந்த்ரிகா நோயில் காலந்தள்ள வேண்டும்.

-परिपोटेऽप्ययं विधिः ॥ ४२ ॥

**பரிபோடம் :**

பரிபோட நோயிலும் இவ்வாறே செய்ய வேண்டும்.

उत्पाते शीतलैर्लेपो जलौकोहृतशोणिते ।

**உத்பாதம் :**

உத்பாத நோயில் அட்டையின் மூலம் ரத்தத்தை வெளியேற்றிய பின்னர் குளிர்ச்சி பொருந்திய பொருளால் பூச வேண்டும்.

जम्ब्वाम्रपल्लवबलायष्टीरोध्रतिलोत्पलैः ॥ ४३ ॥

सधान्याम्लैः समंजिष्ठैः सकदम्बैःससारिवैः ।
सिद्धमभ्यंजने तैलं विसर्पोक्तघृतानि च ॥ ४४ ॥

நாவல், மா ஆகியவற்றின் துளிர், சிற்றாமுட்டி, அதிமதுரம், லோத்தி, எள், நீலோத்பலம், தான்யாம்லம் என்ற காடி, மஞ்சிட்டி, கடம்பு, நன்னாரி ஆகியவற்றைச் சேர்த்து தைலம் பக்குவம் செய்து காது மடலில் அப்யங்கமாக உபயோகிக்க வேண்டும். விஸர்ப்ப நோயில் கூறப்பட்ட கிருதங்களையும் உபயோகிக்கலாம்.

குறிப்பு: *சங்கிரஹத்தில் மஞ்சிட்டி கூறப்படவில்லை. நாவல் துளிர் முதலியவற்றின் கல்கமும், 4 பங்கு தான்யாம்யலம் சேர்த்து தைலம் பக்குவம் செய்யலாம்.

उन्मन्थेभ्यंजनं तैलं गोधाकर्कवसान्वितम् ।
तालपत्र्यश्वगन्धार्कबाकुचीतिलसैन्धवैः ॥ ४५ ॥

सुरसालांगलीभ्यां च सिद्धं तीक्ष्णं च नावनम् ।

**உன்மந்த சிகித்ஸை :**

உன்மந்த நோயில் உடும்பு, நண்டு ஆகியவற்றின் மாம்ஸ எண்ணெயுடன் நிலப்பனங் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு, எருக்கு, கார்போகு அரிசி, *இந்துப்பு, துளஸி, கலப்பங் கிழங்கு ஆகியவற்றைச் சேர்த்துத் தைலம் பக்குவம் செய்து அப்யங்கம் செய்வது ஏற்றதாகும். தீக்ஷ்ணப் பொருள்களால் நசியம் செய்வதும் ஏற்றதாகும்.

குறிப்பு: *துளஸியும் கலப்பங் கிழங்கும் சேர்த்து தைலம் பக்குவம் செய்து தீக்ஷ்ண நசியத்துக்கு பயன்படுத்த வேண்டுமென அருணதத்தர் உரை கூறுகிறார்.

दुर्विद्धेऽश्मन्तजम्ब्वाम्रपत्रक्वाथेन सेचिताम् ॥ ४६ ॥

तैलेन पालीं स्वभ्यक्तां सुश्लक्ष्णैरवचूर्णयेत् ।

चूर्णैर्मधुकमंजिष्ठाप्रपुण्ड्राह्वनिशोद्भवैः ॥ ४७ ॥

लाक्षाविडंगसिद्धं च तैलमभ्यंजने हितम्।

***துக்கவர்த்தன சிகித்ஸை :***

*மலையகத்தி, நாவல், மா ஆகியவற்றின் இலைக் கஷாயத்தால் காது மடலை நனைத்து தைலத்தால் பூசி அதி மதுரம், மஞ்சிட்டி, நாமக் கரும்பு, மஞ்சள் ஆகியவற்றின் நுண்ணிய பொடியைத் தூவ வேண்டும். அரக்கும் வாய் விளங்கமும் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட தைலம் அப்யங்கத்திற்கு ஏற்றதாகும்.*

स्विन्नां गोमयजैः पिण्डैर्बहुशः परिलेहिकाम् ॥ ४८ ॥

विडंगसारैरालिम्पेदुरभ्रीमूत्रकल्कितैः।
कौटजेंगुदकारंजबीजशम्याकवल्कलैः ॥ ४९ ॥

अथवाऽभ्यंजनं तैर्वा कटुतैलं विपाचयेत्।
सनिम्बपत्रमरिचमदनैर्लेहिकाव्रणे ॥ ५० ॥

***பரிலேஹிகா :***

*பரிலேஹிகா நோயில் சாணத்தில் பிண்டங்களால் பல தடவை வியர்வை உண்டாக்கிய பின்னர் வாய் விளங்கத்தை யாவது, வெட்பாலையரிசி, இங்குதி, புங்கன்விதை, கொன்றையின் பட்டை ஆகியவற்றையாவது பெண் செம்மறி ஆட்டு மூத்ரம் விட்டரைத்துப் பூசலாம். அல்லது வெட்பாலையரிசி முதலியவற்றுடன் வேப்பிலை, மிளகு, தேன் மெழுகு ஆகியவற்றையும் சேர்த்து கடுகெண்ணெய் பக்குவம் செய்து அப்யங்கமாக உபயோகிக்கலாம்.*

छिन्नं तु कर्णं शुद्धस्य बन्धमालोच्य यौगिकम्।

शुद्धास्रं लागयेल्लग्ने सद्यश्छिन्ने विशोधनम् ॥ ५१ ॥

காது அறுந்து போய் இருப்பின் காதில் ரத்தம் கேடடையாத நிலையில் சோதன சிகித்ஸை செய்து ஏற்றவாறு காதில் கட்டுவதன் மூலம் காதுப் பகுதியை இணைக்க வேண்டும். அப்பொழுதே காது அறுபட்டிருந்தால் இணைத்து வைத்த பின்னர் (வமனம் முதலிய) சோதனம் செய்ய வேண்டும்.

अथ ग्रथित्वा केशान्तं कृत्वा छेदनलेखनम् ।
निवेश्य सन्धिं सुषमं न निम्नं न समुन्नतम् ॥ ५२ ॥

अभ्यज्य मधुसर्पिर्भ्यो पिचुप्लोतावगुण्ठितम् ।
सूत्रेणागाढशिथिलं बद्ध्वा चूर्णैरवाकिरन् ॥ ५३ ॥

शोणितस्थापनैर्व्रण्यमाचारं चादिशेत्ततः ।

**காது அறுபட்டிருப்பின் இணைத்துக் கட்டும் முறை :**

கேசத்தை அடிப்பகுதியில் முடியிட்டு (விருத்திபத்ரம் முதலியவற்றால்) காது மடல் பகுதியை வெட்டுதல் (தேக்கின் இலை முதலியவற்றால்) சுறண்டுதல் ஆகியவற்றைச் செய்தபின் மேலாகவோ, தாழ்வாகவோ இன்றி உரிய நிலையில் காது மடல் பகுதியை வைத்து தேனாலும், நெய்யாலும் பூசி பஞ்சுத் துண்டால் மறைத்து, நூலால் இறுக்கமாகவோ, தளர்ச்சியாகவோ இன்றி கட்டிய பின்னர் ரத்தப் பெருக்கை நிறுத்தும், *சூர்ணங்களைத் தூவ வேண்டும். விரண சிகித்ஸையில் கூறப்பட்ட கட்டுப்பாடுகளை கடைபிடிக்கச் செய்ய வேண்டும்.

குறிப்பு: *ரத்தப் பெருக்கை நிறுத்தக் கூடிய லோத்தி, ஞாழல் ஆகியவற்றின் தூளைத் தூவ வேண்டும்.

सप्ताहादामतैलाक्तं शनैरपनयेत् पिचुम् ॥ ५४ ॥

ஏழு நாட்களுக்குப் பின் தனித்த நல்லெண்ணெயை பஞ்சுத் துண்டின் மேல் ஊற்றிய பின்னர் அதை மெள்ள எடுக்க வேண்டும்.

सुरूढं जातरोमाणं श्लिष्टसन्धिं समं स्थिरम् ।
सुवर्ष्माणमरोगं च शनैः कर्णं विवर्धयेत् ॥ ५५ ॥

जलशूकः स्वयंगुप्ता रजन्यौ बृहतीफलम् ॥
अश्वगन्धाबलाहस्तिपिप्पलीगौरसर्षपाः ॥ ५६ ॥

मूलं कोशातकाश्वघ्नरूपिकासप्तपर्णजम् ॥
छुच्छुन्दरी कालमृता गृहं मधुकरीकृतम् ॥ ५७ ॥

जतूका जलजन्मा च तथा शाबरकन्दकम् ।
एभिः कल्कैः खरं पक्वं सतैलं माहिषं घृतम् ॥ ५८ ॥

हस्त्यश्वमूत्रेण परमभ्यंगात्कर्णवर्धनम् ।

நன்கு ஆறியதும், உரோம வளர்ச்சிப் பெற்றதும், இணைப்புக்கள் நன்கு பொருந்தியதும், ஸமமானதும், உறுதியானதும், பகுதி நன்கு உள்ளதும் உபத்ரவங்கள் அற்றதுமான காது மடலை சிறிது சிறிதாக வளர்க்க வேண்டும். பாசி, பூனைக்காலி, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரி, அமுக்கிராக் கிழங்கு, சிற்றாமுட்டி, யானைத்திப்பிலி, வெண்கடுகு ஆகியவற்றையும் பேய்ப் பீர்க்கு, அரளி, எருக்கு, ஏழிலம் பாலை இவற்றின் வேர், தானாக இறந்த மூஞ்சுறு, தேனடை, வௌவால், அட்டை, *பாச்சோற்றி ஆகியவற்றையும் கல்கமாக்கிக் கலந்து, யானை, குதிரை இவற்றின் சிறுநீரையும் நல்லெண்ணையும் சேர்த்து எருமை நெய்யை கரபாகமாக பக்குவம் செய்து அப்யங்கம் செய்விக்க காது மடல் வளரும்.

குறிப்பு: ★உள்ளி என்று அருணதத்தர் உரையிலும், பால்முதுக்கன் என கைரளியிலும் காணப்படுகிறது.

अथ कुर्याद्वयस्थस्य छिन्नां शुद्धस्य नासिकाम् ॥ ५९ ॥

छिन्द्यान्नासा समं पत्रं तत्तुल्यं ततू कपोलतः ।
त्वङ्मांसं नासिकासन्ने रक्षंस्तत्तनुतां नयेत् ॥ ६० ॥

सीव्येद् गण्डं ततः सूच्या सेविन्या पिचुयुक्तया ।
नासाच्छेदेऽथ लिखिते परीवर्त्योपरि त्वचम् ॥ ६१ ॥

कपोलबध्रं सन्दध्यात्सी व्येन्नासां च यत्नतः ।
नाडीभ्यामुत्क्षिपेदन्तः सुखोच्छ्वासप्रवृत्तये ॥ ६२ ॥

आमतैलेन सिक्त्वाऽनु पतंगमधुकांजनैः ।
शोणितस्थापनैश्चान्यैः सुश्लक्ष्णैरवचूर्णयेत् ॥ ६३ ॥

ततो मधुघृताभ्यक्तं बध्वाऽऽचारिकमादिशेत् ।
ज्ञात्वाऽवस्थान्तरं कुर्यात् सद्योव्रणविधिं ततः ॥ ६४ ॥

छिन्द्याद्रूढेऽधिकं मांसं नासोपान्ताच्च चर्म वत् ।
सीव्येत्ततश्च सुश्लक्ष्णं हीनं संवर्धयेत्पुनः ॥ ६५ ॥

## நாசி அறுபட்டிருப்பின் இணைக்கும் முறை:

இளைஞராயின் ஊறு ஏற்பட்ட மூக்கின் அளவுக்கு இலையை கத்தரித்துக் கொள்ள வேண்டும். மூக்கை ஒட்டிய கன்னப் பகுதியிலிருந்து (அந்த) இலை அளவுக்கு சருமத்துடன் மாம்ஸத்தை வெட்டிக் கொள்ள வேண்டும். மாம்ஸத்தை கன்னப் பகுதியிலிருந்து பிரிந்து வராமல் காப்பதுடன், நாசியை ஒட்டிய (தீங்கு ஏற்பட்ட) பகுதியில் மெல்லிய தாக்கி, சருமம் மேற்புறம் இருக்கும்படி தைக்க

வேண்டும். நாசிப் பகுதியிலும், கன்னப் பகுதியிலும் (தேக்கிலை முதலியவற்றால்) சுறண்ட வேண்டும். கன்னப் பகுதியையும், நாசிப் பகுதியையும், ஊசியில் கோக்கப்பட்ட நூலினால் தைக்க வேண்டும். சிரமமின்றி ச்வாசிப்பதற்காக இரண்டு நாபீக் குழலால் நாசியின் உட்புறத்தை தூக்கி வைக்க வேண்டும். நல்லெண்ணெயால் நனைத்து செஞ் சந்தனம், அதிமதுரம், அஞ்சனக்கல் மற்றும் ரத்தப் பெருக்கை நிறுத்தும் மருந்துகளை நுண்ணிய தூளாக்கி தூவ வேண்டும். பிறகு தேனும், நெய்யும் தடவி கட்டு இட வேண்டும். பத்திய முறைகளைக் கூற வேண்டும். பிறகு நிலைமைக் கேற்ப ஸத்யோவிரண *சிகித்ஸை செய்ய வேண்டும்.

ஆறிய பின் நாசிப் பகுதியிலிருந்து அதிக மாம்ஸத்தை வெட்டி எடுக்க வேண்டும். வழுவழுப்பாய் இருக்கும்படி பிறகு தையலிட வேண்டும். குறைந்ததை வளரச் செய்ய வேண்டும்.

निवेशिते यथान्यासं सद्यश्छिन्नेऽप्ययं विधिः ।

நாசி அப்போதே அறுக்கப்பட்ட நிலையிலும், சரியான நிலையில் வைத்து இதே சிகித்ஸை முறையைச் செய்ய வேண்டும்.

नाडीयोगाद्विनौष्ठस्य नासासन्धानवद्विधिः ॥ ६६ ॥

நாசி இணைப்பதற்குக் கூறிய இதே முறைகளை உதட்டிற்கும் குழாய் இணைத்தல் நீங்கலாக பிரயோகிக்க வேண்டும்.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने कर्णरोगप्रतिषेधो नामाष्टादशोऽध्यायः ॥ १८ ॥

உத்தரஸ்தானம் - பதினெட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

# ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

## [ एकोनविंशोऽध्यायः - அத்தியாயம் -19 ]

अथातो नासारोगविज्ञानीयं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ।

அடுத்து நாசிரோக விளக்கம் என்னும் அத்தியாயத்தை விவரிக்கிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

अवश्यायानिलरजोभाष्यातिस्वप्नजागरैः ।
नीचात्युच्चोपधानेन पीतेनान्येन वारिणा ॥ १ ॥

अत्यम्बुपानरमणच्छर्दिबाष्पग्रहादिभिः ।
रुद्धा वातोल्वणा दोषा नासायां स्त्यानतां गताः ॥ २ ॥

जनयन्ति प्रतिश्यायं वर्धमानं क्षयप्रदम् ।

**(பிரதிச்யாப) சளிப்பு நோய் :**

பனித்திவலை, காற்று, புழுதி, உரத்தப் பேச்சு, அதிக தூக்கம், அதிகக் கண்விழிப்பு, தாழ்ந்த அல்லது உயர்ந்த தலையணை, பழக்கமில்லாத நீரைப் பருகுதல், அதிக நீர் பருகுதல், அதிகமாக நீரில் விளையாடுதல், வாந்தியையும், கண்ணீரையும் அடக்குதல் [1] முதலியவற்றால், வாயுவை முக்கியமாகக் கொண்ட தோஷங்கள் கோபம் அடைந்து, நாசியில் இறுகி சளிப்பு நோயை உண்டாக்குகின்றன. தக்க சிகித்ஸை செய்யாவிடில் வளர்ச்சியடைந்து [2] க்ஷய நோயை உண்டாக்கும்.

குறிப்பு:1. முதலிய என்பதால் ஸர்வரோக நிதானத்தில் கூறப்பட்டவாறு கசப்பு, கார்ப்பு, துவர்ப்பு பொருந்திய பொருளை உபயோகித்தல் மற்றும் வேகங்களைத் தடுத்தல் முதலியன குறிப்பிடு கின்றன.

2. உடலை இளைக்கச் செய்யும் என்றும் கூறுவர்.

तत्र वातात्प्रतिश्याये मुखशोषो भृशं क्षवः ।। ३ ।।

घ्राणोपरोधनिस्तोददन्तशंखशिरोव्यथाः ।
कीटका इव सर्पन्तीर्मन्यते परितो भ्रुवौ ।। ४ ।।

स्वरसादश्चिरात्पाकः शिशिराच्छकफस्रुतिः ।

**வாயுவால் உண்டான (பிரதிச்சாய) சளிப்பு நோய் :**

இவற்றுள் வாயு காரணமாக உண்டான சளிப்பு நோயில், வாய் வறண்டு போதல், அதிகத் தும்மல், நாசியில் தடையும், குத்து வலியும் காணுதல், பற்கள், நெற்றிப் பொட்டு, தலை ஆகியவற்றில் வலி, புருவங்களைச் சுற்றிலும் கிருமிகள் ஊர்வது போன்ற எண்ணம், குரற்கம்மல், பக்குவமாவதில் தாமதம், குளிர்ந்தும், [1]தெளிவாகவும், கபம் கசிதல் ஆகியவை காணப்படும்.

குறிப்பு: 1. இங்கு கூறப்படும் கபம் என்பது நாசி வழியாக வெளிவரும் சளியைக் குறிக்கும். நாசி, தொண்டை, தாடை, உதடு ஆகியவற்றில் வறட்சியும் காணப் படும் என ஸுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

पित्तात्तृष्णाज्वरघ्राणपिटिकासम्भवभ्रमाः ।। ५ ।।

नासाग्रपाको रूक्षोष्णताम्रपीतकफस्रुतिः ।

### பித்தத்தால் உண்டாகும் சளிப்பு நோய் :

பித்தங் காரணமாக சளிப்பு நோயில், தாகம், ஜ்வரம், நாசியில் கட்டி, பிரமை, நாசி நுனியில் அழற்சி, வறண்டும், உஷ்ணமாகவும், தாமிரம் அல்லது மஞ்சள் நிறத்துடனும் சளி ஒழுகுதல் ஆகியவை காணப்படும்.

कफात्कासोऽरुचिः श्वासो वमथुर्गात्रगौरवम् ॥ ६ ॥

माधुर्यं वदने कण्डूः स्निग्धशुक्लकफस्रुतिः ।

### கபத்தால் உண்டாகும் சளிப்பு நோய் :

கபத்தால் உண்டாகும் சளிப்பு நோயில் இருமல், ருசியின்மை, ச்வாஸம், வாந்தி, உடல் கனம், வாய் இனிப்பாக *இருத்தல், அரிப்பு, ஆகியவையும், நெய்ப்புடன், வெண்ணிறத்துடன் கபம் (சளி) வெளியேறுதலும் காணப்படும்.

குறிப்பு: ★தலை, தொண்டை, உதடு, அண்ணம் ஆகியவற்றில் அரிப்பும் தோன்றுமென ஸுச்ருத ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது.

सर्वजो लक्षणैः सर्वैरकस्माद्वृद्धिशान्तिमान् ॥ ७ ॥

### ஸன்னி பாதத்தால் உண்டாகும் சளிப்பு நோய் :

ஸன்னி பாதத்தால் உண்டாகும் *சளிப்பு நோயில் தனித்த தோஷங்களால் உண்டாகும் சளிப்பு நோயின் குறிகள் கலந்து காணப்படும். காரணமின்றியே அதிகரித்தலும், குறைதலும் ஏற்படும்.

குறிப்பு: ★இந்த நோய் அசாத்யம் என டல்ஹணர் கூறுகிறார்.

दुष्टं नासासिराः प्राप्य प्रतिश्यायं करोत्यसृक् ।
उरसः सुप्तता ताम्रनेत्रत्वं श्वासपूतिता ॥ ८ ॥

कण्डूः श्रोत्राक्षिनासासु पित्तोक्तं चात्र लक्षणम् ।

**ரத்தத்தால் உண்டாகும் சளிப்பு நோய் :**

கேடடைந்த ரத்தமானது நாசியின் ஸிரைகளை அடைந்து சளிப்பு நோயை உண்டாக்குகிறது. மார்பு திமிர்த்து இருத்தல், கண்கள் சிவந்திருத்தல், ச்வாஸத்தில் துர்நாற்றம் ஆகியவையும் காது, கண், மூக்கு ஆகிய உறுப்புக்களில் அரிப்பும், பித்தத்தால் உண்டான சளிப்பு நோயின் குறிகளும் காணப்படும்.

सर्वं एव प्रतिश्याया दुष्टतां यान्त्युपेक्षिताः ॥ ९ ॥

यथोक्तोपद्रवाधिक्यात्स सर्वेन्द्रियतापनः ।
साग्निसादज्वरश्वासकासोरःपार्श्ववेदनः ॥ १० ॥

कुप्यत्यकस्माद्बहुशो मुखदौर्गन्ध्यशोफकृत् ।
नासिकाक्लेदसंशोषशुद्धिरोधकरो मुहुः ॥ ११ ॥

पूयोपमासितारक्तग्रथितश्लेष्मसंस्रुतिः ।
मूर्च्छन्ति चात्र कृमयो दीर्घस्निग्धसिताणवः ॥ १२ ॥

**(துஷ்ட பிரதிச்சாயம்) மிகக் கேடுற்ற சளிப்பு நோய் :**

தக்க சிகித்ஸை செய்யாவிடில் எல்லா சளிப்பு நோய்களும் மேலும் கேடடைகின்றன. எல்லா உபத்ரவங்களும் அதிகமா(கி தீவிரத் தன்மை பெறு)வதால் எல்லாப் பொறிகளையும் தம்பிக்கச் செய்யும். அக்னிமந்தம், ஜ்வரம் ச்வாஸம், இருமல், மார்புவலி, பக்கவலி, காரணமின்றி பல தடவை கிளர்ச்சி அடைதல், வாயில் நாற்றம், முகத்தில்

வீக்கம், நாசியில் அடிக்கடி கசிவு அல்லது வறட்சி, அடைப்பின்மை அல்லது அடைப்பு ஆகியவற்றை உண்டாக்கும். சீழ்போன்றும், கருநிறமாகவும், சிவப்பாகவும், கட்டியாகவும் சளி வெளிப்படும். நீண்டவையும், நெய்ப்பு உள்ளவையும், வெண்மை யானவையும், *சிறியவையுமான கிருமிகள் அதிகரிக்கும்.

குறிப்பு: *இத்தகைய கிருமிகள் ரத்தத்தால் உண்டான சளிப்பு நோயில் காணப்படும் என ஸுச்ருதத்தில் கூறப்பட்டுள்ளது.

पक्वलिंगानि तेष्वंगलाघवं क्षवथोः शमः ।
श्लेष्मा सचिक्कणः पीतो ज्ञानं च रसगन्धयोः ॥ १३ ॥

**சளிப்பு நோய் பக்குவமடைந்த நிலையில் குறிகள் :**

வாயு முதலியவற்றால் உண்டான சளிப்பு நோய் பக்குவம் அடைந்த நிலையில் உடல் கனமின்றி இருத்தல், தும்மல் அடங்குதல், சளி இறுகியும், மஞ்சளாகவும் இருத்தல், சுவையையும் மணத்தையும் அறிய இயலுதல் ஆகியவை காணப்படும்.

तीक्ष्णाघ्राणोपयोगार्करश्मिसूत्रतृणादिभिः ।
वातकोपिभिरन्यैर्वा नासिकातरुणास्थिनि ॥ १४ ॥

विघट्टितेऽनिलः क्रुद्धो रुद्धः शृंगाटकं व्रजेत् ।
निवृत्तः कुरुतेऽत्यर्थं क्षवथुं स भृशक्षवः ॥ १५ ॥

**(ப்ருசக்ஷவம்) மிகத் தும்மல் :**

தீக்ஷ்ண குணமுள்ள பொருள்களின் நுகர்ச்சியாலும், சூரிய கிரணம், நூல், புல், முதலிய பொருள்களாலும், மற்றும் வாயுவை கோபிக்கச் செய்பவைகளாலும், நாசியில் உள்ள

குருத்தெலும்பி தாக்கப்பட்டால் வாயு கோபமடைந்து தடையுற்று ச்ருங்காடகம் என்னும் மர்ம ஸ்தானத்தை அடைந்து திரும்புகிறது. இதனால் அடிக்கடி தும்மல் உண்டாகும். இது (ப்ருசக்ஷவம்) மிகத் தும்மல் நோய் எனப்படும்.

शोषयन्नासिकास्रोतः कफं च कुरुतेऽनिलः ।
शूकपूर्णाभनासात्वं कृच्छ्रात्दुच्छ्वसनं ततः ॥ १६ ॥

स्मृतोऽसौ नासिकाशोषो-

*நாசிகாசோஷம் : (நாசி வறட்சி நோய்)*

வாயுவானது நாசி த்வாரத்தையும், கபத்தையும் வறளச் செய்யும். நாசியில் முள் நிறைந்திருப்பது போன்ற உணர்ச்சியையும் (குறுகுறுப்பையும்) சிரமத்துடன் ச்வாஸ வெளியேற்றத்தையும் உண்டாக்கும். இந்த நோய் (நாசிகாசோஷம்) நாசி வறட்சி எனப்படும்.

-नासानाहे तु जायते ।
नद्धत्वमिव नासायाः श्लेष्मरुद्धेन वायुना ॥ १७ ॥

निःश्वासोच्छ्वाससंरोधात् स्रोतसी संवृते इव ।

*நாசாநாஹம் : (நாசி பருத்தல்)*

கபத்தால் வாயு தடைப்படுவது காரணமாக நாசி பருத்திருப்பது போன்று தோன்றம், உள்மூச்சு, வெளிமூச்சு ஆகியவற்றிற்குத் தடை ஏற்படுவதால் மூக்கு த்வாரம் அடைக்கப்பட்டது போன்று இருக்கும். இந்நோய் நாசி பருத்தல் எனப்படும்.

पचेन्नासापुटे पित्तं त्वङ्मांसं दाहशूलवत् ॥ १८ ॥

स घ्राणपाकः-

*கிராணபாக : (நாசி அழற்சி)*

கோபமடைந்த பித்தமானது நாசி த்வாரத்தில் எரிச்சல், வலி, ஆகியவற்றை உண்டாக்குவதுடன் சருமத்தையும், மாம்ஸத்தையும் பழுக்கச் செய்யும். இது நாசி அழற்சி எனப்படும்.

-स्रावस्तु तत्संज्ञः श्लेष्मसम्भवः।
अच्छो जलोपमोऽजस्रं विशेषान्निशि जायते॥ १९॥

*நாசிக் கசிவு : (பரிஸ்ராவம்)*

கபங்காரணமாக தெளிவாகவும், நீர் போன்றும், அடிக்கடியும், விசேஷமாக இரவிலும், நாசியிலிருந்து சளி பெருகும். இந்த நோய் நாசிக் கசிவு எனப்படும்.

कफः प्रवृद्धो नासायां रुद्ध्वा स्रोतांस्यपीनसम्।
कुर्यात्स घुर्घुरं श्वासं पीनसाधिकवेदनम्॥ २०॥

अवेरिव स्रवत्यस्य प्रक्लिन्ना तेन नासिका।
अजस्रं पिच्छिलं पीतं पक्वं सिंघाणकं घनम्॥ २१॥

*அபீனசம் :*

நாசியில் கபம் அதிகரித்து ஸ்ரோதஸ்களை அடைத்து குர்குர என்னும் ஒலியையும் ச்வாஸத்தையும், பீனிஸ நோயில் ஏற்படுவதைக் காட்டிலும் அதிக வேதனையையும் உண்டாக்கும். அதனால் மிகக் கசிவுள்ள நாசியானது ஆட்டின் நாசி போல் எப்பொழுதும் வழவழப்புடனும், மஞ்சளாகவும், பக்குவம் அடைந்ததாகவும், கனமாகவுள்ள சளியை வெளியேற்றும். இந்த நோய் அபீனசம் எனப்படும்.

குறிப்பு:1. வாய், காது ஆகியவற்றின் ஸ்ரோதஸ்களும் தடைப்படும் என கைரளியில் கூறப்பட்டுள்ளது.

2. சளி குறைந்ததாகவும் இருக்குமென சங்க்ஹத்தில் கூறப்பட்டுள்ளது.

அபீனஸம் என்பதற்குப் பதிலாக அவீனஸம் என ஒரு பாடம் உண்டு. இந்தச் சொல் ஆட்டின் நாசியைக் குறிப்பதால் இந்நோய் விஷயத்தில் மிகப் பொருத்தமாகக் கருதலாம். அபீனஸம் என்பதற்கு பொருத்தம் காண்பது கடினம். கிரந்தி எழுத்தில் வ என்ற எழுத்தும் ப என்ற எழுத்தும் வடிவில் பெரும்பாலும் ஒத்திருப்பதால் அபீனஸ என்ற சொல்லே அவீனஸ என்று தவறாகப் படிக்கப்பட்டு வழக்கில் வந்திருக்கக் கூடும்.

रक्तेन नासा दग्धेव बाह्यान्तः स्पर्शनासहा ।
भवेद्धूमोपमोच्छ्वासा सा दीप्तिर्दहतीव च ॥ २२ ॥

### தீப்தி :

ரத்தம் காரணமாக நாசியானது எரிக்கப்பட்டது போன்று இருக்கும். உள்ளும் புறமும் பரிசித்தலைத் தாங்காது. சுவாஸம் புகை போன்று இருக்கும். நாசி எரிவது போல இருக்கும். இந்த நோய் தீப்தி எனப்படும்.

तालुमूले मलैर्दुष्टैर्मारुतो मुखनासिकात् ।
श्लेष्मा च पूतिर्निर्गच्छेत् पूतिनासं वदन्ति तम् ॥ २३ ॥

### (பூதிநாசி) நாசி நாற்றம்:

அண்ணத்தின் அடிப்பாகத்தில் தோஷங்கள் கேடுற்றது காரணமாக வாய், நாசி ஆகியவற்றிலிருந்து கெட்ட நாற்றத்துடன் வாயுவும், சளியும் வெளியேறும். இந்த நோயை நாசி நாற்றம் என்பர்.

निचयादभिघाताद्वा पूयासृङ् नासिका स्रवेत्।
तत्पूयरक्तमाख्यातं शिरोदाहरुजाकरम् ॥ २४ ॥

**(பூயரக்தம்) - சீழும் ரத்தமும் வெளியேறுதல் :**

*ஸன்னி பாதம் அல்லது தாக்குறுதல் காரணமாக நாசியானது சீழையும், ரத்தத்தையும் கசியச் செய்யும். தலையில் எரிச்சலும், வலியும் உண்டாக்கும் இந்த நோய் (பூயரக்தம்) சீழும், ரத்தமும் வெளியேறுதல் எனப்படும்.*

पित्तश्लेष्मावरुद्धोऽन्तर्नासायां शोषयेन्मरुत्।
कफं स शुष्कपुटतां प्राप्नोति पुटकं तु तत् ॥ २५ ॥

**(புடகம்) சருமத்துண்டு :**

*பித்தத்தாலும், கபத்தாலும் தடுக்கப்பட்ட வாயுவானது நாசியில் கபத்தை உலரச் செய்யும். உலர்ந்த அந்த கபமானது சருமம் போல் அமையும். இந்நோய் (புடகம்) சருமத்துண்டு எனப்படும்.*

अर्शोर्बुदानि विभजेद्दोषलिंगैर्यथायथम्।

*குரு, புற்று, ஆகிய நோய்களை தோஷங்களின் குறிகளுக்கு ஏற்றவாறு பிரித்தறிய வேண்டும்.*

सर्वेषु कृच्छ्रोच्छ्वसनं पीनसः प्रततं क्षवः ॥ २६ ॥

सानुनासिकवादित्वं पूतिनासः शिरोव्यथा।

**பொதுக் குறி :**

*எல்லா நாசி நோய்களிலும் சிரமத்துடன் சுவாசித்தல், பீனிசம், அடிக்கடி தும்மல், மூக்குடன் இணைந்து பேசுதல், நாசி நாற்றம், தலைவலி ஆகியவை காணப்படும்.*

अष्टादशानामित्येषां यापयेद्दुष्टपीनसम् ॥ २७ ॥

நாசி நோய்கள் பதினெட்டும் கூறப்பட்டன இவற்றுள் துஷ்ட பீனிச நோய் பத்திய முறைகளால் காலந்தள்ள மாத்ரமே ஏற்றது.

குறிப்பு :★ மற்றவை சிகித்ஸைக்கு ஏற்றவையாகும்.

इतिश्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने नासारोगविज्ञानीयो नामैकोनविंशोऽध्यायः ॥ १९॥

உத்தரஸ்தானம் – பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

★★★★★

## ॥ उत्तरस्थानम् - உத்தரஸ்தானம் ॥

### [ विंशोऽध्यायः - அத்தியாயம் - 20 ]

अथातो नासारोगप्रतिषेधं व्याख्यास्यामः ।
इति ह स्माहुरात्रेयादयो महर्षयः ॥

அடுத்து நாசி ரோக சிகித்ஸை என்னும் அத்தியாயத்தை விளக்குகிறோம். இவ்வாறு ஆத்ரேயர் முதலான மகரிஷிகள் கூறியுள்ளனர்.

सर्वेषु पीनसेष्वादौ निवातागारगो भजेत् ।
स्नेहनस्वेदवमनधूमगण्डूषधारणम् ॥ १ ॥

वासो गुरूष्णं शिरसः सुघनं परिवेष्टनम् ।
लघ्वम्ललवणं स्निग्धमुष्णं भोजनमद्रवम् ॥ २ ॥

धन्वमांसगुडक्षीरचणकत्रिकटूत्कटम् ।
यवगोधूमभूयिष्ठं दधिदाडिमसारिकम् ॥ ३ ॥

बालमूलकजो यूषः कुलत्थोत्थश्च पूजितः ।
कवोष्णं दशमूलाम्बु जीर्णां वा वारुणीं पिबेत् ॥ ४ ॥

எல்லா விதமான பீனிச நோய்களிலும் ஆரம்ப நிலையில் அதிகம் காற்று வீசாத இடத்தில் இருந்து கொண்டு நெய்ப்புச் சிகித்ஸை, வியர்வை உண்டாக்கும் சிகித்ஸை, வாந்தி உண்டாக்கும் சிகித்ஸை, புகை பிடித்தல், வாய் கொப்பளித்தல் ஆகியவற்றைச் செய்து கொள்ள வேண்டும். தடித்ததும், உஷ்ணத் தன்மை உள்ளதுமான ஆடையை உடுத்துக் கொள்ளலும், உறுதியான வஸ்திரத்தால் தலையை சுற்றிக் கொள்ளுதலும் ஏற்றவையாகும். எளிதில் ஜீரணிக்கும் தன்மை, புளிப்பு, உவர்ப்பு, நெய்ப்பு, ஸ்பரிசத்திலும், வீர்யத்திலும் உஷ்ணம், ஆகிய தன்மை கொண்டதும், திரவமற்றதும், வறண்ட பூமியில் வசிக்கும் பிராணியின் மாம்ஸம், வெல்லம், பால், கடலை, திரிகடு, ஆகியவற்றை அதிக அளவில் கொண்டதும், யவை, கோதுமை, ஆகியவற்றை முக்கியமாகக் கொண்டதும் தயிருடனும் மாதுளைச் சாற்றுடனும் கலந்ததும் ஆகிய உணவு உட்கொள்ளப்பட வேண்டும். இளம் முள்ளங்கி அல்லது கொள் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட கஞ்சி சிறந்ததாகும். இளஞ்சூடாக உள்ள தசமூல கஷாயத்தையாவது நாட்பட்ட வாருணீ என்னும் மதுவையாவது பருக வேண்டும்.

குறிப்பு: ★நோய் முதிர்ச்சி அடைந்த நிலையில் தீக்ஷ்ண குணமுள்ள நசியம் பிரயோகிக்க வேண்டுமென ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

जिघ्रेच्चोरकतर्कारीवचाजाज्युपकुंचिकाः ।

கச்சோரம், முன்னை, வசம்பு, ஜீரகம், ஓமம் ஆகியவற்றை முகர வேண்டும்.

**குறிப்பு:** ⋆மற்றும் வாஸனைப் புல் சதுர்ஜாதம் இவற்றைப் பொடித்து துணியில் கட்டி நுகர வேண்டுமென ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

व्योषतालीसचविकात्तिन्तिडीकाम्लवेतसम् ॥ ५ ॥

साग्र्यजाजि द्विपलिकं त्वगेलापत्रपादिकम् ।
जीर्णाद्गुडात्तुलार्धेन पक्वेन वटकीकृतम् ॥ ६ ॥

पीनसश्वासकासघ्नं रुचिस्वरकरं परम् ।

50 பலம் பழைய வெல்லத்தைப் பாகு வைத்து அதில் திரிகடு, தாளீசம், செவ்வியம், புளி, புளிவஞ்சி, கொடிவேலி, ஜீரகம், இவை வகைக்கு 2 பலம், லவங்கப் பட்டை, ஏலம், லவங்கப் பத்திரி ஆகியவை வகைக்கு ½ பலம் இவற்றைக் கலந்து வடகம் செய்து உபயோகிக்க பீனிசம், ச்வாஸம், இருமல் ஆகியவற்றை நீக்கும். விசேஷமாக ருசியையும், குரலையும் உண்டாக்கும்.

शताह्वात्वग्बला मूलं स्योनाकैरण्डबिल्वजम् ॥ ७ ॥

सारग्वधं पिबेद्धूमं वसाज्यमदनान्वितम् ।
अथवा सघृतान् सक्तून् कृत्वा मल्लकसम्पुटे ॥ ८ ॥

**புகையிடுதல் :**

சதகுப்பை, லவங்கப்பட்டை, சிற்றாமுட்டி வேர், பெருவாகை வேர், ஆமணக்கு வேர், பில்வ வேர், கொன்றை

வேர் இவற்றைப் பொடித்து மாம்ஸ எண்ணெய், நெய், தேன் மெழுகு ஆகியவற்றுடன் கலந்து புகைபிடிக்க வேண்டும். அல்லது சத்துமாவுடன் நெய் கலந்து குடுவையிலிட்டு புகைபிடிக்க வேண்டும்.

त्यजेत्स्नानं शुचं क्रोधं भृशं शय्यां हिमं जलम् ।

### விலக்க வேண்டியவை :

ஸ்னானம், வருத்தம், கோபம், அதிகத் தூக்கம், குளிர்ந்த நீர், ஆகியவற்றை விலக்க வேண்டும்.

குறிப்பு: ★அதிக உயரமுள்ள தலையணையையும், தலையணை இல்லாமையையும் தவிர்க்க வேண்டுமென்று ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

पिबेद्वातप्रतिश्याये सर्पिर्वातघ्नसाधितम् ॥ ९ ॥

पटुपंचकसिद्धं वा विदार्यादिगणेन वा ।
स्वेदनस्यादिकां कुर्यात् चिकित्सामर्दितोदिताम् ॥ १० ॥

### வாயுவால் உண்டான சளிப்பு நோய்க்கு சிகித்ஸை :

வாயுவால் உண்டான சளிப்பு நோயில் வாயுவைப் போக்கும் பொருள்கள் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட [1]நெய்யையாவது, [2]ஐவகை உப்புக்கள் சேர்த்து காய்ச்சப்பட்ட நெய்யையாவது விதர்யாதி [3]கணச் சரக்குகள் சேர்த்து காய்ச்சப்பட்ட நெய்யையாவது பருக வேண்டும். அர்த்தித [4]நோயில் கூறப்பட்டவாறு வியர்வை உண்டாக்குதலையும், [5]நசியமிடுதல் முதலியவற்றையும் செய்ய வேண்டும்.

குறிப்பு:1. இந்துப்புக் கலந்து காலையில் பருக வேண்டுமென ஸங்க்ரஹத்தில் காணப்டுகிறது.

2. ஐவகை உப்புக்கள். ஸூத். அத். 6-ல் கூறப் பட்டுள்ளன.

3. விதார்யாதிகணம் - ஸூத். அத். 15-ல் கூறப் பட்டுள் ளது.

4. அர்த்திதம். சிகித். அத். 21-ல் சு. 43-ல் விளக்கப் பட்டுள்ளது.

5. முதலிய என்பதால் தலை, காது, கண் ஆகிய வற்றில் தைலம் நிரப்புதல், வாந்தி செய்வித்தல், ரத்தத்தை வெளியேற்றுதல் முதலியவை கூறப்படு கின்றன.

पित्तरक्तोत्थयोः पेयं सर्पिर्मधुरकैः शृतम्।
परिषेकान् प्रदेहांश्च शीतैः कुर्वीत शीतलान्॥ ११॥

धवत्वक्त्रिफलाश्यामाश्रीपर्णीयष्टितिल्वकैः।
क्षीरे दशगुणे तैलं नावनं सनिशैः पचेत्॥ १२॥

**பித்த - ரத்த சளிப்பு நோய்க்கு சிகித்ஸை :**

பித்தம் - ரத்தம் ஆகியவற்றால் சளிப்பு நோயில் இனிப்பு வர்க்கப் பொருள்கள் சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட நெய்யைப் பருக வேண்டும். குளிர்ச்சிக் குணமுள்ள பொருள் களின் சேர்க்கை காரணமாக குளிர்ந்தவையான ஊற்றுதலும், பூச்சுகளும் பிரயோகிக்க வேண்டும். ஞமவிருக்ஷப் பட்டை, திரிபலை, ஞாழல், குமிழ், அதிமதுரம், பாச்சோற்றி, மஞ்சள், இவற்றின் கல்கமும், எண்ணெய்க்குப் பத்து மடங்கு பாலும் சேர்த்து தைலம் காய்ச்சி நசியம் செய்ய வேண்டும்.

कफजे लंघनं लेपः शिरसो गौरसर्षपैः।
सक्षारं वा घृतं पीत्वा वमेत्, पिष्टैस्तु नावनम्॥ १३॥

बस्ताम्बुना पटुव्योषवेल्लवत्सकजीरकैः ।

**கபத்தால் உண்டான சளிப்பு நோய்க்கு சிகித்ஸை :**

கபத்தால் உண்டான சளிப்பு நோயில் உபவாசமிருத்தல், வெண்கடுகை அரைத்து தலையில் பூசுதல், அல்லது யவக்ஷாரம் கலந்த நெய்யைப் பருகி வாந்தி செய்தல் ஆகியவை ஏற்றனவாகும். இந்துப்பு, திரிகடு, வாய் விளங்கம், வெட்பாலையரிசி, ஜீரகம் ஆகியவற்றை ஆட்டு மூத்ரம் விட்டரைத்து நசியம் செய்ய வேண்டும்.

कटुतीक्ष्णैर्घृतैर्नस्यैः कवलैः सर्वजं जयेत् ॥ १४ ॥

**ஸன்னிபாத சளிப்பு நோய்க்கு சிகித்ஸை :**

ஸன்னிபாதங் காரணமாக உண்டான சளிப்பு நோயை காரமும், தீக்ஷ்ணமும் உள்ளவையான நெய் வகை, நசியம், *கபளக்ரஹம் ஆகியவற்றால் வெல்ல வேண்டும்.

குறிப்பு: *வாயில் சிறிது இடவெளி இருக்கும்படி திரவங்களை நிரப்பிக் கொப்பளித்தல்.

यक्ष्मकृमिक्रमं कुर्वन् यापयेद्दुष्टपीनसम् ।

துஷ்டபிரதிச்யாய நோயில், க்ஷயநோய் [1]சிகித்ஸையையும், கிருமி [2]நோய் சிகித்ஸையையும் செய்வித்துப் பத்திய முறைகளால் காலந்தள்ள வேண்டும்.

குறிப்பு: 1. க்ஷய நோயால் உண்டான சளிப்பு நோய்க்குக் கூறப்பட்ட அப்பியங்கம், நெய்ப்புப் பொருள் பருகுதல் முதலியவை குறிப்பிடப்படுவதாக கைரளியில் கூறப்பட்டுள்ளது.

2. கிருமி சிகித்ஸை சிகித். அத். 20-ல் விளக்கப் பட்டுள்ளது.

व्योषोरुबूककृमिजिद्दारुमाद्रीगदेंगुदम् ॥ १५ ॥
वार्ताकबीजं त्रिवृता सिद्धार्थः पूतिमत्स्यकः ।
अग्निमन्थस्य पुष्पाणि पीलुशिग्रुफलानि च ॥ १६ ॥
अश्वविड्रसमूत्राभ्यां हस्तिमूत्रेण चैकतः ।
क्षौभगर्भां कृतां वर्तिं धूमं घ्राणास्यतः पिबेत् ॥ १७ ॥

திரிகடு, ஆமணக்கு, வாய் விளங்கம், தேவதாரு, அதி விடயம், கோஷ்டம், இங்குதி, கத்திரி விதை, சிவதை, கடுகு, கொதித்த மீன், முன்னையின் புஷ்பம், உகாய், முருங்கை விதை ஆகியவற்றை குதிரையின் சாணப்பால், குதிரையின் சிறுநீர், யானையின் சிறுநீர் ஆகியவை விட்டரைத்து பட்டுத் துணியின் மீது பூசி திரி செய்து (கொளுத்தி அதனின்று கிளம்பும்) அதன் புகையை வாயினாலும், நாசியாலும் பருக வேண்டும்.

क्षवथौ पुटकाख्ये च तीक्ष्णैः प्रधमनं हितम् ।
शुण्ठीकुष्ठकणावेल्लद्राक्षाकल्ककषायवत् ॥ १८ ॥

साधितं तैलमाज्यं वा नस्यं क्षवपुटप्रणुत् ।

### அதிக தும்மல் - புடம் ஆகியவற்றிற்கு சிகித்ஸை :

(பிருசக்ஷவம் என்னும்) மிகத் தும்மல், புடகம் என்னும் நோய் ஆகியவற்றில் தீக்ஷ்ண குணமுள்ள பொருள்களை நோயாளியின் நாசியில் ஊத வேண்டும். சுக்கு, கோஷ்டம், திப்பிலி, வாய் விளங்கம், திராட்சை இவற்றின் கல்கமும், கஷாயமும் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட தைலம் அல்லது நெய்யை நசியமிட (க்ஷவம்) அடிக்கடி தும்முவதையும் புடம் என்னும் நோயையும் நீக்கும்.

नासाशोषे बलातैलं पानादौ भोजनं रसैः ॥ १९ ॥

स्निग्धो धूमस्तथा स्वेदो-

*நாசி வறட்சிக்கு சிகித்ஸை :*

நாசி வறட்சி நோயில் பருகுதல்[1] முதலியவற்றிற்கும், பலா [2]தைலமும் மாமிஸ ரஸத்துடன் உணவும், நெய்ப்புள்ள புகைபிடித்தலும், வியர்வை உண்டாக்குதலும் ஏற்றன வாகும்.

குறிப்பு: 1. முதலியவற்றிற்கு என்பதால் நசியம் அப்பியங்கம் முதலியவை கூறப்படுகின்றன.

2. சாரீரஸ்தானத்தில் கூறப்பட்ட பலா தைலம் என கைரளியில் காணப்படுகிறது. வாத நோய் சிகித்ஸையில் கூறப்பட்ட பலா தைலமென சந்தர நந்தனர் கூறுகிறார்.

-नासानाहेऽप्ययं विधिः ।

*நாசி வீக்கம் :*

நாசி வீக்கம் என்ற நோயிலும் இந்த சிகித்ஸையையே செய்ய வேண்டும்.

पाके दीप्तौ च पित्तघ्नं-

*அழற்சி தீப்தி இவற்றிற்குச் சிகித்ஸை :*

நாசி அழற்சி தீப்தி ஆகியவற்றில் பித்தத்தைப் போக்கும் சிகித்ஸையைச் செய்விக்க வேண்டும்.

குறிப்பு: ★அட்டையினால் ரத்தத்தை வெளியேற்ற வேண்டும் என ஸங்க்ரஹத்தில் கூறப்பட்டுள்ளது.

-तीक्ष्ण नस्यादि संस्तुतौ ॥ २० ॥

**(நாஸாஸ்ராவம்) நாசிக் கசிவு :**

நாசிக் கசிவு நோயில் தீக்ஷ்ண [1]குணமுள்ள நசியம் [2]முதலியவற்றைப் பிரயோகிக்க வேண்டும்.

குறிப்பு: 1.தீக்ஷ்ண நசியம் என்பதால் விரேசன நசியம் குறிப்பிடப்படுகிறது.

2. நசியம் முதலிய என்பதால் தீக்ஷ்ணமான பொருள்களின் புகையை பிடித்தல் முதலியவை கூறப்படுகின்றன.

कफपीनसवत्पूतिनासापीनसयोः क्रिया।
लाक्षाकरंजमरिचवेल्लहिंगुकणागुडैः ॥ २१ ॥

अविमूत्रद्रुतैर्नस्यं कारयेद्वमने कृते।
शिग्रुसिंहीनिकुम्भानां बीजैः सव्योपसैन्धवैः ॥ २२ ॥

सवेल्लसुरसैस्तैलं नावनं परमं हितम्।

**நாசா துர்கந்தம் - அபீனசம் ஆகியவற்றிற்கு சிகித்ஸை:**

நாசி துர்க்கந்தம், அபீனசம் ஆகிய நோய்களுக்குக் கபத்தால் உண்டான சளிப்பு நோய்க்கு கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்விக்க வேண்டும். வாந்தி செய்விக்கப்பட்டபின் அரக்கு, புங்கு, மிளகு, வாய்விளங்கம், காயம், திப்பிலி, வெல்லம் இவற்றைப் பொடித்து ஆட்டு மூத்ரத்தில் கலக்கி நசியமிட வேண்டும். முருங்கை, கண்டங்கத்திரி, நாகதந்தி, இவற்றின் விதைகள் திரிகடு, இந்துப்பு, வாய்விளங்கம், துளஸி ஆகியவற்றைச் சேர்த்துப் பக்குவம் செய்யப்பட்ட தைலத்தை நசியமிடுவது மிகவும் ஏற்றதாகும்.

पूयरक्ते नवे कुर्याद् रक्तपीनसवत् क्रमम् ॥ २३ ॥

अतिप्रवृद्धे नाडीवत्-

**பூயரத்த சிகித்ஸை :**

நாட்படாத பூயரத்த நோயில் ரத்தபீனிச சிகித்ஸையைச் செய்ய வேண்டும். அதிகரித்த நிலையில்* நாடீ விரண சிகித்ஸையைச் செய்ய வேண்டும்.

குறிப்பு: ★நாடீவிரணம் அத். 30-ல் விளக்கப்பட இருக்கிறது.

-दग्धेष्वर्शोर्बुदेषु च ।
निकुम्भकुम्भसिन्धूत्थमनोह्वालवणाग्निकैः ॥ १४ ॥

कल्कितैर्घृतमध्वक्तां घ्राणे वर्तिं प्रवेशयेत् ।
शिग्र्वादि नावनं चात्र पूतिनासोदितं भजेत् ॥ २५ ॥

அர்சஸ் (நாசிக்குரு), அர்ப்புதம் (நாசிப் புற்று) ஆகிய நோய்களில் தீயால் சூடிட்ட பின் நாகதந்தீ, சிவதை, இந்துப்பு, மனோசிலை, அரிதாரம், திப்பிலி, கொடிவேலி, இவற்றைக் கல்கமாக்கி திரிசெய்து நெய்யும், தேனும் கலந்து நாசியில் இட வேண்டும். மேலும் இந்த நோயில் நாசி நாற்ற *நோய் சிகித்ஸையில் கூறப்பட்ட முருங்கை முதலிய பொருள்களால் நசியமிட வேண்டும்.

குறிப்பு: ★முருங்கை முதலிய பொருள்கள் இந்த அத்தியாயம் 22-வது சுலோகத்தில் விளக்கப் பட்டுள்ளன.

इति श्रीवैद्यपतिसिंहगुप्तसूनुश्रीमद्वाग्भटविरचितायामष्टांगहृदयसंहितायां षष्ठे उत्तरस्थाने नासारोगप्रतिषेधो नाम विंशोऽध्यायः ॥ २० ॥

உத்தரஸ்தானம் – இருபதாவது அத்தியாயம் முற்றிற்று

# Index - அட்டவணை

## உத்தரஸ்தானம் - முதல் பகுதி

### அத்தியாயம் - 1


| | ஸ்லோகம் | பக்கம் |
|---|---|---|
| பிறந்தவுடன் குழந்தைக்கு செய்ய வேண்டியவை | 1,2 | 3 |
| குழந்தையின் காதில் படிக்க வேண்டிய மந்திரங்கள் | 3 | 3 |
| ஆரோக்ய நிலையை அடைந்த குழந்தைக்கு செய்ய வேண்டியவை | 4,5,6 | 4 |
| அன்னத்தை கொடுக்கும் முறை | 7,8 | 5 |
| வேறு பிராசங்கள் | 9 | 5 |
| கர்ப்ப நீரை வாந்தி செய்வித்தல் | 10 | 5 |
| ஜாதகர்மா | 11 | 6 |
| தாய்க்கு பால் உண்டாகுதல் | 11 | 6 |
| குழந்தைக்கு முதல் நாள் கொடுக்க வேண்டியது | 12 | 7 |
| 2-வது, 3-வது நாளில் கொடுக்க வேண்டியது | 13,14 | 7 |
| உடல் வளர்ச்சிக்கு தாய்ப்பாலே சிறந்தது | 15 | 8 |
| தாய்ப்பால் இல்லாவிடில் செய்ய வேண்டியது | 16 | 8 |
| தாய்ப்பால் அழிவிற்கு காரணம் | 17 | 9 |
| கருப்பஞ்சாறு தாய்ப்பால் வளர்ச்சிக்கு ஏற்றவை | 18 | 9 |
| தாய்ப்பால் குழந்தைக்கு நோயுண்டாக்கும் சூழ்நிலைகள் | 19 | 10 |

| அட்டவணை உத்த. மு. பா. அத்-1 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| தாய்ப்பால் இல்லாவிடில் வெள்ளாட்டின் பால் அல்லது பசுவின் பால் | 20 | 10 |
| குழந்தைக்கு ஆறாம் நாள் செய்ய வேண்டியவை | 21 | 11 |
| பத்து நாட்கள் சென்றதும் ஸ்னானோத்ஸவம் செய்ய வேண்டியவை | 22 | 11 |
| பெயர் சூட்டுதல் | 22 | 11 |
| ஆயுள் பரீக்ஷை | 24 | 12 |
| சுத்தமான படுக்கை முதலியன ஏற்றவை | 25 | 12 |
| ரத்னம் முதலியவற்றை அணிந்திருக்கச் செய்தல் | 26 | 13 |
| ஆயுள் அதிகரிக்க வசம்பை எப்பொழுதும் அணிவித்தல் | 27 | 14 |
| ஆறாம் மாதம் காது குத்தல் | 28 | 15 |
| காது குத்தும் முறை | 29 | 15 |
| அடிக்காதின் நடுவில் உள்ள ஸிரைகள் (காலிகா முதலியன) | 30,31,32 | 15 |
| காலிகா முதலியவை குத்தப்படின் வீக்கம் முதலியன உண்டாதல் | 33 | 16 |
| உரியவாறு காது குத்தப்பட்டதன் குறிகள் | 34 | 16 |
| காது குத்தியபின் செய்ய வேண்டியவை | 35 | 16 |
| பல் முளைத்த அந்நிலையில் ஏற்ற உணவு | 37 | 17 |
| தாய்ப்பாலை நிறுத்திய குழந்தைக்கு பசியைத் தூண்டும் மோதகம் | 38,39 | 17,18 |

| | | |
|---|---|---|
| மலத்தைக் கட்டும் மோதகம் | 40 | 18 |
| குழந்தைகளின் நோய்களில் பிரயோகிக்கத் தக்க மருந்து | 40 | 18 |
| விரேசனம் தவிர்த்தல் | 40½ | 18 |
| குழந்தைகளை பயமுறுத்தக் கூடாது துணிக்காற்று முதலியவற்றினின்று காத்தல் | 41 | 18 |
| பிராம்மீ கிருதம் முதலியவற்றின் கல்கம் | 42 | 19 |
| அஷ்டாங்க கிருதம் | 43, 44 | 20 |
| ஸாரஸ்வத கிருதம் | 45 | 20 |
| வசம்பு முதலியன சேர்த்து நெய் பாகம் செய்து கொடுத்தல் | 46 | 21 |
| பொன், வெள்வசம்பு ஆகியவை, உடல் வளம் முதலியன உண்டாகும் | 47,48 | 21 |
| வசம்பு முதலியவற்றின் உபயோகம் | 49 | 22 |


## அத்தியாயம் - 2


| | | |
|---|---|---|
| பாலர் மூவகைப்படுவர் | 1 | 23 |
| சுத்தமான தாய்ப்பால் | 2 | 23 |
| வாயுவால் கேடடைந்த தாய்ப்பால் | 2 | 23 |
| பித்தத்தால் கேடடைந்த தாய்ப்பால் | 3 | 24 |
| கபத்தால் கேடடைந்த தாய்ப்பால் | 4 | 24 |
| இரண்டு அல்லது மூன்று தோஷங்களால் கேடடைந்த தாய்ப்பால் | 4 | 25 |
| பாலரின் நோயை அறிதல் | 5 | 25 |

| அட்டவணை உத்த. மு. பா. அத்-2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| குழந்தையின் நோயுற்ற பகுதியை அறியும் வழி | 6 | 26 |
| நோயுற்ற உறுப்புக்களை அறியும் உபாயம் | 7,8 | 26 |
| தோஷங்கள் வியாதி இவற்றிற்கேற்ப பாலூட்டுபவளுக்கு சிகித்ஸை செய்தல் | 9 | 27 |
| வாத தோஷத்தால் பால் கேடு அடைந்து இருப்பின் கஷாயங்கள் | 9,10 | 27 |
| வாத நோயில் கூறப்பெற்ற நெய் பருகுதல் முதலியன | 11 | 27 |
| சிற்றரத்தை முதலியவற்றின் சூர்ணத்தை நெய் கலந்து கொடுத்தல் முதலியன | 12 | 28 |
| பித்தத்தால் தாய்ப்பால் கேடடைந்திருப்பின் கஷாயம் | 13 | 28 |
| திரிபலை முதலியவை சேர்த்து க்ஷாரம் அல்லது நெய் பக்குவம் செய்து கொடுத்தல் | 14,15 | 28,29 |
| கபத்தால் தாய்ப்பால் கேடடைந்திருப்பின், குழந்தையை அதிமதுரம், இந்துப்பு கலந்த நெய் அல்லது இந்துப்பு, திப்பிலி கலந்த நெய் பருகச் செய்தல் | 16,17 | 29,30 |
| மலங்காரைப் பூவை அரைத்து தாயின் மார்பகத்திலும், குழந்தையின் உதட்டிலும் பூசுதல் | 18 | 30 |
| பாலூட்டுபவருக்கு தீக்ஷ்ணப் பொருளால் வாந்தி உண்டாக்குதல், கஞ்சி முதலிய வரிசையில் உணவு முஸ்தாதி கஷாய பாகம் | 18 | 30 |
| மற்றும் இரு கஷாயங்கள் | 19 | 30 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| க்ஷீராலஸக நோய் | 20,21,22 | 31 |
| க்ஷீராலஸக நோயில் பாலூட்டுபவள், குழந்தை இருவருக்கும் விரைவில் வாந்தி செய்வித்தல் | 23 | 32 |
| கஞ்சி முதலிய வரிசையில் உணவு உட்கொண்ட நிலையில் வசாதிகணச் சரக்குகள் முதலிய வற்றை உபயோகித்தல் | 24 | 32 |
| தாய்ப்பால் தோஷத்தைப் போக்க வட்டத் திருப்பி முதலியவற்றின் சூர்ணம் | 25 | 33 |
| நோய் தொடர்ந்திருப்பின் நோய்க்கேற்ப சிகித்ஸை செய்தல் | 26 | 33 |
| பல் முளைக்கும் பருவம் எல்லா நோய்களும், விசேஷமாக ஜ்வரம் முதலிய நோய்களுக்கும் காரணமாதல் | 26 | 33 |
| பல் முளைக்கும் பருவத்தில் எல்லா உறுப்புக்களும் வேதனையடைதல் | 28 | 33 |
| நோயுற்ற பாலருக்கு தோஷங்கள் முதலியவற்றை ஆராய்ந்து மருந்து கொடுக்கவேண்டும் | 29 | 34 |
| பாலருக்கு சிறிய அளவில் மருந்து கொடுப்பதன் காரணங்கள் | 30 | 35 |
| பாலருக்கு மிருது குணமுள்ள வாந்திப் பொருள்களால் வாந்தி செய்வித்தல் | 31 | 35 |
| தாய்ப்பால் பருகி திருப்தியடைந்த நிலையில் வாந்தி செய்வித்தல் | 32 | 36 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| அன்னம் உண்ணும் குழந்தைக்கு நெய் கலந்ததும், தெளிந்ததுமான கஞ்சி பருகிய நிலையில் வாந்தி செய்வித்தல் | 33 | 36 |
| விரேசனம் செய்விக்கத்தக்க நோயில் பஸ்தி ப்ரயோகமும் மர்சம் உபயோகிக்கத் தக்க நோயில் ப்ரதிமர்சமும் பிரயோகித்தல் | '' | 36 |
| கல்பஸ்தானத்தில் கூறப்பட்ட விரேசனம் முதலியவற்றை தாய்க்கு செய்வித்தல் | 34 | 37 |
| பெருங்குரும்பை முதலியவற்றின் சூர்ணம்; தாய்ப்பால் தோஷத்தை நீக்கும் | '' | 37 |
| பல் முளைக்கும் பொழுது உண்டாகும் நோய்களில் ஈறுகளில் திப்பிலிச் சூர்ணம் முதலியவற்றை தேன் கலந்து பூசுதல் | 35 | 37 |
| பல் முளைக்கும் பொழுது உண்டாகும் நோய்களில் உள்ளாங்குருவி முதலியவற்றின் மாமிஸத் தூளுடன் தேன் கலந்து பூசுதல் | 36 | 38 |
| பல் முளைக்கும் பொழுது உண்டாகும் நோய்களில் வசம்பு முதலியவற்றை சேர்த்து நெய் பக்குவம் செய்து கொடுத்தல் | 37 | 38 |
| பல் முளைக்கும் பொழுது உண்டாகும் நோய் களில் பாலாஷ்டகம் உபயோகித்தல் (மஞ்சள் முதலியவற்றின் சூர்ணம்) | 38,39,40 | 38 |
| பல் முளைக்கும் பொழுது உண்டாகும் நோய் மஞ்சட்டி முதலியவை சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 41 | 39 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| பல் முளைக்கும் காலத்தில் நோய் உண்டான குழந்தைக்கு பத்திய முறைகளில் அதிகம் கட்டுப்பாடு கூடாது | 43 | 40 |
| பகலில் அதிகமாகத் தூங்குதல் முதலியவற்றால் குழந்தைக்கு ருசியின்மை முதலியவை உண்டாதலும், உடல் இளைத்தலும் | 44 | 40 |
| மேற்படி நோய்களில் இந்துப்பு முதலிய-வற்றின் சூர்ணத்தை கொடுத்தல் | 46 | 40 |
| பஞ்சகோலம், கடுகரோஹிணீ இவற்றின் சூர்ணத்தை உபயோகித்தல் | 47 | 41 |
| இலந்தை காட்டாத்திப்பூ முதலியவற்றின் சூர்ணத்தை உட்கொள்ளல் | 48 | 41 |
| ஸ்ரோதஸ் சுத்தியடைய மூவிலை முதலிய-வற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 48 | 41 |
| ஸ்ரோதஸ் சுத்தியடைய கண்டங்கத்திரி முதலியவற்றின் கல்க்கம் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 50 | 42 |
| இளைப்பைப் போக்க அதிமதுரம் முதலிய வற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 50 | 42 |
| குழந்தைக்கு புஷ்டியுண்டாக முயல் தலையின் கஷாயத்துடன் கர்க்கடச்ருங்கி முதலிய வற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 51 | 42 |
| வசம்பு முதலியவற்றுடன் தைலம் சேர்த்து பக்குவம் செய்து அப்பியங்கத்திற்கு உபயோகித்தல் | 53 | 43 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| லாக்ஷாதி தைலம் (கொம்பரக்குத் தைலம்) | 54 | 43 |
| இருமல், முதலிய நோய்களில் தனித்த அதிமதுரத்தையாவது; அதிமதுரம், கர்க்கடச்ருங்கி முதலியவற்றையாவது உபயோகித்தல் | 57 | 44 |
| பால் - பருகுந்தோறும் வாந்தி செய்யும் குழந்தைக்கு கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரிச் சாறுடன் பஞ்சகோலம் முதலியவை சேர்த்துக் கொடுத்தல் | 58 | 44 |
| வாந்தியைப் போக்க கருங்காலி முதலிய வற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து கொடுத்தல் | 61 | 45 |
| பிறக்கும் பொழுது பற்களுடன் பிறந்தாலும் முதலில் மேல் வரிசையில் பல் உண்டானாலும் சாந்தி செய்தல் முதலியன | 62 | 45 |
| தாலுகண்டக நோய் உண்டான நிலையில் காணப்படும் குறிகள் | 62 | 45 |
| தாலுகண்டக நோயில் அண்ணப்பகுதியை மேல்புறம் தள்ளி அவ்விடத்தில் யவக்ஷாரம் முதலியவற்றை பூசுதல் | 65 | 46 |
| தாலுகண்டக நோயில் இஞ்சி முதலிய-வற்றைப் புடமாக முறையில் உபயோகித்தல் | 66 | 46 |
| தாலுகண்டக நோயில் கடுக்காய் முதலிய-வற்றின் கல்கத்தை தாய்ப் பாலுடன் கொடுத்தல் | 67 | 46 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 2 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| (மாத்ருகா தோஷம்) மலப்பூச்சு முதலியவை காரணமாக குதத்தின் உட்புறத்தில் விரணம் உண்டாதல் | 69 | 47 |
| மாத்ருகா நோயின் வேறுபெயர் | 70 | 47 |
| இந்த நோயில் தாயின் பாலை பித்த கபங்களை போக்கும் மருந்துகளால் சோதனம் செய்தல் | 71 | 47 |
| வெள்ளைச் சந்தனத்தை குளிர்ந்த நீருடன் கலக்கி குழந்தைக்கு இடையிடையே கொடுத்தல் | 71 | 47 |
| குதகுட்டத்தில் தேன் அஞ்சனக்கல் ஆகிய-வற்றை குளிர்ந்த நீரில் கலக்கிப் பூசுதல் | 72 | 48 |
| குதகுட்டத்தில் திரிபலை முதலியவற்றின் கஷாயத்தை ஊற்றியபின் அன்னபேதி கோரோசனை முதலியவற்றின் சூர்ணத்தைத் தூவுதல் முதலியன | 72 | 48 |
| குதகுட்ட நோயில், அதிமதுரம் முதலிய-வற்றின் தூளை தூவுதல் முதலியன | 74 | 48 |
| விரணத்தில் சிவப்பு நிறமும் அரிப்பும் அதிகமாயிருப்பின் ரத்தத்தை வெளி-யேற்றுதலும் பித்த விரன சிகித்ஸையும் | 75 | 48 |
| மண் தின்றதால் உண்டான நோயில் வட்டத் திருப்பி முதலியவற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 76 | 49 |
| குழந்தைக்கு உண்டான நோய்க்குரிய மருந்தை அரைத்து ஸ்தனத்தில் பூசி கழுவியபின் பாலைப் பருகச் செய்ய; நோய் நீங்கும். | 77 | 49 |

| | ஸ்லோ. | பக். |
|---|---|---|

## அத்தியாயம் - 3

| | | |
|---|---|---|
| பாலரைப் பீடிக்கும் 12 கிரஹங்களின் பெயர்கள் | 1 | 50 |
| கிரஹங்களால் பாலர் பீடிக்கப்படுமுன் பாலரிடத்தில் காணப்படும் முற்குறிகள் | 3 | 51 |
| கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் குழந்தை-யிடம் காணப்படும் பொதுக்குறிகள் | 4 | 51 |
| ஸ்கந்த கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் குழந்தையிடத்தில் காணப்படும் குறிகள் | 6 | 51 |
| விசாக கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் காணப்படும் குறிகள் | 9 | 52 |
| நைகமேஷ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 13 | 53 |
| சிவ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 15 | 53 |
| பித்ரு கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 16 | 54 |
| சகுனி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 18 | 54 |
| பூதனை கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 20 | 55 |
| சீதபூதனை கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 22 | 55 |
| குருட்டு பூதனை கிரஹத்தால் பீடிக்கப்-பட்டதன் குறிகள் | 23 | 56 |
| முகமண்டதிகா கிரஹத்தால் பீடிக்கப்-பட்டதன் குறிகள் | 26 | 56 |
| தேவதி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 27 | 57 |
| கஷ்கரேவதி கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 29 | 57 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 3 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கிரஹங்களால் பீடிக்கப்பட்ட குழந்தையின் வயிற்றில் வட்டமான ஸிரை முடிச்சுகள் காணப்படுதல் முதலியன அசாத்ய நிலைக் குறிகள் | 30 | 58 |
| கஷ்கரேவதி கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் அசாத்யக்குறிகள் | 31 | 58 |
| கிரஹங்கள் பாலரைப் பீடிப்பதன் காரணங்கள் | 32 | 58 |
| பாலர் அல்லது பெரியோர் துன்புறுத்தும் இயல்புள்ள கிரஹத்தால் பீடிக்கப்பட் டால் காணப்படும் குறிகள் | 32 | 59 |
| சுகமனுபவிக்க விரும்பும் கிரஹத்தால் பீடிக்கப் பட்ட நிலையில் காணப்படும் குறிகள் | 37 | 60 |
| பூசித்தலை விரும்பும் கிரஹத்தால் பீடிக்கப் பட்ட நிலையில் காணப்படும் குறிகள் | 38 | 60 |
| துன்புறுத்தும் இயல்புள்ள கிரஹத்தால் பீடிக்கப்பட்டால் மந்திரங்களால் ஹோமம் செய்து வெல்லுதல் | 40 | 61 |
| மற்ற இரு கிரஹங்களால் பீடிக்கப்பட்ட நிலையில் ஏற்ற சிகித்ஸை | 41 | 61 |
| ஸாத்ய கிரஹத்தால் பீடிக்கப்பட்ட நிலையில் செய்ய வேண்டியவை | 41 | 61 |
| எல்லாவித கிரஹபீடைகளும் நீங்க மணிப் புங்கு முதலியவற்றைக் கலந்து புகை விடுதல் | 47 | 63 |
| மேற்படி கடுகு முதலியவற்றைப் புகையிடுதல் | 48 | 63 |
| (அனந்தாதி கிருதம்) காஞ்சொறி முதலிய-வற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து கொடுத்தல் | 49 | 63 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 4 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| (ராஸ்னாதி கிருதம்) சிற்றரத்தை முதலிய-வற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து கொடுத்தல் | 51 | 64 |
| (ஸாரிவாதி கிருதம்) நன்னாரி முதலியவற்றைச் சேர்த்து நெய் பக்குவம் செய்து கொடுத்தல் | 53 | 65 |
| எல்லாவித கிரஹபீடைகளின் முறை ஜ்வரத்திலும் பசுவின் கொம்பு முதலியவற்றை புகையிடுதல் | 55 | 65 |
| பூத வித்யையில் கூறப்படவிருக்கும் நெய் வகைகளும் உபயோகிக்க ஏற்றவை | 58 | 66 |
| மந்த்ரமும் தந்த்ரமும் அறிந்தவரை கொண்டு பலிகொடுத்தல் முதலியவையும் செய்வித்தல் | 58 | 66 |
| ஆலில் பட்டையையும் பால் மரங்கள் முதலியவற்றின் இலைகளையும் சேர்த்து நீரைக் காய்ச்சி இரவில் ஸ்னானம் செய்வித்தல் | 59 | 66 |
| கிரஹபீடை நீங்கினாலும் உபத்ரவங்கள் காணப்படின் அவற்றிற்கேற்ற சிகித்ஸை செய்தல் அவசியம் | 60 | 66 |


## அத்தியாயம் - 4


| | | |
|---|---|---|
| பூத கிரஹத்தால் பீடிக்கப்பட்டவரிடத்தில் காணப்படும் குறிகள் | 1 | 67 |
| பூத கிரஹத்தால் பீடிக்கப்பட்டவரின் உருவம் முதலியவற்றால் பீடித்த பூத கிரஹத்தை அறிதல் | 2 | 67 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 4 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| பூத கிரஹங்களின், இருபெரும் பிரிவும், பதினெட்டு வகையும் | 3 | 68 |
| தீவினை முதலியவையே கிரஹங்கள் பீடிக்கக் காரணங்கள் | 3 | 68 |
| கிரஹங்கள் பீடிப்பதற்கு வாய்ப் பூட்டும் சமயங்கள் | 6 | 68 |
| கிரஹங்கள் பீடிப்பதற்கான திதிகள் | 9 | 69 |
| பொதுவாக கிரஹங்கள் முற்கூறிய திதிகளில் சாயங்காலத்தில் பிடித்தல் | 12 | 70 |
| தேவ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 13 | 70 |
| அசுர கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 16 | 71 |
| கந்தர்வ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 18 | 72 |
| ஸர்ப்ப கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 19 | 72 |
| யக்ஷ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 21 | 72 |
| பிரும்மராக்ஷஸரால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 24 | 73 |
| ராக்ஷஸ கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 26 | 74 |
| பிசாச கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 30 | 75 |
| பிரேத கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 34 | 75 |
| கூஷ்மாண்ட கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 35 | 76 |
| நிஷாத கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 36 | 76 |
| மௌகிரண கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 39 | 77 |

| | | |
|---|---|---|
| வேதாள கிரஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 40 | 77 |
| பித்ரு கிருஹத்தால் பீடிக்கப்பட்டதன் குறிகள் | 41 | 77 |
| குரு, வயோதிகர், முனிவர் ஸித்தர் ஆகியோரின், சாபம், கருத்து இவற்றை அனுசரித்தமைந்த பேச்சு முதலியவற்றால் அந்தந்த கிரஹபீடையை அறிதல் | 43 | 78 |
| சிகித்ஸைக்கு ஏற்கக்கூடாதவர் | 44 | 78 |


## அத்தியாயம் - 5


| | | |
|---|---|---|
| துன்புறுத்த விரும்பாத கிரஹத்தால் பீடிக்கப்பட்டதை ஜபம் முதலியன செய்து வெல்லுதல் | 1 | 79 |
| (கிரஹபீடை முதலியவற்றைப் போக்க) காயம் முதலியவற்றுடன் பழைய நெய் அல்லது புதிய தைலம் சேர்த்துக் காய்ச்சி பருகுதல் முதலியவற்றின் உபயோகித்தல் | 2 | 80 |
| காயம் முதலியவற்றை சூர்ணம், குளிகை, கல்கம் , பூச்சு முதலிய முறைகளிலும் உபயோகிக்கலாம் | 7 | 80 |
| கிரஹபீடையைப் போக்க யானைத் திப்பிலி முதலியவற்றை நஸ்யம் முதலிய முறையில் உபயோகித்தல் | 8 | 81 |
| (ஸித்தார்த்தக கிருதம்)வெண் கடுகு முதலியவற்றுடன் நெய் சேர்த்து பக்குவம் செய்து உபயோகித்தல் | 10 | 82 |
| முற்கூறிய வெண் கடுகு முதலியவற்றுடன் ஆட்டு மூத்ரம் சேர்த்து பக்குவம் செய்து உபயோகித்தல் | 13 | 82 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -5 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| ஸ்கந்த கிரஹ பீடை முதலியவற்றைப் போக்க பருத்திக் கொட்டை முதலிய-வற்றால் புகையிடுதல் | 17 | 83 |
| (பூதராவ கிருதம்) திரிகடு முதலியவற்றுடன் சிறுநீரும் பழைய நெய்யும் சேர்த்து பக்குவம் செய்து உபயோகித்தல் | 19 | 84 |
| (மகாபூதராவ கிருதம்)தகரை முதலியவை சேர்த்து நெய் பக்குவம் செய்து பானம் முதலியவற்றில் உபயோகித்தல் | 20 | 85 |
| கிரஹங்கள் பீடிக்கும் நாட்களில் பலி கொடுத்தல் முதலியவற்றை விசேஷமாகச் செய்தல் | 21 | 86 |
| உரியகாலத்தில் கிரஹங்களுக்கு பிடித்தமான ஸ்னானம் முதலியவற்றைச் செய்வித்தல் | 22 | 87 |
| எல்லா கிரஹங்களுக்கும் பிடித்தமானவை (இரத்தினம் முதலியன) | 23 | 87 |
| பலி கொடுக்க வேண்டிய இடங்களும், திசைகளும் | 24 | 87 |
| தேவ கிரஹத்துக்கு பிடித்தமான பலிப் பொருள்கள் | 28 | 88 |
| தேவ கிரஹபீடையைப் போக்க காயம் முதலியவற்றுடன் நெய் சேர்த்து பக்குவம் செய்து பானம் முதலிய முறையில் உயோகித்தல் | 29 | 88 |
| தேவ கிரஹபீடையைப் போக்க வசம்பு முதலியவற்றை நசியமாகவும் அஞ்ஜனமாகவும் உபயோகித்தல் | 31 | 89 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -5 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| அசுர கிரஹங்களுக்குப் பிடித்தமான பலிப்பொருள்கள் | 31 | 89 |
| நாக கிரஹத்துக்கு விருப்பமான பலிப்பொருள்கள் | 32 | 89 |
| நாக கிரஹபீடையில் வெண்தாமரை முதலியவற்றை நசியமிடுவதற்கும், அஞ்ஜனமிடுவதற்கும் உபயோகித்தல் | 34 | 89 |
| யக்ஷ கிரஹத்துக்கு விருப்பமான பலிப்பொருள்கள் | 34 | 90 |
| யக்ஷ கிரஹபீடையில் பசுநீர் நெய் முதலிய-வற்றைக் கலந்து பக்குவம் செய்து நசியம் முதலியவற்றில் உபயோகித்தல் | 35 | 90 |
| யக்ஷ கிரஹபீடையில் கடுக்காய் முதலிய-வற்றின் கல்கத்தை நசியமாகவும் அஞ்சனமாகவும் உபயோகித்தல் | 36 | 90 |
| பிரம்ம ராக்ஷஸ கிரஹத்துக்கு விருப்பமான பலிப்பொருள்கள் | 37 | 90 |
| பிரம்ம ராக்ஷஸ பீடையில் கருங்காலிக் கஷாயத்துடன் த்ரிகடு முதலியவை கலந்து நெய் பக்குவம் செய்து உபயோகித்தல் | 38 | 91 |
| ராக்ஷஸ கிரஹங்களுக்கு விருப்பமான பலிப்பொருள்கள் | 40 | 91 |
| ராக்ஷஸ கிரஹபீடையில் புங்குவாகை முதலியவற்றின் பட்டை முதலியவற்றை அஞ்சனமாகவும், நசியமிடவும் உபயோகித்தல் | 41 | 92 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -5 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| முற்கூறிய புங்கு வாகை முதலியவற்றுடன் நெய்பக்குவம் செய்து பருகுதல் முதலியவற்றில் உபயோகித்தல் | 43 | 92 |
| பிசாச கிரஹத்திற்கான பலிப்பொருள்கள் | 44 | 92 |
| பிசாச கிரஹபீடையில் மஞ்சள் முதலிய-வற்றுடன் நெய் சேர்த்து பக்குவம் செய்து உபயோகித்தல் | 45 | 93 |
| பிசாச கிரஹபீடையில் இப்பொருள்களுடன் ஆட்டு மூத்ரம் கலந்து அரைத்து நசிய-மாகவும், அஞ்சனமாகவும் உபயோகித்தல் | 47 | 93 |
| தேவ கிரஹபீடை, ரிஷி கிரஹபீடை, பித்ரு கிரஹபீடை, கந்தர்வ கிரஹபீடை ஆகிய-வற்றில் விலக்கவேண்டியவையும், ஏற்றவையும் | 48 | 93 |
| பிசாச கிரஹபீடை தவிர மற்றவற்றில் அனுகூலமானவற்றை செய்தல் | 49 | 94 |
| எல்லா க்ரஹபீடைகளையும், பைத்தியம் முதலியவற்றையும் நீக்க சிவனை தியானிப்பதுடன், வியாதிகளைப் போக்கும் பஞ்சாக்ஷரம் முதலிய மந்த்ரங்களை ஜபித்தல் | 50 | 94 |
| நோயாளியை மஹாவித்யா, மாயூரி என்ற மந்த்ரங்களை கேட்கச் செய்தல் | 51 | 94 |
| எல்லா கிரஹபீடைகளையும் போக்க பரமசிவனையும் அவருடைய கணங்களையும் பூஜித்தலும், மந்த்ரங்களை ஜபித்தலும். | 52 | 95 |

| | | |
|---|---|---|
| கிரஹபீடை நோயில், பைத்திய நோய்க்கும் வலிப்பு நோய்க்கும் கூறப்பட்டவற்றையும் ஏற்றவாறு பிரயோகித்தல். | 53 | 95 |

## அத்தியாயம் - 6

| | | |
|---|---|---|
| பைத்திய நோயின் பிரிவுகள் | 1 | 96 |
| பைத்தியம் என்ற நோயின் விளக்கம் | 1 | 96 |
| பைத்தியமில்லாதது முதலிய உணவு பாகம் ஆகியவையும் மனோபலக் குறைவு முதலியவையும் பைத்திய நோய் உண்டாகக் காரணமாதல் | 2 | 97 |
| பைத்திய நோய் உண்டாகும் முறை | 4 | 97 |
| பைத்திய நோயாளியின் குறிகள் | 5 | 97 |
| வாயுவால் உண்டான பைத்திய நோய்க் குறிகள் | 6 | 98 |
| பித்தத்தால் உண்டான பைத்திய நோய்க் குறிகள் | 10 | 99 |
| கபத்தால் உண்டான பைத்திய நோய்க் குறிகள் | 12 | 100 |
| ஸன்னிபாத பைத்தியம் | 14 | 100 |
| மன நோயால் உண்டாகும் பைத்திய நோய்க்குறிகள் | 15 | 100 |
| விஷத்தால் உண்டாகும் பைத்திய நோய்க்கு சிகித்ஸை | 17 | 101 |
| வாயுவால் உண்டான பைத்திய நோய்க்குறி சிகித்ஸை | 18 | 101 |
| கபம் - பித்தம் ஆகியவற்றால் உண்டான பைத்திய நோய்க்கு சிகித்ஸை | 19 | 102 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -6 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| இத்தகைய சிகித்ஸை செய்தும் பைத்திய நோய், தொடர்ந்தால், தீக்ஷ்ணமான நசியம் அஞ்சனம் முதலியவற்றை செய்வித்தலும் மகிழ்ச்சி உண்டாக்குதல் முதலியனவும். | 20 | 102 |
| (ஹிங்க்வாதி கிருதம்) காஸம், ஸௌவர்ச்சல உப்பு முதலியவை கலந்து பக்குவம் செய்த நெய் பைத்திய நோய் முதலியவற்றில் ஏற்றது. | 22 | 103 |
| பைத்தியம் முதலிய நோய்களில் உபயோகிக்க ஏற்ற (பிராம்மீ கிருதம்) பிராம்மீச் சாறும் த்ரிகடுகு முதலியனவையும் சேர்த்து பக்குவம் செய்த நெய். | 23 | 103 |
| பைத்தியம் முதலிய நோய்களில் உபயோகிக்க ஏற்ற (கல்யாணக கிருதம்) திரிபலை, தும்மட்டி முதலியவற்றைச் சேர்த்து பக்குவம் செய்த நெய். | 26 | 104 |
| பைத்தியம் முதலிய நோய்களில் மஹா கல்யாணக கிருதம், | 32 | 106 |
| மஹாபைசாஸ கிருதம், | 34 | 106 |
| பிராம்மீ, பேய்த்தும்மட்டி முதலிய-வற்றாலான திரியை நசியம் முதலிய முறையில் உபயோகித்தல் | 38 | 107 |
| கடுகெண்ணெய் கலந்து அவபீட நஸ்யமிடுதல் | 41 | 108 |
| கடுகெண்ணெயால் அப்பியங்கம் | 41 | 108 |
| கடுகுத் தூளை மூக்கிலிடுதல் | 41 | 108 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -6 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| காயம் சேர்த்து தீக்ஷ்ண தூமப் பொருளை புகையிடுதல் | 42 | 108 |
| நரி, முள்ளம்பன்றி முதலியவற்றின் சிறுநீர் முதலியவற்றால் புகையிடுதல் முதலியன | 42 | 109 |
| அழுகிய நாய் முதலியவற்றால் புகையிடுதல் | 44 | 109 |
| பித்தத்தால் உண்டான பைத்திய நோயில் ஏற்றவை திக்தக கிருதம் முதலியன | 44 | 109 |
| ஸிரையைக் குத்துதல் | 46 | 110 |
| மாம்ஸத்தால் திருப்தியடையச் செய்து காற்று வீசாத இடத்தில் படுக்கச் செய்தல். | 46 | 110 |
| பைத்திய நோயில் பயமுண்டாக்குதல் முதலியன | 47 | 111 |
| முற்கூறிய பயமுண்டாக்குதல் முதலியவற்றை தேசம் முதலியவற்றிற்கேற்ப பிரயோகித்தல் | 53 | 112 |
| பொருள் நாசம் காரணமான பைத்திய நோயில் மனதைத் தெளிவடையச் செய்தல் | 53 | 112 |
| விருப்பத்தால் ஏற்பட்ட பைத்திய நோய் முதலியவற்றிற்கு சிகித்ஸை | 54 | 112 |
| பூதங்களாலான பைத்திய நோயில் பூத சிகித்ஸை செய்தல் | 55 | 113 |
| பலி கொடுத்தல் | 56 | 113 |
| மாம்ஸம் உட்கொள்ளாமை முதலிய குணம் கொண்டவரை இருவிதப் பைத்திய நோயும் பிடிப்பதில்லை. | 59 | 114 |

| | | |
|---|---|---|
| பைத்திய நோய் நீங்கியதன் குறி | 60 | 114 |

## அத்தியாயம் - 7

| | | |
|---|---|---|
| (அபஸ்மார) வலிப்பு நோய், பெயர் விளக்கம், நோய் உண்டாகும் விதம், குறிகள். | 1 | 115 |
| வலிப்பின் பிரிவுகள் | 5 | 116 |
| வலிப்பு நோயின் முற்குறி | 6 | 116 |
| வாயுவால் உண்டாகும் வலிப்பு நோய் | 9 | 117 |
| பித்தத்தால் உண்டாகும் வலிப்பு நோய் | 12 | 118 |
| கபத்தால் உண்டாகும் வலிப்பு நோய் | 14 | 118 |
| ஸன்னிபாத வலிப்பு நோய் - அஸாத்யம். | 15 | 119 |
| வலிப்பு நோய் சிகித்ஸை | 15 | 119 |
| தனித்த தோஷத்தால் உண்டாகும் வலிப்பில் ஏற்ற சிகித்ஸை முறை | 16 | 119 |
| சோதனம் செய்து தேறுதல் உண்டாக்கியபின் சமன ஔஷதம் கொடுத்தல் | 17 | 120 |
| பஞ்சகவ்ய கிருதம் | 18 | 120 |
| மகாபஞ்சகவ்ய கிருதம் | 19 | 121 |
| பிராம்மீ கிருதம் | 24 | 122 |
| பால், எண்ணெய் முதலியன சேர்த்து நெய்-பாகம் செய்து கொடுத்தல் | 25 | 122 |
| பால், கருப்பஞ்சாறு முதலியன சேர்த்து நெய்பாகம் செய்து கொடுத்தல் | 26 | 122 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -8 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| நாணல், பால் முதுக்கன் முதலியவை சேர்த்து நெய்பாகம் செய்து கொடுத்தல் | 28 | 123 |
| பூசணிக்காய்ச் சாறு முதலியன சேர்த்து நெய்பாகம் செய்து கொடுத்தல் | 28 | 123 |
| கபிலைப் பசுவின் பித்தத்தை நசியமிடுதல் முதலியன | 29 | 123 |
| உடும்பு முதலியவற்றின் பித்தம் சேர்த்து காய்ச்சிய தைலம் நசியத்திற்கும், அப்பியங்கத்திற்கும் உகந்தது. | 30 | 123 |
| திரிபலை த்ரிகடுகு முதலியவை சேர்த்து காய்ச்சிய தைலம் நசியத்திற்கு உகந்தது. | 31 | 124 |
| திரிபலை முதலியவற்றின் சூர்ணத்தை நசியமிடல் | 32 | 124 |
| கீரி முதலியவற்றின் அலகு முதலியவற்றால் புகையிடல் | 33 | 124 |
| பழக்கமாக எண்ணெயுடன் உள்ளி உபயோகம் முதலியன | 34 | 124 |
| கடினமான இந்நோயில் இரசாயன விதியில் கூறிய முறையில் சிகித்ஸை செய்தல் | 35 | 125 |
| பாதுகாக்கும் முறை | 36 | 125 |
| அவர் செய்தவற்றை அவரிடம் கூறக் கூடாது முதலியன | 37 | 126 |

## அத்தியாயம் -8 (இமைநோய்களின் விளக்கம்)

| | | |
|---|---|---|
| இமை முதலிய கண்ணின் பாகங்களில் நோய் உண்டாகக் காரணமும், உண்டாகும் முறையும் | 1 | 127 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -8 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| (கிருச்ரோன்மீலனம்) சிரமத்துடன் இமை திறத்தல் | 3 | 128 |
| (நிமேஹம்) தானே இமைத்தல் | 5 | 128 |
| (வாதஹதம்) வாயுவால் குலைக்கப்பட்ட இமை | 5 | 129 |
| கும்பிகா | 6 | 129 |
| (பித்தோத் கிலிஷ்டம்) பித்தத்தால் கிளர்ந்த இமை | 7 | 129 |
| (பக்ஷ்மசாதம்) இமை மயிர் உதிர்தல் | 8 | 129 |
| போதகீ | 9 | 130 |
| (கபோத் கிலிஷ்டம்) கபத்தால் கிளர்ந்தது | 10 | 130 |
| லகனம் | 11 | 130 |
| உத்ஸங்கம் | 12 | 131 |
| உத்கிலிஷ்டபிடகா | 12 | 131 |
| (அர்சஸ்) இமை மாம்ஸக் குறுத்து | 13 | 131 |
| அஞ்ஜன நாமிகா | 14 | 131 |
| (பிஸ்வர்தம்) தாமரைத் தண்டிமை | 15 | 132 |
| உத்கிலிஷ்டவர்தம் | 16 | 132 |
| சியாவ வர்தம் | 17 | 132 |
| (சிவிஷ்ட வர்தம்)இமை ஒட்டி கொள்ளுதல் | 17 | 133 |
| (ஸிகதா வர்தம்) மணல் இமை | 18 | 133 |
| (கர்தமம்) சேற்றிமை | 18 | 133 |
| (பஹனம்) தடித்த இமை | 19 | 133 |
| குகனகம் | 19 | 134 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -9 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| (பக்ஷ்மரோதம்) இமை முள் | 21 | 134 |
| அலஜி | 23 | 135 |
| அர்புதம் | 24 | 135 |
| இமையில் உண்டாகும் நோய்களின் எண்ணிக்கை - 24 | 25 | 135 |
| சிகித்ஸைக்கு ஏற்றவையும் - மற்றவையும் | 25 | 135 |
| இமை நோய் ஒவ்வொன்றிலும் செய்ய வேண்டிய சிகித்ஸை முறை | 26 | 136 |


## அத்தியாயம் -9


| | | |
| --- | --- | --- |
| (கிரச்ரோன்மீலம்) சிரமத்துடன் இமை திறத்தல் நோய் சிகித்ஸை | 1 | 137 |
| கும்பீகவர்த்ம நோய்க்கு சிகித்ஸை | 2 | 138 |
| கீற வேண்டிய முறை | 3 | 139 |
| நன்கு கீறியதன் குறி | 9 | 140 |
| அதிகமாகக் கீறப்பட்டதன் குறிகளும்- சிகித்ஸையும் | 10 | 141 |
| அதிகமாகக் கீறப்பட்டால் செய்ய வேண்டியவை | 13 | 141 |
| கடினமான கட்டி, உயர்ந்த கட்டி ஆகியவற்றில் விரீஹி முகத்தால் பிளந்து, அமுக்குதல் | 15 | 142 |
| பித்தம் கிளர்ந்த இமை நோய் ரத்தம் கிளர்ந்த இமை நோய் இவற்றிற்கு சிகித்ஸை | 16 | 142 |
| இமையின் உரோமம் உதிரும் நோய்க்கு சிகித்ஸை | 18 | 143 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -9 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| போதகி சிகித்ஸை | 21 | 144 |
| (கபோத் கிலிஷ்ட) கபத்தால் கிளர்ந்த இமை நோய்க்கு சிகித்ஸை | 22 | 144 |
| லகண சிகித்ஸை | 24 | 145 |
| உத்ஸங்க, அஞ்ஜன நாமிகா ஆகியவற்றிற்கு சிகித்ஸை | 24 | 145 |
| குகூணக சிகித்ஸை (பால் கொடுக்கும் தாய்க்கு) | 24 | 145 |
| குகூணக நோயில் குழந்தைக்கு சிகித்ஸை | 27 | 146 |
| பாலர்களுக்கு வக்ஷாந்தி செய்விப்பதன் அவசியம் | 28 | 147 |
| உண்ணும் உணவிற்கேற்ப குழந்தைக்கு வாந்தி செய்விக்கும் முறை | 29 | 147 |
| துராய்ச்சேறு சேர்த்து பக்குவம் செய்த நெய் வாந்தி விரேசனம் ஆகியவற்றில் ஏற்றது | 31 | 148 |
| குகூணக நோயில் மரமஞ்சள் முதலிய-வற்றாலான திரியால் அஞ்ஜனமிடுதல் முதலியன | 32 | 148 |
| (பக்ஷ்ம ரோதம்) இமைமுள் நோய்க்கு சிகித்ஸை | 34 | 149 |
| (குறுக்காகக் கிழித்தல் முதலியன) ஐந்தாம் நாள் செய்யவேண்டியவை | 39 | 150 |
| பக்ஷ்மரோத நோய் முற்கூறிய சிகித்ஸையில் நீங்காவிடில் சூடு இடுதல் சுடவேண்டிய முறை | 40 | 150 |
| அலஜி-அற்புதம் ஆகிய நோய்களுக்கு சிகித்ஸை | 41 | 151 |

ஸ்லோ. பக்.

## அத்தியாயம் -10

### (கண்ஸந்தி, வெண்பகுதி, கரும்பகுதி ஆகியவற்றில் உண்டாகும் நோய்களின் விளக்கம்)

| | | |
|---|---|---|
| ஜலக் கசிவு | 1 | 152 |
| கபக் கசிவு | 2 | 153 |
| (உபநாஹம்) கண் வீக்கம் | 3 | 153 |
| (ரத்தஸ்ராவம்) ரத்தக் கசிவு | 4 | 154 |
| பர்வணீ | 5 | 154 |
| (பூயாஸ்ராவம்) சீழ்க் கசிவு | 6 | 155 |
| பூயாலஸ விரணம் | 7 | 155 |
| அலஜி | 8 | 155 |
| கிருமிக்ரந்தி | 8 | 155 |
| சாத்யம் - அசாத்யம் | 9 | 156 |

### வெண்பட நோய்கள்

| | | |
|---|---|---|
| சுத்திகா | 10 | 156 |
| சுக்லார்ம | 12 | 157 |
| பலாஸ க்ரதிதம் | 12 | 157 |
| பிஷ்டகம் | 13 | 158 |
| ஸிரோத்பாதம் | 14 | 158 |
| ஸிராஹர்ஷம் | 15 | 158 |
| ஸிராஜாலம் | 16 | 159 |
| சோணிதார்ம | 16 | 159 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -11 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| அர்ஜுனம் | 17 | 159 |
| பிரஸ்தார்யர்ம | 17 | 159 |
| ஸ்நாவார்ம | 18 | 160 |
| அதிமாம்ஸார்ம | 18 | 160 |
| ஸிரைக்கட்டிகள் | 19 | 160 |
| சாத்யமான நோய்கள் | 20 | 161 |
| ஐந்து வகை அர்மார்களும் வெட்டப் படவேண்டும் | 21 | 161 |
| சிகித்ஸைக்கு தகாதவை | 21 | 161 |

## கரும்படல நோய்கள்

| | | |
|---|---|---|
| க்ஷதசுக்ரம் | 22 | 162 |
| சுத்தசுக்ரம் | 25 | 163 |
| அஜகா | 26 | 163 |
| ஸிராசுக்ரம் | 27 | 164 |
| (பாகாத்யயம்) பழுத்துக் காலங்கடந்தது | 28 | 164 |
| பார்வை அழிவுற்ற நிலை முதலியவற்றில் சுக்ர நோய் - அஸாத்யம் | 30 | 165 |

## அத்தியாயம் - 11

| | | |
|---|---|---|
| ஸந்திகள், வெண்படலம், கரும்படலம் இவற்றில் உண்டாகும் நோய்களுக்கு சிகித்ஸை (உபநாஹ) கண் வீக்கத்திற்கு சிகித்ஸை | 1 | 166 |
| பர்வணீ சிகித்ஸை | 3 | 167 |
| பூயாலஸக சிகித்ஸை | 4 | 167 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -11 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| (கிருமிக்ரந்தி) கிருமிமுடிச்சு நோய்க்கு சிகித்ஸை | 6 | 168 |
| சுக்தி நோய் சிகித்ஸை | 7 | 169 |
| பலாஸகிரகிதம் பிஷ்டகம் ஆகியவற்றிற்கு சிகித்ஸை அரிப்பும், வீக்கமும் நீங்க ஜாதிமொட்டு முதலியவற்றின் திரியை அஞ்சனமிடல் | 9 | 170 |
| ஸிரோத்பாதம் முதலியவற்றிற்கு ரத்தாபிஷ்யந்த சிகித்ஸை | 10 | 170 |
| ஸிரோத்பாத நோயில் நெய்யும், தேனும் கலந்து அஞ்ஜனமிடல் | 10 | 170 |
| ஸிரைக்கூச்ச நோயில் அஞ்சனமிடல் | 11 | 170 |
| அர்ஜுன நோய்க்கு சிகித்ஸை | 11 | 170 |
| ஐவகை அர்ம நோய்களிலும் மெல்லியது ஆகிய நிலையில் சுக்ர நோய்ச் சிகித்ஸை | 13 | 171 |
| மாறான அர்ம நோயில் சஸ்திர பிரயோக முறை | 14 | 171 |
| நன்கு வெட்டப்பட்டபின் செய்ய வேண்டியவை | 20 | 173 |
| குறைவாக அல்லது அதிகமாகக் கீறப்-பட்ட நிலையில் சிகித்ஸை | 23 | 174 |
| கரைக்கும் அஞ்ஜனம் | 24 | 174 |
| ஆசார்யர் நிமி கூறும் மூவகை கரைக்கும் அஞ்ஜனம் | 25 | 175 |
| ஸிராஜால சிகித்ஸை | 28 | 175 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -11 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| சுக்ர நோய் சிகித்ஸை | 29 | 176 |
| க்ஷதசுக்ர நோய் சிகித்ஸை | 30 | 177 |
| ஜாதிமல்லிகை மொட்டு முதலிய-வற்றலான திரி | 32 | 177 |
| தந்தவர்த்தி | 33 | 178 |
| பச்சிலை முதலியவற்றாலான திரி (எல்லா சுக்ர நோய்களிலும்) | 35 | 178 |
| நேத்ர சுக்ர நோயில் ரத்னங்கள் முதலிய வற்றால் அஞ்ஜனம் முதலியன | 36 | 178 |
| சுத்தசுக்ர நோய் சிகித்ஸை | 38 | 179 |
| மஹாநீல குளிகை | 39 | 180 |
| நிலையாகவும் நெருக்கமாகவுமுள்ள சுக்ர நோயில் ரத்த வெளியேற்றம் முதலியன | 42 | 180 |
| மிளகு முதலியவற்றால் கண்களைத் தேய்த்தல் | 43 | 180 |
| சங்கு முதலியவற்றால் அஞ்ஜனமிடல் முதலியன | 44 | 181 |
| கலப்பைக் கிழங்கின் க்ஷாரத்தை உபயோகிக்கவேண்டிய முறை | 45 | 181 |
| சங்கு முதலியவற்றால் அஞ்சனமிடல் | 46 | 181 |
| பசுவின் பல் முதலியவற்றால் அஞ்ஜனமிடல் | 47 | 182 |
| மேலெழும்பிய அல்லது சல்யத்துடன் கூடிய சுக்ரநோயில் சுறண்டுதல் | 48 | 182 |
| விழி மண்டலத்தை கெடுக்காத ஸிரா சுக்ர நோயில் விரண சுக்ர நோய் சிகித்ஸை செய்தலும் வறள் தாமரை முதலிய வற்றால் அஞ்ஜனமிடலும் | 49 | 183 |

| | | |
|---|---|---|
| இவ்வித சிகித்ஸையில் நீங்காத ஸிரா சுக்ரத்திலும் இவ்வாறே அஜகாலிலும் அர்மநோயில் போன்று, சஸ்திர ப்ரயோகம் | 51 | 183 |
| அஸாத்யமான அஜவாவிலும், நேத்ர சுக்ர தோஷம் நெய்ப்புப் பொருள் முதலியவற்றால் வேதனையைக் குறைத்தல் முதலியன | 51 | 184 |
| கழுதையின் எலும்புத் தூளை அஞ்சனமிடல் | 53 | 184 |
| அஜகாவைப் பிளத்தல் | 55 | 184 |
| எல்லா சுக்ர நோய்களிலும் தோஷத்திற்கேற்ற பொருள் சேர்த்து பாகம் செய்த நெய்யை உபயோகித்தல் | 58 | 185 |


## அத்தியாயம் -12

### விழியில் உண்டாகும் நோய்களின் விளக்கம் :


| | | |
|---|---|---|
| தோஷங்கள் முதல் படலத்திலிருப்பின் மாறாக காணுதல் | 1 | 187 |
| திமிர நோய் | 2 | 187 |
| காசநோய் | 6 | 188 |
| லிங்கநாசம் | 7 | 189 |
| வாததிமிரம், வாதகாசம், வாதலிங்க நாசம் | 8 | 189 |
| கம்பீரா | 12 | 190 |
| பித்ததிமிரம், பிக்தகாசம், பித்தலிங்க நாசம் | 13 | 191 |
| (ஹ்ரஸ்வா) குறுகியது | 15 | 191 |
| பித்தவிதக்தா | 16 | 192 |
| கபதிமிரம், கபகாசம், கபலிங்கநாசம் | 16 | 192 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -13 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| ரத்த திமிரம், ரத்தகாசம், ரத்தலிங்க நாசம் | 20 | 193 |
| இருதோஷக்கூட்டு மற்றும் ஸன்னிபாதத்தால் உண்டாகும் திமிரம் முதலியன | 22 | 193 |
| (நகுலாந்தம்) கீரிக்கருடு | 23 | 194 |
| (தோஷாந்த:) இரவுக் குருடு எனப்படும் அந்திமாலை | 24 | 194 |
| இந்த நோயில் பகலில் பார்வை ஏற்படுவதன் காரணம் | 25 | 194 |
| உஷ்ணவிதக்தா | 26 | 194 |
| அம்லவிதக்தா | 28 | 195 |
| தூமரம் | 29 | 195 |
| வெளிக்காரணத்தாலான லிங்கநாசம் | 30 | 195 |
| அசாத்யம் - சாத்யம் | 32 | 196 |


## அத்தியாயம் -13

## திமிர நோய் சிகித்ஸை


| | | |
|---|---|---|
| திமிர நோயில் விரைந்து சிகித்ஸை செய்ய வேண்டியதன் அவசியம் | 1 | 198 |
| ஜீவந்தீ (கீரிப்பாலை) கிருதம் | 2 | 198 |
| திராக்ஷாதி கிருதம் | 4 | 199 |
| படோலாதி கிருதம் | 6 | 199 |
| திரிபலா கிருதம் | 10 | 200 |
| மகாத்ரிபலா கிருதம் | 12 | 201 |
| கருடனைப்போன்ற பார்வை உண்டாக திரிபலயை உபயோகிக்க வேண்டிய முறை (நிமி கூறும் முறை) | 14 | 201 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -13 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| திரிபலாவை பொன் நிமிளை முதலிய வற்றுடன்) உபயோகித்தல் | 16 | 202 |
| திரிபலா கஷாயம் | 17 | 202 |
| பாலில் சமைத்த அன்னத்துடன் திரிபலை உண்ணல் | 18 | 202 |
| உணவிற்கு முன் கடுக்காயை உபயோகித்தல் | 19 | 203 |
| சூர்ணாஞ்ஜனம் | 20 | 203 |
| திமிரம் முதலியவற்றில் சடாமாஞ்சில் முதலியவற்றின் சூர்ணத்தை அஞ்சனமிடல் | 23 | 204 |
| கபத்தாலான கண் நோய்களில் மிளகு முதலியவற்றால் அஞ்சனம் | 25 | 204 |
| அஞ்சனக் கல்லை திராட்சைச் சாறு முதலிய-வற்றில் இட்டபின் அஞ்சனமிடல் | 26 | 205 |
| பாஸ்கர சூரணம் | 28 | 205 |
| விமலாஞ்சனம் | 31 | 206 |
| துத்தப்ரயோகம் | 33 | 207 |
| சலாகை | 34 | 207 |
| அஞ்சனக்கல்லுடன் பாதரஸம் முதலியவை கலந்து அஞ்சனமிடல் | 36 | 208 |
| கழுகு முகத்தை எரித்து அஞ்சனம் கூட்டி அஞ்சனமிடல் | 37 | 208 |
| கருநாகத்தின் முகத்தில் அஞ்சனக்கல்லை வைத்து எரித்து அஞ்சனமிடல் | 38 | 208 |
| பக்குவம் செய்த வெண்ணெயை உண்ட கோழியின் மலத்தை அஞ்சனமிடல் | 39 | 209 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -13 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| கருநாகத்தின் மாஸ்ஸ எண்ணெய் முதலிய-வற்றை ரஸக்ரியை செய்து உபயோகித்தல் | 41 | 209 |
| அப்பிரதிரஸாஞ்சனம் | 42 | 209 |
| தான்றி முதலியவற்றாலான குளிகை | 43 | 210 |
| ஷண்மாக்ஷிகம் | 44 | 210 |
| ரத்னம் முதலியவற்றை சூரணித்து அஞ்சனமிடல் | 45 | 210 |
| நல்லெண்ணெய் முதலியவற்றை பக்குவம் செய்து நசியம் செய்தல் | 46 | 211 |
| திமிர நோயாளிக்கு தோஷத்திற்கேற்ப நெய்ப்புப் பொருள் பிரயோகம் முதலிய-வற்றை பலதடவை செய்வித்தல் | 47 | 211 |
| வாததிமிர நோய்க்கு சிகித்ஸை (தசமூல கிருதம்) | 49 | 212 |
| கீரிப்பாலைக் கஷாயம் சேர்த்து தயாரித்த தைலத்தால் நசியம் | 51 | 212 |
| வெள்ளாமணக்கு வேர் முதலியவை சேர்த்து தயாரித்த தைலத்தால் நசியம் | 54 | 213 |
| மற்ற அஞ்சன முறைகள் | 56 | 214 |
| (பிறகு செய்ய வேண்டியது) ப்ரத்யஞ்சனம் | 57 | 214 |
| இத்தகைய சிகித்ஸையால் வாததிமிரம் நீங்காவிடில் கண்ணில் நெய்ப்புப் பொருளை நிரப்புதல் | 58 | 215 |
| சதகுப்பை முதலியவை சேர்த்து நெய் பாகம் செய்து கண்ணிலிடல் | 58 | 215 |
| கறுப்பு மானின் கொழுப்பை உபயோகிக்க வேண்டியமுறை | 60 | 215 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -13 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| இருவகை முள்ளம்பன்றி முதலியவற்றின் மாம்ஸ எண்ணெயை கண்ணில் நிரப்புதல் | 61 | 216 |
| வாததிமிர நோயில் வாதபீனிச சிகித்ஸையும் பஸ்திகளும் | 62 | 216 |
| பித்ததிமிர சிகித்ஸை நெய்ப்பு உண்டாக்கிய பின் ஸிரையைக் குத்துதல் | 63 | 216 |
| சர்க்கரை முதலியவற்றைக் கொடுத்து விரேசனமுண்டாக்கல் முதலியன | 64 | 217 |
| நன்னாரி முதலியவற்றாலான திரியை அஞ்சனமிடல் | 65 | 217 |
| தாமரை முதலியவற்றின் சூர்ணத்தை அஞ்சனமிடல் | 65 | 217 |
| ஸௌவீராஞ்சனம் முதலியவற்றால் அஞ்சனமிடல் | 66 | 218 |
| பால் முதலியவை சேர்த்து நெய்பாகம் செய்து அஞ்ஜனமிடல் | 67 | 218 |
| கபத்தாலுண்டான திமிர நோய்க்கு சிகித்ஸை | 68 | 218 |
| தசமூல கஷாயம் முதலியவை சேர்த்து தைலம் பாகம் செய்து நஸ்யமிடல் | 68 | 218 |
| தசமூல கஷாயம் முதலியவை சேர்த்து தைலம் பாகம் செய்து நஸ்யமிடல் | 69 | 219 |
| விமலாவர்த்தி | 70 | 219 |
| கோகிலாவர்த்தி | 71 | 219 |
| முயலின் பல் முதலியவற்றால் குளிகை செய்து அஞ்சனமிடல் | 72 | 220 |
| ரத்ததிமிர சிகித்ஸை | 73 | 220 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -13 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| திராட்சை முதலியவற்றால் குளிகை செய்து அஞ்சனமிடல் | 74 | 220 |
| கூட்டு தோஷத்தாலுண்டான கண்ணோயில் அதிகரித்த தோஷத்திற்குரிய சிகித்ஸை | 75 | 221 |
| இலுப்பை முதலியவற்றைச் சேர்த்து தைலம் காய்ச்சி நஸ்யமிடல் முதலியன | 75 | 221 |
| தகரவிதை முதலியவற்றைச் சேர்த்து தைலம் காய்ச்சி நசியமிடல் முதலியன | 76 | 221 |
| ஸன்னிபாத திமிர நோயில் அஞ்சனம் | 77 | 222 |
| இரவில் சஞ்சரிக்கும் பிராணிகளின் எலும்புடன் அஞ்சனக் கல் சேர்த்து அஞ்சனமிடும் முறை | 79 | 222 |
| காச நிலையில் தீவிர சிகித்ஸை செய்தல் | 81 | 222 |
| கண் காச நிலையில் ஸிரையைக் குத்தக் கூடாது | 81 | 223 |
| வெல்லம் முதலியவற்றாலான ரஸக்ரியை | 82 | 223 |
| (நகுலாந்த) கீரிக் குருடு நோய்க்கு சிகித்ஸை | 83 | 223 |
| (ராத்ரியந்த) அந்திமாலை நோயில் சிகித்ஸை அஞ்சனக்கல் முதலியவற்றின் ரஸக்ரியை | 84 | 223 |
| மிளகை தயிர் விட்டரைத்து அஞ்சனமிடல் | 85 | 224 |
| புங்கன் விதை முதலியவற்றாலான திரியை அஞ்சனமிடல் | 85 | 224 |
| அரேணுகம் முதலியவற்றலான திரியை அஞ்சனமிடல் | 86 | 224 |
| தகரம் முதலியவற்றலான திரியை அஞ்சனமிடல் | 87 | 224 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -13 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| திப்பிலியை கல்லீரலில் வைத்து பாகம் செய்து அஞ்சனமிடல் | 88 | 225 |
| எருமையின் மண்ணீரலையும் கல்லீரலையும் உண்ணல் | 89 | 225 |
| கீரிப்பாலையின் துளிரை நெய்யில் பக்குவம் செய்து உண்ணல் முதலியன | 89 | 225 |
| தூமரம், அம்ல விதக்தம், பித்த விதக்தகம், உஷ்ண விதக்தம் ஆகியவற்றிற்கு சிகித்ஸை | 91 | 226 |
| பசுவின் சாண நீர் முதலியவை சேர்த்து பாகம் செய்த வீராஞ்சனம் சிறந்தது | 92 | 226 |
| பொன் காவியும் தாளீஸ சூர்ணமும் கலந்த ரஸக்ரியை | 92 | 226 |
| மேதா முதலியவை சேர்த்து பாகம் செய்த நெய்யால் நசியம் | 93 | 227 |
| பாலிலிருந்து எடுத்த நெய்யை நேத்ர தர்ப்பணமாக உபயோகித்தல் | 94 | 227 |
| முற்கூறிய (சிகித்ஸையால்) நீங்காவிடில் விரையைக் குத்துதல் | 94 | 227 |
| கவலை முதலியவை காரணமாக கண் நோய்களின் இறுதி நிலையில் தீவிர நோயாளிபோல் காணப்படுதலும், ஏற்ற சிகித்ஸையும் | 94 | 227 |
| சூரிய கிரஹணத்தை பார்த்தல் முதலிய-வற்றால் பார்வை பாதிக்கப்பெற்றவருக்கு சிகித்ஸை | 97 | 228 |
| உயிருள்ளவரை கண்களைப் பாதுகாப்பதன் அவசியம் | 98 | 228 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -14 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கண்களைப் பாதுகாக்கும் முறை | 99 | 228 |
| விலக்க வேண்டியவை | 100 | 229 |


## அத்தியாயம் - 14

## லிங்க நாச நோய்க்கு சிகித்ஸை


| | | |
|---|---|---|
| ஆவர்த்தகீ முதலிய உபத்ரவமற்ற லிங்க நாசத்தில் குத்தவேண்டும் | 1 | 230 |
| முதிர்ச்சியடையாத நிலையும், குத்தக் கூடாததன் காரணமும் | 2 | 230 |
| இருவிதமாகவும் மூடுவதற்குக் காரணம் | 3 | 231 |
| கபலிங்கநாசம் | 4 | 231 |
| ஆவர்த்தகீ | 5 | 231 |
| சர்க்கரா | 5 | 231 |
| ராஜீமதீ | 6 | 232 |
| சின்னாம்சுகா | 6 | 232 |
| சந்த்ரகீ | 7 | 232 |
| சத்ரகீ | 7 | 232 |
| குத்தக்கூடாதவை | 8 | 233 |
| லிங்கநாசத்தில் குத்தும் முறை | 9 | 233 |
| நாக்கு குத்தகப்படதன் குறி | 13 | 234 |
| குத்தியபின் செய்ய வேண்டியவை | 14 | 234 |
| விலக்கவேண்டியவை முதலியன | 18 | 235 |
| வலி ஏற்படின் இளஞ்சூடான நெய்யை கண்ணில் ஊற்றுதல் முதலியன | 20 | 236 |
| பார்வைச்சக்தி உறுதிப்படும் வரை கட்டுப்பாடு முதலியன | 22 | 237 |

| | | |
|---|---|---|
| ஏற்காத செயல் முதலியவற்றால் வீக்கம் முதலியவை ஏற்படுதல் | 23 | 237 |
| வலி செந்நிறம் ஆகியவற்றிற்கு அறுகு முதலியவற்றால் முகத்தில் பூச்சு முதலியன | 24 | 237 |
| கடுகு, எள் ஆகியவற்றினால் முகத்தில் பூச்சு | 25 | 238 |
| க்ஷீரகாகோலி முதலியவற்றால் முகத்தில் பூச்சு | 25 | 238 |
| வலியும் செந்நிறமும் நீங்க லோத்தி முதலியவை இட்டு பாகம் செய்த ஆட்டுப்பாலை கண்ணில் இடல் | 26 | 238 |
| அதிமதுரம் முதலியவை இட்டு பாகம் செய்த ஆட்டுப்பாலை கண்ணில் இடல் | 27 | 238 |
| வாயுவைக் கண்டிக்கும் பொருள்களின் கஷாயம் முதலியவை சேர்த்து நெய் பாகம் செய்து எல்லா வகையிலும் உபயோகித்தல் | 28 | 239 |
| இத்தகைய சிகித்ஸையை நோய் நீங்காவிடில் நெய்ப்பு சிகித்ஸை முதலியவற்றிற்குப் பின் ரத்த வெளியேற்றம் முதலியன | 29 | 239 |
| துவரை முதலியவற்றாலான வர்த்தியை குத்தப்பட்ட இடத்தில் உபயோகித்தல் | 30 | 240 |
| பிண்டாஞ்சனம் | 31 | 240 |
| ஸ்ரோதாஞ்சனம் முதலியவற்றையும் இவ்வாறே உபயேகித்தல் | 32 | 240 |


## அத்தியாயம் - 15
## அனைத்துக் கண் நோய்கள்


| | | |
|---|---|---|
| (வாதாபிஷ்யந்தம்) வாயுவால் உண்டான கண்ணீர்ப் பெருக்கு | 1 | 241 |
| அதிமந்தம் | 3 | 242 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -15 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| ஹதாதிமந்தம் | 5 | 243 |
| அன்யதோவாதம் | 6 | 243 |
| வாதபர்யயம் | 7 | 243 |
| (பித்தாபிஷ்யந்தம்) பித்தத்தால் உண்டான கண்ணீர்ப் பெருக்கு | 8 | 244 |
| (பித்தாதிமந்தம்) பித்தத்தாலுண்டான அதிமந்தம் | 9 | 244 |
| (கபாபிஷ்யந்தம்) கபத்தாலுண்டான கண்ணீர்ப் பெருக்கு | 10 | 244 |
| கபத்தாலுண்டான அதிமந்தம் | 11 | 245 |
| (ரக்தாபிஷ்யந்தம்) ரத்தங்காரணமாக உண்டாகும் கண்ணீர்ப் பெருக்கு | 12 | 245 |
| ரத்தாலுண்டான அதிமந்தம் | 13 | 246 |
| எல்லா அதிமந்தங்களும் அதிக வலி உண்டாகுபவை | 15 | 246 |
| (சுஷ்காக்ஷிபாகம்) கண் வறட்சி அழலை | 16 | 246 |
| (ஸசோபபாகம்) வீக்கத்துடன் கண் பழுத்தல் | 17 | 247 |
| (அல்பசோபபாகம்) குறைவான வீக்கத்துடன் பழுத்தல் | 19 | 247 |
| (அக்ஷிபாகாத்யயம்) கண் பழுத்தலின் முற்றிய நிலை | 20 | 248 |
| (அம்லோஷிதா) பூளிப்பூறல் கண் | 21 | 248 |
| கண் முழுவதிலும் உண்டாகும் நோய்கள் 16 | 23 | 249 |
| ஹதாதிமந்தமும் - அஹிபாகாத்யமும் சிகித்ஸையில் தவிர்க்கவேண்டியவை | 24 | 249 |

அட்டவணை உத்த. மு. பா. அத் -16 ஸ்லோ. பக்.

முறைகேடாகக் கையாளப்படின் தோஷத்தால் உண்டான அதிமந்த நோய் பார்வையை அழிக்கும் கால அளவு 24 249

## அத்தியாயம் - 16

## அனைத்துக் கண் நோய் சிகித்ஸை

(அபிஷ்யந்தம்) கண்ணீர்ப் பெருக்கு நோய்க்குச் சிகித்ஸை 1 250

எல்லா அபிஷ்யந்த நோய்களிலும் பச்சிலை முதலியவற்றால் புற வளையமிடுதல் 2 250

வாயு அபிஷ்யந்தத்தில் புற வளையம் 3 251

பித்தரத்த அபிஷ்யந்தத்தில் புற வளையம் 4 251

கப அபிஷ்யந்தத்தில் புற வளையம் 5 252

ஸன்னிபாதத்தாலுண்டாகும் கண்ணீர்ப் பெருக்கு நோயில் முற்கூறியவற்றைக் கலந்து உபயோகித்தல் 5 252

கண்கள் கோபமடைந்த நிலையில் முருங்கை விதை முதலியவற்றின் தூளைக் கண்ணில் தூவுதல் 6 252

சதகுப்பை முதலியவற்றுள் தூளை காடியில் நனைத்துக் கண்ணில் வைத்தல் 7 253

ஸன்னிபாதங் காரணமாக உண்டான கண்ணீர் பெருக்கு நோயில் மரமஞ்சளின் கஷாயத்துடன் தேன் கலந்து கண்ணிலிடல் 8 253

வாயு முதலியவற்றால் உண்டான வலியைப் போக்க முருங்கைத் தளிர்ச்-சாற்றை உபயோகிக்கும் முறை 9 253

| அட்டவணை உத்த. மு. பா. அத் -16 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| வாயுவால் உண்டான அபிஷ்யந்த நோயில் ஆமணக்கின் துளிரையும் வேரையும் சேர்த்து ஆட்டுப்பால் பக்குவம் செய்து உபயோகிக்கும் முறை | 10 | 253 |
| சூடான சத்துமாவு பிண்டத்தை (கண்ணில் கட்டுதல்) | 10 | 253 |
| பில்வாதி பஞ்சமூலம் முதலியவற்றின் கஷாயத்தைக் கண்ணில் இடுதல் | 11 | 254 |
| வெட்டிவேர், முதலிவற்றுடன் நீரும், ஆட்டுப்பாலும் கலந்து பக்குவம் செய்து கண்ணில் விடுதல் | 12 | 254 |
| ரத்த பித்தாபிஷ்யந்தத்திற்கு சிகித்ஸை ரத்தம் - பித்தம் இவற்றாலுண்டான அபிஷ்யந்த நோயில் மஞ்சட்டி முதலிய-வற்றின் கஷாயத்தைக் கண்ணில் விடுதல் | 13 | 254 |
| நீர்க்கோரை அதிமதுரம் ஆகியவற்றின் சூர்ணத்தை உபயோகிக்கும் முறை | 14 | 255 |
| எரிச்சல், வலி முதலியவை நீங்க நாமக் கரும்பு, அதிமதுரம் முதலியவற்றை தாய்ப்பால் அல்லது ஆட்டுப்பாலில் நனைத்து கண்ணிலிடுதல் | 15 | 255 |
| பித்தம் முதலியவற்றாலான அபிஷ்யந்த நோயில் வெள்ளி லோத்தியை அதிமதுரம் சேர்த்து உபயோகிக்கும் முறை | 16 | 255 |
| கபத்தாலுண்டான அபிஷ்யந்தத்திற்கு சிகித்ஸை கபத்தாலுண்டான அபிஷ்யந்த நோயில் சுக்கு, திரிபலை இவற்றின் ரஸத்தைக் கண்ணிலிடுதல் | 17 | 256 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -16 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| ஸன்னிபாத அபிஷ்யந்த நோய் சிகித்ஸை, ஸன்னிபாத அபிஷ்யந்த நோயில் தனித்த தோஷ அபிஷ்யந்த சிகித்ஸையை ஏற்றவாறு செய்தல் | 17 | 256 |
| தோஷத்தால் உண்டான அபிஷ்யந்த நோயில் நாட்பட்ட நெய்யை உபயோகிக்கும் முறையும், ரத்த வெளியேற்றமும் | 18 | 256 |
| மீண்டும் நெய்ப்புண்டாக்கி விரேசனம் செய்வித்தல் | 19 | 256 |
| (கண்ணில்) சூலை ஏற்படின் சதுப்பு நிலப்பிராணியின் மாம்ஸப் பொடித் தூவலை உபயோகிக்கும் முறை | 19 | 257 |
| எரிச்சல் காணப்படின் குளிர்ச்சியுள்ளவற்றை அரைத்து பாலும் நெய்யும் கலந்து பூசுதல் | 20 | 257 |
| கோபமடைந்த தோஷத்திற்கேற்ப திமிர சிகித்ஸையைச் செய்தல் | 20 | 257 |
| அதிமந்தம் முதலியவற்றிற்கு சிகித்ஸை, அதிமந்தம் முதலிய நோய்களில் அபிஷ்யந்த சிகித்ஸை செய்தல் | 21 | 257 |
| இத்தகைய சிகித்ஸையால் அதிமந்த நோய் நீங்காவிடில் புருவத்திற்கு மேல் சுடுதல் | 21 | 257 |
| (குளிகை) திரிவகைகள் வாயுவால் உண்டான கண் நோய்களில் வெள்ளித்தட்டில் பூசி எடுத்த பசுந்தயிரை திரி செய்து உபயோகித்தல் | 22 | 258 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -16 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| பித்தம் ரத்தம் ஆகியவற்றாலுண்டான கண் நோய்களில் மல்லிகை மொட்டு முதலிய வற்றால் திரி செய்து உபயோகித்தல் | 23 | 258 |
| கபத்தாலுண்டான கண் நோயில் இந்துப்பு முதலியவற்றால் திரி செய்து உபயோகித்தல் | 24 | 258 |
| (பாசுபதயோகம்) வறள் தாமரை முதலியவை சேர்த்து தயாரிக்கப்படுவது | 25 | 259 |
| கஷ்காக்ஷிபாக சிகித்ஸை (கண் அழலை நோய் சிகித்ஸை) நெய் பருகுதல், ஜீவனீய கணப்பொருள் சேர்த்து செய்யப்பட்ட நெய்யை, கண்ணிலிடுதல் முதலியவை ஏற்றவை | 28 | 259 |
| அஞ்சனக் கல்லை தாய்ப்பாலுடன் நெய்யும் சேர்த்து உபயோகித்தல் | 29 | 259 |
| சதுப்பு நிலப்பிராணியின் மாம்ஸ எண்ணெய் உபயோகிக்கும் முறை | 29 | 260 |
| மனித கேசத்தை மஷியாக்கி உபயோகிக்கும் முறை | 30 | 261 |
| வீக்கத்துடன் கூடிய சுஷ்காக்ஷிபாக நோயில் நெய்ப்புச் சிகித்ஸை முதலியன | 31 | 261 |
| (சுஷ்காக்ஷிபாக நோயில்) வலியைப் போக்க வெள்ளி லோத்திியை உபயோகிக்கும் முறை | 33 | 262 |
| மரமஞ்சள், வறள் தாமரை ஆகியவற்றின் கஷாயம் கண்ணிலிடல் | 33 | 262 |
| அரிப்பு முதலியவற்றைப் போக்க ''ஸந்தாவம்'' என்னும் அஞ்சனங்களை உபயோகித்தல் | 34 | 262 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -16 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| தாமிரத்தை இரும்புப் பாத்திரத்திலிட்டு அரைத்து உபயோகிக்கும் முறை | 34 | 262 |
| திப்பிலி இந்துப்பு முதலியவற்றை செம்பு பாத்திரத்திலிட்டு அரைத்து உபயோகிக்கும் முறை | 34½ | 263 |
| உறுத்தலும் வேதனையும் நீங்க சங்கை தாமிர பாத்திரத்திலிட்டு தாய்ப்பால் விட்டு இழைத்து உபயோகித்தல் | 36 | 263 |
| முருங்கைத் தளிர்ச்சாற்றை தாம்ரசம் புடத்திலிட்டு இழைத்து (வீக்கம் முதலியவை நீங்க) உபயோகித்தல் | 37 | 263 |
| மண் சட்டி ஓட்டினை எள்ளின் நீர் விட்டு இழைத்து உபயோகித்தல் | 38 | 264 |
| ஸந்தாவாஞ்சனம் பிரயோகித்தவருக்கு மருந்தால் ஏற்பட்ட வேதனை நீங்கிய பின் தாய்ப்பாலை கண்ணிலிடுதல் | 39 | 264 |
| ஸந்தாவாஞ்சனங்களை மூன்று முறைகளே உபயோகித்தல் | 40 | 264 |
| தாளீசபத்திரி, திப்பிலி முதலியவற்றை குளிகை செய்து கண்ணிலிட கண்ணில் உறுத்தல் முதலியவை நீங்கும் | 40 | 264 |
| கண்டங்கத்திரியின் தோல் முதலியவற்றை ஆட்டுப்பால் விட்டரைத்து பக்குவம் செய்து கண்ணிலிடுதல் | 43 | 266 |
| அம்லோஷித நோயில் பித்தாபிஷ்யந்த சிகித்ஸை ஏற்றது | 44 | 266 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -16 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| பில்லம் (கபோத் கிலிஷ்டம் முதலியவை 18 நோய்களும் வெகு நாட்கள் தொடர்ந் திருப்பின் பில்லம் எனப்படும்) | 44 | 266 |
| பில்ல நோயாளிக்கு நெய்ப்பு சிகித்ஸை முதலியவற்றை செய்வித்தபின் (சுத்தி ஏற்படும் வரை) இமையைச் சுறண்டல் | 47 | 267 |
| துத்தமும் முருங்கை விதையும் கலக்கப்பட்ட காடியை கண்ணிலிட, பில்வம் முதலியன நீங்கும் | 48 | 267 |
| புங்கம்விதை, துளசி முதலியவற்றை ரஸக்ரியை செய்து அஞ்ஜனமிடுதல் | 50 | 268 |
| ரஸாஞ்சனம் முதலியவற்றை தேன் விட்டரைத்து அஞ்சனமிடுதல் | 52 | 268 |
| தகர விதையை கடுக்காய் கஷாயம் விட்டரைத்து அஞ்ஜனமிடுதல் | 52 | 268 |
| ஆட்டு மூத்ரத்தில் ஊறவைத்த தேவ தாருவை நெய்ப்புப் பொருள் கலந்து அஞ்ஜனமிடுதல் | 53 | 268 |
| இந்துப்பு, திரிபலை முதலியவற்றில் திரி செய்து கண்ணிலிடுதல் | 54 | 269 |
| புஷ்பகாஸீஸத்தை துளஸிச்சாற்றுடன் தாமிர பாத்திரத்தில் ஊறவைத்து உபயோகித்தல் | 55 | 269 |
| அரிதாரம் ஸௌவீராஞ்சனம் ஆகிய-வற்றுடன் சம அளவு தாம்ரத்தூள் கலந்து அஞ்ஜனமிடுதல் | 55½ | 269 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -17 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| அரக்கு, நொச்சி முதலியவற்றின் ரஸத்தில் ஊறவைக்கப்பட்ட சிறந்த பருத்தியை தீபமாக எடுத்து அஞ்ஜனம் தயாரித்து உபயோகித்தல் | $57\frac{1}{2}$ | 270 |
| பில்வ நோயாளி இமையைச் சுறண்டுதல் முதலியவற்றை பலதடவை செய்து கொள்ளல் | 58 | 270 |
| மற்ற சிகித்ஸையால் நீங்காத பூயாலஸ நோயில் சூடு இடுதல் | 60 | 271 |
| காரணம், குறி, சிகித்ஸை இவற்றுடன் விளக்கப்பட்ட கண் நோய்கள் | 60 | 271 |
| கண்ணுக்கு இதமானவை | 61 | 271 |
| கண்ணைப் பாதுகாக்க விரும்புபவர் நீக்க வேண்டியவை | 64 | 272 |
| பாதத்தைப் பாதுகாத்தல் | 66 | 273 |


## அத்தியாயம் - 17


| | | |
|---|---|---|
| வாயுவால் உண்டான காது வலி | 1 | 274 |
| பித்தத்தால் உண்டான காது வலி | 4 | 275 |
| கபத்தால் உண்டான காதுவலி | 5 | 275 |
| ரத்தத்தால் உண்டான காதுவலி | 6 | 275 |
| ஸன்னிபாதத்தால் உண்டான காதுவலி | 7 | 276 |
| (கர்ணநாதம்) காது இரைச்சல் | 9 | 276 |
| (பாதிர்யம்) செவிடு | 10 | 277 |
| ப்ரதீநாஹம் | 11 | 277 |
| காதில் அரிப்பு, காதில் வீக்கம் | 12 | 277 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -18 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| (பூதிகர்ணம்) செவி துர்நாற்றம் | 12 | 277 |
| க்ருமிகர்ணம் | 13 | 278 |
| கர்ணவித்ருதி | 14 | 278 |
| கர்ணமூலம் - கர்ணார்புதம் | 15 | 278 |
| குசிகர்ணம் | 16 | 279 |
| கர்ணபிப்பிலீ | 16 | 279 |
| கர்ணவிதாரிகா | 17 | 279 |
| பாலீசோஷம் | 19 | 280 |
| தந்த்ரிகா | 19 | 280 |
| பரிபோடம் | 20 | 280 |
| உத்பாதம் | 21 | 281 |
| உன்மந்தம் - கல்லீரல் | 22 | 281 |
| துக்கவர்த்தனம் | 23 | 281 |
| லேஹ்யா | 24 | 282 |
| காது நோய்களில் சிகித்ஸைக்கு ஏற்றவையும், மற்றவையும் | 25 | 282 |


## அத்தியாயம் - 18


| | | |
|---|---|---|
| வாயுவால் உண்டான காது வலி நோயில் வாயுவைப் போக்கும் பொருள் சேர்த்து பக்குவம் செய்த நெய்யை உபயோகித்தல் | 1 | 283 |
| வாயுவால் உண்டான காது வலி நோயில் அரசு, பில்வம் முதலியவற்றுள் ஒன்றின் இலையைப் புடபாக முறையில் பக்குவம் செய்து எடுத்தச் சாற்றை காதிலிடுதல் | 2 | 283 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -18 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| வாயுவால் உண்டான காதுவலி நோயில் வாயுவைப் போக்கும் பொருள்கள் முதலியவை சேர்த்து மகாஸ்னேஹம் பக்குவம் செய்து உபயோகித்தல் | 3 | 284 |
| வாயுவால் உண்டான காதுவலி நோயில் மகாபஞ்சமூலக் கட்டையினின்று சேகரித்த சுடர்த் தைலத்தை உபயோகித்தல் | 4 | 284 |
| வாயுவால் உண்டான காதுவலி நோயில் தேவதாரு, கோஷ்டம் முதலியவற்றினின்று எடுக்க சுடர்த் தைலத்தை உபயோகித்தல் | 5 | 285 |
| வாத நோய் சிகித்ஸை, சளிப்பு நோய் சிகித்ஸையும் ஏற்றவை | 6 | 285 |
| இந்த நோயில் தலை முழுகுவதையும் பகலிலும் குளிர்ந்த நீரைப் பயன்படுத்தலையும் தவிர்க்க வேண்டும். | 6 | 286 |


## பித்தத்தால் உண்டான காதுவலிக்கு சிகித்ஸை


| | | |
|---|---|---|
| பித்தத்தால் உண்டான காதுவலிக்கு நெய்ப்புண்டாக்கிய பின் விரேசனம் செய்வித்தல் | 7 | 286 |
| பித்தத்தால் உண்டான காதுவலிக்கு திராக்ஷையும் அதிமதுரமும் கலந்து தாய்ப்பாலைப் பக்குவம் செய்து காதில் இடுதல் | 7 | 286 |
| பித்தத்தால் உண்டான காதுவலிக்கு அதிமதுரம் முதலியவற்றின் கல்கம் அதிமதுரக்கஷாயம், பால், ஆகியவை சேர்த்து தைல பக்குவம் நசியம் முதலியவற்றில் உபயோகித்தல் | 8 | 286 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -18 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| தனித்த தேனை உபயோகித்தல். பித்தத்தால் உண்டான காதுவலிக்கு முற்கூறிய அதிமதுரம் முதலியவற்றின் கல்கத்தை நெய் கலந்து காதைச்சுற்றி பூசுதல் | 10 | 287 |


## கபத்தால் உண்டான காதுவலிக்கு சிகித்ஸை


| | | |
|---|---|---|
| கபத்தாலுண்டான காதுவலி நோயில் நாட்பட்ட நெய்யால் நெய்ப்பு உண்டாக்கிய பின் வாந்தி செய்வித்தல் | 11 | 287 |
| கபத்தைப் போக்குபவையான புகைபிடித்தல் முதலியனவும் ஏற்றவை | 11 | 287 |
| உள்ளி, இஞ்சி முதலியவற்றின் சாற்றை சிறிது சூடாக்கி காதில் ஊற்றுதல் சிறந்தது | 12 | 287 |
| எருக்கந்துளிரைப் புடபாக முறையில் பக்குவம் செய்து சாறு எடுத்து காதில் இடுதல் | 13 | 288 |
| துருஞ்சி அல்லது விளாவின் சாற்றை காதிலிடுதல் | 14 | 288 |
| காதில் காடியை நிரப்பி கடல் நுரையைத் தூவுதல் | 15 | 288 |
| வெள்ளாட்டு மூத்ரம் முதலியவை சேர்த்து தைலம் பக்குவம் செய்து காதிலிடுதல் | 15 | 288 |
| காயம், தூம்பூணரிசி முதலியவை சேர்த்து கடுகைத் தைல பக்குவம் செய்து காதில் நிரப்புதல் | 16 | 288 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -18 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| ரத்தத்தால் உண்டான காதுவலிக்கு பித்தத்தால் உண்டான காதுவலிக்கு கூறப்பட்ட சிகித்ஸையைச் செய்தலும், ஸிரையைக் குத்துதலும் | 16 | 289 |
| காது நோயில் சீழ் வெளியேறும் நிலையில் புகை பிடித்தல், வாய் கொப்பளித்தல், முதலியவை ஏற்றவை | 17 | 289 |
| சீழ்க்கசிவு முதலியவை நீங்க சீழுள்ள காதை இரு வேளை துடைத்து குகலிலால் புகை யூட்டிய பின் தேனை நிரப்புதல் | 18 | 289 |
| பஞ்சுத் திரியை, சுரஸாதிப் பொருளின் கஷாயத்தின் ரஸக்கிரியையில் நனைத்து காதில் இடுதல் | 19 | 289 |
| சுரஸாதி கணப்பொருளின் தூளைக் காதிலிடுதல் | 19 | 289 |
| ஞாழல் முதலியவையும் விளாவின் சாறும் கலந்து தைலம் பக்குவம் செய்து, காதில் நிரப்ப கசிவு நீங்கும் | 20 | 290 |


## காது இரைச்சல், செவிடு ஆகியவற்றிற்கு சிகித்ஸை


| | | |
|---|---|---|
| காது இரைச்சல், செவிடு ஆகியவற்றில் வாயுவால் உண்டான காதுவலிக்கு கூறப்பட்ட சிகித்ஸை ஏற்றது | 22 | 290 |
| இவற்றில் கபம் தொடர்பு கொண்டிருப்பின் அதை வாந்தி சிகித்ஸை முதலியவற்றால் வெல்லவேண்டும். | 22 | 290 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -18 | ஸ்லோ. | பக். |
| --- | --- | --- |
| பால் ஆமணக்கு இலை முதலியவற்றின் சாறு முதலியவை கலந்து தைலம் பக்குவம் செய்ய நசியம் முதலிய- வற்றில் உபயோகித்தல் | 23 | 291 |
| அதிவிடயம் முதலியவையும் காடியும் சேர்த்து தைலம் பக்குவம் செய்து காதில் நிரப்ப சீழ்க் கசிவு முதலியவை நீங்கும் | 25 | 291 |
| காது இரைச்சல் நோயில் கடுகெண்ணெய் காதில் நிரப்புதல் ஏற்றது | 26 | 291 |
| (க்ஷார தைலம்) உலர்ந்த முள்ளங்கியின் க்ஷாரம் முதலியவை கலந்து தைலம் பக்குவம் செய்து காதில் நிரப்பினால் காது அரிப்பு நீங்கும். | 26 | 291 |
| காது உணர்ச்சியின்றிருப்பின் ரத்தத்தை வெளியேற்றுதல் | 30 | 292 |
| ஒலியை மந்தமாக கிரஹிப்பவருக்கு, வீக்கமும், கசிவும் இருப்பின் வாந்தி செய்வித்தல் | 31 | 293 |
| பாலருக்கும் முதியவருக்கும் ஏற்பட்டதும், நாட்பட்டதுமான செவிட்டு நோய் சிகித்ஸைக்கு ஏற்றதல்ல | 31 | 293 |


## ப்ரதீநாஹ சிகித்ஸை


| | | |
| --- | --- | --- |
| ப்ரதீநாக நோயில் கசிவு உண்டாக்கியபின் கர்ணசோதன யந்த்ரத்தால் சுத்தம் செய்தல் | 32 | 293 |
| எண்ணெயாவது காடி முதலியவை கலந்த துருஞ்சிச் சாற்றையாவது காதில் நிரப்புதல் | 32 | 293 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -18 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| அதிகம் சோதனம் செய்ததனால் வறட்சி ஏற்படின் காதில் நெய்த் தெளிவை நிரப்புதல் | 33 | 293 |
| காதில் அழுக்கு நிரம்பியிருந்தாலும் முற்கூறியவாறே (ப்ரதீநாஹ) சிகித்ஸை செய்யவேண்டும் | 34 | 293 |
| காது அரிப்பு நோயில் கபத்தைப் போக்கும் நசியம் முதலியவற்றை செய்வித்தல் | 34 | 293 |
| காது வீக்க நோயில் இவ்வாறு செய்வதுடன் உஷ்ணவீர்யமும் பர்சமும் உள்ளவற்றால் பூசுதல் | 34 | 294 |

## பூதிகர்ணம்-க்ருமிகர்ணம் இவற்றிற்கு சிகித்ஸை

| | | |
|---|---|---|
| பூதிகர்ணம் - கிருமிகர்ணம் இவற்றில் காதுக் கசிவு நோயில் சிகித்ஸையைச் செய்தல் | 35 | 294 |
| கிருமிக்காது நோயாளிக்கு காதில் கடுகெண்ணெயை நிரப்புவது சிறந்தது | 35 | 294 |
| கர்ணவித்ருதி நோயில் வாந்தி சிகித்ஸையை செய்வித்தபின் வித்ருதி சிகித்ஸையைச் செய்தல் | 36 | 294 |
| க்ஷதவித்ருதி நோயில் பித்தத்தால் உண்டாகும் காதுவலியின் சிகித்ஸை ஏற்றது | 36 | 295 |
| காதில் உண்டாகும் மூலக்குருத்து - அற்புதம் இவற்றில் முறையே நாசியில் உண்டாகும் மூலக்குருத்து அற்புதம் இவற்றின் சிகித்ஸை செய்தல் | 37 | 295 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -18 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கர்ணவிதாரிகா நோய் பழுக்காத நிலையில் கர்ணவித்ருதி நோய் சிகித்ஸையும் தோஷங்களுக்கு ஏற்ற சிகித்ஸையும் செய்தல் | 37 | 295 |
| (பாலீசோஷம்) காதுமடல் சுருங்கல் நோயில் வாயுவால் உண்டாக காதுவலிக்கு கூறப்பட்ட சிகித்ஸை செய்தலும் வியர்ப்பித்த பின் சாரப்பருப்பு முதலியவற்றை அரைத்துத் தேய்த்தல் | 38 | 295 |
| உடலைப்பருக்கச் செய்யும் பொருள் கலந்து பக்குவம் செய்த நெய்ப்புப் பொருளால் நாளும் அப்பியங்கம் செய்வித்தல் | 39 | 296 |
| தண்ணீர் விட்டான் கிழங்கு முதலியவற்றைச் சேர்த்து தைலம் பக்குவம் செய்து உபயோகித்தல் | 40 | 296 |
| சதுப்பு நிலப்பிராணியின் மாம்ஸ கஷாயத்தில் ஜீவனீயப் பொருள் முதலியவை கலந்து பக்குவம் செய்து உபயோகித்தல் | 41 | 296 |
| காதுமடல் வற்றியிருப்பதற்கு சிகித்ஸை | 42 | 297 |
| கர்ணதந்த்ரிகா நோய்க்கு சிகித்ஸை | 42 | 297 |
| பரிபோடத்தித்திற்கு சிகித்ஸை | 42 | 297 |
| **உத்பாத நோய்க்கு சிகித்ஸை** | | |
| நாவல் துளிர் முதலியவை சேர்த்து தைலம் பாகம் செய்து காதுமடலில் அப்யங்கம் செய்தல் முதலியன | 43 | 297 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -19 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| உன்மந்த சிகித்ஸை | 45 | 298 |
| துக்கவர்த்தன சிகித்ஸை | 46 | 298 |
| பரிலேஹிகா சிகித்ஸை | 48 | 299 |
| காது அறுந்து போயிருப்பின் சிகித்ஸை | 51 | 300 |
| காதை இணைத்துக்கட்டும் முறை | 52 | 300 |
| ஏழு நாட்களுக்குப்பின் பஞ்சுத் துண்டை எடுத்தல் | 54 | 300 |
| காதுமடலை வளர்க்க பாசி, பூனைக்காலி முதலியவை சேர்த்து எருமை நெய் பாகம் செய்து அப்யங்கம் செய்தல் | 55 | 301 |
| நாசி அறுபட்டிருப்பின் இணைக்கும் முறை | 59 | 302 |
| உதட்டை இணைக்கும் முறை | 66 | 303 |


## அத்தியாயம் – 19

## நாசிரோக விளக்கம்


| | | |
|---|---|---|
| (ப்ரதிச்யாய) சளிப்பு நோய் உண்டாகக் காரணங்கள் உண்டாகும் முறை | 1 | 304 |
| வாயுவால் உண்டான (பிரதிச்யாய) சளிப்பு நோய் | 3 | 305 |
| பித்தத்தால் உண்டாகும் (பிரதிச்யாய) சளிப்பு நோய் | 5 | 305 |
| கபத்தால் உண்டாகும் (பிரதிச்சாய) சளிப்பு நோய் | 6 | 306 |
| ஸன்னிபாதத்தால் உண்டாகும் (ப்ரதிச்யாய) சளிப்பு நோய் | 7 | 306 |
| ரத்தத்தால் உண்டாகும் (ப்ரதிச்சாய) சளிப்பு நோய் | 8 | 307 |

| | | |
|---|---|---|
| (துஷ்டப்ரதிச்சாயம்) மிகக் கேடுற்ற சளிப்பு நோய் | 9 | 307 |
| சளிப்பு நோய் பக்குவமடைந்த நிலையில் குறிகள் | 13 | 308 |
| (ப்ருசக்ஷவம்) மிகத்தும்மல் | 14 | 308 |
| நாசி வறட்சி நோய் | 16 | 309 |
| நாசி பருத்தல் | 17 | 309 |
| நாசி அழற்சி | 18 | 309 |
| நாசிக்கசிவு | 19 | 310 |
| ஆபீனஸம் | 20 | 310 |
| தீப்தி | 22 | 311 |
| (பூதிநாசிகை) நாசிநாற்றம் | 23 | 311 |
| (பூயரத்தம்) சீழும் ரத்தமும் வெளியேறுதல் | 24 | 312 |
| (புடகம்) சருமத்துண்டு | 25 | 312 |
| குரு புற்று ஆகியவற்றை தோஷக் குறிகளுக் கேற்ப பிரித்து அறிதல் | 26 | 312 |
| பொதுக்குறி | 26 | 312 |


## அத்தியாயம் -20

### நாசிரோக சிகித்ஸை


| | | |
|---|---|---|
| (பீனிச) சளிப்பு நோயில் அதிகம் காற்று வீசாத இடத்தில் இருப்பதுடன் நெய்ப்புச் சிகித்ஸை முதலியவை செய்து கொள்ளுதல் ஏற்றது | 1 | 313 |
| தடித்தலும் உஷ்ணத் தன்மையுள்ளதுமான ஆடையை உடுத்தலும், தலைமூடிக் கொள்ளுதலும் ஏற்றது | 2 | 314 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -20 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| ஏற்ற உணவு | 2 | 314 |
| தசமூல கஷாயம் அல்லது நாட்பட்ட-வருணீ பருக ஏற்றது | 4 | 314 |
| கச்சோரம், முன்னை முதலியவற்றை நுகரலாம் | 5 | 315 |
| (வ்யோஷாதி வடகம்) திரிகடு முதலியவை சேர்த்து வடகம் செய்து உபயோகித்தல் | 5 | 315 |
| சதகுப்பை முதலியவற்றை மாம்ஸ எண்ணெய் முதலியவற்றுடன் கலந்து புகைபிடித்தல் | 7 | 315 |
| சத்துமாவுடன் நெய் கலந்து குடுவையிலிட்டு புகைபிடித்தல் | 8 | 315 |
| பீனிச நோயில் ஸ்னானம், முதலியவை விலக்க வேண்டியவை | 8 | 315 |
| வாயுவால் உண்டான சளிப்பு நோயில் வாயுவைப் போக்கும் பொருள் கலந்து பக்குவம் செய்த நெய் முதலியவற்றுள் ஒன்றைப் பருகுதல் | 9 | 316 |
| அர்த்தித நோயில் கூறியவாறு வியர்வை உண்டாக்குதலையும் நசியமிடுதல் முதலியவற்றையும் செய்வித்தல் | 10 | 316 |
| பித்தம் - ரத்தம் இவற்றால் உண்டான சளிப்பு நோயில் இனிப்பு வர்க்கப்-பொருள் கலந்து பக்குவம் செய்த நெய்யைப் பருகுதலும் குளிர்ச்சியான வற்றை ஊற்றுதல் முதலியனவும் ஏற்றவை | 11 | 317 |
| ஞமவிருக்ஷப் பட்டை முதலியவை சேர்த்த தைலம் பக்குவம் செய்து நசியமிடுதல் | 12 | 317 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் - 20 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| கபத்தால் உண்டான சளிப்பு நோயில் உபவாசமிருத்தலும் வெண்கடுகை அரைத்து தலையில் பூசிக் கொள்ளுதலும் | 13 | 317 |
| அல்லது யவக்ஷாரம் கலந்து நெய்யைப் பருகி வாந்தி செய்தல் ஏற்றது | 13 | 317 |
| இந்துப்பு முதலியவற்றை ஆட்டு மூத்ரம் விட்டரைத்து நசியம் செய்தல் | 14 | 318 |
| ஸன்னிபாத சளிப்பு நோயை காரமும் தீக்ஷ்ணமும் உள்ள நெய்யைப் பருகுதல் நசியம் முதலியவற்றால் வெல்லவேண்டும் | 14 | 318 |
| துஷ்டப்ரதிச்சாய நோயில் க்ஷயநோய் சிகித்ஸையும் கிருமிநோய் சிகித்ஸையும் செய்வித்து காலந்தள்ளுதல் | 15 | 318 |
| த்ரிகடு, ஆமணக்கு முதலியவற்றை திரி செய்து அதன் புகையை வாயாலும், நாசியாலும் பருகவேண்டும் | 15 | 319 |
| மிக்க தும்மல் - புடம் ஆகியவற்றில் தீக்ஷ்ணமான பொருள்களை நோயாளியின் நாசியில் ஊற்றுதல் | 18 | 319 |
| சுக்கு, கோஷ்டம் முதலியவை சேர்த்து பக்குவம் செய்த தைலம் அல்லது நெய்யை நசியமிடல் | 18 | 319 |
| நாசி வறட்சி நோயில் பலா தைலத்தை பருகுதல் முதலியவற்றில் உபயோகித்தல் | 19 | 320 |
| நாசி வீக்க நோயிலும் இவ்வாறே சிகித்ஸை செய்தல் | 20 | 320 |

| அட்டவணை உத்த. மு. பா. அத் -20 | ஸ்லோ. | பக். |
|---|---|---|
| நாசி அழற்சி - தீப்தி ஆகியவற்றில் பித்தத்தைப் போக்கும் சிகித்ஸை ஏற்றது | 20 | 320 |
| நாசிக்கசிவு நோயில் தீக்ஷ்ண குணமுள்ள நசியம் முதலியவற்றைப் பிரயோகித்தல் | 20 | 320 |
| நாசிதுர்தந்தம் - அவீனஸம் ஆகியவற்றில் கபத்தால் உண்டான சளிப்பு நோயின் சிகித்ஸை செய்தல் | 21 | 321 |
| வாந்தி செய்வித்தலும் அரக்கு, புங்கு முதலியவற்றை ஆட்டுமூத்ரம் விட்டு அரைத்து நசியமிடல் | 21 | 321 |
| முருங்கை முதலியவை சேர்த்து பக்குவம் செய்யப்பட்ட தைலத்தை நசியமிடுதல் | 22 | 321 |
| **பூயரத்த சிகித்ஸை** | | |
| நாட்படாத பூயரக்த நோயில் ரத்தபீனிச சிகித்ஸை செய்தல் | 23 | 321 |
| அதிகரித்த நிலையில் நாடீ விரண சிகித்ஸை ஏற்றது | 23 | 322 |
| குரு, அற்புதம் ஆகியவற்றில் சூடு இட்டபின் நாகதந்தீ முதலியவற்றின் கல்கத்தை திரி செய்து நெய்யும், தேனும் கலந்து நாசியில் இடுதல் | 24 | 322 |
| மற்றும் நாசி நாற்ற நோயில் கூறப்பட்ட முருங்கை முதலிய பொருளால் நசியமிடுதலும் ஏற்றது. | 25 | 322 |

❋ ❋ ❋ ❋ ❋

## ABOUT THIS BOOK

Ayurveda, reveals to us a glimpse of pristine glory of India in the field of Medicine. Vāgbhata's Aṣṭāñga Hṛdaya - quintessence of the eight branches (of Ayurveda) is one of the authoritative treatises on ancient Indian Medicine. This Sanskrit work has been translated in many Indian languages. In 1935, this work was translated into Tamil by the great Scholar Sri Doraisamy Iyengar without Sanskrit slokas.

This book will fulfill a need long felt by the students of Ayurveda by giving the original Sanskrit verse and its Tamil translation with notes, references and illustrations wherever necessary.

The present work will prove useful not only for students and teachers, but also for all those who want to be acquainted with principles and practice of Ayurveda.

---

**CENTRAL COUNCIL FOR RESEARCH IN AYURVEDA AND SIDDHA**

(Dept. of ISM & H) Ministry of Health & Family Welfare

(Govt. of India) New Delhi.